Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.30
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.
30°c 28°c

பக்கம் 50 | சுடர்: 28 | கதிர்: 202 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆனி 2, ஞாயிறு 16.06.2013

**செய்தி**

பக். 03
மாணவர்களின் உணவுக்கு தரமற்ற அரிசி விநியோகம்

**கட்டுரை**

பக். 06
சூரியந்தி
பகைமைப் போக்கை விடுத்து புதிய முறையில் உறவுகள்


பக். 18
சூரியந்தி
ஊடகத்துறையில் பாதுகாப்பு

**விளையாட்டு**

பக். 22
கலமிறங்குகின்றன பரிஷ், ஜொனியன்ஸ்

# சிங்கள மக்கள் மத்தியில் சிந்தனைப் புரட்சி தேவை

## அதன் பின் கோத்தாவை மட்டுமல்ல பேரினவாதிகளையும் தூக்கி வீசிவிடுவார்கள் அவர்கள் என்கிறார் மன்னார் ஆயர்

மன்னார், ஜூன் 16
சிங்கள மக்கள் மத்தியில் கல்விமான்கள், சமயப்பற்றுள்ளவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு தமிழர்களாகிய எங்களுடைய உண்மைநிலையை எடுத்துச் சொல்ல வேண்டும். அந்த உண்மை அவர்களுக்கு ஈர்ப்பைக் கொடுக்கும். சிங்கள மக்கள் மத்தியில் சிந்தனைப் புரட்சியை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் கோத்தபாயவை மட்டுமல்ல பேரினவாதிகளையும் தூக்கி வீசிவிடுவார்கள் அவர்கள்.


இப்படிக் கூறினார் மன்னார் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை.

உதயனுக்கு அளித்த விசேட செவ்வியிலேயே ஆயர் இவ்வாறு கூறினார்.

'பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவோ அல்லது பொதுபலசேனாவோ எடுக்கும் இனவாத - அடிப்படைவாத நடவடிக்கைகள் பற்றி நாங்கள் கவலைப்படத் தேவையில்லை. அவர்கள் ஒரு சிறு குழுவினரே. சிந்தனைப் புரட்சி ஊடாக சிங்கள மக்களைத் தெளிய வைத்து நாங்கள் எங்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்' என்று இராயப்பு ஜோசப் ஆண்டகை மேலும் தெரிவித்தார்.

'கோத்தபாய ராஜபக்ஷ தனது பணி என்ன என்பதை மறந்து பேசுகின்றார். அடிப்படை இனவாதிகளு

தொடர்ச்சி: பக்கம் 18





இரணைமடுவில் விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்பட்ட விமான ஓடுபாதை புனரமைக்கப்பட்டதையடுத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று அதனை உத்தியோக பூர்வமாகத் திறந்து வைத்தார்.

## கூட்டமைப்பு நேற்றிரவு புதுடில்லிக்கு

கொழும்பு, ஜூன் 16
13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை ஒழிப்பதற்கான முயற்சிகளில் இலங்கை அரசு இறங்கியுள்ள நிலையில், இந்திய அரசின் அவசர அழைப்பின் பேரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நேற்று இரவு புதுடில்லி பயணமானது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனா

தொடர்ச்சி: பக்கம் 18

## இந்துமயானத்தையும் சுவீகரிப்பதற்கு முயற்சி

### எழுதுமட்டுவாழ் வடக்கு மக்கள் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16
எழுதுமட்டுவாழ் வடக்குப் பகுதியில் உள்ள இந்து மயானத்தை அரசு சுவீகரிக்கவுள்ள நிலையில் குறித்த மயானத்தைப் பயன்படுத்தும் 7 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

எழுதுமட்டுவாழ் ஆசைப்பிள்ளை ஏற்றத்துக்கு அருகில் 52 ஏக்கர் காணியில் நிரந்தர படைமுகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த காணிக்கு அருகில் உள்ள இரண்டு ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட மயானக் காணிகளையும் சுவீகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் அதிகாரிகளுக்கு கடிதங்களை அனுப்பியுள்ளனர். வேறு இடத்தில் ஆலயக் காணியொன்றினைப் பெற்றுத்

தொடர்ச்சி: பக்கம் 18



சென்னையில் நேற்று காலமான பிரபல நடிகரும் தயாரிப்பாளரும் தமிழின உணர்வாளருமான மணிவண்ணனுக்கு புலிக்கொடி போர்த்தி அஞ்சலி செலுத்தப்பட்டது.

## ஈழத்தை உருவாக்க 'உதயன்' முயற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 13
அரச ஊடகமான 'டெய்லி நியூஸ்' கடந்த சில வாரங்களாக 'உதயன்' பத்திரிகைக்கு எதிராக மேற்கொண்டு வரும் வெறுப்பூட்டும் பிரசாரத்தின் ஒரு பகுதியாக மற்றொரு செய்தியை வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது:-
கிளிநொச்சி மாவட்டத்தில் காணிகளைச் சுவீகரிப்பதற்காக அரசு நியமித்த இரு அதிகாரிகள் தமது பதவிகளில் இருந்து விலகியுள்ளனர் என்று 'உதயன்' பத்திரிகை குற்றஞ்சாட்டியுள்ளது.
கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பொதுமக்களின் நிலங்களைச் சுவீகரித்து நியாமற்ற ரீதியில் படையினருக்கு பகிர்ந்தளித்தமையே இவர்கள் பதவி விலகியதற்கான காரணம் என்று அந்தச் செய்தி மேலும் கூறுகின்றது.

இந்தச் செய்தி தொடர்பில் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர் மேஜர்

தொடர்ச்சி: பக்கம் 17

**சிங்கர் வழங்கும் இன்னுமோர் புதிய சேவை**

அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயணச் சீட்டுக்களை நொடிப்பொழுதில் பெற்றுக்கொள்ளலாம்

மேலும் கடவுச்சீட்டு, விசா, சம்பந்தமான உதவிகளை பெற்றுக்கொள்ளலாம்.

நம்பிக்கை, உத்தரவாதம், விரைவு

இன்றே நாடுங்கள் அருகிலுள்ள SINGER PLUS / SINGER மெகா காட்சியறைகளை

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5408
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4389
சுன்னாகம். 021 224 0555
கொடிகாமம் 0776433888
சங்கானை 077 2208232
மானிப்பாய். 021 225 5343
நெல்லியடி. 021 226 4937
பருத்தித்துறை 021 226 3411
கிளிநொச்சி 021 228 0199
சாவகச்சேரி 021 227 0197
பிரதான வீதி முல்லைத்தீவு 0772475151

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# திட்டமிட்டபடி வடக்கில் செப்ரெம்பரில் தேர்தல்

## கிளிநொச்சியிலும் உறுதியளித்தார் மஹிந்த

கிளிநொச்சி, ஜூன் 16
எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் திட்டமிட்டபடி வடக்கு மாகாண சபைத் தேர்தல் இடம்பெறும் என்று நேற்றுக் கிளிநொச்சியில் வைத்துத் தெரிவித்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. இந்தத் தேர்தலின் போது தமிழ் மக்கள் சரியானவர்களைத் தெரிவுசெய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.
கிளிநொச்சி நகரில் நேற்று சனிக்கிழமை மதியம் இடம்பெற்ற பொதுமக்கள் கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.
அவர்மேலும் தெரிவித்ததாவது:-
கிளிநொச்சி நகருக்கு நான் பலமுறை வந்திருக்கின்றேன். அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட இங்கு நடத்தியுள்ளேன். நாமல் ராஜபக்ஷ அடிக்கடி இங்கு வந்து செல்கின்றார். அவர் மூலம் உங்கள் தேவைகளை அறிகின்றேன்.
இன்று இந்தப் பிரதேசம் பாரிய அபிவிருத்தியைக் கண்டுள்ளது. இந்தப் பகுதி அபிவிருத்தி அடைகின்றதா? இல்லையா? என்பது என்னைவிட உங்களுக்குத் தான் நன்றாகத் தெரியும். நாளுக்கு நாள் உங்கள் வாழ்க்கையை சுபீட்சமாக்கி வருகின்றோம்.
இந்தப் பகுதியில் இவ்வளவு விரைவான அபிவிருத்தி ஏற்படும் என்று யாருமே கனவில் கூட நினைத்திருக்கமாட்டார்கள். அதேபோன்று தென்னிலங்கை மக்களுக்கு இந்தப் பயங்கரவாதத்தை இல்லா தொழிப்பது கனவாகத்தான் இருந்தது.
வடக்கும் தெற்கும் இன்று நெருக்கமாக இருக்கக் கூடிய யுகம் தோன்றியுள்ளது. இந்த நாட்டிலுள்ள எல்லா மக்களும் ஒன்றாகக் கைகோர்த்து வாழ வேண்டும்.
பயங்கரவாதத்தினால் பல கஷ்டங்களையும் நட்டங்களையும் அனுபவித்தவர்கள்தான் நீங்கள். அன்று துப்பாக்கிக்கும் அடக்கு முறைக்கும் உட்பட்டிருந்தீர்கள். ஆனால் இன்று அவையெல்லாம் மாறிவிட்டன.
எல்லாப் பிரச்சினைகளையும் ஒரேயடியாகதீர்த்துவிட முடியாது. 3 லட்சம் பேருக்கு ஒரே நாளில் வீடு கட்டிக்கொடுக்கவும் முடியாது. எல்லாப் பாதைகளையும் ஒரேடியாகச் சீர்செய்யவும் முடியாது. எங்களுக்குத் தெரியும் கிராமப் புறங்களின் பாதைகள் இன்னமும் மோசமாகத்தான் இருக்கின்றன.
எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் மாகாண சபைத் தேர்தலை நடத்தி மாகாண சபையிடம் இந்தக் கிராமப் புறவீதித் திருத்தப் பணிகளை ஒப்படைப்போம். அது மக்களின் கைகளில் தான் இருக்கின்றது.
அரசிடமிருந்து, மாகாண சபைகளிடமிருந்து பிரதேச சபைகளிடமிருந்து வேலைகளைப் பெற்றுக்கொள்ள மக்கள் முயற்சி செய்ய வேண்டும். எனவே சரியான தரப்பைத் தெரிவு செய்யும் சுதந்திரத்தை நாங்கள் உங்களிடம் ஒப்படைக்கின்றோம்.
தொண்டர் ஆசிரியர் நியமனங்களை நாங்கள் வழங்க இருக்கின்றோம். சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கியுள்ளோம்.
தென்னிலங்கையில் உள்ள மக்களுக்குரிய சகல உரிமைகளையும் நிச்சயமாக நாங்கள் உங்களுக்கும் வழங்குவோம். உங்களின் வாழ்க்கையை இருள்மயமாக்கிய சிலர் இன்று வெளிநாடுகளிலிருந்து கொண்டு மீண்டும் உங்கள் வாழ்க்கையை அதே இடத்துக்கு தள்ள முயற்சிக்கின்றனர். தூரத்தில் இருக்கும் சொந்தக்காரரைவிட அயல் வீட்டுக்காரன்தான் அவசியம் - என்றார்.
இதன் பின்னர் தமிழில் உரையாற்றிய ஜனாதிபதி, இன்று இந்த மாவட்ட மக்களுக்குச் சந்தோசமான நாள். கடந்த 30 வருட காலம் பட்ட கஷ்டம், நட்டம், துன்பம் எல்லாம் எனக்குத் தெரியும். ஆனால் இந்த நிலைமை இப்போதில்லை.
போர் 30 வருடம், அபிவிருத்தி 4 வருடம் வித்தியாசம் பாருங்கள். உங்கள் பகுதி முன்னேறி வருகின்றது. இன்னமும் முன்னேற வேண்டும்.
இனவாத அரசியல் மிகமோசமானது. குறுகிய அரசியல் நோக்கம் வேண்டாம். தவறான பாதையில் போகவேண்டாம். பொய்ப் பிரசாரங்களை நம்ப வேண்டாம். வீட்டு வசதி, மின்சார வசதி, கல்வி வசதி, சுகாதார வசதி, வங்கி வசதி எல்லாம் செய்துள்ளோம். இன்னும் இன்னும் வசதிகள் வழங்குவோம் - என்றார். (த-5)

# மணிவண்ணன் காலமானார்



சென்னை, ஜூன் 16
தென்னிந்திய திரைப்பட இயக்குநரும் நடிகருமான மணிவண்ணன் நேற்றுக் காலை மாரடைப்பினால் காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது 59.
சென்னை நெசப்பாக்கத்தில் உள்ள அவரது வீட்டில் இருந்தபோது, திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் அவர் மரணமடைந்ததாக இந்தியச் செய்திகள் தெரிவித்தன.
நூறாவது நாள், 24 மணி நேரம், கோபுரங்கள் சாய்வதில்லை, அமைதிப்படை எனத் தமிழில் 50 படங்களை இயக்கியவர் மணிவண்ணன். 400 இற்கும் அதிகமான படங்களில் நடித்தும் உள்ளார். அண்மையில்தான் மணிவண்ணன் இயக்கத்தில் சத்தியராஜ் நடித்த அமைதிப்படை-2 படம் மணிவண்ணனின் இயக்கத்தில் உருவாகிய 50ஆவது திரைப்படமாக வெளியாகியிருந்தது.
பிரபல திரைப்பட இயக்குநர் பாரதிராஜாவிடம் சேர்ந்து உதவி இயக்குநராகப் பணிபுரிந்த மணிவண்ணன், பின்னர் தனியாகத் திரைப்படங்களை இயக்கத் தொடங்கினார். பாரதிராஜா இயக்கத்தில் வெளியான நிழல்கள், டிக் டிக், அலைகள் ஓய்வதில்லை உள்ளிட்ட படங்களுக்குத் திரைக்கதையும் எழுதியுள்ளார். (த)



கிளிநொச்சியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பங்கெடுத்த நிகழ்வில், சீன அதிகாரிகள் போட்ட குட்டித் தூக்கம். (த)

# வன்னியில் அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைத்தார் ஜனாதிபதி நேற்று

கிளிநொச்சி, ஜூன் 16
கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட பல அபிவிருத்தித் திட்டங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று ஆரம்பித்து வைத்தார்.
கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தால் பயன்படுத்தப்பட்ட இரணைமடு விமான ஓடுபாதை புனரமைப்புச் செய்யப்பட்டு ஜனாதிபதியால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. அதன் பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஜனாதிபதி தலைமையிலான குழுவினர் சென்றனர். அங்கு சொந்த இடத்துக்குச் செல்ல முடியாத கேப்பாபிலவு மக்கள் தற்போது தங்கவைக்கப்பட்டுள்ள சூரியபுரம் காட்டுப் பகுதிக்கும் ஜனாதிபதி சென்றார்.
அந்தப் பகுதிக்கான மின்விநியோகத் திட்டத்தை அவர் ஆரம்பித்து வைத்ததுடன் அங்குள்ள கண்ணகையம்மன் முன்பள்ளியையும் திறந்து வைத்தார். அதன் பின்னர் அங்கு அமைக்கப்பட்டுள்ள 10 நிரந்தர வீடுகளை உரிமையாளர்களிடம் கையளித்தார். தொடர்ந்து பாடசாலை மாணவர்களுக்கான புலமைப்பரிசில்களையும் வழங்கினார். இதன் பின்னர் வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் பாடசாலை மாணவர்களுக்கான பால் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.
இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி நகருக்கு வருகைதந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு செங்கம்பள வரவேற்பளிக்கப்பட்டது. புனரமைக்கப்பட்ட 'ஏ-9' வீதியில் மலர்களால் அமைக்கப்பட்ட நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். கிளிநொச்சி மக்கள் வங்கி காரியாலயத்தைத் திறந்து வைத்த ஜனாதிபதி அங்கு முதலாவது கொடுக்கல் வாங்கல்கலையும் ஆரம்பித்து வைத்தார். இதன் பின்னர் இறுதியாக கிளிநொச்சியில் பொதுமக்கள் சந்திப்பிலும் கலந்து கொண்டார்.
றிஷாத் 'அவுட்'
ஜனாதிபதி பங்கேற்ற சகல நிகழ்ச்சிகளிலும் அமைச்சர் றிஷாத் பதியுதீன் பங்கேற்கவில்லை. அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, நிர்மல் கொத்தலாவ, இமிந்த திஸாநாயக்கா ஆகியோரும் நாடாளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரின் ஆகியோரும் பங்கேற்றனர். (த-5-435)

## சேக்கிழார் விழா

வவுனியா சேக்கிழார் மன்றம் நடத்தும் சேக்கிழார் விழா-2013 வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் இன்று ஞாயிறு காலை 9.30 மணிக்கு சேக்கிழார் மன்ற துணைத் தலைவர் யோகா சோமசுந்தரம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ஒ-402)

# 30 வருடங்கள் பட்ட துன்பத்தை மீண்டும் உங்களுக்குத் தருவோம்

## தமிழில் கூறினார் ஜனாதிபதி

கிளிநொச்சி, ஜூன் 16
கடந்த 30 வருட காலமாகப் பட்ட துன்பம், சேதம் எல்லாவற்றையும் நாம் இப்போதும் மீண்டும் செய்து வருகின்றோம் என்று நேற்றுக் கிளிநொச்சியில் வைத்து தமிழ் மொழியில் தடுமாறித் தெரிவித்தார் ஜனாதிபதி மஹிந்த.
முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் பல்வேறு நிகழ்வுகளில் பங்கெடுப்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வருகை தந்திருந்தார். கிளிநொச்சியில் மக்கள் சந்திப்புக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
தாமதத்துக்கு நான் காரணமல்ல
மக்கள் சந்திப்பு முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுப் பொது மக்கள் அழைத்து வரப்பட்டிருந்தனர். ஆனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றரை மணி நேரம் தாமதித்து பி.ப. 1.30 மணிக்கே வருகை தந்தார்.
ஜனாதிபதியின் இந்த தாமதத்துக்கு அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் மன்னிப்புக் கோருவதாகத் தெரிவித்தார்.
ஆனால் அதன் பின்னர் உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எனது தவறால் நான் இங்கு தாமதமாக வரவில்லை. அபிவிருத்தி வேலைகளைக் கையளித்துவிட்டு வர வேண்டியதாலேயே தாமதம் ஏற்பட்டது என்று கூறினார்.
வடக்கில் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும், அரச தரப்புக் கட்சிகளினால் மக்கள் அழைத்து வரப்பட்டிருந்தனர். அவர்கள் 10 மணிக்கு முன்னரே அழைத்து வரப்பட்டு வெயிலில் நிற்க விடப்பட்டனர். இதனைப் போன்று அரச அதிகாரிகளும் ஜனாதிபதியின் வருகைக்காக பல மணி நேரம் காத்திருந்தனர்.
தமிழில் தடுமாறிய மஹிந்த
பொது மக்கள் சந்திப்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தமிழில் சிறிது நேரம் உரையாற்றினார்.
அப்போது, கடந்த 30 வருட காலமாகப் பட்ட துன்பம் சேதம் எல்லாவற்றையும் நாம் இப்போது மீண்டும் செய்து வருகின்றோம் என்றார். அவர் இவ்வாறு கூறிய உடனேயே அங்கு நிசப்தம் நிலவியது.
நிலைமையைப் புரிந்துகொண்டு சமாளித்த ஜனாதிபதி மஹிந்த, 'அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியதைப் போன்று இழந்த உயிர்களைத் தவிர அனைத்தையும் தருவோம் என்று சிங்களத்தில் கூறினார்.
ஆனையிறவு சோதனைச் சாவடியில் நேற்றையதினம், ஜனாதிபதியின் நிகழ்வில் பங்கெடுக்கும் மக்களை ஏற்றிச்சென்ற வாகனங்கள் பதிவு செய்யப்படாமல் தொடந்து போக்குவரத்து செய்ய அனுமதிக்கப்பட்டன. ஏனைய வாகனங்கள் பதிவு செய்யப்பட்ட பின்னரே பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டன. (த-5)

## சதங்கை நாதம் நடன ஆற்றுகை

யாழ்ப்பாணம், ஜூன் 16
நல்லைக் கலாமன்றத்தின் மாணவர்கள் வழங்கும் சதங்கை நாதம் நடன ஆற்றுகை நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஸ்ரீதுர்க்கா தேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.
கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளர் ச.லலீசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு நிலை மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு கலந்து கொள்வார். (ந-14)

## வதிரி முன்பள்ளி விளையாட்டு விழா

வடமராட்சி, ஜூன் 16
கரவெட்டி, வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை வதிரி முன்பள்ளி வருடாந்த விளையாட்டுப்போட்டி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு இரா.பிரபேஸ் கண்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வுக்கு பிரதேச சபைத் தலைவர் பொ.வியாகேசு பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.
கௌரவ விருந்தினர்களாக வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.தில்லைநாதன் நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை அதிபர் ந.தேவராஜா பிரதேச சபைச் செயலாளர் திருமதி தி.அன்னலிங்கம் மற்றும் பிரதேச சபையின் அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள். (ஒ-8)

# இரு படை அதிகாரிகள் வாகன விபத்தில் சாவு




புத்தளம், ஜூன் 16
இராணுவ வாகனம் விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த இராணுவ அதிகாரிகள் இருவர் உயிரிழந்துள்ளனர்.
புத்தளம், தாபோவ பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற இந்த விபத்தில் கேணல் ஹிந்துனபத்திரண, லான்ஸ் கோப்ரல் ஷானக ஆகியோரே உயிரிழந்ததுடன் மற்றுமொரு மேஜர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (த-ரி)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 16
பொன் பாலகுமாரனின் அபிவிருத்தி வங்கியியல் கட்டுரைகளின் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு தியாகி அறக்கொடை நிறுவன சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெறும்.
சன்மார்க்க சபையின் தலைவர் எஸ்.சிவபாதம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை இலங்கை வங்கியின் வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர் எஸ்.என். மாணிக்கசிங்கி ஆற்றுவார். முதற்பிரதியை இலங்கை வங்கியின் வட்டுக்கோட்டை கிளை முகாமையாளர் வே.புவனேந்திரராஜா பெற்றுக் கொள்வார். (ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் உணவுக்கு தரமற்ற அரிசி விநியோகம்



வலி.வடக்கு, ஜூன் 16

உடுவில் கல்விக் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் இடம் பெற்ற தரம் குறைந்த அரிசி விநியோகம் குறித்து எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பதினைந்து கல்விக் கோட்டங்களிலும் உலக உணவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப் படுகின்ற போதிலும் குறிப்பிட்ட ஒரு கல்விக் கோட்டத்தில் மட்டும் பாடசாலை மாணவர்களின் சமையலுக்கு தரமற்ற அரிசி மூடைகள் வழங்கப்பட்டுள்ளன.

அண்மைக் காலமாக நாட்டின் பல பகுதிகளிலும் பாடசாலை மாணவர்களின் உணவு பழுதடைந்து அவர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்ற நிலையில் மாணவரின் உணவுக்காக தரம்குறைந்த அரிசி வழங்கப்பட்டுள்ளமை குறித்து கடும் விசனம் வெளியிடப்பட்டுள்ளது. (த-86)

# குற்றச்செயல்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியா நிலை

## சட்டமா அதிபரின் பதில் கிடைக்காமையே காரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ்ப்பாணத்தில் இடம் பெறும் பெரிய, பெரிய குற்றச் செயல்கள் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அறிவித்து பல மாதங்களாகியும் பதில் கிடைக்கவில்லை. இதனால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது என்று பொலிஸார் கை விரிக்கின்றனர்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பில் யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் வைத்திய நிபுணர் ந.ஜெயக்குமாரன் வீடு மீது தாக்குதல் நடத்தப்பட்டு ஒரு வருடம் கடந்துவிட்டது. அதன்பின்னர் யாழ். போதனா வைத்தியசாலை காது, மூக்கு, தொண்டை சிகிச்சை நிபுணர் திருமாறன் வாள்வெட்டுக்கு இலக்கானார்.

'உதயன்' பத்திரிகையின் செய்தி ஆசிரியர் ஞா.குகநாதன் மிகமோசமாகத் தாக்கப்பட்டார். இங்குள்ள ஊடகப் பணியாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. 'உதயன்' பத்திரிகை அலுவலகம் மீது அண்மையில் துப்பாக்கியால் சுட்டும் தீ வைத்துக் கொளுத்தியும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இவை தொடர்பான விசாரணைகளின் நிலை என்ன என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஜெப்றி, ஆரம்ப விசாரணைகளின் பின்னர் அவை தொடர்பான விடயங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அங்கிருந்து இன்னும் பதில் வரவில்லை.

பதில் கிடைக்கப்பெற்றால்தான் பொலிஸார் மேல் நடவடிக்கை எடுக்கமுடியும். 'உதயன்' பத்திரிகை நிறுவனம் மீது துப்பாக்கியால் சுட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பான வழக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது- என்றார். (த-4)

# இளம் பெண்ணை தாக்கி தங்க நகைகள் அபகரிப்பு

வலி.வடக்கு, ஜூன் 16

அயல் வீட்டுப் பெண் பொல்லினால் தாக்கியதால் மயக்கமடைந்த இளம் பெண்ணிடம் இருந்த நிலையில் சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்ட சம்பவம் ஏழாலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஏழாலைப் பகுதியில் தனது வீட்டுக்கு அயலில் உள்ள வீட்டில் இந்தத் துணிகரத் திருட்டை மேற்கொண்டுள்ளார்.

வீட்டில் தனது மகளைச் சமைக்கும்படி கூறிவிட்டு தாயார் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார். இதன் போது அங்கு வந்த அயல் வீட்டுப் பெண் வீட்டில் சமைத்துக் கொண்டிருந்த பெண்ணைத் தலையில் பொல்லினால் தாக்கியுள்ளார். இதன் போது அந்தப் பெண் மயங்கி விழுந்துள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவரது கழுத்தில் இருந்த சங்கிலி, காதில் இருந்த தோடு ஆகியவற்றை அபகரித்துக் கொண்டு அங்கிருந்து மறைந்து விட்டார்.

தாயார் வீடு திரும்பிய போதே இந்தத் திருட்டுக் குறித்துத் தெரிய வந்தது. இதனையடுத்து இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (த-86)

# பவள விழாவும் மலர் வெளியீடும்

யாழ்ப்பாணம், ஜூன் 16

கைதடி கிழக்கு சனசமூக நிலையத்தின் பவள விழாவும் மலர் வெளியீடும் இன்று ஞாயிற்றுக்கிழமை சனசமூக நிலையக் கலையரங்கில் பி.ப.3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பவள விழாக் குழுத் தலைவர் அ.லோகநாதன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமியும், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் சி.துரைராசா, சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் செல்வி தி.தர்சினி, கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் சு.சிவானந்தன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் மலர் வெளியீட்டுடன் மூத்த சேவையாளர் கௌரவிப்பு, சிறுவர்களின் கலை நிகழ்வு, பட்டிமன்றம் என்பனவும் இடம் பெறவுள்ளன. (த-400)

# வெள்ள வாய்க்காலினால் பொது மக்கள் சிரமத்தில்

வலி.வடக்கு, ஜூன் 16

மருதனார்மடச் சந்தியில் அமைந்துள்ள இராமநாதன் வளாகத்தில் உள்ள வெள்ளவாய்க்காலினால் பொது மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கடந்த பல வருடங்களாகக் குறிப்பிட்ட வெள்ளவாய்க்கால் அமைந்துள்ள பகுதியில் மதில் உடைந்து பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுகின்றது. ஆயினும் வீதி அபிவிருத்தி அதிகார சபையோ அன்றி இராமநாதன் அறக்கட்டளை நிறுவனமோ குறிப்பிட்ட வெள்ள வாய்க்காலின் நிலை குறித்துக் கவனம் செலுத்தவில்லை.

மருதனார் மடம் சந்தியில் இருந்து உரும்பிராய் செல்லும் வீதியில் குறிப்பாக பஸ்தரிப்பிடம் அமைந்துள்ள பகுதியில் இத்தகைய பாதுகாப்பற்ற சுமார் ஆறு அடி ஆழமான வெள்ள வாய்க்கால் பாதுகாப் பற்ற நிலையில் உள்ள போதும் அது குறித்து எவரும் கவனம் எடுக்கவில்லை என விசனம் தெரிவிக்கப்படுகிறது. (த-86)



# போதை தலைக்கேறியதால் காணாமற்போன மோ.சைக்கிள்

யாழ்ப்பாணம், ஜூன் 16

போதை தலைக்கேறிய நிலையில் மோட்டார் சைக்கிளை திறப்புடன் வீதியில் விட்டவர் மறுநாள் காலையில் எழுந்து தனது மோட்டார் சைக்கிளைக் காணாமற் பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளார்.

பின்னர் அந்த மோட்டார் சைக்கிள் சிறிது தூரத்தில் கைவிடப்பட்ட நிலையில் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இரவுநேரம் போதை தலைக்கேறிய நிலையில் சென்றவர் தொடர்ந்து செல்ல முடியாமல் கோப்பாய் சந்தியை அண்மித்த வீதியில் விழுந்து தூங்கிவிட்டார்.

வீதியில் மோட்டார் சைக்கிள் அவர் விழுந்து கிடந்த இடத்தில் இருந்து சிறிது தூரத்தில் நிறுத்தப்பட்டிருந்தது.

மறுநாள் காலையில் போதை முறிந்து எழுந்த அவர் தனது மோட்டார் சைக்கிளை காணாமற் தேடியுள்ளார். அருகில் அது இல்லாமையால் கோப்பாய் பொலிஸில் முறையிட்டுள்ளார். அவரது மோட்டார் சைக்கிள் சற்றுத் தூரம் தள்ளி நிறுத்தப்பட்டிருந்தமை பின்னர் தெரிய வந்தது. (த-4)

# மாணவத் தலைவர்களுக்கு திறன் விருத்திப் பயிற்சி

தென்மராட்சி, ஜூன் 16

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் 75 மாணவத் தலைவர்களுக்கான மூன்று நாள் வதிவிட தலைமைத்துவ திறன் பயிற்சி வகுப்புகள் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நேற்று முன்தினம் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நேற்று காலை நடைபெற்ற நிகழ்வில் ஆசியுரையினை பண்டிதர் கலாநிதி மு.து.ஜெகதீஸ்வரக் குருக்கள், வண. பிதா.தேவசகாயம் அடிகள், யாழ்.சின்மய மிஷன் சுவாமி ஜாக்கிருத சத்தியானந்தா ஆகியோர் நிகழ்த்தினர்.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தனும் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளையும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் ''தலைமைத்துவக் கோட்பாடு'' பற்றி தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பல்வி உதவிப் பணிப்பாளர் ந.சர்வேஸ்வரனும், ''தலைமைத்துவ திறன்கள்'' பற்றி யாழ். பல்கலைக்கழக முகாமைத் [illegible] [illegible] ரியர் க.தேவராசா ''உடல் உள ஆரோக்கிய மேம்பாட்டின் அவசியம்'' பற்றி யாழ்.சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் வைத்தியர் கலா [illegible] திருமகளும் உரை நிகழ்த்தினர். (த-9)



> நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தனும் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளையும் கலந்துகொண்டனர்.

# கொள்ளையிடப்பட்ட நகைகள் சந்தேக நபர்களிடம் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16

வல்வெட்டித்துறையில் மூதாட்டியைக்கொலை செய்து கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் சந்தேக நபர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வல்வெட்டித்துறை ஊறணிப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றிருந்தது. சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சோதிலிங்கம் தெய்வமலர் (வயது-69) என்பவரே கொலை செய்யப்பட்டு அவரிடமிருந்து சுமார் 15 பவுண் நிறையுடைய நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

சந்தேக நபர்களான பொலிகண்டி சின்னவளம் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய ஒருவரும், வல்வெட்டித்துறை கொலணி ஊறணியைச் சேர்ந்த 31 வயதுடைய ஒருவரும் கைது செய்யப் பட்டுள்ளனர். இவர்களிடமிருந்தே நகைகள் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

# சிறுவனை காணவில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 16

நல்லூரடியைச் சேர்ந்த 17 வயதுச் சிறுவன் நேற்றுமுன்தினம் தொடக்கம் காணாமற் போயுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம். எம். ஜெப்றி தெரிவித்தார்.

நேற்றுமுன் தினம் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். சுரேஸ் பவிதாஸ் என்ற சிறுவனே இவ்வாறு காணாமற் போயுள்ளார்.

நேற்று முன்தினம் காலை வீட்டை விட்டுச் சென்றவர் பின்னர் அவர் வீடு திரும்பவில்லை என்று அவரது சித்தி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கண்டி பிரதான வீதியில் (A9) கைதடி நாவற்குழி சந்திகளுக்கு இடையில் வர்த்தகத் தேவைகளுக்கு ஏற்ற 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. T.P: 0776184649

## கார்கள் விற்பனைக்கு

GL-xxxx LML ஸ்கூட்டர், KC-xxxx செரி, 300-மஸ்ரா, 11-லான்ஸர் கார்கள் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: **0774734486**

(38416) (10.7)

## அக்ஷயா

பேசியல், மேக்கப், ஹெயார் ஸ்டைல், தலைமுடி அயன்பண்ணுதல், சுருட்டுதல், கேவிங், சாறி வுளவுஸ் கட்டிங், சாறிவேக் மேற்படி பயிற்சி நெறிகள் நடைபெறுகின்றன. உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். ★ ஒட்டிய கன்னங்களை குண்டுக் கன்னங்களாக மாற்றும் குளிசை. ★கருவளையம், இளநரை மாற்றும் இளமைத் தோற்றம் தரும் குளிசை. ★உடல் எடை கூட்டும் குளிசை, உடல் எடை குறைக்கும் பால்மா, கோப்பி. ★நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் கோப்பி. ★தலைமுடி வளரச் செய்யும் ஆயுர்வேத எண்ணெய், கறுப்பு, பிறப்பிலேயே கறுப்பு, நாட்பட்ட பருக்கள் அனைத்தையும் மாற்றும் ஒரிஜினல் வைத்திங்கிறீம் விற்பனைக்குண்டு.

(38410)

பதிவு இல: 16168
0772106155 **அக்ஷயா** பிறவுண் றோட், சந்தி அருகில் (நாவலர் றோட்) யாழ்ப்பாணம்.


# யாழ்ப்பாணத்து படம் ராஜா திரையரங்கில்

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட முழு நீளத் திரைப்படமான ' என்னுள் என்ன மாற்றமோ' என்னும் திரைப்படம் நேற்றிலிருந்து ராஜா திரையரங்கில் காண்பிக்கப்படுகிறது.

இந்தத் திரைப்படத்தை ' நல்லூர் பிக்சர்ஸ்' நிறுவனம் தயாரித்துள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கலைஞர்கள் கொண்டு உருவாக்கப்பட்ட இந்தப் படத்தை யாழ். பல்கலைக் கழக மாணவர் சி. கவிமாறன் தாயரித்து இயக்கியுள்ளார். (ஐ)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111



## பூஜ்யஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி அவர்களின் வாழும் கலைப் பயிற்சி பாகம் I

யோகாசனம், தியானம், சுதர்சனக்கிரியா என்னும் மூச்சுப்பயிற்சி ஆகியவற்றை உள்ளடக்கிய உடல் உள மேம்பாட்டுப் பயிற்சி

அறிமுக உரை- 17.06.2013 மாலை 5 மணி
இடம்- மகேஸ்வரன் மண்டபம், நல்லூர்
பயிற்சி 6 நாள்கள் மாலை வேளையில் நடைபெறும்.

வாழும் கலை அமைப்பு, யாழ்ப்பாணம்.
T.P- 0776655408 (38412)(16.14.9.7)

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கொழும்பில் வசிக்கும் சிறிய குடும்பம் ஒன்றிற்கு சமையல் வேலை நன்கு தெரிந்த பணிப்பெண் தேவை.

தொடர்புகளுக்கு: 077 4843932

## காணி விற்பனைக்கு

இராமநாதன் வீதியில், பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் 4பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு- 0215680098

## ACCA
## பட்டய சான்றிதழ் பெற்ற கணக்கறிஞர்கள் சங்கம்

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**22.06.2013, 29.06.2013**

* December 2013 பரீட்சைக்குரிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
* விரிவுரைகள், செயன்முறைப் பயிற்சிகள் வார இறுதி நாள்களில் நடைபெறவுள்ளன
* அனுமதிகளை தொழில் சார் கற்கைகள் நிறுவனம் (IPS) யாழ்.பல்கலைக் கழகம் முன்பாக பெற்றுக் கொள்ளவும்.

| DIPLOMA IN INFORMATION TECHNOLOGY (DIT) | DIPLOMA IN ENGLISH BY: BRITTO |
|---|---|

முகாமைத்துவ சபை
ACCA கற்கை வழிகாட்டல் அலகு, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். T.P- 021 567 0345 (38377) (3.6.7.11)

## விற்பனைக்கு

64-xxxx டீசல் கார், 15HP 3SPHASE MOTOR விற்பனைக்கு உண்டு.
தொடர்பு- 0773714828

## வாடகைக்குத் தேவை

கொழும்பு நிறுவனம் ஒன்றுக்கு வாகனம் (லொறி) நிறுத்துவதற்கும், தங்குவதற்கும் யாழ்.நகரில் இருந்து 10km இற்குள் வீடு வாடகைக்குத் தேவை.(பழைய கட்டடமும் ஏற்றுக்கொள்ளப்படும்.
(38379)(5.6.7) தொடர்பு:077 634 3232

## மணமகள் தேவை

இன்சூரன்ஸ் கம்பனியில் நிர்வாக உத்தியோகத்தராக பணிபுரியும் 30 வயதுடைய கிறிஸ்தவ (Non R.C.) மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. (38382)(5.6.7) தொடர்பு:விளம்பர இல. 4452 மே/பா.உதயன்,361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வாடகைக்கு

சாவகச்சேரி Hero Honda விற்பனை நிலையத்துக்கு மேலுள்ள அலுவலகப் பாவனைக்குரிய இடம் வாடகைக் குண்டு.
தொடர்புகளுக்கு: 021 3210456, 077 8938504

## வீடு வாடகைக்குத் தேவை

திருநெல்வேலி, நல்லூர், யாழ்நகர் பகுதிகளில் குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்குத் தேவைப்படுகிறது.
தொடர்புகளுக்கு: 077 8923480

## Leenu Computers
## வழங்கும் விசேடசலுகை



12000/= முற்பணமாகச் செலுத்தி கணினி ஒன்றை சொந்தமாக்கிக் கொள்ளுங்கள்.
2000x6Months
Leenu Computers
இராச வீதி, கல்வியங்காடு
(கோப்பாய் பொலிஸ் அருகில்) (38380)(5.6.7)
தொடர்பு: 077 254 6511 Prasannaraj

## வாகனம் விற்பனைக்கு

Isuzu 250 வெள்ளை நிறம் (கம்பனி ஒன்றில் மாத வருமானத்துக்கு சேவையில் உள்ளது)
தொடர்பு- 0773655257

## வீடு, காணி விற்பனைக்கு

கொக்குவில் மேற்கு,கேணியடி பகுதியில் 3½ பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. (38381)(5-6.7)
தொடர்பு:077 711 1716, 077 529 4464

## விற்பனைக்கு

Cool Laminating மெசின் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு- 0778447710

## Pulsar 200 விற்பனைக்கு

NP VC xxxx இலக்கமுடைய Palsar 200 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0777 667444

## கடை வாடகைக்கு

இல. 198, நாவலர் வீதியில் உள்ள கடை வாடகைக்கு விடப்படும்.
தொடர்புகளுக்கு: 077 1639083

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

Bajaj discover (125cc) low mileage good condition
தொடர்புகளுக்கு: 077 2366357

## வீடு வாடகைக்கு

இணுவில் மத்திய கல்லூரிக்கு முன்பாக குமாரலிங்கம் வீதியில் நான்கு அறைகளுடன் கூடிய வசதிகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு
தொடர்பு:077 806 9066 (38072)(5.6.7)

## ருது சோபன நீராட்டுவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஜய வருடம் ஆனி மாதம் 02 ஆம் நாள் இன்று (16.06.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 08.53 மணி முதல் 10.23 மணி வரையுள்ள பூர நட்சத்திரமும், சித்தாமிர்த யோகமும் கூடிய சுபவேளையில் எமது ஏக புத்திரி திருநிறை செல்வி



**பிரியதர்சினி**



அவர்களுக்கு இறைவன் திருவருள் துணைகொண்டு "எமது இல்லத்தில்" ருது சோபன நீராட்டுவிழா நடாத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து செல்வியை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசார வைபவத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்


சிவப்பிரம்மஸ்ரீ ஜெகதீஸ்வரக்குருக்கள் ஜெயந்தி குடும்பத்தினர்.
தொ.பே. 077 600 2075

"பிரியா பவனம்",
புவனேஸ்வரி அம்மன் கோயில்,
இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (38369)(2.6.7.3)

## யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை



அருள்மிகு
**ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் தேவஸ்தானம்**
**திருமஞ்சத் திருவிழா - 2013**



நிகழும் விஜய வருடம் ஆனி மாதம் 2 ஆம் நாள் இன்று (16.06.2013) ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணியளவில் வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று, மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட அழகிய திருமஞ்சத்தில் விநாயகப் பெருமான், முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதராக வீரமாகாளி அம்பாள் வீதிவலம் வரும் திருக்காட்சியும் ஈழத்தின் புகழ்பூத்த நாதஸ்வரக் கலைஞர்கள் இசை மாரி பொழிய அம்பாள் திருமஞ்சத்தில் ஏறிப் பவனிவருவார். அடியார்கள் அனைவரும் அம்பாளின் திருமஞ்சத் திருக்காட்சியைக் கண்டு அம்பாளின் அருட்கடாட்சத்தினைப் பெற்றுய்வீர்களாக.

★ பகல் அன்னதானம் வழங்கல்
★ மாலை விசேட மேளக்கச்சேரி
- வழக்கம்பரை சிவகுமார் குழுவினர்
- பிச்சையப்பா புதல்வர்கள் ரஜீவன் குழுவினர்
- உதயசங்கர் குழுவினர்
- நந்தன் குழுவினர்
- முத்துலட்சுமி புதல்விகள் தையல்நாயகி செல்வநாயகி குழுவினர். கல்வியங்காடு.

**'வீரமாகாளியைச் சரண் புகுந்தால் வீரசக்தி பெறலாம்'**

திருமஞ்சத் திருப்பணித் திருவிழா உபயகாரர்
**அம்பாள் மரக்காலை,**
இல. ..., ...த்துறை வீதி,
வீரமாகாளி அம்மன் கோயிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாபர் லங்கா நிறுவனத்தின் பழரச உற்பத்தி ஆலை திறப்பு



அண்மையில் இந்தியாவின் முன்னணி பாவனையாளர் நுகர்வுப்பொருட்கள் தயாரிக்கும் டாபர் இந்தியா லிமிடெட் நிறுவனத்திற்கு முற்றிலும் சொந்தமான துணை நிறுவனமான டாபர் லங்கா(பிரைவட்) நிறுவனமானது இலங்கையில் பழரச குளிர்பான உற்பத்தி ஆலையை திறந்து வைத்திருந்தது.

உள்நாட்டில் டாபர் நிறுவனத்தினால் தொடங்கப்படும் இப் புதிய உற்பத்தி ஆலையை இலங்கை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வுகளின் ஆரம்ப விழாவில் இலங்கை அரசாங்க பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டிருந்தனர். மேலும் இந்திய உயர் ஸ்தானிகர் அஷோக் கே.காந்தா, டாபர் இந்தியா லிமிடெட்; நிறுவனத்தின் தலைவர் டாக்டர். ஆனந்த் சி பர்மன் மற்றும் டாபர் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுனில் டக்கல் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இலங்கை முதலீட்டு சபையுடனான உடன்படிக்கைக்கு அமைய, இப் புதிய உற்பத்தி ஆலையானது 16 மில்லியன் பெறுமதி ஆரம்ப முதலீட்டுடன் ஆரம்பிக்கப்படுவதுடன், ஒவ்வொரு மாதமும் 2.8 இலட்சம் பழரச வகை குளிர்பான கேன்கள் உற்பத்தி செய்யக்கூடிய வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது. இப் பசுமை திட்டமானது யக்கடகல எஸ்டேட், கொட்டதெனியாவ, கம்பஹா மாவட்டம், மிஹிரிகம பிரதேசத்தில் அமைந்துள்ளது.

இலங்கையிலுள்ள எமது ஆலையானது டாபர் நிறுவனத்திற்கு மிக முக்கிய மைல்கல்லாக அமையும்'' என டாக்டர்.ஆனந்த் சி பர்மன் தெரிவித்தார். மேலும் அவர் நான்; இலங்கை அரசு, இந்த ஆலையின் நிர்மாணப்பணிக்கு உதவிய பணியாளர்கள் மற்றும் உள்நாடு மற்றும் ஏற்றுமதிச் சந்தை ஆகிய இரண்டு துறைகளிலும் நமது வெற்றிக்கு வழிகாட்டியவர்களையும் அங்கீகரிக்க விரும்புகிறேன்'' என்றார்.

# யாழ்.கொமர்ஷல் வங்கியின் 'சேமிப்பு ஒளி' ஊர்வலம்



யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ்.கொமர்ஷல் வங்கியின் சேமிப்பு ஒளி நிகழ்வு நேற்று சனிக்கிழமை நடைபெற்றது. யாழ்.பிராந்திய முகாமையாளர் ரஜிவ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வங்கி ஊழியர்களின் ஊர்வலம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள கொமர்ஷல் வங்கியில் இருந்து காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி யாழ்.பஸ் நிலையத்தை வந்தடைந்து அங்கு வங்கி அதிகாரிகளால் 'சேமிப்பு ஒளி' பலூன்கள் பறக்கவிடப்பட்டன.

அதைத்தொடர்ந்து வைரவர் கோயில் வீதி, மின்சார நிலைய வீதி, கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதி, கே.கே.எஸ். வீதி வழியாக மீண்டும் ஆஸ்பத்திரி வீதியை அடைந்து அங்கிருந்து ஊர்வலம் வங்கியை அடைந்தது. மங்கல வாத்தியம் முழங்க வங்கி அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் ஊர்வலத்தில்சென்றனர்.

இதேசமயம் யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் பாண்ட் வாத்திய அணி வகுப்பும் நடைபெற்றது. யாழ்.இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, புனித பத்திரிசியார் கல்லூரி, கனகரத்தினம் மகாவித்தியாலயம், பருத்தித்துறை மெதடிஸ் பாடசாலை, திருக்குடும்பக் கன்னியர் மடம் மாணவர்களின் பாண்ட் வாத்தியக் குழு இதில் கலந்து கொண்டது.

நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் நிர்வாகப் பணிப்பாளர் ரவிடயஸ் பிரதான நிறைவேற்று அதிகாரி ஜெகன் துரைரட்ணம், பிரதி முகாமையாளர் எஸ்.ரங்கநாதன், உதவி பொதுமுகாமையாளர் சந்திராவல்கம, உதவி பொது முகாமையாளர் ராஜ சூரியர், பிராந்திய முகாமையாளர் ரஜிவ் உட்பட வங்கி ஊழியர்கள் கலந்து கொண்டனர். (த-7-14)




உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு பீப்பிள்ஸ் லீசிங் [illegible] வாடிக்கையாளர்களுக்கு மரக்கன்று களை வழங்கியது. அன்றைய நிகழ்வில் பீப்பிள்ஸ் லீசிங் பினான்ஸ் பீஎல்சியின் முகாமையாளர் [illegible] வாடிக்கையாளர் ஒருவருக்கு மரக்கன்று ஒன்றினை வழங்குகின்றார். (சு)

# யுனிலிவர் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்

தமது வியாபார பங்காளர்களை கௌரவிக்கும் நோக்கில் 'முதுபலச' திட்டத்தின் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு யுனிலிவர் நிறுவனம் அண்மையில் பெறுமதியான புலமைப்பரிசில்களை வழங்கியது. இதன்போது யுனிலிவர் நிறுவனத்தின் மூலம் கடந்த ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவ, மாணவியருக்கு தலா 1 இலட்சம் ரூபா பெறுமதியான புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

தமது உற்பத்திகளின் விற்பனை நடவடிக்கையில் பாரிய பங்களிப்பினை செலுத்தும் சில்லறை மற்றும் மொத்த வியாபாரிகளின் பங்களிப்புடன் 2003ஆம் ஆண்டு 'முது பலச' திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இன்று இத் திட்டத்தில் 1000இற்கும் அதிகமானவர்கள் அங்கத்தவர்களாக இருப்பதுடன், அவர்களது பிள்ளைகளின் கல்விக்கு ஆதரவு வழங்கும் நோக்கில் யுனிலிவர் நிறுவனம் இப் புலமைப் பரிசில்களை வழங்கியுள்ளது.

2011ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் புலமைப்பரிசில் திட்டம் குறித்து கருத்து தெரிவித்த 'முது பலச' திட்டத்தின் திட்ட முகாமையாளர் ஷாலிக அலஹகோன், 'எம்முடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் சில்லறை மற்றும் மொத்த வியாபாரிகளை கௌரவிக்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் இந்த முது பலச திட்டத்தின் ஊடாக அவர்களது வியாபாரத்திற்கு ஆதரவு வழங்குவது மாத்திரமன்றி, அவர்களின் குடும்ப அங்கத்தவர்களின் நலனிலும் அக்கறை செலுத்துகிறது. தமது பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியை புகட்ட வேண்டும் என்பது அனைத்து பெற்றோரினதும் எதிர்பார்ப்பாகும். அதனை பூர்த்தி செய்யும் வகையில் அறிவு மற்றும் கல்வியில் சிறந்து விளங்கும் சமுதாயத்தை உருவாக்குவதற்கான அடித்தளத்தை ஏற்படுத்துவதே இச் சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கின்றோம்' என தெரிவித்தார்.









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இந்திய சமையற்கலை வல்லுநர்களால் விசேடமாக தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வேண்டிய அளவு (Buffet) பஃவே முறையில் ஜூன் 15,16 ஆம் திகதி சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் மாலை 6 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை உண்டு மகிழ நாடவேண்டிய இடம்...

விசேட விலைக்கழிவு 200 ரூபா மட்டுமே...!

பிள்ளையார் இன்
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(Garden)
உணவு வகைகள், பூரி, பாஜி உட்பட பல வகையான தோசை வகைகளும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: 0778959716, 021 2222829

## மணமகள் தேவை

13.12.1980, இந்து கௌரவ குடும்பத்தில் பிறந்த பொறியியல் (மெக்கானிக்) தொழில் புரியும் மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை.
விவரகரத்துப் பெற்றவரும் தொடர்பு கொள்ளலாம்.
(சாதி, இனம் பார்க்கப்படமாட்டாது.)
T.P-077 154 3182

## முகவர் தேவை

Detergent Home Care தயாரிப்புகளில் முன்னணி நிறுவனமான Soft Vision Group Pure max தயாரிப்புகளை யாழ் மாவட்டத்தில் விநியோகம் செய்வதற்கான முகவர் தேவை.
தொடர்பு: 071 862 3166
E mail: sales@svisioni.com
Web:www.puremax.lk

## இலவச இணையக் கற்கை நெறி நிறுவகம்
## SERVE e -Learning Institute
பதிவு எண்:1100

கற்கை நெறி :இலவச Diploma In Information Communication Technology (ICT)4 மாதங்கள்
தகைமைகள்: க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றி பல்கலைக் கழக அனுமதியை எதிர்நோக்குவோர்.
க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்து வேலை தேடுவோர் OR வேறு தொழிற்பயிற்சிகளை மேற்கொள்வோர்.
க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றியோர்.
பாடங்கள் : தகவல் தொழில்நுட்பம் (ICT). ஆங்கிலம் (English) தட்டச்சுப் பயிற்சி (Computer Typing)
விண்ணப்ப முடிவு திகதி: 25.06.2013
மேலதிக விவரங்களுக்கு:
No.66,கட்டைப் பாலி ஒழுங்கை, ஆனைக்கோட்டை.
தொ.பே இல: 021 225 6206
மேலதிக விவரங்களுக்கு நேரில் வரவும்.
பதிவாளர்
SERVE-e-Learning Institute
(38324)
(3.6.11)

## காணி விற்பனைக்கு

கந்தர்மடம் சந்திக்கும், இந்து மகளிர் கல்லூரிக்கும் அண்மையில் நல்ல சுற்றாடலில் 10 பரப்புக்காணி முழுமையாகவோ பிரித்தோ விற்பனைக்குண்டு.
தொடர்பு:075 503 4930

## ஆசிரியர் தேவை

வலி. தென் மேற்கில் இயங்கி வரும் ஆங்கில மொழிமூல முன்பள்ளிக்கு அனுபவமுள்ள ஆசிரியர் மற்றும் ஆர்முள்ள ஆசிரியர்கள் உடன் தொடர்புகொள்ளவும்
தொடர்பு: 021 225 5756

## Mohan Building Construction

- அழகிய வீடுகள், பல அடுக்குகளைக் கொண்ட கட்டடங்களை அமைப்பதில் அனுபவம் மிக்கவர்கள்.
- கட்டடத் துறைசார் அனைத்து வேலைகளும் எம்மால் முழுமை பெற அமைத்து கொடுக்கப்படும்.

தொடர்பு: 077 898 9436
பதிவு இல. NAI/DS/1228

## வீடு விற்பனைக்கு

செங்கடே சா வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள புதிய வீடு (1½ பரப்பு) விற்பனைக்குண்டு.
(38107)(45.5.6) தொடர்பு: 075 710 0884

## காணி விற்பனை

சங்கத்தானை – சாவகச்சேரி
சங்கத்தானை சாவகச்சேரி, தாமோதரம்பிள்ளை வீதியில். இந்து கனிஷ்ட பாடசாலைக்கு முன்னால். 10,10 1/2 பரப்பளவுள்ள. தூய உறுதி கொண்ட இரு காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு.
விலை: பரப்பு 6 இலட்சம்.
விபரங்களுக்கு – 0713-762021 / 0060128308332 (U/8959)
E-Mail: kuhansku@yahoo.co.uk

## கார் விற்பனைக்கு

2011 Model, Maruthui suzuki Astar
NP KS x x x x இலக்கத்தையுடைய கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 758 4059

இதோ வீட்டிலிருந்தே இணையத்தில் வருமானம் ஈட்ட ஓர் அரிய வாய்ப்பு!
(Trading Currencies & Commodities)


குறைந்தது ஒரு நாளுக்கு
$20 முதல் $30
வரை வருமானம்

எந்த முன்அனுபவமும் தேவையில்லை

*Free Seminars & Individual Attention*
(38340)
Call: - 077-2811127


## கடை வாடகைக்கு

பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் (A 32) தருமபுரம் 8ம் யுனிற் சந்தியில் கடைக் கட்டடம் வாடகைக்கு உண்டு



கீழ் /மேல் தளங்கள் 1600 சதுர அடி விஸ்தீரணம்
(38300)
நிறுவனங்கள், வங்கிகள் விரும்பத்தக்கவை
தொடர்புகளுக்கு : 075 901 1244

## உயர்கல்வியை வெளிநாட்டில் தொடரும் மாணவர்களுக்கான கல்விக்கண்காட்சி



அனுமதி இலவசம்

ஜூன் 22ஆம் திகதி 2013 (சனிக்கிழமை) இலங்கை தாஜ் சமுத்திரா ஹோட்டலில்

### உடன் அனுமதி

காலை 10.30 மணி தொடக்கம் மாலை 7.00 மணி வரை

வாருங்கள் எமது கல்விக்கண்காட்சிக்கு விஜயம் செய்து UK, Canada, Australia, New Zealand மற்றும் Malaysia போன்ற நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களின் பிரதிநிதிகளுடன் உங்களுக்கு தேவையான அனைத்து விபரங்களையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

- புலமைப்பரிசில்கள்
- மாணவர்களின் எதிர்காலம்

CIM, CIMA, ABE, NCC, BCS, HND, ACCA மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தகைமையுடைய மாணவர்களுக்கு உயர்தர அனுமதி

இப்பொழுதே முன்பதிவுகளை செய்து
www.oecsl.lk
வியத்தகு பரிசில்களை வெல்லுங்கள்

CALL - 021 7306000 , 077 3013060

Anglia Ruskin University Cambridge & Chelmsford
University of Bedfordshire
University of Bolton
University of Chester
UEL London UK
University of Hull
Oxford Brookes University
University of South Wales Prifysgol De Cymru
Swansea University Prifysgol Abertawe
Teesside University

(U/8958)

Gold Sponsor
JAVA INSTITUTE

Organised by
OVERSEAS EDUCATION CENTRE (PVT) LTD
CDUK

கல்விக்கண்காட்சிக்கு விஜயம் செய்யும்போது உங்களுடைய மூலப்பிரதிகளையும் (Original Certificate), பிரதிகளையும் (Photocopies) கொண்டு வரவும்.

## Lanka Skill Development Academy
**(U.K & India Based Skill Development Academy)**
**YOUR FIRST STEP TO STUDYING**

Towards world leading hospitality industry
PRODUCTION, FOOD&BEVERAGE SERVICE, HOUSEKEEPING, RECEPT
ENGLISH TRAINING CAN BE PROVIDED BY BRITISH COLLEGE OF HIGHER STUDIES JAFFNA
STUDENTS ADMISSION AND REGISTRATION
337, PONNALLAI ROAD, MANIPAY,
Sunday 16/06/13———18/06/13
Duration of course: One Year /6 Months
ABC LONDON AWARDING BODY CERTIFICATION
COURSE DIRECTOR/EXAMINER/QUALITY CONTEOL ASSER: S.Senthilingam (London)
Contact:A THILEEPAN PH: 078 911 1553
S.SENTHILINGAM(LONDON) PH: 0771286382
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
TONY GANESAN; PH: 0777730074
**email id:senthilingam@hotmail.com**
**website:www.lankaskillsacademy.com**
(38345)

RSPH — Reg 1219 u.k
Oregano Institute of Hotel Management — 4589 ( India)
ABC AWARDS — Reg: 2419 ( U.K)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

கொழும்புத்துறை மேற்கில் பிள்ளையார் கோயில் பாடசாலை யோகர் சுவாமி ஆச்சிரமம் ஆகியவற்றிற்கு அண்மையில் 3 1/4 பரப்பு காணியிலுள்ள வீடு விற்பனைக்கு உண்டு (சகல வசதியுடன்)

தொடர்புக்கு :
0754 858 156
0113 171 061

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு கலைவாணி மில் லேனில் பொற்பதி வீதிக்கு சமீபமாக 3 பரப்பு 11குழி காணி விற்பனைக்குண்டு

தொடர்பு :
0773 658 485

## English, Tamil Computer Typing செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு 077 147 9485 (38240) (6.2.3)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், திருநெல்வேலி [illegible] நான்கு (4) விற்பனைக்குண்டு. பலாலி பிரதான வீதியிலிருந்து 100 மீற்றர் தூரத்திற்குள் [illegible] 12' அடிப் பாதை கொண்ட காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: (38373) (3.6.7.11)
077 666 0631, 075 767 6739

## The world Navigators (Pvt Ltd)

கொழும்பில் இயங்கும் நிறுவனத்தின் யாழ். கிளைக்கு O/L/A/L தகைமையுடையவர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.
Note:பகுதி நேர/முழுநேர வேலையாளர்கள் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

தொடர்பு: (38372)(3.6.7.11)
The world Navigators (Pvt)ltd
Event planers and Travels & Tours.
021 221 9936/011 790 5089

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கோண்டாவில், மேற்கு, துரைவீதியில் பாருதேவன் புலம் எனப் பெயர் குறிப்பிடப்படும் வெற்றுக்காணி 3 1/4 பரப்பு வழி, வாய்க்கால், கிணற்றுப் பங்குடன் விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தேவையில்லை.

தொடர்புகளுக்கு:
071 3526991

## கருங்கல் சல்லிகள் விற்பனைக்கு

½', ¾', 1½', 4:4, 6:9 கருங்கல் சல்லி வகைகைளை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு: 072 230 0555 (C/9646)(3.6.11)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம்,பிரான்ஸ் PR உடைய பூரம் 1984ஆம் ஆண்டு மணமகனுக்கு சிவந்த அழகிய மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. (38366)(3.5.6)

தொடர்பு: 077 906 3025 aneethan@hotmail.com

## Field Officer Vacancy

A well reputed organization is looking for a suitable candidate for the post of *Field Officer*:

Specific duties and nature of job:

- Full-time position
- Field visits in Jaffna and Killinochi districts
- Work with schools and implement specific projects.
- Record and update gathered information about sponsored children on computer system.
- Prepare and send reports to committee and donors.
- Give receipts to sponsorship donations.
- Maintain scholarship sponsorship account in the accounting system.

Qualifications:

- GCE A/L
- Computer skills – MS Office – Word, Excel, Power Point, email
- Keen interest to work with children and in their educational development
- Willing to travel to visit children at schools and homes in Killinochi and Jaffna districts
- Able to communicate (speak and write) in English. Spoken Sinhala will be an added qualification.
- Able to type in English and Tamil

Salary Negotiable

Application closing date: 25th June 2013

If interested please forward your resume to: fieldofficervacancy@gmail.com and post a Application with resume to:

Advt No. 4450,
C/o, Uthayan
361, Kasturiar Road, Jaffna. (38362)

## விற்பனைக்குண்டு

மஹேந்திர (Mahindra) Maxximo வாகனம் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
071 494 0021, 077 262 7581 (38353)(3.6.11)

## கேஷ கல்யாணி மூலிகை எண்ணெய்
### சிரசுக்கான விஷேட இயற்கை மூலிகை சிகிச்சை

கூந்தல் முதிர்வு,உதிர்வு, வலுவிழந்த தன்மை, நுனிவெடிப்பு, உயிரற்ற தோற்றம்,பொடுகுத்தொல்லை, தலைவலி, கண்பார்வைக் குறைபாடு, தூக்கமின்மை, பீனிஸம், ஸ்ட்ரேடிங்-பர்ம் முதலியன காரணமாக பாதிக்கப் பட்ட கூந்தல். இவை அனைத்திற்கும் உடனடித் தீர்வு. 100% வீதம் இயற்கை மூலிகைகளால் பாரம்பரிய 'கெம்' முறையில் கிராமிய மட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் எதுவித இரசாயன கலப்படமும் அற்ற தூய்மையான எண்ணெய்.

*இப்போது நாடு முழுவதும் மக்கள் நலன் கருதி!* (38355)(3.5.6.7)

தொடர்பு கொள்ளவும்: JK077 725 8443

## பணிப்பெண் தேவை

கொழும்பில் உள்ள எமது வீட்டில் வீட்டு வேலைகள் செய்வதற்கு பணிப் பெண் தேவை.

T.P NO- 075 510 5432, 077 699 5626 (38364)(3.6.11)

## பண்ணை (மாடு/ஆடு/ கோழி) மேற்பார்வையாளர் தேவை

- டிப்ளோமா சான்றிதழ் அல்லது 3 அல்லது 2 வருட பண்ணையில் வேலை செய்த அனுபவம்
- கணினி அறிவு அவசியம்
- தனியாக வேலை செய்யும் ஆற்றல்
- ஆங்கிலத்தில் கதைக்கும் ஆற்றல்
- 25-45 வயதிற்கு உட்பட்டவர்கள்
- சம்பளம் கவர்ச்சிகரமானது.பேசித்தீர்மானிக்கப்படும்
- ஆண்கள் மட்டும்
- கிளிநொச்சி மாவட்டம்

மேற்படி தகைமைகளைக் கொண்டிருப்பவராயின் உங்களது சுயவிவரக் கோவையை இன்றிலிருந்து இரண்டு கிழமைக்குள் பின்வரும் மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கவும்.

suthersan1@live.com or kramachandran55@yahoo.com
Mr.Ram.Colombo-6 (78957)(6.11)

## வீடு வாடகைக்கு

சகல வசதிகளுடன் 10 அறைகள் கொண்ட பெரிய வீடு வாடகைக்கு உண்டு. நகர மத்தியில் இருந்து 1km இற்குள் 3500 sqft விஸ்தீரணம். நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:077 781 3646 (38360)(3.6.11)

## விற்பனைக்கு

பூச்சி நீக்கப்பட்டு தடுப்பூசிகள் போடப் பட்ட 2 மாதம் நிரம்பிய கொக்கொஸ் பெணி (Cocos Peny) நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:077 923 9314 (38330)(3.6.7.11)

## ஆசிரியர் தேவை

தரம் 06-11 வரையான பாடசாலை மாணவர் களுக்கு ஆங்கில மொழிமூலம் தேர்ச்சிபெற்ற வரலாறு பாடம் கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவை.
**வயது எல்லை 22-30,**
**நேர்முகத் தேர்வு: 17.06.2013**
**காலை: 9.30-12.30 வரை**
**தொடர்பு:**
Kalaimahal International College
K.K.S.Road, Kokuvil East, Kokuvil.
T.P.: 077 490 4286 (38368)(3.5.6)

## கடை வாடகைக்கு

கிளிநொச்சி A9 பாதையில் கச்சேரிக்கு முன்பாக உள்ள புகையிரத நிலைய வீதியில் இரண்டு கடைகள் வாடகைக்கு உண்டு. (38356)(16.1.4.7.6)

தொடர்பு- 0776337307, 0112390536

## உடனடியாகத் தேவை

Wanted வவுனியாவில் உள்ள எமது (தனியார்) காரியாலயத்திற்கு சிங்கள மொழி பேசக் கூடிய O/L, A/L கல்வி கற்ற 18-28 வயதுடைய பெண்கள் (எழுதுவினைஞர்) வேலைக்குத் தேவை. சம்பளம் 12000/= (திருமணம் முடிக்காதவர்கள்/மேலதிக வகுப்புகளுக்கு செல்லாதோர் விரும்பத் தக்கது) வவுனியாவில் உள்ளோர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:
077 5561 883 (38270)(3.6.11)

## IBC TOURS (PVT) LTD

MALAYSIAN COMPANY

WE OFFER

- Outbound Tours
- Air Ticketing
- Visa Processing
- PR Visa
- Migration
- Hotel Booking
- Islamic Tours & Umrah Services
- Dambadiva Tours
- All Travel Related Services
- Business Setup For All Countries.

LOOKING FOR COMPANY REPRESENTATIVES ALL OVER SRI LANKA. PLEASE CONTACT.

IBC TOURS (35357)

No: 214 Camway Plaza, SrimathBandaranayake Mw, Colombo 12.
Tel: +94 11 2330501, 2330502 Tele Fax: +94 11 2330508
For ENGLISH & SINHALA Mr. Kasun (Director) - 0777798766
Mr. Rinzy (Director) - 0775570898, 0777797962, 0777796684
E-Mail: kasunibctours@gmail.com, rinzyibctours@gmail.com
Web: www.ibclankatours.com

## மகளிரின் எதிர்கால வாழ்க்கைக்கான ஒரு வழிகாட்டியாக



1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....
யாழ். கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)
Yaarl Kalaa layah Academy
Victoriya Road, Jaffna





### மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!




- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சிரக்குதலும்)
- முக அழகுக் கலை (Facial)
- Pedicure,Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,




**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- (B)பிளவுஸ், சாறி (B)பிளவுஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள்.

**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 19-06-2013**
**புதன் காலை 9.30 மணி**
**சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 23-06-2013**
**ஞாயிறு காலை 9.30 மணி**
**மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.** -இயக்குநர்

## வாடகைக்கு




சாவகச்சேரி நகரிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் யாழ்ப்பாண வீதியில் 4 மாடிக் கட்டடம் வாடகைக்கு உண்டு.
தொடர்பு:- 021 227 0063, 077 96[illegible] (35071)(2.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேஷம்:** பணவரவு திருப்தி தரும். கணவன் - மனைவிக்குள் அன்னியோன்னியம் பிறக்கும். உடல் நலம் சீராகும். தாய்வழி உறவினர்களால் நன்மையுண்டு. பிரியமானவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். உடன் பிறந்தவர்கள் உறுதுணையாக நடந்து கொள்வார்கள்.

**இடபம்:** பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். அரச காரியங்களிலிருந்த பின்னடைவு நீங்கும். மனஉளைச்சல் நீங்கும். விடாப்பிடியாக செயல்பட்டு பணிகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் நம்பிக்கைக்குறியவர்களின் ஆலோசனையை ஏற்பீர்கள். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்:** வியாபாரத்தில் சுமுகமான லாபம் உண்டு. முன் கோபம், பதற்றம் விலகும். எடுத்த காரியங்களை முடிக்க முடியாமல் அவதிப்பட்ட நிலை மாறும். தந்தையின் உடல் நிலை சீராகும். சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

**கடகம்:** ஆடம்பரச்செலவுகளை குறைப்பீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சி தங்கும். பழைய சரக்குகளை புது யுக் தியால் விற்றுத்தீர்ப்பீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வாகனத்தை சீர்செய்வீர்கள்.

**சிங்கம்:** உறவினர், நண்பர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். விமர்சனங்களை கண்டு அஞ்ச வேண்டாம். சிறு சிறு அவமானம் ஏற்படக்கூடும். வியா பாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் அளவாக பழகுங்கள்.

**கன்னி:** உறவினர், நண்பர்களால் சங்கடங்கள் வரும். அரசு விவகாரங் களில் அலட்சியம் வேண்டாம். அசதி, சோர்வு வந்து விலகும். வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிக்கப்பாருங்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வரக்கூடும்

**நாளை**

ஆனி-03 திங்கட்கிழமை 17.06.2013
திதி: நவமி பி.இ. 05.33 வரை
நட்சத்திரம்: உத்தரம் மு.ப. 10.15 வரை
சுபநேரம்: 11.53 - 01.23 வரை
இராகுகாலம்: 07.23 - 08.53 வரை

**துலாம்:** குடும்பத்தினருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். பிள்ளைகளின் உடல் நிலை சீராக இருக்கும். காசுபணம் தேவையான அளவு இருக்கும். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**விருச்சிகம்:** அடிமனதில் இருந்த பயம் விலகும். துணிச்சலுடன் சில முடிவுகளை எடுப்பீர்கள். அலைச்சல் தந்த வேலைகளை உடனே முடிப்பீர்கள்.பணவரவு திருப்தி தரும். உடல் நிலை சீராகும். வெளிவட்டாரம் மகிழ்ச்சி தரும்.

**தனுசு:** குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். பிள்ளைகளின் அடிமனதில் என்ன இருக்கிறது என்பதை தெரிந்துக் கொள்வீர்கள். அரசியல்வாதிகளின் சந்திப்பு கிட்டும். விருந்தினர்களின் வருகையால் வீட்டில் சந்தோஷம் கிட்டும்.

**மகரம்:** பிள்ளைகளை அவர்கள் போக்கில் விட்டுப் பிடியுங்கள். முக்கிய கோப்புகளைக் கையாளும்போது அலட்சியம் வேண்டாம். பணம், நகையை கவனமாக கையாளுங்கள். வியாபாரத்தில் வேலையாள்கள் அதிருப்தி அடைவார்கள்.

**கும்பம்:** அதிரடித் திட்டங்களை தீட்டுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உங்களைத் தேடிவந்து சிலர் உதவி கேட்பார்கள். வியாபாரத்தில் மகிழ்ச்சி தங் கும். பிள்ளைகளின் ஆசைகளை பூர்த்தி செய்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**மீனம்:** முகப்பொலிவு கூடும். அதிகாரப் பூர்வமாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டை பெறுவீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | | | | | 7 | | 2 |
| 7 | 3 | 6 | | 4 | | | | 5 |
| | 4 | 5 | | | | | 3 | |
| 5 | | | 4 | | | | 8 | |
| 8 | 1 | 9 | | 3 | | 4 | 6 | 7 |
| | 2 | | | | 7 | | | 9 |
| | 6 | | | | | 8 | 7 | |
| 9 | | | | 8 | | 1 | 2 | 6 |
| 4 | | 1 | | | | | 9 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 4 | 1 | 2 | 8 | 6 | 3 | 5 | 9 |
| 5 | 6 | 2 | 4 | 3 | 9 | 1 | 8 | 7 |
| 9 | 8 | 3 | 1 | 5 | 7 | 4 | 2 | 6 |
| 4 | 9 | 7 | 8 | 2 | 5 | 6 | 3 | 1 |
| 2 | 3 | 6 | 7 | 9 | 1 | 8 | 4 | 5 |
| 8 | 1 | 5 | 6 | 4 | 3 | 7 | 9 | 2 |
| 3 | 7 | 9 | 5 | 6 | 4 | 2 | 1 | 8 |
| 6 | 2 | 4 | 9 | 1 | 8 | 5 | 7 | 3 |
| 1 | 5 | 8 | 3 | 7 | 2 | 9 | 6 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறி முகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# நிச்சயம் தொழில் இலக்கைக் கொண்ட பயிற்சி நெறிகள்

## SCHOOL OF NURSING IVA






ஒரு வருட தாதியர் பயிற்சி பாடநெறி

இலவசமாக சீருடையும் தாதிய பாடநெறிக்கு பொருத்தமான ஆங்கில பாடநெறி,
தூர இட மாணவர்களுக்கான பாதுகாப்பான தங்குமிட வசதிகளும் உண்டு

**யாழ்ப்பாணம்**
323, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,
தொ.பே. 071 - 8 722 350

**கண்டி**
சிங்கர் நிறுவனம் மேல் மாடி
டி.எஸ். சேனாநாயக்க வீதி, கண்டி.
தொ.பே. 071 - 1 980 980
071 - 0 336 329

**பாணந்துறை**
இல: 36,
சுவ மெதுர வைத்தியசாலை,
சுசந்த மாவத்தை,பாணந்துறை
தொ.பே.071 - 0 336 332

**அனுராதபுரம்**
இல. 396x3
சுவ சேவன வைத்தியசாலை,
நீதிமன்ற வீதி,
கடவத்தை அனுராதபுரம்.
தொ.பே. 071 8 722 355

**இரத்தினபுரி**
இல. 85
உள்சுற்று வீதி,
இரத்தினபுரி.
தொ.பே. 071 - 5 980 980

**வவுனியா**
இல. 109, மன்னார் வீதி,
சாந்தி கிளினிக்,
வவுனியா.
தொ.பே. 071 - 8 722 351

**கம்பஹா**
சமாதி கல்வி நிலையம் அருகில்
77x1x4
யக்கலை விதி,கம்பஹா.
தொ.பே.071 8 657 775

**மட்டக்களப்பு**
இல. 61x1
திருகோணமலை வீதி,
மட்டக்களப்பு,
தொ.பே. 071 - 8 722 352

**பதுளை**
இல. 20x1x1
ஹுனுகொடுவ வீதி
பதுளை
தொ.பே. 071 - 8 722 354

**தங்காலை**
ஆரோக்யா வைத்தியசாலை,
கடல் வீதி,
சம்பத் வங்கி அருகில்.
தங்காலை
தொ.பே. 071- 0 336 334

உள்நாடு மற்றும் வெளிநாடுகளில்
தாதியர் தொழில் வாய்ப்புக்கள்
பெருமளவில் பெற்றுக் கொடுத்த
ஒரே தாதிய பாடசாலையில் பாடநெறிக்காக
2013ம் வருடத்திற்கு மாணவர்கள் தற்போது
சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்

பாடநெறியினை சிறந்த முறையில் பூர்த்தி செய்யும் அனைத்து மாணவிகளுக்கும்
நிறுவனத்தின் மூலமாக வேலைவாய்ப்புக்கள் பெற்றுத்தரப்படும்

**நுழைவுக்கான அடிப்படை தகைமைகள்**

க.பொ.த சா/த 6 பாடங்கள் சித்தி
வயது 16 - 30 வரை இருத்தல் வேண்டும்
உயரம் : 4 அடி 10 அங்குலம் இருத்தல் வேண்டும்.

ரூ. 40/-பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் தெரிவுசெய்யும் கிளையை குறித்து, விண்ணப்பத்தை எங்களது இரத்தினபுரி பிரதான காரியாலயத்துக்கு அனுப்பவும்.

NTS
P.V. 91973

தலைமைக் காரியாலயம்
**அய்வா**
சர்வதேச தாதியர் பாடசாலை
இல. 85 உள்சுற்று வீதி,
லிபர்டி கட்டடம், இரத்தினபுரி.

தொலைபேசி ( 0454 980 980
0715 980 980
Fax ( 045 2233000
Web : schoolofnursingiva.com
E-mail : manojhewaduwa@yahoo.com

(383070)

Registerd Education Institute in the republic of Sri Lanka


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 120



# சிறார்களில் கண் விபத்து ஏற்படும் முறைகளும் அவற்றின் தடுப்பு முறைகளும்

சிறார்கள் எப்போதும் சுறுசுறுப்பானவர்கள்; எதையும் ஆராயும் குணம் கொண்டவர்கள்; வேகமாக செயற்பட விளைபவர்கள். அவர்களின் இயக்கம் பெரியோர்களைப் போன்று ஒருங்கமைக்கப்பட்டதல்ல. இவை சிறுவர்களின் கண்களில் விபத்துக்கள் அதிகளவில் ஏற்படக் காரணமாகின்றன.

கண்களில் காயங்கள் ஏற்பட்டுவிட்டால் அவர்களின் ஒத்துழைப்புடன் கண்களைப் பரிசோதித்தல் மிகவும் சிரமமானது. கண்களுக்கு உரிய முறையில் மருந்திடவும் அவர்கள் அனுமதிப்பதில்லை. கண்ணில் ஏற்படும் வலிகாரணமாக கண்ணைக் கசக்க முற்படுவதால் காயங்கள் அதிகரிக்கலாம். காயங்களால் ஏற்படும் தற்காலிக பார்வை இழப்புகளும் சிறார்களின் மூளையில் நிரந்தர பார்வை விருத்தி குறைபாட்டை (Amblyopia) ஏற்படுத்தலாம். எனவே சிறுவர்களின் கண் விபத்துகளைத் தடுத்தல் மிகவும் இன்றியமையாதது.

இலகுவான சில படிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் உங்கள் சிறார்களின் கண் விபத்துகளை வீட்டிலும் வெளியிலும் தடுக்கலாம்.

1. கண் இடர்கள் ஏற்படக் கூடிய முறைகளை விளங்கிக் கொள்ளுதல்.
2. ஆபத்துகளைக் கண்டறிதலும் அகற்றுதலும்.
3. சிறுவர்களை வீடுகளிலும் விளையாடும் போதும் கவனமாகக் கண்காணித்தல்.

**இவை பற்றி விரிவாகப் பார்ப்போம்.**

விளையாட்டுப் பொருள்களின் தவறான பாவனை கண்ணில் பாதிப்பை ஏற்படுத்தும். மிகவும் மலிவான, தரமற்ற, குறைபாடுடைய விளையாட்டுப் பொருள்களைத் தவிர்க்கவும். சிறார்களின் வயதுக்கு உகந்த விளையாட்டுப் பொருள்களை மட்டும் வழங்கவும்.

விளையாட்டுப் பொருள்களில் உள்ள எல்லா எச்சரிக்கைகளையும், அறிவுறுத்தல்களையும் அவற்றைச் சிறுவர்களுக்கு வழங்குவதற்கு முன்னர் வாசிக்கவும்.

கூரான, கடினமான முனைகளை ஆபத்தான விளிம்புகளை, கடினமான வெளிநீட்டங்களைக் கொண்ட விளையாட்டுப் பொருள்களைத் தவிருங்கள். மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மென்மையான விளையாட்டுப் பொருள்களை (soft toys) கொடுப்பது விரும்பத்தக்கது.

பறக்கின்ற விளையாட்டுப் பொருள்களும், அதிவேகமாக பொருள்களை வீசும் விளையாட்டுத் துப்பாக்கி போன்ற உபகரணங்களும் எல்லாச் சிறுவர்களின் கண்களுக்கும் ஆபத்தானவை. குறிப்பாக ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களிடம் முற்றிலும் தவிர்க்கப்படவேண்டும்.

சிறுவர்கள் விளையாடும்போது உரிய கண்காணிப்பு அவசியம். செய்யக்கூடியவை, செய்யக்கூடாதவை பற்றி சிறுவர்களுக்கு சொல்லித்தரவும் வேறுபட்ட விளையாட்டுகளுக்குரிய தனித்துவமான கண்பாதுகாப்பு உபகரணங்கள் (உ+ம்: Goggles, Safety glassess, helmets போன்றவை) கடைகளில் கிடைக்கும். இவற்றைப் பயன்படுத்துவது மிகவும் சிறந்தது.

கட்டிலில் இருந்து விழுதல், வீட்டுத் தளபாடங்களில் மோதுதல், படிகளில் விழுதல், விளையாட்டுப் பொருள்களுடன் விழுதல் என்பன கண் காயங்களுக்கு முக்கிய காரணமாகும். மாடிப் படிகளில் பாதுகாப்பு கதவுகளை அமைக்கலாம். போதியளவு வெளிச்சமும் பாதுகாப்புக் கைப்பிடிகளும் படிகளுக்கு அவசியம்.

கூரான முனைகளைக் கொண்ட தளபாடங்கள் மற்றும் அலங்காரப் பொருள்களை அவற்றின் விளிம்புகளையும், முனைகளையும் துணி மற்றும் மென்மையான இறப்பரினால் கவசமிடலாம் அல்லது மறைக்கலாம்.

வீட்டின் சமையலறை, களஞ்சியசாலை, குளியலறை போன்றவற்றில் உள்ள கூரிய உபகரணங்கள், மரவேலை மற்றும் இரும்பு வேலை செய்யும் ஆயுதங்கள், மின்சார உபகரணங்கள் என்பவற்றை எப்போதும் அவற்றுக்குரிய பெட்டகங்களில் அல்லது இலாச்சிகளில் வைத்துப் பூட்ட வேண்டும். இதன்மூலம் சிறார்களின் கைகளுக்கு அவை செல்வதைத் தடுக்க முடியும்.

வாசனைத் திரவியங்கள் (Perfumes & Sprays) அழகு சாதனப் பொருள்கள், மலசலகூடங்களில் பயன்படுத்தும் அழுக்கு நீக்கிகள், தொற்று நீக்கிகள் சமையலறையில் பயன்படுத்தும் பல்வேறு பட்ட இரசாயனப் பொருள்கள் கண்களுக்கு மிகவும் ஆபத்தானவை. இவை குழந்தைகளுக்கு எட்டாத இடங்களில் பேணப்படுதல் வேண்டும்.

இவை போன்று வர்ணப்பூச்சுகள், கிருமிநாசினிகள், உரங்கள், பசைகள் (glues) போன்றனவும் பாதுகாப்பான இடங்களில் வைக்கப்படுதல் அவசியம்.

சுடுநீர், சூடான உணவுகள், சூடான எண்ணெய் போன்றன கவனமின்றி வைக்கப்படும் போது குழந்தைகளின் கண்களில் விசிறப்பட போதிய வாய்ப்புகள் உள்ளன.

சிறார்களை வீட்டின் திருத்த வேலைகள், தூசிதட்டுதல், தோட்டவேலைகள், கிருமிநாசினி விசிறுதல் போன்றவற்றின் போது தூர இருக்கச் செய்யுங்கள்.

வீட்டுத்தோட்டத்தில் உள்ள முள்மரங்கள், பதிவான கிளைகள் என்பன சிறார்கள் அவற்றிடையே விளையாடும் போது கண்களில் காயத்தை ஏற்படுத்தலாம். இவை பார்வை இழப்பை ஏற்படுத்தக் கூடிய ஆபத்தான பங்கசுத் தொற்றுக்கு வழிவகுக்கும். பதிவான கிளைகளையும், முள்மரங்களையும் வெட்டி வீட்டுத் தோட்டத்தை சுத்தமாக பேணுங்கள்.

பண்டிகைக் காலங்களில் வாணவேடிக்கைகளால் ஏற்படும் கண் காயங்கள் பண்டிகையின் மகிழ்ச்சியை இல்லாது செய்துவிடும். ஒரு போதும் சிறார்களை வாண வேடிக்கைகளைப் பற்றவைக்க அனுமதிக்க வேண்டாம்.

பெரியவர்கள் வாணவேடிக்கைகளைப் பற்ற வைக்கும் போது சிறார்களை தொலைவில் வைத்திருங்கள். தரமற்ற, உற்பத்திக்குறைபாடுடைய, போதிய பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடிக்காத வாணவேடிக்கைப் பொருள்கள் சந்தைகளில் தாராளமாகக் கிடைக்கின்றன. இவை சிறார்களுக்கு மட்டுமன்றி பெரியவர்களின் கண்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.

**கண் ஆபத்துகளின் போதான முதலுதவிகள்**

உரிய நேரத்தில் வழங்கப்படும் சரியான முதலுதவிகள் கண்களில் ஏற்படும் நிரந்தரப் பாதிப்பை தடுக்கும் அல்லது குறைக்கும்.

கண்காயங்கள் தீங்கற்றவை என்று தவறாக எடைபோட வேண்டாம். சந்தேகம் இருப்பின் கண்வைத்தியரை உடனடியாக நாடவும். கண்ணில் இரசாயனப் பொருள்கள் பட்டால் மிகவும் ஆபத்தானது. உடனடியாக சுத்தமான நீரால் கண்ணை குறைந்தது 15 நிமிடமாவது கழுவுங்கள். தண்ணீரால் கழுவும்போது கண்ணை நன்றாக திறந்து வைத்திருங்கள். பின் உடனடியாக வைத்தியசாலைக்குச் செல்லவும்.

கண்ணில் ஏதாவது தூசு அல்லது துணிக்கைகள் விழுந்தால் கண்ணை கசக்க வேண்டாம். அது கண் காயத்தை அதிகரிக்கும். கண்ணை சுத்தமான நீரால் கழுவலாம். அகற்ற முடியாவிடின் மருத்துவ உதவிதேவை.

கண்ணில் பலமாக அடிபட்டால் அல்லது கூரிய பொருள்களால் குத்தப்பட்டால் கண்களைக் கழுவவேண்டாம். கண்ணுக்குள் இருக்கும் பொருளை அகற்ற முற்படவேண்டாம். எந்தவிதமான கண் மருந்துகளையும் பாவிக்க வேண்டாம். வைத்தியசாலைக்கு விரையுங்கள்.

**வருமுன் காப்போம்.**



Dr. மு.ஞானரூபன்,
தேசிய கண் வைத்தியசாலை,
கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித எலும்பும் எலும்பு பாதுகாப்பும்

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பகலவனுக்கும் (சூரியனுக்கும்) எலும்புக்கும் இடையே உள்ள தொடர்பை உணர்ந்து ''எல்'' என்ற வேர் சொல்லில் இருந்து எலும்பு என்ற பெயர் உருவானது. அதாவது ''எல்'' என்றால் ஞாயிறு, ஒளி என்று பொருள். ஞாயிறு ஒளியில் உள்ள நுண் ஊதாக் கதிர்கள் தோலினூடு ஊடுருவிப் பாய்ந்து வன்திசுவாகிய எலும்பு கெட்டிப்படுத்தப்படுவதை உறுதி செய்துள்ளனர். இன்றைய மருத்துவ விஞ்ஞானிகளும் எலும்பு ஒளியினால் உருவாக்கப்பட்டதை உறுதி செய்துள்ளனர்.

குழந்தைப் பருவத்தில் தலை முதல் கால் வரை 216 எலும்புகள் காணப்படுகின்றன.

| | |
|---|---|
| தலை எலும்பு- | 22 |
| உட்காது எலும்பு- | 06 |
| விலா எலும்பு- | 25 |
| கை, கால் எலும்பு- | 64 |
| கால் எலும்பு- | 66 |
| முதுகு எலும்பு- | 33 |
| | 216 |



தமிழில் உள்ள உயிர் எழுத்து 12. மெய் எழுத்து 18. உயிர் மெய் எழுத்து 216.

எனினும் உடல் வளர வளர மண்டை ஓட்டிலும் இடுப்புப் பகுதியிலும் எலும்புகள் ஒன்றாகக் கூடி பொருந்தி விடுகின்றன. இதனால் வளர்ந்த ஒருவரில் 206 ஆக எண்ணிக்கை குறைவடைகிறது. மேலும் 25 வயதுக்குப் பின்னர் எலும்புகள் நீளவாட்டில் வளருவதில்லை.

எலும்பானது ஓர் உயிரற்ற திடப் பொருள் அன்று. உயிர் அணுக்கூட்டங்களினால் ஆன உயிர் உள்ள பொருள் வன்திசுவாகும்.

எலும்புக்குள்ளே உண்டாகின்ற சத்துதான் நமது நரம்பு, தசை, இரத்தம் முதலிய எல்லா பாகங்களையும் வளர்க்கிறது.

உடலில் உள்ள தசைகளை இயங்கச் செய்வதும் மென்திசுக்களுக்கு உருக் கொடுத்து அவற்றை நல்ல முறையில் பாதுகாப்பதும் வன்திசுவாகிய எலும்பின் கடமையாகும். எனவே எலும்பினை நாம் பாதுகாக்கத் தவறின் மற்ற உறுப்புகளைப் பாதுகாக்க முடியாது. எனவே நாம் எமது என்புருவை-பொன்னுருவாக எண்ணிப் பாதுகாக்க வேண்டும்.

குழந்தையின் எலும்புகளில் புரதப் பொருள் அதிகளவில் இருக்கும். அதனால் அவை ஓரளவுக்கு வளையும் தன்மை உடையவை. எளிதில் முறியாது. எனினும் நடுத்தர வயது உடையவர்களின் எலும்புகளில் கனிப்பொருள்கள் அதிகமாகக் காணப்படும். வலுவான தாக்குதலால் மட்டும் உடையக் கூடியது. முதியவர்களின் எலும்புகளின் புரதப் பொருள், கனிப்பொருள் குறைவாக இருப்பதால் எலும்பு வலுவிழந்து காணப்படுகிறது. எலும்பை பாதுகாப்பதற்கு சில ஆலோசனைகள்.

★ எலும்பு முறிவுகள் ஏற்பட்டால் அவற்றைச் சரியான முறையில் சீர் செய்ய முயலுதல் வேண்டும். இல்லாவிடின் முறிந்த எலும்புகளின் முனைகள் மழுங்கிப் போவதுடன் அவை பொருந்தும் தன்மையும் இழக்கின்றன. எனவே உரிய மருத்துவ சிகிச்சை பெறுதல் வேண்டும்.

★ அதிகளவு கோப்பி மதுபானம் அருந்துவதைக் குறைத்தல், புகைத்தலைத் தவிர்த்தல்.

★ ஆஸ்டியோ போரொசிஸ் என உறுதிப்படுத்தப்பட்டவர்கள் இதற்கான மருந்துகளை ஒழுங்காக எடுக்க வேண்டும்.

★ எலும்புகளின் நோய் நிலைக்கு ஏற்ப அவர்களுக்கு வைத்தியரால் ஆலோசனை வழங்கப்படும். மருந்துகளை எடுத்தல், உடற்பயிற்சிகளை செய்தல் வேண்டும்.

★ எலும்பின் போசாக்கினை பேணுவதற்கு பச்சைக் காய்கறிகள், பால், சீஸ், முட்டை மற்றும் கடல் உணவுகள், கல்சியம் சேர்க்கப்பட்ட தோடம்பழச் சாறுகள் மற்றும் விற்றமின் D அதிகளவு உள்ள உணவுகளை எடுத்தல்.

★ வயதானவர்கள் மற்றும் 50-65 வயதுடைய பெண்கள் வைத்தியரினால் உத்தரவிடப்படும் பரிசோதனைகளை செய்து எலும்பின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும்.

ச.சுதாகரன்
தாதிய உத்தியோகத்தர்
யாழ்.போதனா வைத்தியசாலை.

## காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் B.M.C.ஒழுங்கை (மணிக்கூட்டுவீதி)யில் நெற்பரப்பு $2^{1}/_{4}$ விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 529 6290

## வாடகைக்கு
கே.கே.எஸ் வீதியில் அலுவலக/ களஞ்சிய பாவனைக்குகந்த 2 மாடிக் கட்டடம் வாடகைக்குண்டு.
T.P-077 715 0931
(38296)(3.6.7.11)

## வீடு வாடகைக்கு
யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் சாவகச்சேரிக்கும் மீசாலைக்கும் இடையில் A9 வீதியில் 45 பேச்சில் அமைந்துள்ள வீடு நீண்ட கால குத்தகைக்கு. வங்கிகள், கம்பனிகள், தொண்டர் நிறுவனங்களுக்கு ஏற்றது. விற்பனைக்கும் பரிசீலிக்கப்படும்.
தொடர்புக்கு- 077 9773252

## வீடு வாடகைக்கு
யாழ்.நகர் மத்தியிலுள்ள பாங்சால் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:077 717 9778
(38306)(3.6.7.11)

## FOR HIRE/வாடகைக்கு விடப்படும்

JCB(Backhoe), Dozer(D4E & mini), Exavator with Braker (heavy&Light), Tractor with Trailer or Carrier, Lorry with full body, Half body, With out body, Water bowser, Concrete mixture.Contract for Land Cleaning, Land Scaping, Fencing and Planting.
எம்மால் கனரக இயந்திரங்கள் மூலம் நிலம் சுத்தமாக்கல், வடிவமைத்தல், வேலியிடல், மரநடுகை என்பனவும் செய்து கொடுக்கப்படும். (38301) (5.6.7)
தொடர்பு:0722263778,0714167878

## வீடு வளவு விற்பனைக்கு
மாகியப்பிட்டி,சண்டிலிப்பாயில் 5 பரப்பில் கிணற்றுடன் கூடிய வீடு,வளவு உடன் விற்பனைக்குண்டு. (சகல வசதிகளுடன் கூடிய வீடு)
(38238)(3.5.6) தொடர்பு:
075 8372838, 077 477 1483

## விற்பனைக்கு
மானிப்பாய் கட்டுடை வீதியில், சகல வசதிகளுடன் 9 பரப்பு காணியுடன் கோழிப் பண்ணை விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 151 6659
(38351)

## யாழ். - கிளிநொச்சி Staff சேவிஸ் A/C Bus
வரும் திங்கள் முதல் பரமேஸ்வரா சந்தி அருகில் இருந்து யாழ். பஸ் தரிப்பு ஊடாக கிளிநொச்சிக்கு தினமும் காலை 6.30 சென்று மீண்டும் மாலை 5.30 வரும். உடன் ஆசன பதிவிற்கு.
(38312)(3.6) 0777750308

## புத்தக விற்பனையாளர் தேவை
பிரபல பீனிக்ஸ் புத்தக நிலையத்துக்கு (முன்னைய K.V.Printers இயங்கிய பகுதி) பெண் விற்பனையாளர் தேவை. A/Lஇல் Accounting படித்தவர்களும், யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்டவர்களும் விரும்பத்தக்கது.
386,Clock tower road,Jaffna.
Tel: 077 063 3116,021 720 0237
(38029)(3.5.6)

## மணமகள் தேவை
யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட, இங்கிலாந்தில் (Msc.in I.T) படித்து, இங்கிலாந்திலேயே நிரந்தர வதிவிடமும் வேலையும் பார்க்கும் இந்துமத, துணாவ [illegible] தோஷமற்ற, ரேவதி நட்சத்திரம் 32 வயதுடைய, 5அடி 8 அங்குல உயர மணமகனுக்கு அவரது பெற்றோர் அழகிய, துணாவ, நன்கு படித்த, இந்துமத பொருத்தமான மணமகளை தேடுகின்றார்கள். வெளிநாடுகளில் வாழ்வோரும் விண்ணப்பிக்கலாம். விரும்புவோர் மின் அஞ்சல் முகவரிக்கு தொடர்புகொள்ளவும். (38233)(6.3.45)
kanthi70@optusnet.com.au
mobile: 0061 4023 87809

## காணி விற்பனைக்கு
தொழிற்சாலைகள் மற்றும் பண்ணைகள் அமைப்பதற்கு ஏற்றவகையில் வடிவமைக்கப்பட்ட சுற்றுமதிலுடன் யாழ்.காரைநகர் வீதி,சண்டிலிப்பாயில் 32 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. (38236)(3.5.6)
தொடர்பு:075 731 6139

## மணமகள் தேவை
யாழ். இந்து [illegible] 1979 ஆம் ஆண்டு [illegible] நட்சத்திரம், செவ்வாய் 29, HNDA படித்த, [illegible] யாழ்ப்பாணத்தில் [illegible] மணமகனுக்கு மணமகள் தேவை. [illegible] விபரங்களுடன் தொடர்பு கொள்க.
விளம்பர இல: 4458, மே/ பா உதயன், 561, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(38277)(3.6.7.11)

## மணமகள் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1984 இல் பிறந்த மூலம் 2 ஆம் பாதம் கிரகபாவம் 11, வங்கியில் பணிபுரியும் மண மகனுக்கு அரச நிறுவனங்களில் தொழில் புரியும் அழகிய மணமகள் தேவை.
(38250)(45-6-3) தொடர்பு: 077 435 3119

## நாய்க்குட்டி கள் விற்பனைக்குண்டு
நல்ல இன BOXER - X - ஜெர்மன்செப்பேட் பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
(38274)(45-6-3) தொடர்பு: 077 662 2313

## மணமகள் தேவை
யாழ். றோமன் கத்தோலிக்க 1981 இல் பிறந்த தற்போது அவுஸ்திரேலியாவில் உத்தியோகம் பார்க்கும் Citizenship உள்ள மணமகனுக்கு படித்த, பண்புள்ள, அழகிய மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். உங்கள் விபரங்களை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
விளம்பர இல. 4457, மே/பா, உதயன், 561, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## மணமகள் தேவை
1977 ஆம் ஆண்டு மூல நட்சத்திரத்தில் பிறந்த யாழ். இந்து சைவபோசன பழக்கம் உள்ள யாழ்ப்பாணத்தில் அரச நிறுவனத்தில் Engineer ஆக தொழில் புரியும் மணமகனுக்கு தாயார் தகுந்த மணமகளை தேடுகிறார்.
(38275)(45-6-3) தொடர்பு: 077 856 1745

## தனிப்பட்ட கணித வகுப்பு
தரம் 6-11 கணிதம் பிரபல ஆசிரியரால் யாழ் நகரப் பகுதியிலுள்ள உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். (38335)(3.6.7.11)
தொடர்பு:077 199 9286

## கடைகள் விற்பனைக்கு/ வாடகைக்கு
யாழ்ப்பாணம் ஜிம்மா பள்ளி வாசல் வீதியில் புதிதாக கட்டப்படும் கடைத்தொகுதியில் கடைகள் விற்பனைக்கு உண்டு. (38290)(3.6.11)
தொடர்பு:
077 899 5131, 075 043 4277

## புதிய பிரிவு ஆரம்பம்
ஜேர்மன், டச்சு, பிரெஞ் மொழி French வெளிநாடு செல்வோருக்கான பேச் மொழி வகுப்பு ஜேர்மன் தூதரகத்தால் நடத்தப்படும். பரீட்சைக்கான புதிய பிரிவு ஆரம்பம். (38260)
[illegible] (45-6-3)
Jaffna College 464. யாழ்ப்பாணம். 077 331 9551

## விற்பனைக்கு
தனி ஒருவர் பாவனையில் 5000KM ஓடிய நிலையில் Safari Motor cycle விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்க்கலாம்.
தொடர்பு:077 613 5398
(38323)(3.6.7.11)

## 100% SUCCESS...
போதும் போதும் என்று ஆங்கிலம் சரளமாக பேசிடுங்கள்
யாழில் நம்பிக்கையான கல்விநிறுவனம்

**DIPLOMA IN ENGLISH**
NEW BATCHES START

| SAT/SUN | MON/WEN |
|---|---|
| 3.30 - 6.00 P.M | 4.15 - 6.15 P.M |
| 15.06.2013 @ 3.30 | 17.06.2013 @ 4.00 |

IELTS REGISTRATION CENTRE
Preparations classes Sat/Sun 11.00 -02.00
FRENCH/DUTCHSPOKEN SINHALA
A1,B1,B2 Classes, Registration & Exams
தற்போது மேலும் புதிய அம்சங்கள்
**E-CITY College of English & IT**
இல-372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0774924166 / 0770610271

# பஜாஜ் அசல் உதிரிப்பாகங்களுக்கான
# விற்பனையாளர்கள் தேவை

இலங்கையில் தலைசிறந்த மோட்டார் நிறுவனமான வரையறுக்கப்பட்ட டேவிட் பீரிஸ் மோட்டார் நிறுவனத்தினரின் இலங்கை பூராவும் அமைந்துள்ள பஜாஜ் அசல் உதிரிப்பாகங்களுக்கான விற்பனையாளர் வலையமைப்புடன் நீங்களும் இணைந்துகொள்ளுங்கள்.

## வெற்றிடங்கள் உள்ள மாவட்டங்கள்

**யாழ்ப்பாணம் மாவட்டம்** - சாவக்கச்சேரி, கொடிகாமம், நெல்லியடி, சுன்னாகம், பருத்தித்துறை, யாழ்ப்பாணம், அச்சுவேலி, பரந்தன் **கிளிநொச்சி மாவட்டம்** - கிளிநொச்சி, **முல்லைத்தீவு மாவட்டம்** - முல்லைத்தீவு, செட்டிக்குளம், விஷ்வமடு, புதுக்குடியிருப்பு, மல்லாவி

**தேவையான தகைமைகள்**

- விண்ணப்பிக்கின்ற பிரதேசத்தில் நடைமுறையிலுள்ள உதிரிப்பாகங்களின் தேவைக்கேற்ப கொள்வனவு செய்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல்.
- பிரதான வீதிக்கருகில் 150 - 200 சதுர அடியுடன் கூடிய இடவசதியைக் கொண்ட வியாபாரத்திற்கான இடமொன்று இருத்தல்.
- வங்கிக் கணக்கின் மூலம் பிணை வைக்கக்கூடிய தன்மை.
- உதிரிப்பாகங்கள் பற்றிய அறிவு மற்றும் பிரதேசத்தில் இருக்கும் பஜாஜ் இயந்திரவியலாளர்களுடன் உள்ள தொடர்புகள் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

**உங்கள் விண்ணப்பப்படிவம் அடங்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "உதிரிப்பாகங்களுக்கான விற்பனையாளர்" என குறிப்பிட்டு 14 நாட்களுக்குள் கிடைக்கும் விதத்தில் கீழ்க்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

விற்பனை முகாமையாளர்,
உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப்பாகங்கள் பிரிவு
DPMC **டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்**
PB270
இலக்கம்: 120,120A, பன்னிபிடிய வீதி, பத்தரமுல்லை.
தொலைபேசி: 0114 700600.
tradlanka

POS Topra
* Billing with integrated inventory system.
* Easy of use.100%GUI
* Affordoble pricing by business scaling
* Online video/Guide training
* Support Windows/Linux
* 24*7 Online support



Rs 30,000 /- Upwards
பல்பொருள் அங்காடி, மருந்துக்கடைகள்,பலசரக்குக்கடைகள், உணவகங்கள், மற்றும் அது சம்பந்தப்பட்ட வியாபாரங்கள்.

Sapro
**Total Hospitality Solutions**

| | |
|---|---|
| Front office | Mini Bar |
| Reservation | Banquet Reservation |
| Inventory | Restaurant Management |
| Point Of Sales | Buffet Management |
| Wake UP | Payroll |
| Costing Module | Voice Mail |
| Call Billing | Android Application |
| Food Costing | Web Applications |
| HR | General Ledger |
| System Integrations | |

**Inhot Solutions (Pvt) Ltd**
Inhot Solutions
No 9A,19th Lane,Col-03 @ info@saprosolutions.com
www.saprosolutions.com (38291)



CONTACT
Maathankan Pubanendran
Mob :077-3099355
E-mail : maathankanp@inhotsolutions.com
Hotline : 0115-667900

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'உங்களுக்கு எதற்கு செயலமர்வு? வீடுகளுக்குப் போய்ச் சேருங்கள்'

## மாணவர்களைத் திருப்பி அனுப்பிய ஆசிரியர்

உயர்தர வர்த்தக பிரிவு மாணவர்களுக்கென வடமாகாண கல்வித் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட மாதிரி வினாத்தாள் தொடர்பான செயலமர்வில் பங்குகொள்ள வேண்டாம் என்று கூறி கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்கள் திருப்பி அனுப்பப்பட்ட சம்பவம் ஒன்று அண்மையில் நடைபெற்றது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தால் வலயப் பாடசாலைகளுக்கு செயலமர்வுக்கென மாதிரி வினாத்தாள்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

அதன்படி கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கான செயலமர்வு கடந்த 10 ஆம் திகதி கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்தச் செயலமர்வில் நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த செயலமர்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் விசேட சித்தி பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

அதன்பின்னர் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் உயர்தர வர்த்தகப் பிரிவு மாணவர்களை அழைத்த குறித்த பாடசாலையின் ஆசிரியர் ஒருவர் மாணவர்களிடம் "உங்களுக்கு எல்லாமே கற்பிக்கப்பட்டு விட்டது. எதற்கு இந்தச் செயலமர்வு. அது ஒன்றும் தேவையில்லை. போங்கள் உங்கள் வீடு களுக்கு" என்று கூறி அவர்களை பலவந்தமாக அனுப்பி விட்டார்.

இது குறித்து திருப்பி அனுப்பப்பட்ட மாணவர்களது பெற்றோர் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். இது தொடர்பாக அவர்கள் தமது கருத்தை வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், வடமாகாண ஆளுநர், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்திக் குழுத் தலைவர், மனித உரிமை ஆணைக்குழு ஆகியோருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

மாணவர் நலன்கருதி மேற்கொள்ளப்பட்ட செயலமர்வில் தமது பிள்ளைகள் பங்குபற்ற முடியாது போனது வருத்தமளிப்பதாகவும்; இது மாணவர் களது உரிமை மீறல் எனவும் அவர்கள் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர். (ஐ)

## வன்னேரிக்குளம் ம.வி யில் கௌரவம்

கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்தில் கடந்த ஆண்டு நடைபெற்ற சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும், கற்பித்த ஆசிரியர்களுக்குமான பாராட்டு விழா கடந்த 11 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

பாடசாலை அதிபர் த.பிரபாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக கரைச்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.அமிர்தலிங்கம், விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் பி.முருகதாஸ், தினக்குரல் கருணைப்பாலம் பொருளாளர் எஸ்.சுஜீவன், ஆசிரிய ஆலோசகர் பூ.திருக்குமரன், பழைய மாணவன் தி.லிங்கேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் போது உயர் தர வகுப்புக்குத் தகுதி பெற்ற மாணவர்களுக்கு மடிக் கணினிகள், சைக்கிள்கள் உட்பட பெறுமதியான பரிசில்கள் வழங்கப் பட்டதுடன் ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர். (க-18)


### முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**நாகமுத்து சிவபாக்கியம்**
மலர்வு :- 10.04.1935
உதிர்வு:- 27.06.2012

எங்கள் அருமை அம்மாவே
நீ ஒரு கணப் பொழுதில்
எம்மைவிட்டு நீங்கி
அதற்குள் ஒரு வருடம் ஆனதோ....
நீ எங்களை விட்டுச் சென்றாலும்
உன் நினைவு எந்நாளும்
எம்மை விட்டு நீங்காது.

த.மு:- இல.78, [illegible] வீதி, [illegible]. நி.மு:- [illegible], [illegible].
என்றும் உன் நினைவில்
தர்சினி (மகள்), [illegible] (மருமகன்)
(38407)(2.6.7)

### அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



ஸ்ரீமதி **சுயந்தி கணேசமூர்த்தி**
குவலயத்தில் 26.01.1961
சிவமயத்தில் 17.05.2013

இமைப்பொழுதும் எம் நெஞ்சில் நீங்கா அன்பின்
தவப்பொருளே! தாரமே! தாயே! தயாநிதியே!
நமைப் பெரிதும் தவிக்கவிட்டுச் சென்றனையே!
சிவனடியில் சாந்தியுறப் பிரார்த்திக்கின்றோம்!
ஓம் சாந்தி !

17.05.2013 இல் நித்திய ஜோதியாகிய எங்கள் குடும்பச் சுடர் திருமதி சுயந்தி கணேசமூர்த்தி அவர்களின் பிரிவால் நாம் பெருந்துயர் கொண்டிருந்தவேளை பல்வேறு வழிகளிலும் நேரில் வந்தும், தொலைபேசி ஊடாகவும், தந்தி மூலமும், பத்திரிகை கண்ணீர் அஞ்சலி செய்தியூடாகவும் துண்டுப்பிரசுரங்கள், பதாகைகள் ஊடாகவும், மலர் வளையங்கள் வைத்தும், e.mail ஊடாகவும், எமக்கு ஆறுதல் தெரிவித்த உங்கள் அன்பு மிகுந்த உள்ளத்து உணர்வுக்கு என்றும் நாம் நன்றிக்கடன் பட்டிருக்கிறோம். பெருந்திரளாக நீவிர் கூடி இறுதிக்கிரியைகளில் கலந்து ஆறுதல் அளித்தமையை எண்ணுகையில் எங்ஙனம் உங்கள் ஒவ்வொருவருக்கும் நன்றியும் அந்தியேட்டி அழைப்பும் தெரிவிப்பதெனப் புரியவில்லை. காலக்கோலத்தில் செய்வதறியாது நிற்பதனால் உங்கள் ஒவ்வொருவரையும் அன்பும், நன்றியும் நிறைந்த உள்ளக் கரங்களால் உங்கள் கரங்கள் உரிமை பூண்டு அழைக்கின்றோம். பெருமனம்கொண்டு இதனைத் தனிப்பட்ட அழைப்பாகக் கருதி வருகை தரவேண்டும் என்று இறைஞ்சுகிறோம். எங்கள் குடும்பத்து ஒளிவிளக்கு திருமதி சுயந்தி கணேசமூர்த்தி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் (14.06.2013) கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரன் புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (16.06.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு எங்கள் இல்லத்திலும் இவற்றைத் தொடர்ந்து இல. 1229, கே.கே.எஸ் வீதி, பூநாறி மரத்தடி யாழ்ப்பாணத்தில் உள்ள "**செல்வ மஹால்**" மண்டபத்தில் முற்பகல் 11 மணிக்கு ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதியபோசன நிகழ்வும் நடைபெறும். இந் நிகழ்வில் தாங்களும் வருகை தந்து கலந்து கொள்ள வேண்டும் என்று நன்றியுணர்வுடனும் அன்புரிமையுடனும் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்)

இல. 60, சேர்.பொன் இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
த.கணேசமூர்த்தி (கணவர்) மற்றும் பிள்ளைகள், குடும்பத்தினர்.
(A/9678)(13.6.5)

### 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்மகிழ 12.04.1943
கண் நெகிழ 17.05.2013

அமரர்
**மயில்வாகனம் சதாசிவம்**

பூவிரிந்தது போற் சிரித்ததும்
புலர் முகத்திலே தினம் திரிந்ததும்
பாவரியெனப் பாரில் இருந்ததும்
உளம் மறந்திடல் ஆகுமோ?
உற்ற உயிரது கூடு விட்டதோ?
நிர்க்கதி எமை வந்து தொட்டதோ
பற்பல நிலை வந்து வந்தெமை
அற்பமாய் ஆக்கினும்
பொற்பதமுனை நாம் என்றும் மறவோம்.

இன்று (16.06.2013) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம். மேலும் இறுதிக்கிரியைகளில் கலந்து துயர் பகிர்ந்தவர்கள் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவியவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கண்ணாமலை
இமையாணன், உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை.
குடும்பத்தினர்.
(C.9859)(10.7.)

### 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



அமரர் **சின்னத்துரை குமாரு**
(ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)

மலர்வு 1929.01.24
உதிர்வு 2013.05.17

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு எமது துயரில் பங்கு கொண்டு எமக்குப் பலவழிகளிலும் உதவிகள் புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (16.06.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(அழைப்பிதழ் கிடைக்காதவர்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்).

கந்தரோடை, சுன்னாகம். (35401)(2.6.3) குடும்பத்தினர்.

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்:- 12.08.1926



அமரர்
**சின்னையா செல்லத்துரை**

கடந்த (18.05.2013) சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பக் குலவிளக்கு **சின்னையா செல்லத்துரை** அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (17.06.2013) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.
மறைவு:- 18.05.2013
4 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

### 54 ஆவது பிறந்தநாளும் 6 ஆம் மாத நினைவலைகளும்



அமரர் **கணபதிப்பிள்ளை செல்வராசா**

அன்னையின் மடியில் 16.06.1959
ஆண்டவன் அடியில் 18.12.2012

மண்ணில் வாழ்ந்த மாந்தர்களில்
மானஸ்தனாய் வாழ்ந்து பிறரைத் தினம்
மகிழ வைத்த அப்பா - இன்று
எம்மைத் தவிக்க வைத்தது ஏனப்பா?
[illegible] ...
[illegible] (மகன்).

பிரிவால் வாடும்: மனைவி, பிள்ளைகள், அண்ணாமார், தம்பி, மச்சாள்மார்
பண்ணாகம் தெற்கு, சுழிபுரம். ([illegible])(2.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மாற்று ஆற்றல் உள்ளோரை சமநிலை வழங்கி ஆதரிப்போம்

எனது அடைவு குறித்து நான் பெருமை அடைகிறேன். ஏனெனில் நான் மேற்கொண்ட முயற்சியின் ஊடாகவே நான் பெற்ற அனைத்தையும் அடைந்தேன். குறிப்பிட்டுச் சொல்வதானால், இலங்கையில் மாற்று ஆற்றலுடையோர் தமது திறமையை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவாகும். பிறக்கும் போது கண் பார்வைக் குறைவு எதுவும் இல்லாமல், தமது ஆறாவது வயதில் அதனை முற்றாக இழந்து 'பிறையில்' வழியாக எழுதப் பழகி, இப்போது பிரபல தொலைபேசித் தொடர்பு நிறுவனம் ஒன்றில் தொலைபேசி இயக்குநராகப் பணிபுரிகிறார். மெலானி ஸ்ரீபன் இரத்மலானை பார்வை இழந்தோர் பாடசாலையில் பயின்று, பின்னர் நயக்கந்த நல்லாயன் மடத்தில் (Good Shepherd Convent) சேர்ந்து கொண்ட மெலானி ஸ்ரீபன் கல்வித் தராதர உயர்தரப் பரீட்சையில் தேறினார் என்பது மாற்றுஆற்றல் உடையோரும் ஏனையோரைப் போன்று தத்தமக்கு உரிய திறமைகளை வெளிப்படுத்தி வாழ இயலும் என்பதற்கான ஓர் உதாரணம்-விடய ஆய்வு (Case Study) - எனலாம்.

எங்கள் பிரதேசங்களிலும் மாற்று ஆற்றலுள்ளோர் குறிப்பாக பிறப்பில், இடைநடுவில் தமது உடல் திறன்களை இழந்தவர்கள் சராசரி வாழ்க்கை நடத்துகிறார்கள். ஆனால் கொழும்பு மற்றும் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களைப் போலன்றி ஒப்பீட்டளவில் இவர்களது நிலைமை கீழ் நோக்கியே உள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில், ஒரு சில பிரதேச செயலக பிரிவுகள் தவிர, ஏனைய பிரதேச செயலக பிரிவுகள்-பிரதேச செயலர்கள் மாற்றுஆற்றலுள்ளோர், மாற்றுஆற்றலுள்ளோர் விடயத்தில் அக்கறை குறைந்தே காணப்படுவதாக சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் இமெல்டா சுகுமார் கவலை வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பில், மன வருத்தத்துக்குரிய தகவல் ஒன்றை, மாற்றுஆற்றலுள்ளோரைப் பயன்படுத்தி பல்வேறு வகைகளில் மோசடிகள் நடத்தப்படுவதாக மாற்றுத் திறனாளிகள் சங்கத் தலைவர் வெளியிட்டுள்ளார்.

மாற்றுவலு உடையவர்களை சமூகத்துடன் இணைத்து அவர்கள் தாம் புறமொதுக்கப்படவில்லை என்று உய்த்து உணரும், அனுபவிக்கும் அளவுக்கு-

தமிழ்ப் பிரதேசங்களில் அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டும், ஊன்றுகோலாகச் செயற்படும் அமைப்புக்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவு என்பது கவலைக்கு உரியதாகும்.

எனினும், கைதடி நவீல்ட் பாடசாலை, வாழ்வகம், சிவபூமி, இனியவாழ்வு இல்லம் ஆகியன சீரிய பணி ஆற்றி வருகின்றன.

மாற்று ஆற்றல் உள்ளோரின் மாவட்ட ரீதியான புள்ளிவிவரம் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டு பல ஆண்டுகள் (சுமார் பத்து வருடங்கள்) கழிந்து விட்டன. (அதன் பிரகாரம் இலங்கை முழுவதிலும் 18 மாவட்டங்களில் 69,026 பேர் மாற்று ஆற்றல் உள்ளோர் என்று கண்டறியப்பட்டது.) இதில் வடக்கு, கிழக்கில் அம்பாறை மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள் இடம்பெறவில்லை.

எதுவாயினும் தமிழ் பிரதேசங்களைச் சேர்ந்த மாற்றுவலு உள்ளோருக்கான மேம்பாடு மற்றும் உதவித் திட்டங்கள், அறப்பணி அமைப்புக்கள் மிகமிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே உள்ளன.

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் உறவுகளில் சிலர், மாற்று ஆற்றல் உள்ளோருக்கு- விழிப்புலன், செவிப்புலன் அற்றவர்களுக்கும், மனநலம் பாதிப்புற்றவர்களுக்கு தங்களால் இயன்ற அளவுக்கு உதவுகிறார்கள். அவர்களைப் போன்று இன்றும் பலர் உதவ முன்வருவர் என எதிர்பார்க்கலாம்.

இந்தச் சிறந்த பணியில், மனிதாபிமானப் பணியில் நாட்டங் கொண்டவர்கள் தனித்தனியே தமது பிறந்த பிரதேசத்தில் இனங்காணப்படும் மாற்று ஆற்றல் உள்ளோருக்கு உதவி வருகிறார்கள் என்பதும் வரவேற்கத்தக்கதாகும்.

அதேவேளை, விசேட தேவையுடைய மாணவர்களுக்கென விசேட அலகு (தென்மராட்சியில்)டிறிபேர்க் கல்லூரியில் கல்விப் பகுதியினரால் அமைக்கப்பட உள்ளதும் தொட்டுக்காட்டக் கூடிய ஒன்றாகும்.


பாடசாலைகளுக்குச் செல்லமுடியாத, மாற்று ஆற்றலுள்ள முப்பது சிறுவர்களை இணைத்து இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட உள்ளது. இது ஏனைய பிரதேசங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டால் அவற்றைச் சேர்ந்த மாற்றுஆற்றல் உள்ள சிறுவர்கள் பயன்பெற உதவும்.

மாற்று ஆற்றல் உடைய வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, தையல் தொழில், சிறுகைத் தொழில் என்பவற்றுக்கு நன்கொடை (25 ஆயிரம் ரூபா) சமூக சேவை திணைக்களத்தினால் வழங்கப்படுவதும் புதிய திட்டமாக மலர்ந்துள்ளது. அத்தோடு, மாற்று வலுவுள்ளவர்களை அடையாளப்படுத்துவதற்குச் சமூக சேவைத் திணைக்களம் உதவுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அரச, அரசசார்பற்ற, சமூகநல ஆர்வலர்களின் உதவிகள் மாற்றுவலு உள்ளவர்களுக்கு, தம்மிடம் குறைபாடு உண்டு என்ற உணர்வு நீங்கவும், தாம் தாழ்த்தப்படுகிறோம் என்ற பாகுபாட்டு நிலை அகலவும் உதவும்.

இதனை நாடி, எமது சமூகத்தில் உள்ள ஏனையோரும் மாற்றுவலு உடையோரை சமநிலையில் வைத்து உயர்த்த மனங்கொள்ள வேண்டும். அந்தத் தர்மம் உங்களின் சந்ததிகள் இவர்களைப் போன்று இயற்கையின் வினைக்கு ஆளாகாமல் தடுக்கும். ஊன்றிச் சிந்தியுங்கள்; இதய சுத்தியுடன் செயற்படுங்கள்; காலத்தின் தவிர்க்க முடியாத தேவை என உணர்ந்து.

# எம்முடன் இணைந்து செயற்பட்டால் அரசுக்கு பல வழிகளிலும் நன்மையே



இலங்கையின் முன்னாள் போர் வலயத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ள நிலையில், இங்கு வாழும் சிறுபான்மைத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான தமிழ்க் கட்சியானது அரசிடமிருந்து சாத்தியப்பாடான அரசியல் அதிகாரப் பகிர்வைப் பெற்றுக் கொள்வதற்கான அழுத்தத்தை வழங்கிவருகிறது.

இலங்கையில் கடந்த பல பத்தாண்டுகளாக இதன் ஒன்பது மாகாணங்களுக்கு குறிப்பாக தமிழ் மக்கள் தமது தாய்நிலம் எனக்கருதும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு அரசியல் அதிகாரப் பகிர்வை வழங்குவது தொடர்பில் இழுபறி நிலை காணப்படுகிறது.

1980களின் முற்பகுதியில், இலங்கை அரசானது தம்மீது பாரபட்சத்துடன் நடந்து கொள்வதாக உணர்ந்த தமிழ் மக்களின் இளையோர்கள் ஆயுத அமைப்பு ஒன்றைத் தோற்றுவித்தனர். இவ்வாறு தோற்றம் பெற்ற ஆயுதப் போராட்டம் 17 மே 2009 இல் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. வடக்கு வாழ் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முதன்மையான தமிழ்க் கட்சியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகும்.

''அதிகபட்ச அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது எமது வேண்டுகோளாகும்'' என த.தே.கூ தலைவர்இராசம்பந்தன்தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படாவிட்டாலும் கூட, வரும் செப்ரெம்பரில் இதனை நடத்தத் திட்டமிட்டுள்ளதாக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சுட்டிக் காட்டியிருந்தார். இந்தத் தேர்தல் இடம்பெற்றால், இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னர் வடக்கில் நடத்தப்படும் முதலாவது மாகாண சபைத் தேர்தல் இதுவாகும். இலங்கையில் உள்ள ஒன்பது மாகாணங்களுக்கும் குறிப்பாக தமிழ் மற்றும் முஸ்லிம்கள் அதிகம் வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு அரசியல் அதிகாரங்களைப் பகிர்ந்து வழங்குவதை நோக்காகக் கொண்டு 1987இல் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன.

இலங்கையை ஆளும்பெரும்பான்மை சிங்கள சமூகத்தால் சிறுபான்மை தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் [illegible] பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முதலில் அரசியல் அதிகாரப் பகிர்வை வழங்குகின்ற அரசியற் தீர்வொன்று முன்வைக்கப்பட வேண்டும் என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

2006இல் மாகாண சபைக்கான அதிகார வரையறைகள் மீள வரையப்பட்டதிலிருந்து இற்றைவரை மாகாணசபைத் தேர்தல் நடைபெறாத ஒரேயொரு மாகாணமாக வடக்கு மாகாணம் விளங்குகிறது.

கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள ஆளுநர்கள் இருவரும் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் எனவும், இவர்கள் மாகாணங்கள் வாரியாகத் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுடன் கலந்துரையாடாது தான்தோன்றித்தனமாகச் செயற்படுவதாகவும் சம்பந்தன் குற்றம் சாட்டியுள்ளார்.

ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதற்கு மாகாண சபையால் உதவமுடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர். தேர்தல்கள் எந்தவொரு மாற்றத்தையும் கொண்டுவர முடியாவிட்டாலும் கூட, ''முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான சூழல் ஒன்றை தேர்தல் மூலம் உருவாக்க முடியும்'' எனச் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சமாதானம் ஏற்பட்டு நான்கு ஆண்டுகளான நிலையில், முன்னாள் போர் வலயத்தில் வீதி அபிவிருத்தி, மின்சக்தி திட்டம் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்திகள் இடம்பெற்றாலும் கூட, இன்னமும் நிறையச் செய்ய வேண்டிய தேவையுள்ளது. குறிப்பாக வருமானத்தை அதிகரிக்கும் திட்டங்கள் மற்றும் நிரந்தர வீடுகளை அமைத்தல் போன்றன நிறைவேற்றப்பட வேண்டும்.

அதிகாரப் பகிர்வை வழங்குவதன் மூலம் தற்போது இலங்கை அரசால் கட்டுப்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கான நிதியை புலம்பெயர் தமிழ் சமூகத்திடமிருந்து அதிகம் பெற்றுக் கொள்ள முடியும் என சம்பந்தன் மேலும் தெரிவித்துள்ளார்.

போர் இடம்பெற்ற பகுதியில் உருவாக்கப்படும், மாகாண சபை நிர்வாகங்களுடன் இலங்கை அரசானது மிக நெருங்கிய தொடர்பைப் பேணுவதன் மூலம் மேலும் பல நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசானது எம்முடன் இணைந்து பணியாற்றினால், வடக்கு கிழக்கு வாழ் மக்களின் நாளாந்த வாழ்வில் பல்வேறு நிரந்தரமான முன்னேற்றங்கள் ஏற்படும். இதன் மூலம் அரசு இன்று எதிர்நோக்கும் குற்றச்சாட்டுக்களின் தீவிரத்திலிருந்து விடுபட முடியும்'' என த.தே.கூ தலைவர் ஆர்.சம்பந்தன் மேலும் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என இந்தியா உட்பட அனைத்துலக நாடுகள் இலங்கை அரசை வலியுறுத்தி வருகின்றன. போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கை அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலங்கை மீது அனைத்துலக சமூகமானது குற்றம்சுமத்தியுள்ளது. மார்ச் மாதம் இடம்பெற்ற ஐ.நா மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் இலங்கை அரசானது தன் மீதான போர்க் கால குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பதிலளிக்க வேண்டும் என அழுத்தம் கொடுத்து இரண்டாவது தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கை, மாகாண சபையிடம் அதன் உச்சக் கட்ட அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் என்பதில் உள்ளூர் ஆய்வாளர்கள் நம்பிக்கை கொள்ளவில்லை. குறிப்பாக மீள்கட்டமைப்பு மற்றும் மீளிணக்கப்பாடு தொடர்பான அரசின் கொள்கையை வெளிப்படையாக விமர்சிக்கும் த.தே.கூ போன்ற எதிர்க்கட்சியால் கட்டுப்படுத்தப்படக் கூடிய மாகாணசபை நிர்வாகத்திடம் அரசானது அரசியல் அதிகாரத்தை வழங்க ஒருபோதும் முன்வராது என எதிர்வுகூறப்படுகிறது.

''மாகாண சபைகளுக்கு காணி மற்றும் காவல்துறை அதிகாரங்களை வழங்குவதை தடுக்கவே இலங்கை அரசு முயற்சித்து வருகிறது. இந்த நிலையில் தன்னால் அல்லது தனது ஆளும் கூட்டணியால் கட்டுப்படுத்தப்பட முடியாத ஒரு மாகாண சபைக்கு மேலும் அதிகாரங்களை வழங்க இலங்கை அரசு முயற்சிக்காது'' என உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனமான தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்று இயக்குநர் ஜெகன் பெரேரா தெரிவித்துள்ளார்.

வடக்கில் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டாம் எனக் கோரி இலங்கை அரசுக்குள் எதிர்ப்புக்கள் தோன்றியுள்ளன. ஆளும் கூட்டணியைச் சேர்ந்த தேசிய சுதந்திர முன்னணியானது உள்ளூர் சபைகளிடமிருந்து காவல்துறை மற்றும் காணி அதிகாரங்களைப் பறிக்குமாறு வலியுறுத்தி மில்லியன் வரையான மக்களிடமிருந்து கையெழுத்துக்களைப் பெற்றுள்ளது.

இதற்கும் மேலாக, மாகாண சபைகளை உருவாக்குவதற்கு வழிசமைத்த 13வது திருத்தச் சட்டத்தை யாப்பிலிருந்து நீக்குவதற்கான முயற்சியை தேசிய சுதந்திர முன்னணி தொடர்ந்தும் முன்னெடுக்கும் என இதன் தலைவரும்,கட்டுமானம்,பொறியியல்சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுச் சேவை அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

''மாகாண சபையானது தன்னிச்சையான முடிவுகளை எடுப்பதற்கான அதிகாரத்தைப் பெற்றால் அது நாட்டைச் சீரழித்துவிடும்'' எனவும் அமைச்சர் விமல் வீரவன்ச மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளையில், வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதானது போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் சிலர் மத்தியில் சிறியதோர் உற்சாகத்தையே ஏற்படுத்தியுள்ளது.

*நன்றி - புதினப்பலகை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ். ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற மாணவருக்கான தமிழ் பாட முகாம் நிகழ்வில் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்ட யாழ். வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி மைதிலி தேவராஜா முகாமை நாடாவெட்டி திறந்து வைக்கிறார். முன்னாள் அதிபர் மு.முரளிதரன் மற்றும் தற்போதைய அதிபர் யோ. ஜெகஆனந்தம் ஆகியோர் அருகில் நிற்கின்றனர். (எ)



யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலையில் கடந்த 12 ஆம் திகதி நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக யூனியன் வங்கியின் தலைவர் அலெஸ் இந்திரஜித் கலந்து கொண்டு மாணவிகளுக்கு பரிசில் வழங்கினர். (ஒ-14)



பாடசாலை மாணவர்களுக்கும் ஆயுதப் பயிற்சி வழங்கப்படுகிறதா என எண்ணுகிறீர்களா? அவர்கள் கைகளில் வைத்திருப்பது ரி 56 ரக துப்பாக்கி அல்ல. அந்த வடிவமைப்பைக் கொண்ட ஓர் ஆயுதம் தான். இது யாழ். மத்திய கல்லூரி சாரணிய மாணவர்கள் சிலருக்கு கல்லூரி மைதானத்தில் வைத்து வழங்கப்பட்ட 'கடேற்' பயிற்சியின் காட்சி. (ஒ-4)



குருநகர் மீனவர்களின் நினைவுத்தூபி முன்பாக கொல்லப்பட்டவர்களின் உறவுகள் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த வேளை... (ஒ-51)



வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் 2013 ஆம் ஆண்டுக்கான சின்னம் சூட்டும் விழாவின் போது அதிபர் சிரேஷ்ட மாணவ தலைவிக்கு சின்னத்தை அணியும் காட்சி. (ஒ-253)

## இன்று முதல் புதன் வரையான மின் தடை அறிவிப்பு

வீதி அகலிப்புப் பணிகளுக்காகவும் மின் மார்க்கங்களின் புனரமைப்பு பணிகளுக்காகவும் சில பகுதிகளில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 .30 மணி வரையும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.

இன்று ஞாயிற்றுக்கிழமை குஞ்சர்கடைப் பிரதேசத்தின் ஒரு பகுதி, உடுப்பிட்டி, தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, வல்வெட்டி, நவிண்டில், உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப் பகுதி நீங்கலாக யாழ். மாநகர சபைப் பகுதி, ஸ்ரான்லி வீதி, பிறவுண் வீதி, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி, தட்டார்தெரு தொடக்கம் முட்டாஸ் கடைச் சந்தி வரையான பிரதேசம், மனோகரா பிரதேசம், ஈஞ்சை வைரவர் பிரதேசம், சோரன்பற்று, புதுக் காடு ஆகிய இடங்களிலும்

திங்கட்கிழமை சோரன்பற்று, புதுக்காடு ஆகிய இடங்களிலும்

செவ்வாய்க்கிழமை குஞ்சர் கடைப் பிரதேசத்தின் ஒரு பகுதி, உடுப்பிட்டி, தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, வல்வெட்டி, நவிண்டில், ஈஞ்சை வைரவர் பிரதேசம், சோரன் பற்று, புதுக் காடு ஆகிய இடங்களிலும்

புதன்கிழமை நெல்லியடிப் பிர தேசத்தின் ஒரு பகுதி, வதிரி, அல்வாய்ப் பிரதேசத்தின் ஒரு பகுதி, திக்கம், சோரன்பற்று, புதுக்காடு ஆகிய இடங்களிலும்

வியாழக்கிழமை அச்சுவேலி, இடைக்காடு, பத்தமேனி, வளலாய், தொண்டமானாறு வீதிப் பிர தேசம், ஈஞ்சை வைரவர் பிரதேசம், சோரன்பற்று, புதுக்காடு ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ந)

## சமய சந்நிதிகளில்

புளியங்கூடல் ஊர்காவற்றுறை செருத்தனைப்பதி ஸ்ரீ இராஜமகாமாரி அம்பாள் ஆலயப் பெருந்திருவிழா வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 18 தினங்கள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திரு விழாவும் 30 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை தீர்த்தத் திரு விழாவும் இடம்பெறவுள்ளன.

★ ★ ★

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலயப் பெருந் திருவிழா வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும்.

★ ★ ★

தச்சன் தோப்பு சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயப் பெருந் திருவிழா வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ந)

★ ★ ★

மல்லாகம் கோட்டைக்காடு சாளம்பை முருகமூர்த்தி ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர் வரும் 25ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (ந)

★ ★ ★

அரியாலை ஸ்ரீ நாகதம்பி ரான் ஆலய கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடை பெறவுள்ளது. முன்னதாக அன்றைய தினம் காலை 9 மணிக்கு பாலஸ்தாபனம் சாத்தப்படும். (ந)

# கருவாய் உருவாக்கி....

■ அருவி



### இன்று தந்தையர் தினம்

இன்று உலக தந்தையர் தினமாகும். அமெரிக்காவில் முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்ரனுக்கு அமெரிக்காவிலுள்ள இலாப நோக்கமற்ற தேசிய தந்தையர் தின குழு இந்த வருடத்துக்கான சிறந்த தந்தைக்கான விருதை வழங்கவுள்ளது. கிளின்ரன் ஜனாதிபதியாக இருந்தவேளை அவருடைய 12 வயதான மகன் செலஸ்-சை வெளியுலகப் பார்வையிலிருந்து பாதுகாத்து தந்தைக்கான பொறுப்பை சரிவர நிறைவேற்றியதற்காக தந்தையர் தினத்தன்று விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார்.

எனவே ஒவ்வொரு தந்தையரும் தமது தந்தையருக்கும் ஆற்றவேண்டிய பொறுப்புக்களை சரிவர மேற்கொண்டு தமது பிள்ளைகளிடம் இருந்தாவது மரியாதையை, கௌரவிப்பை பெறவேண்டும்.

அன்னை வயிற்றில் ஐயிரண்டு மாதங்களாய் நம்மைச் சுமந்தாலும், ஆயுள் வரை நெஞ்சில் சுமப்பவர் தந்தை. அம்மாக்களை போல, அப்பாக்களுக்கு பாசத்தை வெளிக் காட்டத் தெரியாது. முள்ளுக்குள் ரோஜாவாய், பலாப் பழத்தில் பலாச்சுளையாய் நினைக்க, நினைக்க நெஞ்சுக்குள் சந்தோஷமும், பெருமையும் தருபவர் தந்தை. வாழ்க்கைச் சக்கரத்தில் வசதியாய் நாம் வாழ்வதற்காக, ஓயாமல் சுழலும் அன்புச் சக்கரம் தந்தை. ''நான் பட்ட கஷ்டம்', என் பிள்ளையும் படக்கூடாது என்று வாயாற பேசி, மனமார உழைக்கும் அந்த அன்பு... ''கண்ணுக்கு தெரியாத கடவுளைப் போல', நம்மை அரவணைத்து காக்கும். தந்தையின் பெருமைகளை மனதால் உணரும் போது தான், அவரது அன்பு நம் கண்ணுக்குத் தெரியும்.

பாசத்துக்கு எப்போதும் அன்னை தான் உதாரணம். தந்தைதான் ஒரு குழந்தைக்கு வழிகாட்டியாக இருக்கிறார். "அன்னையிடம் அன்பை வாங்கலாம், தந்தையிடம் அறிவை வாங்கலாம்' என்பார்கள்.

தாயின் அன்புக்கு எவ்வகையிலும் குறைந்து விடுவதில்லை தந்தையின் அன்பு. சிறு வயது முதல் பிள்ளைகள் விரும்பியவற்றை செய்து தருகிறார். பிள்ளைகளின் கல்வி முதல் திருமணம் வரை அனைத்திலும் தந்தையின் பணி அளவிட முடியாதது. சிலர், முதுமை பருவத்தில் தந்தையை தவிக்க விடுகின்றனர். இது தவறு. இன்று பிள்ளையாக இருப்போர், நாளை தந்தையாக மாறுவர். எனவே இந்த நிலைமை யாருக்கும் வரலாம் என்பதை நினைவில் வைத்து தந்தைக்கு உரிய மதிப்பளிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமாகாணப் பாடசாலைகளிடையே இடம்பெற்ற கணித நாடகப் போட்டியில் சிரேஷ்ட பிரிவில் முதலாவது இடத்தைப் பெற்ற மன்னார் சின்னப்பண்டிவிரிச்சான் அ.த.க.பாடசாலையின் மாணவ அணியினர். (க-18)



வடமாகாணப் பாடசாலைகளிடையே இடம்பெற்ற கணித நாடகப் போட்டியில் கனிஷ்ட பிரிவில் முதலாவது இடத்தைப் பெற்ற மன்னார் பெரிய பண்டிவிரிச்சான் அ.த.க.பாடசாலையின் மாணவ அணியினர். (க-18)



உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நெடுங்கேணி பனை, தென்னைவள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் அன்பளிப்பின் மூலமாக சேகரிக்கப்பட்ட உலருணவுப் பொருள்கள், சவர்க்கார வகைகள், பால்மா ஆகியவற்றைக் கொண்ட பொதிகள் நெடுங்கேணி மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு சங்கத்தின் பொது முகாமையாளரான தி. செந்தில்செல்வன் தலைமையில் வழங்கப்படுகின்றது. (க-402)



அக்கராயன் மகாவித்தியாலயம் மற்றும் ஆரம்ப வித்தியாலய மாணவர்கள் குடிதண்ணீர் பெறுவதற்குக் குழுமி நிற்கின்றனர். (க-18)





வவுனியா மூன்று முறிப்பு அ.த.க.பாடசாலையில் நடைபெற்ற மாணவர் தலைவர்களுக்கான சின்னஞ்சூட்டும் விழாவின்போது சிரேஷ்ட மாணவ தலைவனுக்கான சின்னத்தை ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் பியசிறி பத்ர விதான அணிவிப்பதையும், சிரேஷ்ட மாணவத் தலைவிக்கான சின்னத்தை அதிபர் க.பொன்னம்பலம் அணிவிப்பதையும் சகல மாணவத் தலைவர்களும் பொறுப்பாசிரியர்களுடன் நிற்பதையும் காணமுடிகின்றது. (க-421)



கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்துக்கு இலங்கை தொலைத்தொடர்பு ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட கணினிகளை மாணவர்கள் பயன்படுத்துவதை கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் பார்வையிடுகின்றார். (க-18)



வவுனியா மாவட்ட பாடசாலைகளில் சுற்றாடல் தினம் கொண்டாடப்பட்ட போது... (ஐ-402)



அக்கராயன் மகா வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் கட்டடத்தை கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் பாடசாலை அதிபர் க.மதுரநாயகம் சகிதம் பார்வையிடுகின்றனர். (க-18)



வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் விழா வின்போது உலங்கு வானூர்தி மூலமாக மலர்களைத் தூவும் விமானப்படையினர். (க-18)



அக்கராயன் மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு நிகழ்வின்போது.... (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ். காங்கேசன்துறை வீதியில் மல்லாகம் சந்திக்கு அருகிலுள்ள வைரவர் கோவிலுக்குச் சமீபமாக 2¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 773 2164 (சி/9951) (6.11)

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில்
கட்டடத்துறையில் முன்னணியில்
விளங்கும் நிறுவனம் ஒன்றுக்கு
புதிய ஆளணி தேவைப்படு
கின்றனர்.

பதவி நிலை:

சந்தைப்படுத்தல் அலுவலகர்

**யாழ் மாவட்டம் - 20**

**வன்னி மாவட்டம் -20**

கிடைக்கும் அனுகூலம்:

- அடிப்படை சம்பளம்
- மேலதிக ஊக்குவிப்பு ஊதியம்
- இலவச காப்பீடு
- வாகன எரிபொருள் சலுகை.

சந்தைப்படுத்தல் துறையில் ஆர்வம் உள்ள ஆண்,பெண் இருபாலாரும் உங்கள் சுயவிவரக் கோவையை தொலைபேசி இலக்கத்துடன் 21.06.2013 முன்னதாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (38403)(3.5.6.7)

விளம்பர இல.: 4451
மே/பா. உதயன்,
361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.

## இலவச தையல் பயிற்சி வகுப்பு

ஓய்வுபெற்ற **பொறியியலாளர் தம்பு ஆறுமுகம்** தனது பாரியார் அமரர் ஆ.தில்லைநாயகியின் ஞாபகார்த்தமாக சங்கரத்தை வீதியிலுள்ள தனது வீட்டில் பெண்களுக்கான இலவச தையல் பயிற்சி வகுப்பு நடைபெறுவதற்குச் சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளார். இதில் இணைந்து பயனடையுமாறு பெண்கள் வேண்டப்படுகின்றனர். (38376) (2.6)

தொடர்பு: ஆசிரியை 077 908 9824

லண்டன் / கனடா / அமெரிக்கா / சுவிஸ் / ஜேர்மனி
பிரான்ஸ் / இத்தாலி / டென்மார்க் / அவுஸ்திரேலியா
நியூஸிலாந்து மற்றும் ஏனைய நாடுகளுக்கு செல்ல
இருப்பவர்களுக்கு

## வங்கியில் பணவைப்பு

அரச வங்கியில் 3, 6, 12 மாதங்களுக்கான
முன் பின் வங்கியில் பணவைப்பு

**Saving Book - FD - Statement**

For: Student|Business|Migration|PR|Visit
Family|Dependant|Refused|Visas

**077 4789289**

விசா பெற்றுக்கொள்வதற்கு தேவையான சகல
உதவிகளும் எம்பசி வேலைகளும் செய்து தரப்படும்

**No.52, Davidson Road, Colombo -04.**
நேரத்தை முன்கூட்டியே பதிவுசெய்துவிட்டு வரவும்.

## மணமகள் தேவை

மணமகள் தேவையா? ஒரு sms இனூடான உங்களின் பதிவினை மேற்கொண்டு காத்திருங்கள். உங்களின் டயலொக் மொபைலில் (Dialog) REG bride என ரைப் செய்து 77000 இலக்கத்திற்கு sms பண்ணவும். மேலதிக தகவலிற்கு www.realmatrimony.com Call : 011 4380900 0114344230 (சி/8968)

## மணமகன் தேவை

மணமகன் தேவையா? ஒரு sms இனூடான உங்களின் பதிவினை மேற்கொண்டு காத்திருங்கள். உங்களின் டயலொக் மொபைலில் (Dialog) REG groom என ரைப் செய்து 77000 இலக்கத்திற்கு sms பண்ணவும். மேலதிக தகவலிற்கு www.realmatrimony.com Call : 011 4380900 0114344230

## sms ஊடாக வரன் தேடல்

sms இனூடாக Realmatrimony இல் பதிவதாயின், உங்களின் மொபைலில் <உங்களின் பெயர்>, <பிறந்த திகதி>. ரைப் செய்து 0777 111 786 என்ற இலக்கத்திற்கு sms பண்ணுங்கள். 30 நாட்கள் இலவச சேவையினையும் பெறலாம். மேலதிக தகவலுக்கு அழையுங்கள் www.realmatrimony.com
Call : 011 4380900 0114344230



உதயன் விளம்பர தொடர்புகளுக்கு:
**021 5671111**
advt@uthayan.com

## கார் விற்பனைக்கு

வெள்ளை TOYOTA ALLION கார் (2012) 850 கிலோ மீற்றர் பாவனையுடன் விற்பனைக்கு. விலை 55 இலட்சம். (38405) (2.6.7.5)

தொடர்பு: 077 711 1502

## பாலியல் வைத்தியம்

ஆண், பெண் பாலியல் பிரச்சினைகள் குழந்தை இன்மை. வீரியம் அதிகரிக்க ஆயுர்வேத ஆலோசனை (சி/8969)

**0750 252 141**

## விற்பனைப் பிரதிநிதி தேவை

ஒருவருட அனுபவமுள்ள விற்பனைப் பிரதிநிதி தேவை. தகைமைச் சான்றிதழுடன் 17.06.2013 திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு அலுவலகத்துக்கு நேரில் சமுகம் தரவும்.

AMT TRANSPORT SERVICE
(NESTLE)
No.28, New Sivan Road,
Thirunelvely,Jaffna.
T.P.: 021 221 9369 (38404)(3.5.6.7)

## கேரள ஆயர்வேத மருத்துவம்

**நமது சிகிச்சைகள்**

- இருதயவலி
- புற்றுநோய் தணிப்பு
- ஈரல் பிரச்சினைகள்
- மூட்டுவலி
- இடுப்புவலி
- புறோட்ஸ்ரேட் பிரச்சினைகள்
- ஒற்றைத்தலைவலி
- மனஅழுத்தம்
- இருமல்
- சளி
- படுக்கைப்புண்
- நச்சு வைரஸ் பாதிப்பு
- பாலியல்குறைபாடு

Tel : 011 551 7897
011 555 1879
011 555 8442
Fax : 011 551 7756

**சில பிரச்சினைகளைத் தீர்த்திட சிறிய வழிமுறைகள்**

### கல்லீரல் மருத்துவம்

அதிக மதுபாவனை உடல் நலத்தை கெடுக்கும்
**உங்கள் கல்லீரலை பரிசோதனை செய்தீர்களா?**

நோய்க்கான அறிகுறிகளில் அவதானமாக இருங்கள்.
-கருமைப் பார்வு,
-கால்களில் வீக்கம்.



Free consultation
Daily@ Ceylinco House.
monthly clinics are conducted islandwide.

தயவுசெய்து மருத்துவருடன் கலந்தாலோசியுங்கள்

**Hotline : 0777 708 310 / 0777 555 600**
**0777 708 330 / 0777 708 434** (சி/8966)

பிறின்ஸ் பாமசி
462/D, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

FAIR PHARMA (PVT) LTD
Kerala Ayurvedic Medicine

11th Floor. Westwing.
67. Janadipathi Mawatha
Colombo1.
E.mail:fairpharmasrilanka@yahoo.com
Website:www.ayurveda.lk.

**Approved by Department of Ayurveda, BOI, an ISO : 2008 QMS Certified Company**

## வாடகைக்கு

இல.146, இல 144, யாழ்ப்பாணம், சிவப்பிரகாசம் வீதி. வண்ணார் பண்ணை, நாச்சிமார் கோயிலடியில் வீட்டுடன் கடை வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்பு: 0771 526874 / 0775 361370 (c/8973)

## வீடு, காணி விற்பனை

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் சித்தன்கேணி வீதியில் 29.02 பேர்ச்சஸ் காணி 4 அறைகள் கொண்ட வீட்டுடன் விற்பனைக்குண்டு.
0776463843 / 0041793581716 (c/8973)

வெள்ளவத்தையில்
குறைந்த நாளாந்த வாடகைக்கு
அறைகளைப்பெற தொடர்பு
கொள்ளுங்கள்

THAS REST
காலி வீதியில்
391/6, Galle Road,
Wellawatte
011-2360515 /
011-2362586 (c/8972)

UTHAYA REST
Police Station
அருகில் Sea Sidete;
58, Hamers Avenue
Wellawatte
011-2503552/
011-2361242/
011 - 2360243

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

ஒரு பவுண் நகை, கெருடாவில் கோயில் சந்தியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும். (சி/8952) (2.6)

தம்பையா சண்முகம்,
பீசாலை வாக்கு, வேம்பிராய்.

## BUILD YOUR CAREER & BE PART OF A GROWING TEAM

Management Trainees (Male/Female)
Trainee Sales & Marketing Executives (Male/Female)
*Jaffna Branch*

Be an achiever by stepping into a successful career with Pioneer House, Sri Lanka's leading Learning Solution Provider. We are part of a Multinational company with over 21Branches in Asia. With Over 25 years in the business, We are looking for young and competent, result oriented individuals who are willing to take challenges in the fast paced world of Marketing.

**Requirements**

- Age above 20 years up to 35 years only.
- Should be a Graduate or sound results of GCE O/L & A/L'S
- A Fair Knowledge of English
- Willing to work hard and build a career.
- Positive attitude and a pleasing personality.




**Benifits**

- Unlimited income potential to earn Rs 30,000/- pm
- Comprehensive & Intensive Training
- Basic Salary/Travel Allowances/Commission +
- Incentives
- Overseas Travel / Conferences for achievers
- Motor Bike/Car Allowances ( Scooter allowance for ladies )

Call for immediate interview Vacancies for 20 Peoples

PIONEER HOUSE

**Pioneer House (Pvt) Ltd**
No: 100, 2nd Floor, Manipay Road, Jaffna.
Contact: Manager – Mr.G.Anthony
077 356 6835 / 021 567 1130

MD

# மாம்பழம்

தொகையாகத் தேவைப்படுகின்றன

மேலதிக விபரங்களுக்கு கிழமை நாள்களில் நேரில் அல்லது தொலைபேசி 0112586622 இலக்கத்தில் கொள்வனவு முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

**லங்கா கனரீஸ் (பிரைவட்) லிமிடெட்**
45/75, நாரஹேன்பிட்டி வீதி, கொழும்பு 05.
தொலைபேசி: 0112-586622.
தொலைநகல்: 0112-368480. (சி/8965)

## Sunjeys Tourism தின் யாத்திரை

வவுனியாவிற்கு அப்பால் உள்ள கோயில்களுக்கான யாத்திரை sunjeys tourism ஊடாக 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான சுற்றுலா யாத்திரை யாத்திரிகளின் வேண்டுகோளுக்கிணங்க 21.06.2013 இற்கு பிற்போடப்பட்டுள்ளது. பதிவு செய்தவர்கள் தவிர ஏனையோருக்கான ஆசனப் பதிவுகள் முந்துவோருக்கு முன் உரிமை. இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.




உணவு, தங்குமிடம், போக்குவரத்து (குளிரூட்டப்பட்ட, தொலைக்காட்சி, Adjustable Seat) போன்ற சகல வசதிகளுடனும் கீழ்க்காணும் இடங்களை சுற்றிப் பார்க்க ஓர் அரிய சந்தர்ப்பம்.

மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கதிர்காமம், நுவரெலியா, கண்டி மேற்குறிப்பிட்ட இடங்களிலுள்ள முக்கிய வணக்க ஸ்தலங்களுக்கும், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கும். (C/9849)(5.6.3.7)

**5 நாள்களுக்கும் ஒரு நபருக்கு 11, 900/= மட்டுமே 20பேர் மட்டும்.**
**ஆரம்பம் 21.06.2013 காலை 7மணிக்கு**
**இக்கட்டணம் முதல் முறை மட்டுமே**

தொடர்புகளுக்கு:- Sunjeys Tourism,
713 , ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
0777 474111/ 021 221 7070



## இலவச அழகுக் கலை பயிற்சி

Normal Facial, Gold Facial, Fruit Facial, Face Massage, Eye Brow Threading Pedicure. Manicure, Nail Art, French Manicure, Hair Style,Hair cut, Hair ironing, Pimple Treatment, Bridal Make up....

அனைத்தும் செய்முறை விளக்கத்துடன் இடம் பெற்று பயிற்சியின் முடிவில் சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்.
பயிற்சியில் இணைய விரும்புவோர் அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டு உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.

காலம் – 19.06.2013
நேரம் – 10.00 AM
இடம் – 187/30, யூனியன் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திர சந்தி அருகில் கொட்டடி வீதி) (நிபந்தனைக்குட்பட்டது)
மன்னார், கிளிநொச்சி பயிற்சி வகுப்புக்களும் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்பு: 077 228 8243, 021 588 8000 (38406)(6.7.11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆனந்த சங்கரிக்கு அமுத விழா

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ ஆனந்த சங்கரியின் அமுத விழா நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக் கிழமை கிளிநொச்சி,யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இடம் பெறவுள்ளது.
நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைக் காரியாலயத்தில் பிற்பகல் 3 மணிக்கும்.
கிளிநொச்சியில் ஏ- 9 வீதியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் முற்பகல் 9 மணிக்கும் அமுத விழா நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-400-9)

# மரண அறிவித்தல்கள்

## முத்துக்குமாரு புஸ்பாவதி



காரைநகர், களபூமி காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு புஸ்பவதி நேற்று முன்தினம் (14.06.2013)வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு (ஆசாரி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - பார்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா - நாகம்மா தம்பதியரின் மருமகளும், தவமணி தேவி (ஜேர்மனி), பாலசிங்கம், பேரின்பநாயகம், தர்மலட்சுமி, சிவநேசன் (யாழ். மாவட்ட திட்டமிடல் செயலகம்) ஆகியோரின் அன்புத் தாயும், கந்தசாமி (ஜேர்மனி), கணேசநாதன், புஸ்பராணி, அருளாம்பிகை, சத்தியபாமா ஆகியோரின் பாசமிகு மாமியும், கமலாம்பிகை, தெட்சணாமூர்த்தி பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், மதிவதனா, பவித்திரா, ஜிவித்திரா, துஷாந்த், பவதாரணி, மதியழகன், சிந்துஜா, அனுசியா, கிரிசாந்த், ரவிசாந்த், சரண்ஜா, பிரசாந்த், பிரணவன், துவாரகன், வாகீசன், கம்சாயினி, கவிசாயினி ஆகியோரின் போத்தியும், கஜீவன் , பவனேஸ், லக்சகி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2013) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் காரைநகர் தில்லை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

களபூமி காளிகோயிலடி,காரைநகர்.

தகவல்: குடும்பத்தினர்.

(38367) (45.6.3)

## பேரம்பலம் கிருஷ்ணகுமார்



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் கிருஷ்ணகுமார் 14.06.2013 அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற பேரம்பலம் மற்றும் கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், தேவிகாவின் அன்புக் கணவரும், கேகஜனின் (கோபி) பாசமிகு தந்தையும், தங்கராசா- சோதியம்மாவின் அன்பு மருமகனும் கலா, லதா (கனடா), லோகேஸ்வரி, கவிதா (கனடா), கிருபாகரன், யசிதா, சுபகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவருடைய இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சந்தை வீதி,
உடுப்பிட்டி.
077 369 8564

தகவல்: குடும்பத்தினர்.

(c/9848)(3.6.11)

## இராசநாயகம் ஆனந்தநாயகம்

((முன்னாள் ஊழியர், யாழ் மாநகர சபை)



பாண்டியன் தாழ்வைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட இராசநாயகம் ஆனந்தநாயகம் (11.06.2013) செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசநாயகம்- அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சவரிமுத்து தம்பதியரின் மரு மகனும், தேவியின் அன்புக் கணவரும், சுரேந்தினி, நியூட்டன், சுகந்தி, சுபா, நொய்லின், வெயிற்றன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சௌந்தரநாயகம் (ஓய்வூதியர்-யாழ் மாநகரசபை), மதுரநாயகம் (ஜேர்மனி), துரைநாயகம் (கனடா), ஜடா கிறிஸ்டபெல் (ஜேர்மனி), றீடா வேர்ஜினி (ஜேர்மனி), பிறேமநாயகம் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகராசா, பீற்றர் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல்(17.06.2013) திங்கட்கிழமை ஜேர்மன் நேரப்படி முற்பகல் 10 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

12/2, சந்தனமாதா
கோயில் ஒழுங்கை,
பாண்டியன் தாழ்வு,
கொழும்புத்துறை.

தகவல்: இ.சௌந்தரநாயகம் (சகோதரன்)

(38350)(3.6.11)

# கோண்டாவில் முன்பள்ளி விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 16
கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும் குமரன் விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் குட்டிச்சுட்டி முன்பள்ளி விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நிலைய முன்றலில் இடம்பெறவுள்ளது.
தலைவர் ம.சதீஸ்குமார் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-400)

# விளையாட்டு விழா

அக்கராயன், ஜூன் 16
அக்கராயன் ஆரம்ப வித்தியாலய விளையாட்டு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.
பாடசாலை அதிபர் ப.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் கலந்து கொள்வார்.

(ஐ-18)

# மரண அறிவித்தல்



## பேராசிரியர் நாகலிங்கம் பாலகிருஷ்ணன்

(முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராதனைப் பல்கலைக்கழகம், முன்னாள் கலைப்பீடாதிபதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், முன்னாள் வளாக முதல்வர் வவுனியா)

யாழ்ப்பாணம் புலோலி தெற்கினைப் பிறப்பிடமாகவும் கொழும்பு தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட பேராசிரியர் நாகலிங்கம் பாலகிருஷ்ணன் அவர்கள் 14.06.2013 அன்று காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - வள்ளியம்மை தம்பதியரின் பாசமிகு மகனும், இந்திரன் (Raniyo Pvt.Ltd), பிரதாபன் (Manager, Sri Lankan Airlines Chennai), மற்றும் வசந்தன் (Singapore) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரல்ல ஜெயரட்ண மலர்ச்சாலையில் இன்று (16.06.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் 3.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, மாலை 6 மணியளவில் பூதவுடல் பொரல்ல இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்
011 485 1168
இந்திரன் : 077 921 3455,
பிரதாபன் : 077 151 2083 ,
வசந்தன் : 077 386 7397.

(சி/8974) (45.6.3)

# மரண அறிவித்தல்கள்

## சிதம்பரநாதர்பிள்ளை தாமோதரம்பிள்ளை



வரணி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரநாதர்பிள்ளை தாமோதரம்பிள்ளை 14.06.2013 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதர்பிள்ளை - சோமகலாநாயகி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும், செல்லம்மா அவர்களின் அன்புக் கணவரும் பாலசுப்பிரமணியம், செல்வவிநாயகம் (இளைப்பாறிய C.T.B நடத்துனர்), மங்கை யர்க்கரசி (ஓய்வுபெற்ற ஆசிரியை), சிவயோகம், சிவரூபராணி, சிவமணி (கனடா), கைலாயநாதன் (கனடா), சிவகுமாரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசேஸ்வரி, சுசிலாவதி (கிராம அலுவலர், உசன்), சிவபாலசற்குணம் (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்), கந்தையாபிள்ளை, காலஞ்சென்ற செல்வநாயகம், தெய்வேந்திரம்பிள்ளை (கனடா), பவானி (கனடா), நடராசபிள்ளை (கனடா) ஆகியோரின் மாமனும், கிருபாலினி, கிருஷ்ணகுமார் (லண்டன்), பாலநந்தினி (கனடா),பிரதீபன் (லண்டன்), பிரகலாதன் (லண்டன்), சுஜித்தா, கிரித்தா, கிஷோத் மன், விதுசா, கோபிகா, தனுசிகா, மோகனதாஸ், கௌசிகா, கேதீஸ்வரன் (நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்), மாலினி (கனடா), யோகேஸ் வரன் (பிரான்ஸ்), தனேஸ்வரன், சதீஸ்வரன், யாழினி, விதாபரன், லிதாவரன், தயாகரன், நிருசிகா, சுவப்னா, கபிலன், பிரியங்கா, சிந்துயா, லவண்யா, அபிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஐயங்கேணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வரணி வடக்கு,
வரணி.

தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.
தொ.பே. 021 321 3084

(37612) (45.6.3)

## செல்லத்துரை வைத்திலிங்கம்



புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட செ.வைத்திலிங்கம் 14.06.2013 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ராஜாமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சேனாதிராஜா, சிவஞானம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுசீலா, நளாயினி (உரிமையாளர் - Sparkle Link (pvt) Ltd), Dr. நிர்மலா (U.K), ரஞ்சினி (Canada), நந்தினி (Canada), கங்காதரன் (Shanthi Pharmacy), ரவிதரன், கிரிதரன் (G.M.Causeway Paints) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஷ்ணராஜ், பாலன் (U.K), மதனரூபன் (Canada), அனுஷா (Daffodil Montessori) ஆகியோரின் அன்பு மாமனும், பிரசாத் (Australia), ரேனு (U.K), ஷர்மிகா (Canada), ஒலிவியா (Canada), ரம்யா (Canada), கிளஷானி, அனுஷாலினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நாளை (17.06.2013) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பித்து தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒரு மணிக்கு பொரளை கனத்தை இந்து மயானத்துக்கு பூதவுடல் இல.74, 37 ஆவது ஒழுங்கை கொழும்பு 6இல் இருந்து எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: கிரிதரன்
தொ.பே. 011 2362 852, 077 734 8689, 077 756 1336.

(37612) (45.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தை உருவாக்க 'உதயன்' முயற்சி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, கிளிநொச்சி மாவட்டத்தில் காணிகளைச் சுவீகரிப்பதற்காக அப்படி எந்த அதிகாரியும் நியமிக்கப்பட்டனர் என்றோ அவர்கள் பதவி விலகினர் என்றோ தான் கேள்விப்படவில்லை என்றார்.

தங்களது குறுகிய நோக்கங்களைப் பூர்த்தி செய்வதற்காக அரசை விமர்சனம் செய்பவர்களுக்கு உதவுவதற்காக உதயன் பத்திரிகை காலத்துக்குக் காலம் பல்வேறு அறிக்கைகளை வெளியிட்டுள்ளது என்றும் ஆளுநர் தெரிவித்தார்.

''இலங்கை ஒரு ஜனநாயக நாடு. தனது தொழிலில் இருந்து ஒருவர் விலகுவதை யாரும் தடுப்பது கிடையாது. விசேட சட்ட ஏற்பாடுகளின் கீழ்தான் அரசு காணிகளைச் சுவீகரித்து வருகின்றது. அத்துடன், தீவிரவாதம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் படையினருக்கு என்று எந்தவொரு காணியையும் அரசு சுவீகரித்திருக்கவில்லை'' என்று அவர் தெரிவித்தார்.

''போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொதுமக்களின் காணிகளை அரசு சுவீகரிக்கிறது என்று கூறுவதன் மூலம் இனங்கள் இடையே முரண்பாட்டைத் தோற்றுவிக்க 'உதயன்' முயற்சிக்கிறது'' என்றும் ஆளுநர் கூறினார்.

புலம் பெயர் தமிழர்கள் வழங்கும் நெறிப்படுத்தல்களுக்கு அமைவாகவே 'உதயன்' பணியாற்றுகின்றது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

காணிகள் சுவீகரிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் அவற்றின் உரிமையாளர்களுக்கு அரசு நட்டஈடு வழங்கியிருக்கின்றது. அப்படிப்பட்ட நிலையில் 'உதயன்' அரசை விமர்சிக்க முடியாது.

''தீவிரவாதம் இருந்த காலத்தில் இடம் பெயர்ந்த மக்கள் அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். தற்போது அவர்கள் தமது வாழ்வாதாரத்தையும் அமைதியான வாழ்க்கையையும் மீளக்கட்டியெழுப்பி வருகிறார்கள். வடக்கு மக்களிடம் இப்போது முரண்பாடு இல்லை. அவர்கள் இணக்கத்துடன்வாழ்கிறார்கள்'' என்று தெரிவித்த ஆளுநர்,

''இந்த நாட்டில் மற்றொரு ஈழத்தை உருவாக்க 'உதயன்' முயற்சிக்கிறது. அது கண்டிக்கப்படவேண்டும்'' என்றும் ஆளுநர் தெரிவித்திருக்கிறார்.

ஆசிரியர் குறிப்பு:

★ 'உதயன்' தனது 11.06.2013 பதிப்பின் முன் பக்கத்தில், காணி அபிவிருத்தி அமைச்சினால் தனதுகிளிநொச்சி மாவட்டத்துக்கு நியமிக்கப்பட்ட அலுவலரான எஸ்.வீரகத்திப் பிள்ளை தனது பதவியில் இருந்து விலகியுள்ளார் என்றே செய்தி வெளியிட்டிருந்தது. கடந்த முதலாம் திகதி முதல் அவர் பதவி விலகினார் என்பதை கிளிநொச்சி அரச அதிபர் 'உதயன்' பத்திரிகையிடம் உறுதிப்படுத்தி இருந்தார்.

★ இதே பதவியை யாழ். மாவட்டத்தில் வகித்த ஆ.சிவசுவாமி ஏற்கனவே தனது பதவியில் இருந்து விலகியிருந்தார் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

★ அது தவிர 'டெய்லி நியூஸ்' குறிப்பிட்டது போன்று காணி சுவீகரிப்புக்காக நியமிக்கப்பட்ட இரு அலுவலர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் பதவி விலகினர் என்று 'உதயன்' எந்தச்செய்தியையும்வெளியிடவில்லை.

★ எனினும், நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக் குழுவின் பரிந்துரைக்கமைய வடக்கு மாவட்டங்களில் உருவாக்கப்பட்டதாகக் கூறப்பட்ட காணி அபிவிருத்தி அமைச்சின் அலுவலகங்கள் இது வரையில் ஆற்றியுள்ள பணி, காணிகளை அரசு சுவீகரிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொண்டமைமட்டும்தான்.

★ இதற்கென நியமிக்கப்பட்ட அலுவலர்கள் ஏற்கனவே அரச பதவியில் இருந்து ஓய்வு பெற்றவர்கள். ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். எனினும் ஒப்பந்த காலம் முடிவதற்கு முன்னரே அவர்கள் தமது பதவிகளில் இருந்து விலகியுள்ளனர்.

★ இவர்களின் நியமனம் குறித்தோ அவர்கள் பதவி விலகியமை குறித்தோ தான் கேள்விப்படவில்லை என்று ஆளுநர் கூறுகின்றார். அது மிகச் சரியானது. ஏனெனில் அவர்கள் மத்திய அமைச்சின் கீழ் பணியாற்றுபவர்கள். மாகாண ஆளுநருக்கு அவர்களது பணி விவரங்கள் அறிவிக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை.

★ அப்படி இருக்கும்போது, தனக்குத் தெரியாத ஒரு விடயத்தை வைத்து ஆளுநர் 'உதயன்' பத்திரிகைக்கு எதிரான வெறுப்பூட்டும் பரப்புரையை முன்னெடுத்திருக்கிறார்.

★ போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அரசு காணிகளைச் சுவீகரிக்கிறது என்று கூறுவதன் மூலம் இனங்கள் இடையே முரண்பாட்டைத் தோற்றுவிக்க 'உதயன்' முயற்சிக்கிறது என்று ஆளுநர் தெரிவித்திருக்கிறார். அரசு காணிகளைச் சுவீகரிக்கிறது என்று கூறுவதே இன முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் என்றால், போரால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் காணிகளைச் சுவீகரிக்க அரசு விடுத்துள்ள உத்தியோகபூர்வ அறிவிப்புக்கள் இன முரண்பாட்டை ஏற்படுத்துவதற்காக அரசால் செய்யப்பட்டவை என்றுதானா ஆளுநர் கருதுகின்றார்?


## கண்ணீர் அஞ்சலி



### சரவணமுத்து பரம்சோதி

(வெங்கடேஸ்வரா)

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஆவரங்கால், புத்தூர். (38347) (45.6.3) மணி ஸ்ரோர்ஸ்



## மறைந்தும் மறையாத சரவணமுத்து பரம்சோதி அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்



அம்மாவை இழந்த கையோடு அருமை அப்பாவையும் இழந்து ஆறாத் துயரில் மூழ்கியிருக்கும் அன்பு நெஞ்சங்களுக்கு எமது அனுதாப வார்த்தைகள் கிஞ்சித்தும் ஆறுதல் தரமாட்டா. இருப்பினும் அவர்கள் தொட்டுவிட்ட பணிகளைத் தொடர்வதற்கு உங்களை இப்பாரினில் விட்டுச் சென்றுள்ளார்கள் என்பதை நினைத்து சற்றே ஆறுதல் அடைவோமாக.

**DIAHSRI DISTRIBUTORS**
**220, Stanley Road, Jaffna.**
(38371)(3.6.7.11)



## மரண அறிவித்தல்

### செல்லத்துரை வைத்திலிங்கம்

(நீதிமன்ற லிகிதர்)



புன்னாலைக்கட்டுவன் வடக்கு, மாப்பாணர் வளவைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பழை, வீமன் காமத்தை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமான செல்லத்துரை வைத்திலிங்கம் நேற்று முன்தினம் (14.06.2013) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா -அருமைமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராசமணியின் அன்புக் கணவரும், சுசீலா, நளாயினி, நிர்மலா, ரஞ்சனி, கெங்காதரன், ரவிதரன், நந்தினி, கிரிதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஸ்ணராஜ், பாலன், மதனரூபன், அனுஷியா ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான சேனாதிராஜா, சிவஞானம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற மனோன்மணி, மாசிலாமணி, சிவஞானம் மற்றும் பத்மாவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.06.2013) திங்கட்கிழமை 37ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: கிரிதரன் (மகன்)
முகாமையாளர்
Causeway Paints

வெள்ளவத்தை,
கொழும்பு. (38415) (10,7)



## மரண அறிவித்தல்

### L.S.ஜெயநாதன்

(நாதஸ்வர மேதை, நாதஸ்வர சக்கரவர்த்தி, நாதஸ்வர இசைத் தென்றல்)



உடுப்பிட்டியைச் சேர்ந்த நாதஸ்வர மேதை L.S ஜெயநாதன் 14.06.2013 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று(16.06.2013) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வல்லை முள்ளி இந்து மயானத்துக்குஎடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கண்ணம்மாள் (மனைவி),
சண்முகவடிவேல் அன்னலட்சுமி
குடும்பத்தினர்.

உடுப்பிட்டி. (C/9855)(5.6.7)



## கண்ணீர் அஞ்சலி



### சரவணமுத்து பரம்சோதி

யாழ் வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ் உரிமையாளர் சரவணமுத்து பரம்சோதி அவர்களின் திடீர் மறைவு அறிந்து அதிர்ச்சியில் உறைந்தோம். அன்னாரின் மறைவால் துயருற்று இருக்கும் குடும்பத்தவர், நண்பர்கள் அனைவருக்கும் எமது இரங்கலைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை யாசிக்கின்றோம்.

**இ.ச.பே. நாகரத்தினம் சக நிறுவனம்**
**52,54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
(36358) (45.3.6)



## கண்ணீர் அஞ்சலி

### சரவணமுத்து பரம்சோதி

(உரிமையாளர்-
வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ்,
யாழ்ப்பாணம்.)



அன்பின் திருவுருவே
பாசத்தின் பிறப்பிடமே
வணிகத்தில் உயர்ந்து
வையகம் போற்ற வாழ்ந்தீரே

கண்ணிலே நீர்கலங்கி நிற்கின்றோம்
காணவில்லை உம் திரு முகத்தை
மீளாத்துயில் கொண்டு- எம்மை
ஆறாத் துயரில் ஆழ்த்திச் சென்றீரோ

உம் பிரிவால் வாடும் உறவுகளோடு
உணர்வால் கலங்கி நிற்கின்றோம்
உமது ஆத்ம சாந்திக்காய்
தில்லைக் கூத்தன் திருப்பாதம் பணிகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**இ.ச.பேரம்பலம்**
**இல.50, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
(C/9853)(5.3.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களுக்கு பிரச்சினையா ஐ.தே.கவுக்கு அறிவியுங்கள்

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கண்டி, ஜூன் 16

முஸ்லிம்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை ஐக்கிய தேசியக் கட்சிக்கு அறிவியுங்கள். அவர்களுக்குக் குரல் கொடுக்க நாம் தயாராக உள்ளோம் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ரணில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் அனைவருக்கும் தமது சமய கலாசார மரபுகளைப் பேணும் உரிமை உள்ளது. இன்று முஸ்லிம்கள் பல பிரச்சினைகளுக்கு உள்ளாகி வருகின்றனர்.

அவர்களுக்காகக் குரல் கொடுக்கும் அரசியல்வாதிகளைக் காணமுடிவதில்லை. முஸ்லிம்களுக்கான பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் நாம் நாடாளுமன்றத்திலும் வெளியிலும் குரல் கொடுத்து வருகிறோம்.

ஐக்கிய தேசியக் கட்சி உருவாக்கியுள்ள புதிய யாப்பில் நாட்டு மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கேற்ற வரைவுகளை உருவாக்கியுள்ளோம். பொலிஸாரும் இன்று அரசியலுக்கு அடிமையாகி விட்டனர். அவர்களால் நீதியாகச் செயற்பட முடியவில்லை–என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் முஸ்லிம் உலமாக்கள், பள்ளிவாசல் நிர்வாக சபையினர் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ரி)

# சட்டவிரோத மின்சாரம் பெற்ற 10 பேர் சிக்கினர்


வலி.தென் மேற்கு, ஜூன் 16

மானிப்பாய் பொலிஸ் பிரிவில் சட்ட விரோதமான முறையில் மின்சாரத்தைப் பயன்படுத்திய 10 பேர் மின்சாரசபை உத்தியோகத்தர்களிடம் வகையாக மாட்டிக் கொண்டனர். கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்ட இவர்கள் மீது மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

திருட்டுத்தனமான முறையில் மின்சாரம் பாவிப்பவர்களைக் கண்டுபிடிப்பதற்காக கொழும்பிலிருந்து வந்த மின்சார சபை உத்தியோகத்தர்கள், மானிப்பாய் பொலிஸாருடன் இணைந்து மானிப்பாய், சுதுமலை, ஆனைக்கோட்டை, நவாலி ஆகிய இடங்களில் சோதனை நடத்திய போது இவர்களிடம் 10 பேர் கையும் மெய்யுமாக அகப்பட்டுக் கொண்டனர்.

இவர்கள் மீது மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (த-115)

கண்ணீர் அஞ்சலி



சரவணமுத்து பரம்சோதி

[உரிமையாளர் வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ்]

வண்ணை ஸ்ரீவீரமாகாளி அம்பாள் ஆலய தொண்டர் சபை நிர்வாகக்குழு உறுப்பினர். பரஞ்சோதி செந்தூரன் அவர்களின் அன்புத் தந்தையார் சரவணமுத்து பரஞ்சோதி அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற வண்ணை ஸ்ரீவீரமாகாளி அம்பாளை வேண்டி நிற்கின்றோம்.

வண்ணை ஸ்ரீவீரமாகாளி அம்பாள் ஆலய
தொண்டர் சபை.

c/9863

முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

# சிங்கள மக்கள் மத்தியில் சிந்தனைப் புரட்சி தேவை

டன் சேர்ந்து அவர்களால் முன்னெடுக்கும் பரப்புரையை எங்களால் சிந்தனைப் புரட்சி மூலம் இல்லாது செய்ய முடியும். அந்த நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது.

இவர்கள் கடந்தகால வரலாறுகளை மறந்து விட்டனர். இனவாதம் பேசிக் கடந்த காலங்களில் நடந்தது என்ன என்பதை வரலாறை மீள தட்டிப் பார்க்க வேண்டும். அரசியல்வாதிகளான ஜனாதிபதியும், பஸில் ராஜபக்ஷவுமே மௌனம் சாதிக்கும் நிலையில் கோத்தபாய மட்டும் ஏன் தொடர்ந்தும் இனவாதம் பேசிக்கொண்டிருக்கின்றார் ? இவையெல்லாம் நீண்ட காலத்துக்கு நிலைக்காது.' என்றும் மன்னார் ஆயர் குறிப்பிட்டார். (அவரது செவ்வியின் முழுவிவரம் சூரியகாந்தியின் 22 ஆம், 23 ஆம் பக்கங்களில்)

# கூட்டமைப்பு நேற்றிரவு புதுடில்லிக்கு

திராஜா, சுமந்திரன், சுரேஷ் பிரேமசந்திரன் ஆகியோர் இந்தக் குழுவில் புதுடில்லிக்குப் பயணமாகியுள்ளனர்.

புதுடில்லி செல்லும் இவர்கள் காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி,இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட முக்கிய அரச பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர் எனக் கூறப்பட்டது.

13வது அரசமைப்புத் திருத்தத்தைப் பலவீனப்படுத்தும் இலங்கை அரசின் முயற்சிகள் குறித்தே இந்தச் சந்திப்புகளில் முக்கியமாக கலந்துரையாடப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது. (த)


# இந்துமயானத்தையும் சுவீகரிப்பதற்கு முயற்சி

தருவதாக உறுதியளிக்கப்பட்டதாகவும், ஆனால் தாம் காலம் காலமாக பயன்படுத்தி வரும் மயானத்தை தொடர்ந்து பயன்படுத்த அனுமதிக்குமாறு கோரியும் அந்த மக்கள் தமது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளனர்.

ஒட்டுவெளி, கரம்பகம், மருதங்குளம், கல்யாணக்குளம், மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டம், எழுதுமட்டுவாழ் வடக்கு ஆகிய பிரிவுகளில் வாழும் ஆயிரத்துக்கு மேற்பட்ட இந்துக் குடும்பங்கள் இந்த மயானத்தையே பயன்படுத்தி வருகின்றனர்.

இதேவேளை, எழுதுமட்டுவாழ் தெற்கில் கடந்த வருடம் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட போதிலும் அங்குள்ள மயானப் பகுதி இன்னமும் கண்ணிவெடிகள் அகற்றப்படாததால் அந்த மக்களும் எழுதுமட்டுவாழ் வடக்கில் உள்ள இந்து மயானத்தையே பயன்படுத்தி வருகின்றனர் எனவும் சுட்டிக்காட்டி உள்ளனர். (ஐ)

கண்ணீர் அஞ்சலி



வருடாவருடம் எமது நிறுவனத்தின் புதிய வருடத்துக்கான கொடுக்கல் வாங்கல்களை ஆரம்பித்து வைக்கும் எமது மதிப்புக்குரிய

சரவணமுத்து பரம்சோதி

(வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ் - உரிமையாளர்)

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து மிகுந்த வேதனையடைவதுடன், அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருடன் இணைந்து துயரில் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஈழத்து சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி,

ஈஸ்வரன் ரேடர்ஸ்
ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேவிஸ்
ஈஸ்வரன் எக்ஸ்பிரஸ்
ஈஸ்வரன் ரேடிங்கம்பனி
ஈஸ்வரன் கூரியர் சேவை
யாழ்ப்பாணம் கொழும்பு

பணிப்பாளரும்,
பணியாளர்களும்.

(C9857)(10,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரிக்கெட் இறுதியாட்டம் இன்று

வடமராட்சி, ஜூன் 16
வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட 11 பேர் பங்குப்பற்றும் கிரிக்கெட் சுற்றுத் தொடரின் இறுதியாட்டம் இன்று காலை 9 மணிக்கு கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.
கழக மைதானத்தில் இடம் பெறும் இறுதியாட்டத்தில் அல்வாய் மைக்கல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
இன்றைய நிகழ்வுகளுக்குப் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், வல்வை நகரசபை உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (ற-8-422)

### ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ண இறுதியாட்டம்

# களமிறங்குகின்றன பரிஷ், ஜொனியன்ஸ்


மானிப்பாய் பரிஷ் ஜொனியன்ஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 16
ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம், ஈ.எஸ்.பேரம்பலம் நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 30 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட 'ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ண' கிரிக்கெட் தொடரின் இறுதியாட்டம் இன்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.
இன்று பி.ப. 1 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இறுதியாட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியும், மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணியும் மோதுகின்றன.
இன்றைய நிகழ்வுகளுக்குப் பிரதம விருந்தினராக தொழிலதிபர் ஈ.எஸ்.பி. நாகரெட்ணம் கலந்துகொள்ளவுள்ளார்.
கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக பல்வேறு மைதானங்களில் இடம்பெற்று வந்த கிரிக்கெட் தொடரில் 10க்கும் மேற்பட்ட கழகங்கள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-23)

## ஆட்டங்களின் விவரங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 16
யாழ்.உதைபந்தாட்ட லீக், அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில், நாளை திங்கட்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம்:
பி.ப. 4 மணி
மயிலங்காடு ஞானமுருகன் வி.க. எதிர் ஊரெழு றோயல் வி.க.
பி.ப. 5 மணி
பாசையூர் சென்.அன்ரனிஸ் வி.க. எதிர் கொக்குவில் பொற்பதி வி.க.(ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜூன் 16
யாழ். உதைபந்தாட்ட லீக் நடத்தும் மகிந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில், நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம்:
பி.ப. 3.45 மணி
மயிலங்காடு ஞானமுருகன் வி.க. எதிர் குருநகர் பாடும் மீன் வி.க.
பி.ப. 4.45 மணி
குருநகர் பாடும் மீன் வி.க. (மஞ்சள்) எதிர் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம். (ற-23)

### 'கிங் ஒவ் ஜப்னா' உதைபந்துத் தொடர்

## அரையிறுதிக்கு தகுதியான அணிகளின் விவரங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 16
கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'கிங் ஒவ் ஜப்னா' உதைபந்தாட்ட சுற்றுத் தொடரின் அரையிறுதி ஆட்டங்களுக்கு ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம், ஞானமுருகன் விளையாட்டுக்கழகம், உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக் கழகம், வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன தகுதி பெற்றுள்ளன.
தொடரின் அரையிறுதியாட்டங்கள் எதிர்வரும் 29 ஆம் திகதி கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெறவுள்ளன. மறுநாள் இறுதியாட்டம் மின்னொளியில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-23-422)

## வலைப்பந்தாட்டப் போட்டி இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 15
நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடந்தப்படும் வலைப்பந்தாட்டச் சுற்றுத் தொடர் நெடியகாடு இளைஞர் கழக மைதானத்தில் இன்று காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.
தொடரில் பங்குகொள்ள விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் போட்டி நடை பெறும் மைதானத்திற்கு சமுகம் தந்து போட்டியில் பங்குகொள்ள முடியும் என்று போட்டி ஏற்பாட்டளர்கள் தெரிவித்துள்ளனர். (ற-23)

### நெடியகாடு இளைஞர் வி.க. உதைபந்து தொடர்

## இதுவரை நடைபெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம்

யாழ்ப்பாணம், ஜூன் 16
கழகத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள்:
முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங்லயன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
அதில் இரு அணிகளும் ஆட்ட நேர முடிவு வரை கோல் எதனையும் பெறாததால், வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதற்காக 5 சமனிலை தவிர்ப்பு வழங்கப்பட்டன. அதில் யங்லயன்ஸ் விளையாட்டுக் கழகம் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
அடுத்து நடைபெற்ற ஆட்டத்தில் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அல்வாய் பாரதி விளையாட்டுக் கழக அணி மோதியது.
ஆட்டநேரமுடிவில் இரு அணிகளும் தலா மூன்று கோல்களைப் பெற்றதால், வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக 5 சமனிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. அதில் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ற-23)

## இன்று மோதவுள்ள அணிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 16
கழகத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில், நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு;
பி.ப. 3.30 மணி
யங்கம்பன்ஸ் வி.க. எதிர் சென்.பீற்றர்ஸ் வி.க.
பி.ப. 4.30
வல்வை வி.க. எதிர் விண்மீன் வி.க.
(ற-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 16
மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் நடத்தும் பாலகிருஷ்ணன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண '20/20' கிரிக்கெட் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகள்:
காலை 8 மணி
யாழ்.சென்றல் வி.க. எதிர் கிறாஸ்கொப்பஸ் வி.க.

★★★

யாழ்ப்பாணம், ஜூன் 16
வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 100 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகள்:
பி.ப. 3.30 மணி
பூமகள் வி.க. எதிர் வவுனியா 786 வி.க.
பி.ப. 4.45 மணி
இளவாலை ஹென்றிஸ் வி.க. எதிர் விண்மீன் வி.க. 'பி' (ற-23)



## கிளார்க் ஆடலாம்



சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரில் இலங்கை அணிக்கெதிராக நடைபெறவுள்ள ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க் பங்கேற்கக்கூடும் என்று நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
உபாதை காரணமாக சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரில் ஆஸ்திரேலிய அணி பங்கேற்ற முதலிரண்டு போட்டிகளிலும் அவர் விளையாடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.
அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேற வேண்டுமாயின் எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்தப் போட்டியில் வெற்றிபெற வேண்டிய கட்டாயத்தில இரண்டு அணிகளும் களமிறங்கவுள்ளன.

# சூதாட்டக்காரப் பெண்ணுடன் இரவைக் கழித்த இந்திய வீரர்

## சாட்சியம் சொல்கிறார் சுமதிபால

2010ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற கிரிக்கெட் தொடரொன்றின் போது சந்தேகத்திற்கிடமான முறையில் பெண்ணொருவர் காணப்பட்டார் என்பதை உறுதிப்படுத்துவதாக இலங்கைக் கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.
இச்சம்பவம் தொடர்பாக இந்திரஜித் சிங் பிந்த்ரா தெரிவித்த கருத்துக்களை ஆமோதிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.
இந்திய அணியின் முக்கியமான வீரர்களில் ஒருவரும், சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சார்பாக விளையாடி வருபவருமான ஒருவர் 2010 ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற முக்கோண ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் போது சூதாடிகளுடன் தொடர்புகளைக் கொண்ட பெண்ணுடன் இரவொன்றைக் கழித்ததாக பஞ்சாப் கிரிக்கெட் சபைத் தலைவர் இந்திரஜித் சிங் பிந்த்ரா அண்மையில் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தார்.
குறித்த சம்பவத்தை இந்தியக் கிரிக்கெட் சபையின் வேண்டுகோளுக்கு இணங்க, இலங்கைக் கிரிக்கெட் சபை மறைத்திருந்ததாகவும் அவர் தெரிவித்திருந்தார்.
இந்தச் சம்பவத்தை இலங்கைக் கிரிக்கெட் சபை முழுமையாக மறுத்திருந்ததோடு, இந்தியக் கிரிக்கெட் சபையும் மறுத்திருந்தது.
இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள திலங்க சுமதிபால, அவ்வாறான சம்பவமொன்று இடம்பெற்றது உண்மையானது எனவும், அந்த விடயம் இரு நாட்டுக் கிரிக்கெட் சபைகளாலும் மறைக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.



## டோனியை விஞ்சுகிறார் கோஹ்லி

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் டோனி யை விட விளம்பர நிறுவனங் கள் அதிகம் விரும்பும் கிரிக்கெட் வீரராக வீராட் கோஹ்லி உருவெடுத்துள்ளார்.
சூதாட்டப் பிரச்சினை ஒருபக்கம் இருந்தாலும், கிரிக்கெட் வீரர்களை வைத்து விளம்பரம் தேடும் விளம்பர நிறுவனங்களும் அதிகரித்த வண்ணம் தான் உள்ளது.
சமீபகாலமாக டோனி தான் விளம்பரதாரர்களால் அதிகம் விரும்பப்பட்ட பிரபலமாக இருந்தார். ஆனால் தற்போது அவரது இடத்தை நிரப்ப ஆரம்பித்துள்ளார் கோஹ்லி.
கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு கோஹ்லி இடம்பெற்ற தொலைக்காட்சி விளம்பரங்களின் எண்ணிக்கை 200 சதவிகிதம் அதிகரித்துள்ளது என்று கூறப்படுகிறது.(ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BIT Registration New Batch 2013/14

BIT

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் BIT பட்டதாரியாகும் வாய்ப்பு

for last 12 years... By R.Kumaran-B.Sc.

74, Sabapathy Lane, Jaffna - 0776577359

## மலேசியா நாட்டில் உடனடி வேலை வாய்ப்பு

தையல் துறையில் மற்றும் அழகுக்கலையில் நீங்கள் அனுபவம் பெற்றவரா? அப்படி என்றால் மலேசியா நாட்டில் உடன் வேலை வாய்ப்பு. அதி உயர் சம்பளம்.

* பேபிலர் 01 (பெண்) * பியூட்டிசியன் 01 (பெண்)

சிங்கப்பூர் நாட்டிலும் பெண்களுக்கான வேலை வாய்ப்பு உண்டு. ஞாயிறு பி.ப. 1.00 மணிக்கு பின்னர் தொடர்புகொள்ளவும். அல்லது பெயர், விவரங்கள் SMS செய்யவும்.

LANKA VOICE - 077-7929475 (35271) (10,6,7)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

French மொழி கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட வட மாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம்.மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.

புதிய வகுப்புகள் மிக விரைவில்...T.P.021.222.8093

61, Kachchery-Nallur Road, Jaffna

(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

## German Language Academy

★ஜேர்மன், சுவிஸ், டொச் மொழிகள் இலகுவான வழியில் பல வருடங்களாக பல மாணவர்களைச் சித்தியடையச் செய்த ஆசிரியர் S.கோணேஸ்வரன் அவர்களால் A/L பரீட்சைக்கு ஏற்றவாறு மிகச் சிறந்த முறையில் ஜேர்மன் மொழியைக் கற்றுக் கொள்ளலாம்.

★இங்கு கற்கும் மாணவர்களுக்கு எமது ஆசிரியர் அவர்களால் தயாரித்து வெளியிடப்பட்ட புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படும்.

21.06.2013 புதிய பிரிவுகள் ஆரம்பம்

German Language Academy
#23, Palaly Road, Jaffna.
(38225)(6,2,3) 0779707322

Techno World,
147,குடியிருப்பு, வவுனியா.
(வவுனியா போதனா வைத்தியசாலை அருகில்)

## FRENCH LANGUAGE CENTRE
CENTRE FOR FRENCH

## FRENCH CLASSES

France,Canada,Swiss,Belgium செல்வோர், ஆர்வமுள்ளோர் French கற்று International Certificates இனை பெற்றுக் கொள்ளலாம்...

ஆசிரியர் : Mr. V. Jegan (Teaching Training in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)

இது வரைக்கும் 710 க்கும் மேற்பட்டோர் French கற்றுள்ளனர்...

ஆரம்பம் : 22.06.13 Sat at 2pm.
No. 23, Palaly Road, ஆரியகுளம்.
(அப்பலோ Hospital க்கு அண்மையில்).

: 24.06.13 Mon at 11am.
No. 181, 1st Floor, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக)

0779 789 456

English, Deutsch, Italian, & Sinhala வகுப்புக்களும்...

# Study in UK

உங்கள் London செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்

நடைமுறைகள் மாறினாலும் எவ்வித மாற்றமும் இன்றி London செல்லுங்கள்

GCE (O/L) தகமை போதுமானது

நீங்கள் ஏன் EXPONET ஐ தெரிவுசெய்ய வேண்டும்

June / July Intake க்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

COLLEGES
- Yearly Payment £3500
- IELTS overall: 4.5 or B1

UNIVERSITIES
- Yearly Payment £ 3950 - £ 6450
- IELTS overall band: Minimum 5.5

0117 555511 /14/18
021 7538395 / 021 2227230

- 4 வருட visa உத்தரவாதம்
- இலவச IELTS மற்றும் City & Guilds வகுப்புக்கள்
- உங்கள் visa தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.



Karthiga



Usha Gowry

EXPONET

379 - 1/2 Galle Road, Colombo 06.
197, Arasady Road, Jaffna.

E-mail: nimal@expogroup.lk
Web: www.expogroup.lk

## Personal Class-கணினி

*10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.

* Ms office, Internet & E-mail, DTP, Web Design, Graphic Design, சிறுவர்களிற்கான கற்கைநெறி.

*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்

*குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எனது Laptop மூலமாக கற்பிக்கப்படும். ஆசிரியர்:KRC

TP:0779672038

## பணிநிலை வெற்றிடம்

Software Development மற்றும் பாதுகாப்பு கமரா (CCTV Camera) பொருத்தும் நிறுவனத்துக்குத் தகுதி வாய்ந்த பகுதி நேர மற்றும் முழுநேர சந்தைப்படுத்துனர் தேவை.

AJ SYSTEMS i (PVT)LTD. (38261) (6,2,3)
T.P.021 5676767, 0759237546

## VACANCY

யாழ். மண்ணில் புதிய கிளையை ஆரம்பிக்கும் Software Development Company க்கு கீழ்வரும் பணி நிலைகள் வேண்டப்படுகின்றன.

Developers :
PHP, Java, C#

Designers:
Photoshop, CorelDraw

Quality Assurer

Marketing Executive

குறிப்பிட்ட பணிநிலைகளுக்கு தகுதியுடையோர் சுயவிவரக் கோவையினை info@agoysoft.com என்ற மின்னஞ்சலுக்கு யூன் 21ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

தொடர்புகளுக்கு: 021 205 2393 (38332) (10,6,7)

# லயன்ஸ் கழக பதவியேற்பு

தென்மராட்சி, ஜூன் 16

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் 34 ஆவது நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்வும் கழகத்தின் நலனோம்புகள் வழங்கும் நிகழ்வும் இன்று ஞாயிறு மாலை 6 மணிக்கு சாவகச்சேரி தபால் நிலைய வீதியில் உள்ள லயன் கா.நவரத்தினத்தின் இல்லத்தில் நடைபெறும். (ஒ-9)

## ஓடுகள் விற்பனைக்கு

தரமான ஓடு வகைகள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:
072 230 0555

(சி/9845) (10,6,7)

## ABI BABY MART

MEGA OFFER

MEGA OFFER

June 30 வரை

சகல விதமான சிறார்களிற்கான ஆடைகள் விளையாட்டுப் பொருள்கள் கர்ப்பிணி பெண்களின் வைத்தியத் தேவைக்கான பொருள்கள் அனைத்தும் 10% -20% விலைக் கழிவு கொடுக்கப்படும்.

267, Brown Road, Jaffna. (கலட்டி சந்திக்கு அருகில்)

## "நீங்களும் சிறந்த முதலீட்டாளராகலாம்"

பங்குச்சந்தை முதலீட்டாளர்களுக்கான
2ஆம் நிலைப் பயிற்சிப்பட்டறை
(நிதிக் கூற்றுக்களின் பகுப்பாய்வு FSA).

எதிர்வரும் 22.06.2013 சனிக்கிழமை முதல் வாரஇறுதி நாள்களில்
(மாலை 3.00 - 6.00)

இடம்:- பங்குப்பரிவர்த்தனை கேட்போர்கூடத்தில்

பதிவுகளுக்கு :- 0777 822 014 & www.csc.lk

(C/9856) (10,6,7)



அனலைதீவு வடலூர்

## அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய
புனராவர்த்தன பிரதிஷ்டா அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ
## மஹா கும்பாபிஷேகப் பெருவிழா - 21.06.2013

அம்பிகை அடியார்களே!

திருவும் செல்வமும் சீரும் சிறப்பும் தன்னகத்தே கொண்டு இனிமை தரும் இசை ஓங்கி எழும் அலைகள் நிறைகடல் சூழ் வளம் சுரக்கும் அனலையம்பதி வடலூர் எனும் திவ்ய ஷேத்திரத்தில் துதிப்போர்க்குத் துன்பம் போக்கி இடர் களைந்து இன்பம் சுரந்தளிக்கும் அமுதக் கடலாகக் கோயில் கொண்டு மந்திர சிம்மாசனத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் அன்னை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாளுக்கும் இதர பரிவார மூர்த்திகளுக்கும், ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான விஜய வருடம் ஆனிமாதம் 07ஆம் நாள் (21.06.2013) வெள்ளிக்கிழமை பூர்வபக்ஷ திரயோதசித்திதியும், அனுஷ நட்சத்திரமும், சித்த யோகமும் குருவோரையும் கூடிய சுபமுகூர்த்த சுப தினத்தில் காலை 9.30 மணிமுதல் 10.30 மணிவரை உள்ள சிம்மலக்கினத்துடன் கூடிய சுப மூகூர்த்தத்தில் புனராவர்த்தன நவகுண்ட மஹாயாக பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் நடைபெற அம்பாளின் திருவருள் பாலித்துள்ளது.

### கிரியாகால நிகழ்வுகள்

★ ஆனிமாதம் 02ஆம் நாள் (16.06.2013) ஞாயிற்றுக்கிழமை:
பூர்வாங்க கிரியைகள் காலை 6 மணி முதல் ஆரம்பம்

★ ஆனிமாதம் 05ஆம் நாள் (19.06.2013) புதன்கிழமை:
மாலை 3 மணிமுதல் யாக ஆரம்பம்

★ ஆனிமாதம் 06ஆம் நாள் (20.06.2013) வியாழக்கிழமை:
காலை 9 மணிமுதல் மாலை 6 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும்.

★ ஆனிமாதம் 07ஆம் நாள் (21.06.2013) வெள்ளிக்கிழமை: மு.ப.10.30 மணிமுதல் சிம்ம லக்கின சுபமுகூர்த்த வேளையில் விநாயகர், ஸ்ரீஇராஜராஜேஸ்வரி முதல் தாரிகா சண்டேஸ்வரி வரையுள்ள பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் நிகழும்.

குறிப்பு: கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 12 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். உபயமாகச் செய்யவிரும்பும் அடியார்கள் ஆலய அறங்காவலர் சபையுடன் தொடர்பு கொள்ளவும். அம்பாளின் மஹா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற தங்களால் இயன்ற நிதி உதவிகளை வழங்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இக்காலங்களில் அடியார்கள் அனைவரும் ஆசார சீலர்களாக ஆலயத்துக்கு வருகை தந்து அபிஷேகத்துக்கு வேண்டிய பால், தயிர், இளநீர், நெய், தேன், பன்னீர், புஷ்பம், மாலைகள் என்பவற்றை வழங்கி அம்பாளின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்வீர்களாக.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

அனலையம்பதி. ஆலய பரிபாலன சபை.

(38208)(10,6,3)

# கிருபா லேணர்ஸ்

தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 4353
021 492 3200
0777225292.

யாழ் நகரின் முதல் தர அரச அனுமதி பெற்ற கனரக (AD) சாரதி பயிற்சி பாடசாலை

யாழ் நகரில் முதல் முறையாக "கிருபா லேணர்ஸ்" வழங்கும் இரவு நேர சாரதி பயிற்சி நெறி

1. கனரக (AD) வாகனப்பயிற்சி, அசோக் லேலண்ட் பஸ் மூலம் வழங்கப்படும்
2. பெண்களுக்கு நவீன காரில் சாரதி பயிற்சி வழங்கப்படும்
3. எழுத வாசிக்க தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்பு நடைபெறும்
4. தவணை முறைக் கட்டணம்
5. குறித்த காலப் பகுதியில் மிக விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுத் தரப்படும்

இன்று முதல் இரவு நேர பயிற்சி ஆரம்பம்

தொடர்புகொள்ள வேண்டிய தொ.பே.இல.
071 4546959

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம் 16 06 2013



20

தமிழர்களுக்கான தீர்வு விடயத்தில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவையோ பொதுபல சேனா போன்ற அமைப்புக்களையோ கணக்கிலெடுக்க வேண்டிய தேவை இல்லை. சிங்கள மக்களில் சிறந்த, முற்போக்குச் சிந்தனைகொண்ட ஏராளம் பேர் உள்ளனர். அவர்களிடம் பேசிப் புரிய வைத்துப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள முடியும்.



ஓர் அரசு தனது பின்தேவைக்காக மறைத்து வைக்கும் இரகசியத் தகவல் பத்திரிகைகளில் வெளி வந்துவிடும்போது அதிகாரிகள் மற்றும் ஆட்சியாளர்கள் அதிர்ச் சியும் ஆத்திரமும் கொள்வது இயற்கை. சில சமயம் செய்தியை வெளியிட்ட செய்தியாளன் மீது நடவடிக்கை எடுக்கவும் முனை வார்கள்.

18

# குருதி காய்ந்த வீதி

கடந்த 30 ஆண்டுகளில் மாறி மாறி குருதியையே குடித்துகாண்டிருந்த ஏ 9 வீதி தற்போது நிறம் மாறியிருக்கிறது. படிந்து கறையாய்க் காய்ந்துபோன குருதியின் மேலே 'கார்ப் பெற்' தார் பளபளக் கிறது. விடுதலைப் போராளிகளையும் இலங்கை இரா ணுவத்தையும் மாறி மாறிச் சுமந்த இந்த வீதி இப் போது விதம் வித மாக பொருள்களையும் மனிதர்களையும் சுமக்க ஆரம்பித்திருக் கிறது. உயிர் காக்கக்கூட வேகமாகப் போகமுடியாதிருந்த இந்த வீதியில் இப்போது வாகனங்கள் அதி வேகமாகப் பறக்கின்றன. காலத்தைப் போலவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயம் 16.06.2013 ஞாயிற்றுக்கிழமை

# '13' ஆல் அரசு பிளவுபடுமா?

■ அதிரன்







அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்குதவதற்காக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் இப்போது அரசுக்கே பெரும் ஆபத்தான கட்டத்தை ஏற்படுத்திவிட்டிருக்கின்றன. அரசுக்குள் இருப்போரே 13 ஆவது திருத்தச் சட்டம் ஒழிக்கப்படுவதற்கு எதிராக போர்க் கொடி தூக்கியுள்ளதால் அவர்களை அடக்க முடியாமல் திரிசங்கு நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார் ஜனாதிபதி.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வடக்கு மாகாணத் தேர்தலை நடத்துவதாக அறிவித்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அது குறித்து சர்வதேசத்துக்கும் இந்தியாவுக்கும் உறுதி மொழியையும் வழங்கியுள்ளார். செப்ரெம்பரில் வடக்குத் தேர்தலை நடத்தியே ஆக வேண்டும் என்ற கட்டாய நிலைக்கு மஹிந்த தலைமையிலான அரசு தள்ளப்பட்டிருக்கிறது. தமிழ் மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துமாறும் அவர்களுக்கான நிரந்தர தீர்வை வழங்குமாறும் சர்வதேச நாடுகளும் இந்தியாவும் இலங்கை அரசு மீது அழுத்தத்துக்கு மேல் அழுத்தம் கொடுத்து வருகின்றன.

## அரசு மீது அழுத்தம்

இலங்கைக்கு ராஜதந்திர ரீதியான பயணங்களை மேற்கொள்ளும் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதியைச் சந்தித்து உரையாடும்போதெல்லாம் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறும் வடக்கு மக்களின் கருத்து சுதந்திரத்தை வெளிப்படுத்த அங்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறும் இடித்துரைத்து வருகின்றனர். இவர்களுடான கலந்துரையாடலின் போதெல்லாம் ஜனாதிபதி மஹிந்த செப்ரெம்பரில் நிச்சயம் வடக்குத் தேர்தலை நடத்துவேன் என கூறி அனுப்பினார். ஜனாதிபதி அந்த உறுதி மொழியை செயல் வடிவில் காட்ட வேண்டிய தேவை அரசுக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஆயினும் வடக்கில் தேர்தலை நடத்தினால் அங்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பே நிச்சயம் வெற்றி பெறும் என்பதும் அரசுக்குத் தெரியும்.

## கூட்டமைப்பிடம் போய்விடும் வடக்கு

இலங்கையிலுள்ள ஏனைய மாகாண சபைகள் அரசின் கட்டுப்பாட்டில் இருக்க வடக்கு மாகாண சபையை மட்டும் கூட்டமைப்பின் கைகளில் கொடுப்பதா என்ற வைராக்கியம் ஜனாதிபதிக்கு இல்லாமல் இல்லை. வடக்கின் நிர்வாகம் கூட்டமைப்பின் கைகளில்போய் சேர்ந்தால் அவர்களும் (கூட்டமைப்பினர்) தமிழ் மக்களும் அரசியல், பொருளாதார ரீதியாக பெரும் பலம் அடைந்துவிடுவார்கள் என்ற அச்சமும் அவருக்கு உண்டு. அவ்வாறு வடக்கில் பலமான ஒரு தமிழர் ஆட்சி நிறுவப்பட்டால் அது மத்திய அரசுக்கு ஆபத்தானதாக அமையும் என்ற எண்ணமும் அரசுக்கு உண்டு. வடக்கு மாகாண சபையை கூட்டமைப்பு கைப்பற்றினால் அங்கு நடைபெறும் அனைத்து விடயங்களையும் தீர்மானிப்பவர்களாக கூட்டமைப்பினரே இருப்பார்கள். அவ்வாறு இருந்தால் அரச படைகளால் வடக்கில் சுதந்திரமாக எந்தவொரு செயற்பாட்டையும் செய்ய முடியாத நிலைமை ஏற்படும். அத்துடன் ஒரு குறிப்பிட்ட அளவு படையினரைத் தவிர ஏனைய படைகளை வடக்கிலிருந்து நகர்த்த வேண்டிய சூழ்நிலை ஏற்படும். அத்துடன் உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் பிடித்து வைத்திருக்கும் பெருமளவு தனியார் நிலங்களையும் கட்டடங்களையும் விடுவிக்க வேண்டிய நிலை ஏற்படும். இவ்வாறு சிவில் நிர்வாக விடயங்கள் அனைத்துக்கும் கூட்டமைப்பினரே பொறுப்பாக இருப்பார்களானால் அரசினால் இங்கு விரும்பியபடி எதையும் சுதந்திரமாக மேற்கொள்ள முடியாது. அத்துடன் வடக்கில் இப்போது தான் நினைத்ததையெல்லாம் செய்துவரும் வடமாகாண ஆளுநர் நினைத்தவாறு நடந்துகொள்ள முடியாத நிலை தோன்றும். மாகாண சபை கூட்டமைப்பிடம் விழுந்தால் இப்படி ஏகப்பட்ட சிக்கல்கள் அரசுக்கு ஏற்படும்.

வடக்கு மாகாண சபையை கூட்டமைப்பு கைப்பற்றினால் அங்கு நடைபெறும் அனைத்து விடயங்களையும் தீர்மானிப்பவர்களாக கூட்டமைப்பினரே இருப்பார்கள். அவ்வாறு இருந்தால் அரச படைகளால் வடக்கில் சுதந்திரமாக எந்தவொரு செயற்பாட்டையும் செய்ய முடியாத நிலைமை ஏற்படும்

## ஏமாற்ற முடியாது

ஆயினும் தேர்தலை நடத்தாமலும் இழுத்தடித்து சர்வதேசத்தை தொடர்ந்து ஏமாற்ற முடியாது என்பதும் மஹிந்தவுக்குத் தெரியும். இதனால் மாகாண சபை தேர்தலுக்கு முன்னர் மாகாண சபைகளிடமுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை பறித்தெடுப்பதற்கு அரசு திட்டமிட்டது. காணி பொலிஸ் அதிகாரங்களைப் பறித்துவிட்டால் மாகாண சபைகளிடம் உருப்படியான வேறெந்த அதிகாரங்களும் இல்லை. காணி, பொலிஸ் அதிகாரங்களே மாகாண சபைகளுக்கு முக்கிய அதிகாரங்களாக உள்ளன. வடக்கு மாகாண சபை கூட்டமைப்பிடம் பறிபோவதற்கு முன்னர் காணி பொலிஸ் அதிகாரங்களைப் பறித்துவிட்டால் அரசுக்கு தலையிடி இல்லை என எண்ணிய மஹிந்த அதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். அரசின் இந்த முயற்சி இப்போது அரசுக்கே பெரும் தலையிடியை ஏற்படுத்தி விட்டிருக்கிறது. அரசுக்குள் இருப்பவர்களில் ஒரு சாரார் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குமாறு கோஷமிடுகின்றனர். மற்றொரு சாரார் அதனை நீக்க வேண்டாம், உடனடியாக நடைமுறைப்படுத்துங்கள் என்று அரசுக்கு அழுத்தம் கொடுக்கின்றனர். அரசுக்குள்ளேயே இப்படி இரண்டு பிரிவுகளாக நின்றுகொண்டு 13 ஆவது திருத்தச் சட்டத்துக்காக மோதத் தயாராகிவிட்டனர். அமைச்சர்களான விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க, கெஹெலிய ரம்புக்வெல, நிமால் ஸ்ரீபால டி சில்வா, மஹிந்தானந்த அழுத்கமகே ஆகியோர் 13 ஆவது திருத்தத்தை நீக்குமாறு கோஷமிடுகின்றனர். மறுபக்கத்தில் அமைச்சர்களான வாசுதேவநாணயக்கார, டியூ குணசேகர, ராஜித சேனாரத்ன, ஜி.எஸ்.பீரிஸ், திஸ்ஸ விதாரண ஆகியோர் 13 ஆவது திருத்தத்தை நீக்கக் கூடாது என்பதில் விடாப்பிடியாக உள்ளனர். அரச தரப்பினருக்கு இடையேயான இந்த மோதல் கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் உச்சக்கட்டத்தை அடைந்தது.

## இரண்டுபட்ட அமைச்சரவை

13 ஆவது திருத்தத்தில் மேலும் திருத்தங்களைக் கொண்டு வருவது குறித்து ஆராய்வதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அமைப்பது என்றும், 19 ஆவது திருத்த சட்டவரைவை 18 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது என்றும் கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி கூறினார். அவர் இதனைக் கூறிய அடுத்த நிமிடமே அமைச்சரவை இரண்டு பட்டது. அங்கு பெரும் கூச்சலும் குழப்பமும் பரப்பும் ஏற்பட்டது. ஜனாதிபதியின் அறிவிப்புக்கு அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையிலானோர் பெரும் வரவேற்புத் தெரிவித்தனர். அதற்கு எதிர்மாறாக அமைச்சர் வாசுதேவ தலைமையிலானோர் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். 13 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாகவும் எதிராகவும் அங்கு வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. அமைச்சரவைக் கூட்டத்தில் சூடு பறந்தது. வார்த்தைகளால் மோதிக் கொண்டனர் அமைச்சர்கள். நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையிலேயே இவ்வாறு மோதல்கள் இடம்பெறுவது வழக்கம். ஆயினும் அதற்கு மாறாக அமைச்சரவைக் கூட்டத்தில் கடும் சொற்போர் வெடித்தது. வீரவன்சவோ 13 இற்கு எதிராக கருத்துக்களை முன்வைத்துக் கொண்டிருந்தார். மறுமுனையில் அமைச்சர்களான வாசுதேவ, டியூ குணசேகர, திஸ்ஸ விதாரண, ராஜித சேனாரத்ன ஆகியோர் வீரவன்சவின் கருத்துக்களுக்கு பதிலடி கொடுத்தனர். இனவாதத்தைத் தூண்டும் கருத்துக்களையே வீரவன்ச முன்வைக்கிறார் என்று கூறிய அமைச்சர்கள் வீரவன்சவின் கடந்த கால வண்டவாளங்களையும் அமைச்சரவைக் கூட்டத்தில் அவிழ்த்துவிட்டனர். இதனால் கோபத்தில் உச்ச கட்டத்துக்கே போய்விட்டார் விமல். அவரது வாயிலிருந்து வரும் வார்த்தைகள் எல்லாம் கடும் தொனியிலானவையாக இருந்தன. அமைச்சர்கள் இவ்வாறு மோதிக் கொள்ள அதனை மௌனமாக இருந்து பார்த்துக் கொண்டிருந்தார் ஜனாதிபதி. மொத்தத்தில் ஒரு போர்க்களம் போல அன்றைய அமைச்சரவைக் கூட்டம் நடந்து முடிந்தது. ஆயினும் 13 ஆவது திருத்தத்துக்கு எதிராகவும் ஆதரவாகவும் சலசலப்புகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

## ராஜித விடாப்பிடி

13 ஆவது திருத்தச் சட்டத்தில் கைவைத்தால் சர்வதேசத்தின் மத்தியில் நாடு நாசமாகிவிடும். நாட்டின் எதிர்காலமே இல்லாமல் போய்விடும். 13 இற்காக அன்று உயிர்த் தியாகம் செய்யவும் தயாராக இருந்த நான், இன்று எனது அமைச்சுப் பதவியையும் துறக்கத் தயாராக உள்ளேன். பதவி எனக்குப் பெரிதல்ல. 13 இன் வெற்றி தான் நாட்டின் வெற்றி. இவ்வாறு 13 ஒழிப்புக்கு எதிராகத் துணிந்து கருத்து வெளியிட்டிருக்கிறார் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன. 13 திருத்தம் ஒழிக்கப்படக் கூடாது என்பதில் தான் உறுதியுடன் உள்ளார் என்றும் அதனைப் பாதுகாக்க தொடர்ந்து போராடுவேன் என்றும் அவர் பகிரங்கமாக கூறியிருக்கிறார்.

இவ்வாறு 13 ஆவது திருத்தத்தை ஒழிப்பதற்கு அரசு எடுத்த நடவடிக்கை இப்போது அந்த அரசையே ஆபத்தான கட்டத்துக்குள் தள்ளிவிட்டிருக்கிறது. அரச தரப்பினரே ஆதரவாகவும் எதிராகவும் உள்ளமையால் இதனை எவ்வாறு கையாள்வது என்ற இக்கட்டு நிலை ஜனாதிபதி மஹிந்தவுக்கு ஏற்பட்டிருக்கிறது. 13 ஆவது திருத்தம் நீக்கப்படுவதால் அரசுக்குள் ஏற்படப் போகும் மாற்றம் என்ன என்பது எதிர்வரும் 18 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தெரியவரும். அன்று 19 ஆவது திருத்த சட்ட வரைவை சமர்ப்பிக்கவுள்ள அரசு 13 ஆவது திருத்தத்தில் மேலும் திருத்தம் மேற்கொள்ள தெரிவுக்குழுவையும் அமைப்பதற்கு எண்ணியுள்ளது. அமைச்சரவைக் கூட்டம் போல அன்றைய தினம் நாடாளுமன்றத்திலும் மோதல் வெடிக்க வாய்ப்புள்ளது. அதனை ஜனாதிபதி எப்படிச் சமாளிக்கப் போகிறார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித குலமும் தமிழ்த் தேசியமும்

## ஏகாதிபத்திய அரசுகளும் ஆக்கிரமிப்பு நாடுகளும்

04

பழநெடுமாறன் நீண்ட காலமாகத் தமிழ்த் தேசியத்துக்காகக் குரல் கொடுப்பவர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தீவிர ஆதரவாளர். விடுதலைப் புலிகள் இயக்கம் வன்னியில் போராட்டங்களை நடத்தியபோது தமிழகத்திலிருந்து வந்து தலைவர் பிரபாகரனை நேரில் சந்தித்துச் சென்றவர். இன்று வரைக்கும் ஈழத் தமிழர்களின் விடுதலைக்காக தமிழகத்தில் இருந்தபடி தளர்வற்று தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருபவர். தமிழ்த் தேசியத்தை மனித குல வரலாற்றுடன் தொடர்புபடுத்தி அவர் எழுதும் புதிய தொடர் இது. பல நூல்களை, ஆய்வுக் கட்டுரைகளைப் படித்த பின்னர் அவர் இந்தத் தொடரை எழுதுகிறார். "தமிழினம் ஒரு தொல்லினம் மட்டுமல்ல செழுமையான பண்பாட்டுப் பரப்பை உருவாக்கி அதன் மீது ஒரு சீரிய நாகரிகத்தையும் உருவாக்கி உலகனைத்தும் தனது இருப்பை நிலை நிறுத்தி இருக்கும் ஓர் இனம் என்பதால் தமிழ்த் தேசியத்தை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். இன்று தேசிய இனங்களின் வாழ்வும் சுயநிர்ணய உரிமையும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றன. இந்த நிலையில் தமிழினத்தின் தொன்மை குறித்தும், அது தேசிய இனமாக இயங்கி வந்திருப்பது குறித்தும் இந்தத் தொடர் விளக்குகிறது.




### தேசிய இன உணர்வு

தற்போதைய தேசிய இன உணர்வு என்பது நீண்ட காலச் சிந்தனை மற்றும் வளர்ச்சியின் அடிப்படையில் அமைந்ததாகும். மத்திய காலத்தில் இருந்து 18ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலம் வரை ஏற்பட்ட நிகழ்ச்சிகள், அனுபவங்கள் ஆகியவற்றின் விளைவாகத் தேசிய இன அரசு என்ற தத்துவம் பிறந்தது. வரையறுக்கப்பட்ட பகுதிகளில் ஆட்சி செய்ய மன்னர்கள் தோன்றினார்கள். வணிகப் புரட்சியின் விளைவாக மத்தியதர வர்க்கம் பிறந்தது. இதன் விளைவாகத் தேசிய கலாசாரம் தோன்றியது. தேசிய இன உணர்வுக்கு மக்களின் பேராதரவு கிடைத்தது. மன்னர் ஆட்சி ஆதிக்கத்துக்கு எதிராக மத்தியதர வர்க்கம் கிளர்ந்து எழுந்ததன் விளைவாகவே அமெரிக்க, பிரஞ்சுப் புரட்சிகள் வெடித்தன.

மன்னர் முறையும் பிரபுத்துவமும் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு ஜனநாயக தத்துவம் வெற்றி பெற்றது. நெப்போலியன் நடத்திய ஆக்கிரமிப்புப் போர்களின் விளைவாகப் பாதிக்கப்பட்ட மக்கள் அரசியல் சுதந்திரத்தையும் தங்களின் தேசிய எல்லைகள் மதிக்கப்பட வேண்டும் என்ற உணர்வையும் பெற்றனர்.

ஜேர்மனியிலும் மற்றும் பிற நாடுகளிலும் தேசிய இன உணர்வு வளரத் தொடங்கியது. தேசிய இன உணர்வு என்பது வல்லரசுகளோடு அடங்கிவிடவில்லை. தவிர, தேசிய இன உணர்வின் ஆதரவோடு உருவான தொழில் புரட்சியின் வெற்றி என்பது ஏகாதிபத்திய உணர்வுக்கு மறு வாழ்வு தந்தது. பின்தங்கிய ஆசிய, ஆபிரிக்கா நாடுகளில் குவிந்து கிடந்த வளங்களும் சந்தைகளும் ஐரோப்பிய நாடுகளைக் கவர்ந்தன. தேசிய இன உணர்வுடன் தங்கள் நாடுகளின் மன்னர் ஆட்சியையும் நிலப்பிரபுத்துவத்தையும் தூக்கி ஏறிந்த ஐரோப்பிய நாடுகள் தங்களின் தொழிற்சாலைகளுக்குத் தேவையான கச்சாப் பொருள்களை ஈட்டுவதற்காகவும், தங்களின் உற்பத்திப் பொருள்களுக்குச் சந்தைகளைத் தேடுவதற்காகவும் ஆசிய-ஆப்பிரிக்க நாடுகளைக் கைப்பற்றத் தொடங்கின.

> வணிகப் புரட்சியின் விளைவாக மத்தியதர வர்க்கம் பிறந்தது. இதன் விளைவாகத் தேசியக் கலாசாரம் தோன்றியது. தேசிய இன உணர்வுக்கு மக்களின் பேராதரவு கிடைத்தது.







### இரு புரட்சிகள்

18 ஆம் நூற்றாண்டில் உருவான தொழில் புரட்சியும் பிரஞ்சுப் புரட்சியும் புதிய மாற்றங்களுக்கு வித்திட்டன. இந்த இரு பெரும் நிகழ்ச்சிகள் மனித குலத்தின் மீது ஏற்படுத்திய தாக்கத்தைப் போல வேறு எந்த நிகழ்ச்சியும் ஏற்படுத்தவில்லை என்பது வரலாற்று ரீதியான உண்மையாகும். இந்த இரு நிகழ்ச்சிகளும் திடீரென்று நிகழ்ந்துவிடவில்லை. நீண்டகாலமாகத் தொடர்ந்து நடைபெற்று வந்த மாற்றங்களின் முடிவாகவே இந்த இரு புரட்சிகளும் ஏற்பட்டன.

### சரிந்த ஐரோப்பியப் பேரரசுகள்

1871 ஆம் ஆண்டு வரை நவீன ஜேர்மனி உருவாக்கப்படவில்லை. பிரஷ்யா, பவேரியா, உர்ட்டம்பர்க், பேடன் எனப் பல பகுதிகளாக ஜேர்மனி பிளவுபட்டுக் கிடந்தது. ஒவ்வொரு பகுதியும் தனி அரசர்களால் ஆளப்பட்டு வந்தது.

கி.பி. 1871 ஆம் ஆண்டில் பிஸ்மார்க் எனும் தலைமை அமைச்சர் சகல பகுதிகளையும் ஒருங்கிணைத்து ஜேர்மனியக் கூட்டாட்சியை ஏற்படுத்தினார். பிரஷ்யாவின் மன்னர் இதன் சக்கரவர்த்தியாகப் பதவி ஏற்றார். பண்டைய உரோமப் பேரரசின் வாரிசாக ஜேர்மனியக் கூட்டாட்சியை மக்கள் கருதினார்கள். முதலாம் உலகப் போரில் தோல்வியடைந்தவுடன் ஜேர்மனிய சக்கரவர்த்தி பதவி விலகினார். ஜேர்மனி குடியரசாக்கப்பட்டது. 1933ஆம் ஆண்டு நாஜி கட்சியின் தலைவரான ஹிட்லர் பிரதமராகப் பதவி ஏற்றார். 1934 ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவரான ஹிண்டன்பாக் இறந்த போது அவர் பதவியையும் ஹிட்லரே கைப்பற்றிக் கொண்டார்.

ஐரோப்பா முழுவதையும் ஆக்கிரமித்து ஜேர்மனியின் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவர வேண்டுமென ஹிட்லர் திட்டமிட்டார். சார்லாண்டு, ரெயின்லாண்டு, ஆஸ்திரியா, செக்கோஸ்லோவாக்கியா ஆகிய பகுதிகள் ஜேர்மனியைச் சேர்ந்தவை எனக் கூறி அவற்றைக் கைப்பற்றி தனது நாட்டுடன் இணைத்துக் கொண்டார்.

சோவியத் நாட்டுடன் உடன்பாடு செய்து கொண்டு போலந்தை ஜேர்மனி ஆக்கிரமித்தது. பிரிட்டனுடன் மூனிச் உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது. ஆனால் உடன்பாடுகளையும் மீறி ஐரோப்பாவில் உள்ள அனைத்து நாடுகளையும் ஹிட்லர் கைப்பற்றினார்.

இறுதியாக சோவியத் நாட்டின் மீது படையெடுத்த போது நெப்போலியனுக்கு ஏற்பட்ட கதி ஹிட்லருக்கும் ஏற்பட்டது.

உலகத்துக்குக் குறிப்பாக ஐரோப்பாவுக்குப் பேரழிவை அளித்த இரண்டம் உலகப் போரில் ஜேர்மனி படுதோல்வியடைந்து 1945 ஆம் ஆண்டு மே 8 ஆம் திகதி சரணாகதி உடன்பாட்டில் கையெழுத்திட்டது.

ஐரோப்பாவில் வாழ்ந்த பல்வேறு தேசிய இனங்களையும் ஒன்றாக்கி ஒரே ஐரோப்பிய வல்லரசாக உருவாக்க முதலில் நெப்போலியனும் அதற்குப் பிறகு ஹிட்லரும் செய்த முயற்சிகள் படுதோல்வியடைந்தன. ஐரோப்பாவில் உள்ள பல்வேறு தேசிய இனங்களும் அவை சிறியவையாக இருந்தாலும், பெரியவையாக இருந்தாலும், தங்களின் தனித்தன்மையையும், சுதந்திரத்தையும் இழப்பதற்குத் தயாராக இல்லை, என்ற வரலாற்றுப் பூர்வமான உண்மை நிலை நாட்டப்பட்டது.

இரண்டாம் உலகப் போரின் முடிவில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளைச் சோவியத் செஞ்சேனை கைப்பற்றியது. இந்த நாடுகளில் கம்யூனிச ஆட்சிகளை நிறுவித் தனது கட்டுப்பாட்டுக்குள் ஸ்டாலின் கொண்டு வந்தார். 1948 ஆம் ஆண்டில் யூகோஸ்லாவியாவின் அதிபர் டிட்டோ, மாஸ்கோவின் கட்டுக் கோப்பில் இருந்து விடுபட்டுச் சுதந்திரமாகச் செயற்படத் தொடங்கினார்.

1989 முதல் 1999க்குள் போலந்து, செக்கோஸ்லோவாக்கியா, ஆஸ்திரியா, யூகோஸ்லாவியா, பல்கோரியா, அல்பேனியா, ஹங்கேரி ஆகிய நாடுகள் கம்யூனிச ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டுச் சுதந்திர நாடுகள் ஆயின.

ஸ்டாலின் உருவாக்கிய கிழக்கு ஐரோப்பியப் பேரரசும் சரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உலா 16.06.2013 ஞாயிற்றுக்கிழமை



# குருதி காய்ந்த வீதி

■ ஜெரா



இந்தப் புதிய பயணத்துக்காக பொருதி, குருதிகொட்டி உயிரிழந்தவர்கள் இந்த நாட்டு மக்களே. தமிழ், சிங்கள மக்கள் தமக்குள் நடத்திய போரில் ஏ9 தலைமுழுகிக் காய்ந்திருக்கின்றது.

பளபளத்துக்கிடக்கிறது அந்தச் சாலை. கறுப்பின் பேரழகை அதன் நீள்வளைவுகளில்தான் அனுபவிக்க முடிகின்றது. எந்தப் பேரழகுக்குள்ளும் அடர்ந்திருக்கும் ஆபத்து இதற்குள்ளும் கொப்பளித்தப்படியே இருக்கின்றது. முக்கால கட்டங்களையும் கடந்து வந்த சாலையின் ஒவ்வொரு இடுக்கிலும் ஆபத்தும், அரசியல் அபத்தமும், சாவுகளும், காயங்களும், இரத்தமும் கலந்து பூசி மெழுகப்பட்டிருக்கின்றன. அவை இனி வெளித் தெறியாதபடி கிரவல், சிமெந்து, இரும்பு, சல்லிக் கல்லு, பாறை, தார், காபெட் என்பவற்றால் இறுக்கப்பட்டிருக்கின்றன.

அதற்கடியில், அதற்காக மரித்தப் போன துயரங்கள் ஈழப்போராட்டம் போன்ற ஒரு பெருங்குமுறலைச் செய்தாலும் உடைத்துக் கொண்டு மேல் வர முடியாது. சீனாவின் தயாரிப்பான இந்தச் சாலை மட்டும் அவ்வளவு வைரமானது. அந்த நாட்டின் எந்தப் பொருளிலும் காண இயலாத உறுதித் தன்மையை 320 கிலோ மீற்றர் கரிய நேர்கோட்டில் காண முடிகின்றது.

## ஏற்றுமதிக்காலத்தில் ஏ9

1983களுக்கு முற்பட்ட காலம். இந்தச் சாலையின் பொற்காலம் என்கிறார் காலத்துள் வாழ்ந்த ஒருவர். ''முதலில இந்தப் பாதை இப்ப இருக்குமாப் போல இருக்கேல்ல. ஓமந்தையில இருந்து அம்பகாமத்துக்குள்ளால வந்து, அப்படியே இரணமடுக் குளத்தில விழுந்து வட்டக்கச்சியால முரசுமோட்டை, ஆனையிறவெண்டுதான் இந்தப் பாதை இருந்து'' என்று அதன் வரலாற்றை அவர் சொல்லி முடிக்கிறார். குளங்களைத் தரைமட்டமாக்கி நேர்கோட்டுப் பெருந்தெருக்களை அமைத்துக் கொண்ட வெள்ளைக்காரர்களின் கைவண்ணத்தில் அமைக்கப்பட்டதே இந்தச் சாலை என்பதையும் அந்தக்கால அனுபவசாலியின் மொழியிலிருந்து கற்றுக் கொள்ள முடிகின்றது.

''சுன்னாகம், சாவச்சேரி, கிளிநொச்சி, மாங்குளம் எண்டு இந்தப் பாதையோரமா இருக்கிற இடங்கள் அந்தக் காலத்தில செழிப்பாயிருந்தன. புதன், சனி கிழமையளில கிளிநொச்சி பெரியளவில் களைகட்டியிருக்கும். முதல் நாளே அங்க வன்னியில, யாழ்ப்பாணத்தில இருக்கிற சாமானுகள யாவாரியள் கொண்டு வந்து சேர்த்திருப்பினம். இப்ப கிளிநொச்சி பொலிஸ் ஸ்ரேசனுக்கு முன்னால இருக்கிற கிரவுண்ட் அப்ப பெரிய வாழைக்குல சந்தையா இருந்தது. 30, 40 வாழக்குலையல வட்டவட்டமா அடுக்கிப்போட்டு ஏலம் போடுவினம். கிலோ கணக்கில விக்கிறதில்ல. ஒரு வட்ட வாழக்குல 2,500 ரூபாயில இருந்து போகும்.'' என்று சொல்லி முடிக்கையில் காலக் கனதியில் களைப்புறுகின்றார் அந்தக் கதையாளி.

தெற்கிலிருந்து வரும் வியாபார முதலாளிகள் லொறிகளில் தாழையடி கரைவலைக் கருவாட்டையும், ஆனையிறவு, சுண்டிக்குள இறாலையும், கிளிநொச்சி நெல்லையும், யாழ்ப்பாணத்து வெங்காயம், மிளகாயையும், மாதகல், முல்லைத் தீவு மீனையும் இந்தப் பாதை வழியே இரவிரவாகக் கொண்டு போயிருக்கின்றனர். அந்தளவுக்கு [illegible] [illegible] பிரதான மார்க்கமாக இது இருந்தது. பெரியளவிலான அரசியல் கொந்தளிப்புக்கள் இல்லாத அக்காலத்தில் ஏ9க்கும் அரசியல் இருக்கவில்லை. கடலும், காடும், வயலும், புல்வெளியும் இறுக்கி நின்ற அழகுச் சாலையாக இருந்தது. நடந்தும், மாட்டுவண்டில்களிலும் பயணிப்போரை அதிகமாகச் சுமந்தது அந்தப் பசுமைச்சாலை.

## போர்க் காலத்தில் ஏ9

''1985 ஆம் ஆண்டில எண்டு நினைக்கிறன், முதல்தரமா ஏ9 பூட்டினவங்கள். அந்தக் காலத்தில ஆமிக்காரர் ஒரு மூவ் எடுத்தவங்கள். யாவாரியள் சாமான் ஏத்திப் போற லொறியளுக்குப் பின்னால பதுங்கிப் பதுங்க யக்கச்சி சந்தி வரைக்கும் வந்து சண்ட பிடிச்சவங்கள். அதோடதான் இது மூடுப்பட்டது...'' பன்னரான காலத்திய தொடர்புகள் பூநகரி, கிளாலி கடல் வழியாக மாறியதையும், யாழ்ப்பாண இடப்பெயர்வுக்கு ஏ9 சாலை கைகொடுக்காமல் போனதையும் அவர் மறக்கவில்லை.

சந்திரிக்கா அம்மையார் அரசு கட்டிலேறியதும் அவரின் கனவும் கண்டி வீதியைக் கைப்பற்றுவதாக மாறியது. ஏ9 வழியே ஓமந்தையிலிருந்து படை நடத்தி மாங்குளமூடாக ஆனையிறவுப் படைத்தளத்துக்கு செல்லுதல் அந்த இராணுவ நடவடிக்கையின் நோக்கமாக இருந்தது. ஆனால் அவரின் 'வெற்றிநிச்சயமான' இந்த நடவடிக்கை பல தடவை எலும்பு முறிக்கப்பட்டது. அந்தக் காலத்திலிருந்தே ஏ9க்கு ஓர் அரசியல் புலம் கிடைத்தது. வடக்கில் எழுச்சி பெற்றுவந்த நிழல் அரசை நிர்மூலமாக்குவதற்கான முதல்தெரிவாக இந்தச் சாலை இலக்குவைக்கப்பட்டது. இதனால்தான் இதற்கு இத்தனை போர்க்காயங்கள்.

வன்னியை மையப்படுத்தி இராணுவத்துக்கு எழுந்த போர்ச் சவால்களை சமாளிப்பதற்காகவும், மக்களின் போராடும் சக்தியை பலவீனப்படுத்துவதற்காகவும் இது அடிக்கடி மூடப்பட்டது. வாயில்களின் பிரதான கதவுகள் இடம்மாற்றப்பட்டன. கண்டிவீதி மூடப்படுவதும், வன்னி மீதான பொருளாதாரத் தடையும் ஏ9 வீதியூடாகவே முழு அர்த்தத்தைப் பெற்றன. ஆனாலும் மருத்துவ அவசர சேவைப்பிரிவின் ஊடாகவும், பள்ளமடுப் பயணம் ஊடாகவும் வன்னி மக்கள் அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டனர். இந்தத் தடைகளும், பாதை மூடல்களும் மலேரியா, கொலரா போன்ற உயிர் கொல்லி வியாதிகளுக்கு வேப்பம் பட்டை சாற்றை பயன்படுத்திக் குணமாகலாம் என்பதையும், துணி துவைக்க பனம்பழச் சாறு உதவும் என்பதையும், வேம்பு விதை, இலை, பூவரசம் இலை, சாணி போன்றவற்றை உரமாகப் பயன்படுத்தலாம் என்பதையும் கற்றுத் தந்தது. இந்தக் கண்டுபிடிப்புக்கள் ஏ9 பாதைத் தடையை அர்த்தமற்றதாக்கின.

இதனைக் கைப்பற்றிக் கொள்வதற்காக ஓமந்தையிலும், புளியங்குளத்திலும், மாங்குளத்திலும், கிளிநொச்சியிலும், பரந்தனிலும், ஆனையிறவிலும், முகமாலையிலும் என சிந்தப்பட்ட குருதியும், மரித்த உயிர்களும் மிக அதிகம். அங்குலம் அங்குலமாக ரவைகளும், ஷெல் துண்டங்களும், கிளைமோர் துகள்களும் இந்தத் தெருவில் பயணிப்பவர்களைத்தான் சுவைத்தன. வயது, பால், இன வேறுபாடுகளை துப்பாக்கிகள் கவனத்தில் கொள்ளவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யின் புதிய பயணம்

போர்களுக்கு இடையிடையே தெரிந்த வசந்த காலங்கள் ஏ9ஐ தற்காலிகமாக அலங்கரித்தன.

### சமாதானத்துக்கான காலத்தில் ஏ9

சமாதானக் காலமொன்றில் ஜப்பானிடம் பணம் வாங்கி ரணில் தற்காலிகமாகத் தார் பூசினார். வந்து, போகும் மனிதர்களுக்கு, இரு வேறு அரசுகள் இலங்கையில் நிலவுவதை ஏ9 காட்டிக் கொடுத்தது. ஆனாலும் அந்தத் தற்காலிக காலம் அபத்தக் கனவாகி முடிந்துபோனது. மறுபடியும் அரசியல் களமாகியது ஏ9. எக்காலத்திலும் எடுத்துக் கொள்ளாத காவுகளை இந்தச் சாலை கோரிநின்றது. இலங்கை இராணுவத்தின் ஒரு பிரிவாகிய ஆழ ஊடுருவும் படையணியின் தொடர் தாக்குதல்கள் இந்தச் சாலையை மக்களற்ற தெருவாக்கியது. அம்புலன்ஸ் வண்டிகள், பயணிகளை ஏற்றிய பேருந்துகள், பாடசாலை மாணவர்கள் பயணித்த வாகனங்கள், தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் சென்ற வாகனம் என அனைத்துமே கிளைமோர்களின் இலக்குகளாயின. இதில் பயணித்தவர்களின் மொத்தக் குருதியிலும் ஏ9 குளித்துக் கொண்டிருக்கையில், பெரும் போர் அந்த வீதியில் நகரத் தொடங்கியது.

### இறக்குமதி காலத்தில் ஏ9

2009ஆம் ஆண்டோடு ஏ9 உச்சமான அரசியல் பாதையாக மாறியது. அதனை மூடுவதும், திறப்பதுமான பரப்புரை அரசியலுக்கு மேடையாகியது. ''பயங்கரவாதத் திடமிருந்து'' நாட்டை மீட்டதன் முதல் உதாரணமாக ஏ9 அடையாளம் காட்டப்பட்டது. சிங்கள மக்கள் முன் வைக்கும் ஏமாற்றுப் பொதிகளுக்குள் ஏ9 திறப்பும், வடக்கிற்கான அதனூடான பயணமும் பிரமாண்டமான விளம்பரங்களாயிருந்தன. சர்வதேச ரீதியான கடன்கள், கடன் சலுகைகள், உதவிகள் போன்றவற்றைப் பெறுவதற்கான போர்க்கால விழுப்புண்ணாக ஏ9 காட்டப்பட்டது.

இந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான வேலைத் திட்டங்கள் இலகுவிலேயே முன்னெடுக்கப்பட்டன. சிங்கள மக்களின் மனங்களை ராஜபக்ஷ நோக்கிய தீவிர ரசிகர்களாக்குவதற்கான கவர்ச்சிப் பொருளாக ஏ9 மாறியது.

### அபிவிருத்திக் குறியீடு

ஏ9இன் கரையோரம் இருந்த புலிகளின் ''மிச்ச சொச்சங்கள்'' காட்சிக் கூடங்களாக மாறின. கிளிநொச்சியும், ஆனையிறவும் போர்ச்சுற்றுலாத் தளங்களாக்கப்பட்டன. வன்னியை குறுக்கறுக்கும் ஏ9 முழுதும் இராணுவக் கடைகளும், கன்ரீன்களும், படைத் தலைமையகங்களும் முளைத்தன. சிங்கள மக்களின் மன ஆறுதலுக்கான பௌத்த மத வழிபாட்டிடங்கள் பெரும் அரசியல் பின்னணியுடன் ஏ9 பாதை நெடுகிலும் முளைத்துக் கொண்டேயிருக்கின்றன. ஏ9 இல் இருக்கும் ஒவ்வொரு அரசமரமும் புத்த பகவானின் நிரந்தரக் குடியிருப்பாக மாறிவருகின்றது.

வடக்கில் நிகழ்த்தப்படும் அபவிருத்தியின் குறியீடாக ஏ9 விளம்பரப் படுத்தப்படுகின்றது. கிளிநொச்சியையும், மாங்குளத்தையும் மையப் படுத்தி எழும் பிரமாண்ட கட்டடங்கள் உடனடி அபவிருத்தியைக் காட்சிப் படுத்திக் கொண்டிருக்கின்றன. வங்கிகள், சிறப்புச் சந்தைகள், லீசிங் நிறுவனங்கள், இன்சூரன்ஸ் நிறுவனங்கள் முதலானவற்றுக்கு ஒதுக்கப்படும் கட்டடங்களின் எண்ணிக்கை அதிகமானதாகவே இருக்கின்றது. போரில் அனைத்தையும் இழந்த மக்களிடம், எஞ்சிய மிச்சத்தையும், அன்றாட உழைப்பின் தேட்டத்தையும் சுரண்டும் தெற்கைச் சேர்ந்த உரிமையாளர்களின் மாயப் புதர்களாக இந்தக் கட்டடங்கள் இருக்கின்றன.

ஆனால் அந்த மண்ணுக்கே சொந்தமானவர்கள் பெட்டிக் கடைகளுக்குள்ளும், கடன் தொல்லைக்குள்ளும் முடங்கும் நிலையை ஏ9ஐக் கடக்கும் ஒருவர் அவதானிக்கலாம். பிளாஸ்ரிக், இரும்புப் பொருள்களின் இறக்குமதி சாலையாக ஏ9க்கு இப்போது புதியமுகம் கிடைத்திருக்கின்றது. ஏ9 தொடங்கியிருக்கும் இந்தப் புதிய பயணம் வடக்குத் தமிழர்களின் நலனைவிட தெற்கு வியாபாரிகளின் சுரண்டல்களுக்கே அதிகம் உதவிவருகின்றது. ஒரு காலத்தில் தமிழர்களின் ஏற்றுமதிச் சாலையாக இருந்த இந்தச் சாலை, இன்று கழிவுப் பொருள்களை இறக்குமதி செய்யும் சாலையாக புதுவடிவம் பெற்றிருக்கின்றது.

### சீமைச் சாலை

இந்தப் புதிய பயணத்துக்காக பொருதி, குருதிகொட்டி உயிரிழந்தவர்கள் இந்த நாட்டு மக்களே. தமிழ், சிங்கள மக்கள் தமக்குள் நடத்திய போரில் ஏ9 தலைமுழுகிக் காய்ந்திருக்கின்றது. ஆனால் அது இப்போது இருதரப்புமே சொந்தம் கொண்டாட முடியாத அரசியல் சூறைக்குள் சிக்கியிருக்கின்றது. ''[illegible] ரோட்டு'' என்ற விளம்பரத்தை மறந்தபடியே அனைவரும் புதிய பயணத்தை ஆரம்பிக்கின்றனர்.

> சுன்னாகம், சாவச்சேரி, கிளிநொச்சி, மாங்குளம் என்டு இந்தப் பாதை யோரமா இருக்கிற இடங்கள் அந்தக் காலத்தில செழிப்பாயிருந்தன. புதன், சனி கிழமையளில கிளிநொச்சி பெரியளவில் களைகட்டியிருக்கும். முதல் நாளே அங்க வன்னியில, யாழ்ப்பாணத்தில இருக்கிற சாமானுகள யாவரியள் கொண்டுவந்து சேர்த்திருப்பினம். இப்ப கிளிநொச்சி பொலிஸ் ஸ்ரேசனுக்கு முன்னால இருக்கிற கிரவுண்ட் அப்ப பெரிய வாழைக் குல சந்தையா இருந்தது. 30, 40 வாழக்குலையல வட்டவட்டமா அடுக்கிப்போட்டு ஏலம்போடுவினம். கிலோ கணக்கில விக்கிறதில்ல. ஒரு வட்ட வாழக்குல 2,500 ரூபாயில இருந்து போகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகைமைப் போக்கை விடுத்து புதிய முறையில் உறவுகள்

## சீன- அமெரிக்க தலைவர்கள் முடிவு




■ ரெங்கன்

மேற்கில் அமெரிக்காவும், கிழக்கில் சீனாவும் இன்று இருபெரும் வல்லரசு நாடுகளாகத் தலைதூக்கி நிற்கின்றன.

இரு நாடுகளுமே வெவ்வேறு விதமான அரசியல், பொருளாதார முறைகளைக் கையாள்பவை.

அமெரிக்கா பல கட்சிமுறையை மேற்கொள்ளும் நிலையில் சீனா கம்யூனிஸ கொள்கையைக் கடைப்பிடித்தாலும் அதனைத் தன் நாட்டுக்கும் நடப்புக்கும் ஏற்ற முறையில் சீர் செய்து கைக்கொள்வதாகக் கூறப்படுகின்றது. அங்கு பல கட்சி முறைக்கு இடமில்லை. ஒரே கட்சி- ஆனால் அதற்குள் ஒருவித ஜன நாயகம் கடைப்பிடிக்கப்படுவதாக ஆய்வாளர்கள் கூறுவர்.

எதுவானாலும் அமெரிக்கா உலகம் முழுவதற்கும் கண்காணிப்பை மேற்கொள்ளும் உலக பொலிஸ்காரன் போல் செயற்படுவதாக குற்றச் சாட்டுக்கள் உண்டு. இதே வேளை ஆஸிய பெருங்கடல் மற்றும் இந்து சமுத்திரப் பகுதிகளில் தன் செல்வாக்கை நிலைநாட்டிக் கொள்ள முயல்வதாக சீனா மீது குற்றஞ் சாட்டப்படுவதுண்டு.

சோவியத் யூனியன் சீர்குலைந்து போன நிலையில் ரஷ்யா தனிமைப் பட்டுவிட்டாலும் அந்த இடத்தில் சீனா தன்னை உயர்த்திக்கொள்ள பார்ப்பதாகவும் கூறப்பட்டு வந்தது. ஆனால் வளர்ச்சியுற்ற நாடு என்ற வகையில் பார்க்கப்படும் அமெரிக்காவுக்கு ஈடு கொடுக்கும் வகையில் இப்பொழுது சீனா பல வகையிலும் முன்னேறியுள்ளது. இன்னும் முன்னேறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எதிர்காலத்தில் பழைய பகைமைப் போக்கை விடுத்து புதியதொரு நட்பு ரீதியான வெளிப்படையான முறையை கைக்கொள்வதற்கு இருநாட்டுத் தலைவர்களும் முடிவுகட்டியிருப்பதாக வந்துள்ள செய்தி மகிழ்ச்சியளிப்பதாகும்.

சீன அதிபர் ஜி ஜின்பிங் அண்மையில் அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்டு அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவுடன் நடத்தியுள்ள பேச்சுக்களின் முழு விவரங்களும் பத்திரிகைகளில் வெளிவரவில்லை. ஆனால் வந்துள்ள விவரங்கள் அமைதி குலைந்து போய் பெரும் குழப்பம் ஒன்று தோன்றிவிடுமோ என்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் உலக நாடுகளுக்கு ஓரளவு ஆறுதல் தருவதாக இருந்துள்ளன.

இரு தலைவர்களும் பேச்சுக்களை முடித்துக்கொண்டு வெளியிட்டிருந்த கருத்துக்களின் முக்கியமான அம்சங்களில் அமெரிக்க பத்திரிகைகள் பின்வருவனவற்றை தனித்துவமாக எடுத்துக்காட்டியிருந்தன.

அதிபர் ஸி ஜின் பிங் கூறியது:
சீன கனவை நனவாக்கிக் கொள்வதற்கு மற்றும் அமைதிக்கான உன்னத நோக்கத்தை மற்றும் மனித குலத்தின் மேன்மைக்காக சீனா கடுமையாக உழைக்கும்.

அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா கூறியது:
சீனாவின் அமைதியான தொடர் வளர்ச்சியானது அமெரிக்க நலன்களுக்கும் நல்லதே. ஏனென்றால் சீனா வெற்றி பெறுமானால் அது உலக பொருளாதாரத்தை உந்தித் தள்ளுவதாய் இருக்கும்.

### புதிய பாதையில் செல்ல இணக்கம்

தமது வழமையான பகைமை மற்றும் முரண்பாட்டு வழிகளை கைவிட்டு புதிய முறையிலான நல்லுறவுப் பாதையொன்றை பின்பற்றிக்கொள்ள இரு தலைவர்களும் இணங்கியிருக்கிறார்கள். கலிபோர்னியாவிலுள்ள ராஞ்சோ மிராஜ் என்ற இடத்தில் 250 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட தோட்டத்தில் சன்னிலேன்ட்ஸ் பகுதியில் இரு தலைவர்களும் சந்தித்து நடத்திய பேச்சுக்களின் பின்னர் பத்திரிகையாளர்களைச் சந்தித்து மேற்கண்ட தமது அர்ப்பணிப்பு மிக்க கருத்துக்களை வெளியிட்டார்கள். ஆழமான, நேர்மையான, யதார்த்தமான கலந்துரையாடலை ஒபாமாவுடன் நடத்தியதாக அதிபர் ஸி தெரிவித்தார். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சீன–அமெரிக்க கொள்கைகள் பிரதான நாடுகளுக்கிடையில் புது மாதிரியான உறவுகளைக் கட்டியெழுப்புவது இருநாடுகளுக்கும் உள்நாட்டில் பிராந்திய மட்டத்திலும் உள்ள பொதுவான கவலைகள் போன்றவற்றை விவாதித்து ஒபாமாவுடன் முக்கியமான ஒருமைப்பாட்டுக்கு வந்ததாக அவர் கூறினார்.

### சீனாவின் கனவு

சீனாவினது கனவைப் பொறுத்தவரை, பொருளாதாரத்தில் செழிப்படைய விரும்புகிறோம். தேசியத்தை புதுப்பித்தல், மக்கள் நல்வாழ்வு முக்கியமாகின்றது. மேலும் அமைதி, அபிவிருத்தி ஒத்துழைப்பும் வெற்றிகரமான முடிவுகளும். இவை அமெரிக்க கனவுகளுடனும் தொடர்புபடுகின்றன. ஏனைய நாடுகளின் மக்களின் அழகான கனவுகளுடன் தொடர்புபடுகின்றன என்று தெரிவித்தார் சீன அதிபர்.

அமைதியான அபிவிருத்தி மற்றும் நாட்டின் ஆழமான அமைப்பு மற்றும் நாட்டை வெளிப்படையாக்குவது போன்றவற்றுக்கான பாதையில் செல்ல சீனா உறுதி பூண்டுள்ளது என்பதை ஒபாமாவிடம் தாம் தெளிவாக எடுத்துரைத்திருப்பதாக சீன அதிபர் தெரிவித்தார்.

### பகைமைப் போக்குக்கு முடிவு கட்டப்படும்.

கடந்த காலங்களில் போன்று உலக நாடுகள் பகைமைப் போக்கை தொடர்ந்தும் கடைப்பிடிக்க முடியாது என்பதை ஸி வலியுறுத்தினார். இந்த விடயத்தில் இரு தலைவர்களுக்கும் உள்ள நம்பிக்கையை அவர் விளக்கியபோது பொருளாதார உலக மயமாக்கல் வேகமாக வளர்ச்சியடையும்போது ஏற்படும் சங்கடங்களை எதிர்கொள்ள எல்லா நாடுகளுமே ஒரே படகில் தான் பயணித்ததாக வேண்டும் என்பதில் ஒபாமாவுக்கும் தமக்கும் நம்பிக்கை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். கடந்த காலத்தில் தவிர்க்க முடியாத நிலையில் பகைமைப் போக்கையும் முரண்பாடுகளையும் கடைப்பிடிப்பது போல் இல்லாமல் அதற்கு மாறான ஓர் உறவு முறையை சீனாவும் அமெரிக்காவும் கண்டுபிடித்தாக வேண்டும் என்றார் அதிபர் ஸி.

நாடுகளுக்கிடையிலான பயணங்கள், இருதரப்புச் சந்திப்புக்கள், தொலைபேசி மற்றும் கடிதத் தொடர்புகள் மூலம் நெருங்கிய உறவுகளை ஒபாமாவுடன் வைத்துக் கொள்ள விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

பெரும்பான்மை நாடுகளின் உறவுக்கான ஒரு புது மாதிரி அமைப்பை உருவாக்கும் எமது இருநாடுகளின் முயற்சியில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. மனித முயற்சியில் தான் வெற்றி இருக்கிறது என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு என்று கூறிய சீன அதிபர் அந்தக் கருத்தை பின்வருமாறு விளக்கினார்.

முதலில் நல்லுறவை வளர்த்துக் கொள்ள இரு நாடுகளுக்கும் அரசியல் விருப்பம் இருக்கிறது. இரண்டாவது கடந்த 40 ஆண்டுகால எமது ஒத்துழைப்பு நல்லதோர் அடிப்படைக்கான ஒத்துழைப்பை வழங்குகின்றது. மூன்றாவதாக சீனாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் 90 க்கும் மேற்பட்ட அரச பொறி அமைப்புக்கள் உள்ளன. இவை எமது முயற்சிகளை முக்கியத்துவப்படுத்துகின்றன. நான்காவது இந்த மாதிரி எமது இரு நாடுகளுக்கிடையிலான உறவுக்கு பலமான பொதுமக்கள் ஆதரவு இருக்கிறது. சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் 220 கோடி இணைந்த மாகாணங்களும் நாடுகளும் நகரங்களும் காணப்படுகின்றன. அமெரிக்காவில் சுமார் 190,000 சீன மாணவர்கள் இருக்கிறார்கள். 20, 000 க்கும் மேற்பட்ட அமெரிக்க மாணவர்கள் சீனாவில் இருக்கிறார்கள். ஐந்தாவதாக சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் எதிர்காலத்தில் ஒத்துழைப்புக்கான பெருவாரியான துறைகள் காணப்படுகின்றன.

சீன அதிபர் மேலும் குறிப்பிடுகையில் அமெரிக்க தேசமும் சீன தேசமும் மிகப் பெரிய தேசங்கள். சீன மக்களும் அமெரிக்க மக்களும் மிக சிறந்த மக்கள். நாம் உயர்ந்து நின்று தூரப் பார்வையை செலுத்தவோமானால் குறிப்பிட்ட வகையில் முன்னேற்றம் கண்டு அவைகளை காலப்போக்கில் சேமித்துக் கொள்வோமானால் நம்பிக்கையும் அர்ப்பணிப்பும் இருக்குமானால்பொறுமையும் ஞானமும் இருக்குமானால் எமது இந்த நோக்கத்தை எம்மால் வெற்றிகொள்ள முடியும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு என்றார்.

### ஆக்கபூர்வமான பேச்சுக்கள் ஒபாமா

அமெரிக்க அதிபர் ஒபாமா நிருபர்களிடம் பேசும்போது, விரிவான விடயங்களில் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களை இருவர் நடத்தினார்கள் என்று கூறினார்.

இருதரப்பினதும் இராணுவ அரசியல் மூலோபாய இலக்கு களை விளங்கிக் கொள்வது அவசியமாகும். இந்த முயற்சிகளை அமைப்புகள் ரீதியாக மேற்கொள்ளவும் வழமையாக்கிக் கொள்ளவும் விரும்புவதாகக் குறிப்பிட்டார்.

சீன- அமெரிக்க நல்லுறவுகளை புதிய மட்டங்களுக்கும் எடுத்துச் செல்வதென இருதலைவர்களும் சம்மதித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இந்த விதமான தொரு சந்தர்ப்பத்தினை கை நழுவ விடுவதற்கும் தமக்கு விருப்பமில்லை என்றார் ஒபாமா.

### இணையத்தள பாதுகாப்பு

இணையத்தள பாதுகாப்பு தொடர்பான வேண்டுகோள் ஒன்றுக்கு அதிபர் ஸி பதிலளிக்கும்போது, சீனா இணையத்தள தாக்குதலுக்கு உள்ளாகியுள்ள நாடு. எனவே இணையத் தள பாதுகாப்பை பலமாக ஆதரிக்கிறது. இணையத்தள பாதுகாப்பு தொடர்பான கவலையை சீனா-அமெரிக்கா இரண்டுமே பகிர்ந்து கொள்கின்றன என்றார். இணையத்தள பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கையில் ஈடுபடுவதற்கென செயல்குழு ஒன்றை அமைக்கவும் இது விடயமாக தொடர்ந்து விவாதிக்கவும் இரு தரப்பினராலும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

### பகைமைக்கு முடிவு கட்டப்படுமா?

சீனாவும் -அமெரிக்காவும் தமது பழைய பகைமைப் போக்கை விடுத்து தங்களுக்கிடையிலும் ஏனைய நாடுகளுக்கிடையிலும் புதிய முறையில் நட்பு ரீதியான ஓர் உறவைப் பேணுவதற்கு ஒப்புக் கொண்டிருப்பதாக செய்தி வந்திருக்கும் பின்புலத்தில் பகைமைப் போக்கை கடைப்பிடித்து வந்துள்ள வடகொரியாவும் தென்கொரியாவும் , இரண்டு வருடங்களுக்கு பிறகு பூர்வாங்கமாக இரு தரப்பு பேச்சுக்களை நடத்தியிருப்பது ஊக்கமளிக்கும் விடயமாகும்.

அண்மைக் காலத்தில் வடகொரிய தென்கொரியாவுடன் மாத்திரமல்ல. அதற்கு உதவிக்கரம் நீட்டும் அமெரிக்கா போன்ற நாடுகளையும் அணுகுண்டு வீசப்போவதாக அச்சுறுத்தி வந்துள்ளது. இந்த நிலையில் தான் கடந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை செயற்படுத்துவதற்கான இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கிடையில் உள்ள போர் நிறுத்த எல்லைக் கிராமமான பான்முன் ஜொமில் இரு தரப்பு அதிகாரிகளும் காலை, மாலை மாநாடுகளென சுமார் இரண்டு மணி நேரத்துக்கும் குறைவான நேரம் நடந்த கலந்துரையாடலில் அமைச்சர்கள் மட்ட பேச்சு வார்த்தைகளுக்கு ஏற்பாடு செய்வதற்கான ஆலோசனைகள் நடத்தப்பட்டன. இந்த அமைச்சர்கள் மட்டத்திலான சந்திப்பு உத்தேசமாக வரும் புதன் கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இருநாடுகளுக்கும் இடையில் நின்று போயுள்ள வர்த்தக தொடர்புகள் குறிப்பாக வடகொரியா நாடு ஒரு தலைப் பட்சமாக நிறுத்தப்பட்ட கா.ஏ.ஸொங் கூட்டுக் கைத்தொழில் பேட்டையை மீளவும் இயங்கச் செய்வது அமைச்சர் மட்ட சந்திப்பின் நோக்கமாக இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பேச்சுக்கள் பெரும்பாலும் அமைதியான சூழ்நிலையில் நடைபெற்றதாகவும் பெரிதாக விவாதங்கள் இன்றி முன்னேறியதாகவும் தென்கொரியப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர்கள் விவாதிக்கவேண்டிய நிகழ்ச்சி நிரல், இடம் , திகதி, கால அளவு போன்றவை ஆலோசிக்கப்பட்டதாக கூறப்பட்டது. எத்தனை பேர் கலந்து கொள்வது என்ற விடயமும் ஆலோசிக்கப் பட்டுள்ளது.

கடந்த வியாழனன்று வடகொரியா தனது கடுமைப் போக்கை மாற்றிக் கொண்டு பேச்சு வார்தைகளுக்கான அழைப்பை விடுத்திருந்தது. இதற்கு உடனடியாக தென்கொரியா பதிலளித்து அமைச்சர் மட்ட பேச்சுக்களுக்கு அறிவித்தல் கொடுத்தது. வடகொரியா அதற்கு முதலில் கீழ் மட்ட அதிகாரிகள் நிலை பேச்சுக்களை நடத்தலாம் என்றும் தெரிவித்ததை அடுத்து இந்த அதிகாரிகள் மட்ட பேச்சுக்கள் நடைபெற்றுள்ளன.

அதே சமயம் கடந்த மார்ச்சில் துண்டித்துக் கொண்ட அதிகார பூர்வ நேரடித் தொடர்புகளை மீண்டும் ஆரம்பித்துள்ளது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







கோபிகிருஷ்ணா

'சுந்தரபாண்டியன்' வெற்றிக்குப் பிறகு சசிகுமார் லக்ஷ்மி மேனன் மீண்டும் இணைந்திருக்கும் படம். சசியின் சிஷ்யர் எஸ்.ஆர்.பிரபாகரன் கொடுத்த வெற்றியை, மற்றொரு சிஷ்யரான முத்தையா ''குட்டிப் புலி'யில் காப்பாற்றியிருக்கிறாரா?

தன் ஊர்ப் பெண்ணை கேலி செய்ததற்காக, பக்கத்து ஊர்க்காரனை வீடு புகுந்து கொலை செய்துவிட்டு தப்பிக்கும் நேரத்தில் அடியாள்களிடம் சிக்குகிறார் குட்டிப்புலியின் (சசிகுமார்) அப்பா (லாலேட்டன்). அவர்களிடம் மாட்டிவிட்டால் தன் மானம் போய்விடும் என்பதற்காக தன் தலையை தன் ஆள்களை வைத்தே வெட்டிச் சாய்க்கச் சொல்லி, ஊர் சாமியாக மாறுகிறார் லாலேட்டன்.

அப்பனைப் போலவே பிள்ளையும் ஆகிவிடக்கூடாதென நினைக்கும் அம்மா சரண்யா, 'குட்டிப் புலி'யிடம் அப்பாவைப் பற்றிய விஷயங்களை மறைக்கிறார். ஆனால், வளர்ந்து பெரியவனானதும் குட்டிப் புலியும் தந்தை ரூட்டிலேயே பயணிக்கிறான். குட்டிப்புலிக்கு 'கால் கட்டை'ப் போட்டுவிட்டால் சரியாகிவிடும் என அம்மா சரண்யா பெண் பார்க்க, கல்யாணத்தையே வெறுக்கும் 'குட்டிப் புலி' வீட்டை விட்டு வெளியேறுகிறார்.

அதே நேரத்தில், அந்த ஊருக்குப் புதிதாகக் குடிவரும் பாரதி (லக்ஷ்மி மேனன்), குட்டிப் புலியின் பெண்களை மதிக்கும் குணத்தைக் கண்டு அவனிடம் காதல் கொள்கிறாள். பெண்களையே நிமிர்ந்து பார்க்காத குட்டிப் புலியிடம், காதலைச் சொல்ல வரும் நேரத்தில் ஏற்கெனவே குட்டிப் புலியால் அடிவாங்கிய கூட்டம் ஒன்று அவனை வெட்டிச் சாய்க்கிறது. அடிபட்ட புலி சும்மா இருக்குமா? பிறகு என்ன நடக்கும் என்பது, வழக்கமான தமிழ் சினிமா பார்ப்பவர்களுக்கு தெரிந்த விஷயம்தான்! 'க்ளைமேக்ஸை' மட்டும் கொஞ்சம் ரூம் போட்டு யோசித்து வைத்திருக்கிறார்கள்.

முதல் படம் என்ற வகையில் முத்தையா தேர்ந்தெடுத்த கதைக்களம் சரியானதுதான். ஆனால், அதைக் கையாண்ட விதத்திலேயே கொஞ்சம் கவனம் சிதறியிருக்கிறார். முதல் பாதி முழுக்க சுவையாகச் செல்லும் திரைக்கதை, பின் பாதியில் செய்வதறியாது திகைத்து நிற்கிறது. ''பெண்களை நான் தெய்வமா மதிக்கிறவன்' எனச் சொல்லும் 'குட்டிப் புலி' பெண்களுக்காக கடைசி வரை என்ன செய்தார் என்பது இயக்குனருக்கே வெளிச்சம். மற்றபடி அழகான கிராமம், கிராமத்து மனிதர்களின் இயல்பான குணம் என காட்சிப்படுத்தியதில் மட்டுமே இயக்குனர் முத்தையா தன் அறிமுக முத்திரையைப் பதித்திருக்கிறார்.

சொல்ல வேண்டிய கதையிலிருந்து விலகி இழுத்தடிக்கும் காதல் காட்சிகள், தேவையில்லாத நகைச்சுவை, சம்பந்தமில்லாத பாடல் என படம் முழுவதும் 'குட்டிப் புலி' நொண்டியடிக்கிறது.

சசிகுமார் இனியும் ஹீரேவாகத் தொடர வேண்டும் என்றால் உடனடியாக செய்ய வேண்டியது இந்த மாதிரி வேடங்களில் இனியும் நடிக்காமல் இருப்பதுதான். அதே அலட்டல், நையாண்டி, உடல்மொழி என ரொம்ப 'போர்' மிஸ்டர் சசி! அதேபோல் மளமளவென முன்னணிக்கு வந்து கொண்டிருக்கும் நடிகை லக்ஷ்மி மேனனுக்கு இந்த 'குட்டிப் புலி' நிச்சயம் திருஷ்டிப் பொட்டுதான். உஷார் அம்மணி! எத்தனை தடவை பார்த்தாலும் சலிக்காத அம்மாவாக சரண்யாவே படம் முழுவதையும் தாங்கிச் செல்கிறார் 'க்ளைமேக்ஸ்' உட்பட! சரண்யாவுக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்த சசிகுமாரை நிச்சயம் பாராட்ட வேண்டும்!

> சசிகுமார் இனியும் ஹீரேவாகத் தொடர வேண்டும் என்றால் உடனடியாக செய்ய வேண்டியது இந்த மாதிரி வேடங்களில் இனியும் நடிக் காமல் இருப்பதுதான்.

முன்பாதியில் கிச்சு கிச்சு மூட்டும் 'கனா காணும் காலங்கள்' குழு பின்பாதியில் கதையின் ஓட்டத்தைக் கெடுப்பதில் பெரும் பங்கு வகிக்கிறது. சசியின் நண்பராக வரும் 'ஆடுகளம்' முருகதாஸ் ஆறுதல்!

கிராமத்து சந்து பொந்துகளில் புகுந்து விளையாடியிருக்கிறது ஒளிப்பதிவு. இயக்குநர் கோட்டைவிட்ட இடங்களில் தன் கத்தரியைப் பயன்படுத்தி கொஞ்சம் சுவை கூட்டியிருக்கலாமே எடிட்டர் கோபிகிருஷ்ணா! இசை ஜிப்ரான் (பின்னணிக்கு உதவியவர்கள் என இளையராஜா, ரஹ்மான் பெயரையும் போட்டிருக்கலாம்). 'வாகை சூட வா' தந்தவரிடம் நிச்சயம் ரசிகர்கள் இதை எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.





## எப்படிக் கருகின...?


ஜம்புலிங்கம் பூங்கா ஒன்றைப் பராமரிக்கும் வேலைக்குப் போனார். அவருக்கு பூங்கன்றுகள் மீது கொள்ளை ஆசை. இதனால் அவற்றைப் பராமரிப்பதை ஒரு தொழிலாக மாத்திரமன்றி, பொழுதுபோக்காகவும் கைக்கொண்டார். இந்த நிலையில்தான் பனிகாலம் ஆரம்பத்தது. திடீரென பூங்காவில் இருந்த எல்லாப்பூங்கன்றுகளும் காய்ந்து, கருகிப்போயின. ஒன்றுகூட எஞ்சவில்லை. பூங்கா நிர்வாகத்தினர் இதுகுறித்து ஜம்புவை அழைத்து விசாரித்தனர். அதன்போது ஜம்பு அளித்த வாக்குமூலம் இதுதான்.

ஐயாமாரே!எனக்கொண்டும் தெரியாது. நான் உந்தப்பூக்கண்டுகளில உயிரையே வைச்சிருந்தன். ஏனிப்படி எல்லாம் கருகிப் போச்சுதெண்டு தெரியாமக் கிடக்கு. போன கிழமையில இருந்து பனி யெண்டாதால பூக்கண்டுகளுக்குக் குளிராம, நடுங்காம இருக்க இப்ப கொஞ்சநாளாக எல்லாத்துக்கும் மினக்கெட்டு சுடுதெண்ணி வைச்சு அதைத்தான் ஊத்தினனான். அப்படியிருந்தும் எப்படி எல்லாம் பட்டுப் போச்சுதெண்டு எனக்கு விளங்கவேயில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்துமீறும் வட்டிமோகம்



பணம் பத்தும் செய்யும் என்பர் தம் மக்கள்
பத்தோடு பதினொன்றாக இன்று தற்கொலைகளும்
தப்பியோட்டங்களும்
தடுமாறித் தவிக்கிறது எங்கள் தமிழ்ச் சமூகம்
இலட்சங்கள் கோடிகளாம் தினம் தினம் கைமாறுகிறது
நோட்டுக் கட்டுக்கள்
அறவோ என்றொரு வார்த்தையில்
கிலோவாய் பறக்கிறது கரன்சிக் கட்டுக்கள்
இதைத்தானோ சொல்வார்கள் ''சுக சம்பாத்தியம்''
என்று?
கொடுத்தவன் பாடும் திண்டாட்டம்
எடுத்தவன் பாடும் திண்டாட்டம்
பத்தாம் வகுப்பு எண்கணிதத்தில்
நாம் கற்ற வட்டி வகைகள்
எளிய வட்டி, தனிவட்டி
மாதவட்டி, வருடவட்டி
வட்டி குட்டி போடும் கூட்டு வட்டி என்பவையாம்
இங்கோ இந்த வரிசையில்
உயிர்கொல்லும் மீற்றர் வட்டி
நிரம்புகிறது தினம் தினம் பொலிஸ் நிலையங்கள்
இவர்கள் போலிப் பணப் பிணக்குகளினால்
பதறுகிறது நீதிமன்றங்கள்
இவர்கள் பாழ்பட்ட முறைப்பாடுகளால்

''அரச திறைசேரியை மிஞ்சுகிறது
உம்மவர் சிலரின் பணம்
ஒவ்வொருவரும் ஒரு தனி ராஜாங்கம்
இந்த சௌகரிய வாழ்க்கையில்
உமக்கேன் ஓர் தனியரசுப் போராட்டம்?
உம்மவர் போராளிகள்
இச்சுயநலமிகளைவிட ஆயிரம் மடங்கு
மேலானவர்கள்
இந்தச் சண்டாள மக்களுக்காகவா
தங்கள் இன்னுயிர்களை அவர்கள் மாய்த்தார்கள்?''
என்று கேட்டான் அன்றொரு போர்க்காரன்
நோகாமல் உழைக்கும் பணம்
நிலைக்குமா சொல்லுங்கள்
பணம்....பணம்....பணம்....
இதுவே இவர்கள் வாழ்வின் இலட்சியம்
அன்பு, பாசம், மனச்சாட்சி, மனிதநேயம்
இவையெல்லாம் இன்று இரண்டாம் பட்சப்
பண்டங்கள்
குலைகிறது குடும்பங்கள் கலைகிறது உறக்கம்
நிம்மதியும் நித்திரையும் இழந்த வாழ்வுக்கு
இட்டுச் செல்கிறது இந்த ''மீற்றர் வட்டிக்'' கலாசாரம்
''பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைக்க
கேடுகெட்ட மானிடரே கேளீர்
கூடுவிட்டிங்கு ஆவிதான் போயினபின்
யாரோ அனுபவிப்பர் இந்தப் பணம்''
என்ற ஔவையின் வாக்கை மனதிருத்தி,
மனந்திருந்தி
தலைமுறைக்கு பொருள் சேர்க்கும்
தறுதலைப் பழக்கத்தை விடுங்கள்
''தேசம் ஞானம் கல்வி ஈவர் பூசை யாவும்
காசுமுன் செல்லாதடி குதம்பாய்''
என்ற சிவாஜியின் பராசக்திப் பாசம் வரிகளாக
இவர்கள் வாழ்க்கைக் கோலங்கள்
''காசு துட்டு பணம் மணி மணி'' என்றொரு
தற்கால டப்பாங்கூத்துப் பாட்டுமுண்டு
மெய்வருந்தி வியர்வை சிந்தி உழைத்து
உண்ணுங்கள் நிலைக்கும் உங்கள் பணம்
நிம்மதியும் நித்திரையும்
உங்கள் நிரந்தர சொத்தாகும்

*மார்க் ஏப்ரகாம், வதிரி*

## சொற்சிலம்பம் - போட்டி இல: 270

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| 9 | | ■ | 10 | 11 | | | ■ |
| | ■ | 12 | | | ■ | 13 | 14 |
| ■ | 15 | | | ■ | 16 | | |
| 17 | | | ■ | 18 | | ■ | |
| 19 | | ■ | 20 | | | 21 | ■ |
| 22 | | | | | ■ | 23 | |

அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1. அழியாதது
5. உலகம்
7. பாம்புக்கு ஒரு பெயர்
8. யானையை வழி நடத்துபவன்
9. வஞ்சனைத் திட்டம்
10. நாவிதன் செய்வது
12. கொளுவுப்படு (பேச்சுவழக்கில்)
13. இடம்
15. உள்ளம்
16. அரைகல்
17. கூரையின் உச்சி
18. புதிய
19. (ஒன்று) சேர்
20. பெண்கள் காலில் அணியும் அணிகலன்
22. வெற்றிலை, பாக்கு சேர்ந்த கூட்டு
23. சிறையில் இருப்பவன்

### மேலிருந்து கீழ்

1. அதிசய செயல்களை செய்தல்
2. ஆணியை அடிப்பது இதனால்
3. வாழ்
4. சுவாமி திருவுருவத்தை தொழுதல்
5. புவிநடுக்கம்
6. இன்றைய உலகின் இயக்க நாயகன்
8. கனமான
11. பிரி
12. மெல்லிய உலோகப் படலம்
14. எருதின் (பின் கழுத்து) ஏரிக்கு இப்படிப் பெயர்
15. நீளத்தையும் உயரத்தையும் விட மற்றையது
16. வீண்
17. முன்னிலையில்
18. சுகம்
20. பலவல்ல
21. நெருப்பில்லாமல் இது வராது

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.
★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 268 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) பரதேசி (4) துப்பு (6) சரிதம் (8) சதம் (10) கமலம் (11) மிடி (12) அவல் (13) மகரம் (15) கொல் (16) அன்னம் (17) வீடு (18) வரம்பு (20) கடன்காரன்.

**மேலிருந்து கீழ்**

(1) பஞ்சாமி (2) தேசம் (3) சிரி (4) துர்மல் (5) புலம்பல் (7) தகனம் (9) தடிமன் (12) அரம் (14) கணவான் (15) கொடும் (16) அதிக (17) வீரன் (18) வர (19) புண்

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 270**
*நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (26.06.2013 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.270இல் வெற்றி பெறுவோர்களது விபரம் 30.06.2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 268 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**ஜ.கிறேஸ்போல்,**
இல.51, ஆறாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**
**திருமதி சி.சோதிமலர்,**
கரணவாய், கரவெட்டி.

**3 ஆம் பரிசு**
**திருமதி தி.புவனா,**
நாவற்குழி கிக்கு, கைதடி.

**4 ஆம் பரிசு**
**கா.கார்த்திகா,**
யா/ வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**
**தி.திருத்தணிகைநாதன்,**
அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

**பாராட்டுப் பெறுவோர்**

**இ.முரளிதரன்,**
புனானிப் பேற்று, சாவகச்சேரி.

**த.புவனேஸ்வரி,**
கல்லூரி வீதி, புலோலி மத்தி, பருத்தித்துறை.

**த.வேகாவனம்,**
விந்தியாவந்தா கல்லூரியடி, முள்ளியவளை.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ் மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்திமான் பலவான்



ஒருமுறை கிருஷ்ண தேவராயரின் அவையிலிருந்த அமைச்சர்கள், ''நாங்களும் தெனாலிராமன் போல புத்திசாலிகள்தானே! எங்கள் புத்திசாலித்தனத்தைக் காட்ட வாய்ப்பு தரக்கூடாதா?'' என்று கேட்டனர்.

இந்த அமைச்சர்களுக்குப் பாடம் புகட்ட வேண்டும் என்று நினைத்துக் கொண்ட அரசர், ''சரி, உங்களுக்கு ஒரு வாய்ப்பு தருகிறேன். எனக்கு ஒரு அடி நீள புகை வேண்டும். கொண்டு வருவீர்களா?'' என்றார்.

அமைச்சர்கள் திகைத்துப் போனார்கள்.

''எப்படிப் புகையைப் பிடிக்க முடியும்? அளக்க முடியும்?'' என்று புரியாமல் குழம்பிப் போய் நின்றனர். கடைசியில் அரசர், ''உங்களால் முடியாததால் ராமனை முயற்சி செய்யச் சொல்வோம்....'' என்றவர், ராமனைப் பார்த்து, ''ராமா, நீ தயாரா?'' என்று கேட்டார். ராமன் துள்ளிக் குதித்து, ''இதோ கொண்டு வருகிறேன்...'' என்றபடியே ஓடினான்.

சிறிது நேரத்தில் வந்தான். ஓர் அடி நீள கண்ணாடிக் குடுவை ஒன்றை எடுத்து, ஊதுபத்தி அருகே கொண்டு சென்று ஒரு பக்கம் மட்டுமே திறந்திருந்த அந்தக் குழாயின் வாய்ப் பகுதியை புகைக்கு நேராகக் காட்டினான். மெல்ல, குழாய் முழுவதும் புகை பரவி நின்றது.

''அரசே, இதோ நீங்கள் கேட்ட ஒரு அடி நீள புகை!'' என்றான் தெனாலிராமன்.

கிருஷ்ணதேவராயர் புன்னகையுடன், ''எந்தப் பிரச்சினையிலும் பயந்துவிடாமல் சமயோசிதமாக செயல்பட்டால் உடனடி தீர்வு கிட்டும்...'' என்றார். அமைச்சர்கள் அனைவரும் தலைகளைக் குனிந்து கொண்டனர்.

# ஐ வரிசைப் பழமொழிகள்

1. ஐங்காதம் போனாலும் தன் பாவம் தன்னோடே
2. ஐந்தும் மூன்றும் உண்டானால் அறியாப் பெண்ணும் கறியாக்குவாள்.
3. ஐயர் வருகிறவரை அமாவாசை காத்திருக்குமா?
4. ஐங்காயம் இட்டு அரைத்துக் கரைத்தாலும் தன்னாற்றம் போகாதாம் பேய்ச் சுரக்காய்க்கு
5. ஐந்து காசுக்கு போன மானம் ஆயிரம் பொன் கொடுத்தாலும் வராது.
6. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
7. ஐந்து காசுக்கு குதிரையும் வேண்டும் ஆறு கடக்கப் பாயவும் வேண்டும்.

க. ஆதீசன், தரம் 5டி,
யாழ்ப்பாணக் கல்லூரி.

## பொது அறிவு

★ மனித உரிமைகள் கூட்டம் மார்ச் மாதம் எங்கே நடைபெற்றது?
ஜெனிவா

★ திருக்குறளில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் எழுத்து எது?
ன்

★ இலங்கையில் அருகி வரும் இனம் எது?
கஃபீர்

★ மனித உடலிலுள்ள மிகச் சிறிய உறுப்பு எது?
ஈரல்

★ பாலைவனத்து ரோஜா என அழைக்கப்படும் பெண் யார்?
அஸ்மா பேஷன்

அ.திவ்வியா, தரம்-8ஓ,
ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.

# உலகின் ஆழமான அழகிய ஏரி பைக்கால்



உலகின் ஆழமான அழகிய ஏரி எது எனக் கேட்டால், பொதுவாக விடயம் தெரிந்த அனைவரும் சொல்வது கஸ்பியன் கடல் என்றுதான். ( இது கடல் என்று அழைக்கப்பட்டாலும் விஞ்ஞான ரீதியில் இது ஒரு ஏரியாகும்.) ஆனால் உண்மை அதுவல்ல! உண்மையில் உலகில் ஆழமான ஏரி சைபீரியாவில்(Siberia) உள்ள பைக்கால் ஏரியாகும்! இதன் ஆழம் சுமார் 1620 மீற்றர்களாகும். இது ஆழமான ஏரி மட்டுமல்லாது உலகில் பழைமையான ஏரியாகவும் கருதப்படுகிறது. சுமார் 25 மில்லியன் வயதுடையது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். 636 கிலோமீட்டர் நீளமும் 80 கிலோமீட்டர் அகலமும் உள்ள இந்த ஏரி உலகிலுள்ள சுத்தமான நீரில் 20 வீதத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. சைபீரியா குளிரான பகுதி என்பது நாம் அறிந்ததே. அங்கு கடும் குளிர்காலம் ஏற்படும்போது இந்த ஏரி 115 மீட்டர் தடிப்புக்கு ஐஸ்கட்டியாகிவிடும்! நினைத்துப்பாருங்கள் அப்போது எப்படி இருக்கும் என்று. உலகை வலம் வர நினைப்பவர்கள் ஒரு முறை சென்று பார்க்கவேண்டிய அழகிய இடங்களில் இதுவும் ஒன்று....

## எனது நண்பி



எனது நண்பி மிகவும் நல்லவர்
நானும் எனது நண்பியும் சேர்ந்து
பாடம் படிப்போம்
நானும் நண்பியும் சேர்ந்து விளையாடுவோம்
எனது நண்பியை எனக்கு மிகவும் பிடிக்கும்

த.அபிநயா, தரம்-2 சி,
யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.

## விடை தெரியுமா? 215

### உங்களுக்கும் பரிசுகள்

1. யாழ். நூலை எழுதியவர் யார்?
2. அதிக நீர் அருந்தும் பறவை எது?
3. முப்பொறிகள் எவை?
4. நீரானி இயந்திரத்தை கண்டு பிடித்தவர் யார்?
5. கப்பலின் தொற்று நோய் இருந்தால் கட்டப்படும் கொடியின் நிறம் என்ன?

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

### விடை தெரியுமா?

தெரிந்தால் 15.06.2013 இற்கு முன் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### விடைகள் 213

1. சிலந்திப் பூச்சி
2. ஒலிங்
3. ரோம்
4. முதலை
5. 33

### வெற்றி பெற்றவர் விவரம் (213)


* நா. ஸ்ரீகிருஷ்ணா, தரம் 4டி, யாழ்ப்பாணக் கல்லூரி




லோ.கோபிகா, தரம்-6
சுண்டுக்குழி மகளிர் கல்லூரி



எஸ். அனிருத்தன், தரம்-2
மானிப்பாய் மகளிர் கல்லூரி



சித்தங்கேணி பாலர் பாடசாலை





சு.சுவேந்திரன், தரம்-9டி
வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி உதயன் 16 06 2013 ஞாயிற்றுக்கிழமை

# பில்கேட்ஸ்

## உலகப் பணக்காரன் உருவான கதை

03




■அழகிய பாண்டியன்

### கம்ப்யூட்டர் காதல்

பில்கேட்ஸின் தந்தை சியாட்டல் நகரில் ஒரு புகழ் பெற்ற வக்கீலாக இருந்ததால் அவரைத் தேடிப் பல்வேறு தொழில்களைச் சார்ந்தவர்களும் வருவது வழக்கம். அவர்களுக்காகப் பல்வேறு வரையான வார, மாத இதழ்களை வாங்கிப் போட்டிருப்பார் பில்கேட்ஸின் தந்தை.

நேரம் போகாத போது பில்கேட்ஸ் அந்தப் பத்திரிகைகளை எடுத்து வைத்துக் கொண்டு ஒன்று விடாமல் வாசித்து முடிப்பார். குறிப்பாக வியாபாரம் சார்ந்த பத்திரிகைகள் அவரது கவனத்தை அதிகம் கவர்ந்தன.

''ஒரு தொழில் எப்போது தொடங்கப்பட்டது? எப்படி வளர்ந்தது? அதன் நிறுவுநர் அந்தத் தொழிலை எப்படி வெற்றிகரமாக வழி நடத்தினார்?'' போன்ற விவரங்களை எல்லாம் படித்த போது, வருங்காலத்தில் தானும் ''ஒரு தொழிலைத் தொடங்கி வெற்றிகரமாக நடத்த வேண்டும்'' என்கிற ஆர்வம் அப்பொழுதே அவருக்குத் தோன்றி விட்டது.

பள்ளியில் இருக்கும் போதுகூட மற்ற சிறுவர்களுடன் சேர்ந்து கொண்டு ''வியாபார விளையாட்டு'' விளையாடுவார். அது என்ன வியாபார விளையாட்டு?

ஒவ்வொரு சிறுவனும் தன்னை ஒரு தொழிலதிபராகப் பாவித்துக் கொண்டு கற்பனையாக ஒரு கம்பனியைத் தொடங்கிக் கொள்ள வேண்டும். அந்தக் கம்பனியில் எந்தப் பொருள் எப்படி விளம்பரம் செய்யப்படுகிறது? அந்தப் பொருளை எப்படி உற்பத்தி செய்ய வேண்டும்? தெருவில் அதை எப்படிக் கூவிக் கூவி விற்க வேண்டும்? என்பதை எல்லாம் ஒவ்வொரு மாணவனும் பேசி நடித்துக் காட்ட வேண்டும். இதில் யாருடைய வியாபார யுக்தி சிறப்பாக இருக்கிறதோ அவனே வெற்றியடைந்ததாக அறிவிக்கப்படுவான்.

இந்த விளையாட்டுக்காகப் பில்கேட்ஸ் தன் வீட்டிலிருக்கும் பிஸினஸ் பத்திரிகைகளைப் படித்துப் பார்த்து, அதன்படி சக மாணவர்களிடம் பேசி அடிக்கடி வெற்றி பெறுவது வழக்கம். இந்த வெற்றிக்காகப் பில்கேட்ஸை அவரது நண்பர்கள் பாராட்டும் போது பிற்காலத்தில் தானும் ''தொழிலதிபர் ஆக வேண்டும்'' என்கிற ஒரு ஆசை அவருக்குள் ஒரு விதையாக விழுந்து விட்டது. அதற்காக மேலும் மேலும் வியாபாரம் சார்ந்த பத்திரிகைகளைப் படித்துப் படித்துத் தன் ஆர்வத்தையும் வியாபார அறிவையும் வளர்த்துக் கொண்டார்.

இப்படிப்பட்ட வியாபாரப் பத்திரிகைகளைப் படித்துக் கொண்டிருந்த போதுதான், கணினி பற்றியும், கணினித் தொழில் அமெரிக்காவில் வளர்ச்சியடைந்து வருவது பற்றியும், பில்கேட்ஸுக்குப் புரிந்தது.

எந்த ஒரு அறிவியல் சாதனமும் மனிதனைக் கவர்ந்து விடுவதுபோல் ''கணினி என்கிற அந்த மாயஜால மந்திரக் கருவி பில்கேட்ஸைக் கவர்ந்து விட்டது. கணினியின் தோற்றம், செயற்பாடுகளைப் பற்றிப் படிக்கப் படிக்க, அந்த இயந்திரம் அவரைத் தனக்குள் ஈர்த்துக் கொண்டது.

''ஒரு கணினியை நேரில் பார்க்க வேண்டும்'' என்கிற ஆசை அவருக்குள் வளர்ந்து கொண்டிருந்தாலும் அந்த ஆசை நிறைவேறுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. காரணம், இப்போது இருப்பதைப் போல வீதிக்கொரு கணினி நிலையம் எல்லாம் அப்போது அமெரிக்காவில் கிடையாது.

கணினி என்பது அப்போது பெரிய நிறுவனங்களிலும், பெரிய பணக்காரர்களிடமும் மட்டுமே புழங்கி வந்த சாதனம். அதைப் பில்கேட்ஸ் போன்ற சிறுவர்கள் எப்படி எளிதாகப் பார்த்துவிட முடியும்?

பார்க்க முடியாவிட்டாலும் அதைப் பற்றிய செய்திகளைப் படித்தறிந்து கொள்வதில் தீவிரம் காட்டினார். இப்படியாகப் பில்கேட்ஸின் இளம் வயதிலேயே அவரது மூளையை முற்றுகையிட்டது கணினி.

விடுமுறை நாள்களில் பில்கேட்ஸின் அறிவுத் திறனை வளர்க்கும் பொருட்டு, அவரது பெற்றோர் அவரிடம் 'புதிர் விளையாட்டு' விளையாடுவது வழக்கம்.

புதிர் விளையாட்டு என்றால் ஏறக்குறைய விடுகதை போன்றதுதான். பில்கேட்ஸின் கணிதத் திறனை அதிகரிப்பதற்காக அதிகப்படியான கணித புதிர்களைப் போடுவார்கள். கடினமான புதிரைப் போட்டுவிட்டு ''இதை உன்னால் கண்டு பிடிக்கவே முடியாது'' என்று உசிப்பேற்றி விடுவார்கள். ''முடியும்! இதோ கண்டுபிடித்துக் காட்டுகிறேன்'' என்று சவால் விடும் பில்கேட்ஸ், நீண்ட நேரம் யோசித்து, விடையைக் கண்டுபிடித்துக் கூறி, தன் பெற்றோரிடம் 'சபாஷ்' வாங்கிய பிறகே மற்ற வேலையைக் கவனிப்பார்!

பில்கேட்ஸின் பெற்றோர் ''இந்த வேலையைச் செய்'' என்று அவரிடம் சொன்னால் நிச்சயம் அதைச் செய்ய மாட்டார். இதைப் புரிந்து கொண்ட பெற்றோர் ''இந்த வேலையைச் செய்ய உன்னால் முடியாது'' என்று சவால் விடுவார்கள். உடனே அந்தச் சவாலை ஏற்றுக் கொண்டு வெற்றிகரமாக அதைச் செய்து முடிப்பார் கேட்ஸ். இப்படித்தான் சவாலை எதிர்கொண்டு ஜெயித்துக் காட்டுவது இளமையிலேயே அவருக்குப் பிடித்த விளையாட்டாக இருந்தது.

வியாபார விளையாட்டு, புதிர் விளையாட்டு, சவால் விளையாட்டு போன்றவற்றை விளையாடிக் கொண்டிருந்த பில்கேட்ஸுக்கு கணினியுடன் விளையாடவும் நேரம் வந்தது.

*(வளரும்)*

> எந்த ஒரு விஞ்ஞான சாதனமும் மனிதனைக் கவர்ந்து விடுவதுபோல் கணினி என்கிற அந்த மாயஜால மந்திரக் கருவி பில்கேட்ஸைக் கவர்ந்து விட்டது. கணினியின் தோற்றம், செயற்பாடுகளைப் பற்றிப் படிக்கப் படிக்க, அந்த இயந்திரம் அவரைத் தனக்குள் ஈர்த்துக் கொண்டது.

## ஜம்புவின் தடாலடி 3

## எல்லாக் குச்சிகளும் நல்ல குச்சிகளே.....



அன்றிரவு முழுதும் ஒரே மழை. எங்கோ ஒரு மரம் மின்கம்பயில் விழுந்துவிட்டது.அதனால் இரவுமுழுதும் மின்வெட்டு. ஜம்புலிங்கம் புத்திசாலித்தனமாக நாலைந்து மெழுகுவர்த்திகளை வாங்கிவைத்திருந்தார். அவற்றைக் கொளுத்தினால் இருட்டை தொலைத்து இரவை ஒளியாக்கலாம் என்ற எண்ணம் வரவே ஜம்புவின் மனைவி, ''இஞ்சேருங்கோப்பா! நெருப்பெட்டியை ஒருக்கா தாங்கோ. இந்த மெழுகு திரிகளை கொளுத்துவம்...'' என்று கேட்டார். உடனேயே பொக்கற்றில் இருந்த தீப்பெட்டியை எடுத்துக்கொடுத்தார் ஜம்புலிங்கம். ஆனால் மனைவி ஒன்றுக்கு பத்து தீக்குச்சிகளை உரசியும்கூட , அவற்றிலிருந்து சிறுபொறிகூட வரவில்லை. உடனே மனைவி, ''உங்களை ஆரோ நல்லாப் பேய்க்காட்டிப் போட்டாங்கள். எரியாத மெழுகுதிரியை உங்கட தலையில கடைக்காரன் கட்டிப்போட்டான்'' என்று முணுமுணுத்தாள். ஜம்புவுக்கு வந்ததே ஆத்திரம்.

''நீ இப்படிச் சொல்லுவாய் எண்டு தெரிஞ்சுதான் நெருப்பெட்டியை வாங்கின உடன கடையில வைச்சே எல்லாக் குச்சியும் எரியுதோ எண்டு கொளுத்திப்பாத்துட்டுத்தான் உள்ள வைச்சனான்.அப்ப எல்லாக்குச்சியும் எரிஞ்சதுதானே. உனக்கு கொளுத்த தெரியுமல்லை [illegible] என்[illegible] தொடங்கினார் ஜம்புலிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனின் தாய் யார்



ஜெயச்சந்திரன்

ஜாதி, மத, மொழி, நாடு என்ற பேதமின்றி இந்த பூமி யில் உள்ள அனைத்து மனிதர்களும் ஒரு தாய் மக்களே. அந்தத் தாய் யாரென்று அறிந்தால் மிகவும் ஆச்சரியமும், பெருமையும் கொள்வீர்கள். அந்தத் தாய் நட்சத்தி ரம் தான். நம்மில் பலர் நட்சத்திரம் (ஸ்டார்) ஆக வேண்டும் என்று கனவு கண்டிருப்பார்கள். அவர்களுக்கு, தாங் கள் நட்சத்திரத்தின் குழந்தைகள்தான் என்ற செய்தி பெருமையாகத்தானே இருக்கும்.

**உயிர் உருவான விதம்**

உயிர்கள் உருவாக பல தனிமங்கள் தேவை. மனிதர்களாகிய நமக்கு குருதி சுத்தமாவதற்கு வேண்டிய 'ஒக்சிஜன்', எலும்பின் உறுதிக்குத் தேவையான 'கல்சியம்', குருதிக்கு வேண்டிய இரும் புச் சத்து, மற்றும் 'கார்பன்', 'நைட் ரஜன்', 'பொஸ்பரஸ்' என்று தனிமங் களும், கூடவே உப்பில் உள்ள 'சோடி யம்' மற்றும் 'பொட்டசியம்', 'மக்னிசி யம்' போன்ற பல தனிமங்கள் தேவை. அவை இல்லை என்றால் உயிர் வாழ இயலாது என்பது அனைவருக்கும் தெரியும். மேலும் தங்கம், வெள்ளி, அலுமினி யம் போன்ற பல தனிமங்கள் நம் வாழ்வில் பின்னிப் பிணைந்துள்ளன.

இந்தத் தனிமங்களை ஒன்று, இரண்டு, மூன்று என்று வரிசைப்-படுத்தி அறிவி யலாளர்கள் ஓர் அட்டவணையை ஏற்படுத்தியுள் ளனர் (PERIODIC TABLE). இந்தத் தனிமங்களைப் பற்றி ஆராய்ந்து அதன் அமைப்பு, குணங்கள், பயன் கள் போன்றவற்றை அறிந்து, அவை களைப் பயன்படுத்தி, நாம் வாழ்வை இனிதே நடத்த அறிவியலாளர்கள் வழி வகுத்திருக்கிறார்கள்.

மாரடைப்பு வந்தால் உயிருக்குப் போராடும் ஒருவருக்குத் தேவையான, ஒக்சிஜன் மற்றும் பல மருந்துகளைக் கொடுத்து, பாசக்கயிறைப் போட்டு இழுத்துக் கொண்டிருக்கும் எமனிடம் போராடி, அந்த பாசக்கயிறை அறுத்து, போய்க்கொண்டிருந்த உயிரை மீண் டும் கொண்டு வர உதவுவார் மருத்துவர்.

ஒவ்வொரு தனிமங்களின் குணங் களை வெகுநாள் ஆய்ந்து அறிந்த அறிவியலாளர்கள் பணி தான் அவர் களுக்கு உதவியா யிருக்கின்றது.

இந்தத் தனிமங்கள் எல்லாம் பூமியில் கிடைக்கின்றன. சரி பூமிக்கு இவை எப்படி வந்தன?

**தனிமங்கள் வந்தவிதம்**

நட்சத்திரங்களில்தான் முதலில் இவை எல்லாம் உருவாகின என்று அறிவிய லாளர்கள் சொல்லுகிறார்கள். ஏன் பூமியில் நாம் காணும் அனைத்துப் பொருள்களும் நட்சத்திரத்திலிருந்து தான் உருவாகின. நட்சத்திரத்திலி ருந்து அவை பூமிக்கு எப்படி வந்தன? நம் சூரியன் என்ற நட்சத்திரத்தில் இது போன்ற பொருள்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. ஆனால் நம் சூரியனில் உருவாகும் பொருள்கள் நமக்குக் கிடைக்காது. நம்முடைய சூரியனின் தாத்தாவாகிய முதல் தலை முறை நட்சத்திரம் உருவாக்கியதை நாம் அனுபவிக்கிறோம். மூன்றாம் தலைமுறை யைச் சேர்ந்த நமது சூரியன் உருவாக்கும் பொருள்கள் நமக்குப் பின்னால் வரும் தலை முறைக்கும், உயிர்களுக்குத்தான் உபயோ மாகும்.

சுமார் 1,370 கோடி ஆண்டுகளுக்கு முன் தோன்றி, ஒரு பலூனைப் போல விரிவடைந்த இந்த பிரபஞ்சத்தின் ஆரம்பத்தில் இரண்டே இரண்டு தனிமங்கள்தான் இருந்தன. அவை 'ஹைட்ரஜன்' மற்றும் 'ஹீலியம்' (சுமார் 75 சதவீதம் 'ஹைட்ரஜன்', 25 சதவீதம் 'ஹீலியம்'). வாயுக்களான இவை இரண்டுமல்லாமல் நாம் காணும் நட்சத்திரங்கள், கோள்கள் எதுவுமே, ஏன் எந்தத் தூசும்கூட பிரபஞ்சத்தின் ஆரம்பத்தில் இல்லை.

ஆச்சரியம் என்னவென்றால் அந்த இரண்டு தனிமங்கள் (வாயுக்கள்) தான் இப்போது நாம் காணும் கோடிக் கணக் கான நட்சத்திரங்களும், அதைச் சுற்றி வரும் கோள்களும், இந்த பூமியும், அதில் நாம் காணும் அனைத்துப் பொருள்களுமாக உருமாறின.

**முதல் தலைமுறை நட்சத்திரங்கள்**

பிரபஞ்சத்தின் ஆரம்பத்தில் தோன்றிய 'ஹைட்ரஜன்' அணுக்களின் ஈர்ப்பு விசையினால் ஏற்பட்ட பிணைப்பினால்தான் பிரபஞ்சத்தின் முதல்தலைமுறை நட்சத்திரங்கள் உருவாகின. பலகோடி வெப்பத்தைக் கொண்ட இந்த நட்சத்திரத்தின் உள்ளே, அந்த வெப்பத்தினால் 'ஹைட்ரஜன்' அணுக்கள் இணைந்து 'ஹீலியம்' என்ற தனிமம் புதிதாக உருவாகியது. இந்த இணைப்பில் தோன்றும் ஆற்றல்தான் ஒளியாகிறது. நட்சத் திரங்களுக் குள்ளே தொடர்ந்து பல கோடி ஆண்டு களாக இந்த இணைப்பு நடந்து கொண்டே இருக்கின்றது.



முதல் தலைமுறை சூரியன் தன வாழ் நாள்கள் முடிந்தபின் அதி பயங்கரமாக வெடித்துச் சிதறும். பிரபஞ்சத்தில் அது மிக அற்புதமான காட்சி யாகும். 'சூப்பர் நோவா' என்று கூறுவார் இதனை.



நட்சத்திரதிற்குள்ளே இரண்டு 'ஹைட் ரஜன்' இணைந்து ஒரு 'ஹீலியம்' அணு புதிதாக உருவாவதுபோல, கூடவே இன்னும்பல அணுச்சேர்க்கை கள் நடக்கின்றன. புதிதாக உண்டான இரண்டு 'ஹீலியம்' அணுக்கள் இணைந்து 'பெரிலியம்' என்ற தனிமம் உண்டா கிறது. அதோடு நிற்காமல் ஒரு 'ஹீலி யம்' அணுவும் ஒரு 'பெரிலியம்' அணு வும் சேர்ந்து உயிர்களுக்குத் தேவை யான முக்கியமான தனிமம் 'கார்பன்' உருவாகிறது.

புதிதாகத்தோன்றிய அணுக்களின் இணைப்புமேலும்தொடர்கிறது. இரண்டு 'பெரிலியம்' அணுக்கள் இணைந்து நம் உயிரின் ஆதார மான 'ஒக்சிஜன்' உருவாகிறது. இரண்டு 'கார்பன்' அணுக்கள் இணைந்து ஒரு 'மக்னீசியம்' அணு உருவாகிறது. இப் படி பற்பல அணுச் சேர்க்கைகள் நடந்து ஒன்று, இரண்டு என்று தனிமங்களை வரிசைப்படுத்திய அட்ட வணையில் உள்ள 26 என்ற எண் கொண்ட இரும்பு வரை நட் சத்திரங்களுக்கு உள்ளே பெருமளவில் உற்பத்தியாகிறது.

நட்சத்திரங்களுக்குள் உள்ள கோடி டிகிரி வெப்பத்தில்தான் இந்த அணுச் சேர்க்கைகள் நடக்க முடிந்தது. அறிவி யல் வளர்ந்த இன்றைய காலத்தில் புதிய தனிமங்களை உண்டாக்கும் பணியில் மனிதன் இறங்கி சில தனிமங்களை உண்டாக்கி வெற்றியும் பெற்றுள்ளான். முன்னதாக பூமியில் உள்ள தனிமங்களிலிருந்துதான் அவை உருவாக்கப்பட்டன. சிறிய அளவில் தான் இவைகளை உருவாக்க முடிந் துள்ளது. பெருமளவில் பூமியில் கிடைப் பவை நட்சத்திரங்களில் உற்பத்தியானவை.

**நட்சத்திர வெடிப்பு**

தனிமங்களின் அட்டவணையில் இரும் பிற்கு மேல் உள்ள தனிமங்களான தங்கம், வெள்ளி, யூரேனி யம் போன் றவை உண்டாக, நட்சத்திரங்களில் உள்ள வெப்பத்தைக் காட்டிலும் அதிக வெப்பம் தேவை. அதனால் நட்சத்திரங்களுக் குள் தனிமங்கள் உற்பத்தி, மூடப்பட்ட தொழிற் சாலை போல நின்று விடுகிறது.

அந்த முதல் தலைமுறை சூரியன் தன வாழ்நாள்கள் முடிந்தபின் அதிபயங்கர மாக வெடித்துச் சிதறும். பிரபஞ்சத்தில் அது மிக அற்புதமான காட்சியாகும். 'சூப்பர் நோவா' என்று கூறுவார் இதனை.

**நோபுல்லா**

அப்படி வெடிக்கும்போது உண்டாகும் அதிபயங்கர வெப்பத்தில் இரும்பு அணுக் களும் அணுச்சேர்க்கையால் இணைந்து இரும்பிற்கு மேல் அணு எண் கொண்ட யூரேனி யம், தங்கம், வெள்ளி போன்ற மற்றெல்லா தனிமங்களும் உண்டாகி, நட்சத்திரம் வெடிக்கும் போது, வாயுக்களாக பிரபஞ் சத்தில் தூக்கி எறியப்பட்டு பல கோடி மைல்கள் பரந்து விரிந்து கிடக்கும், பார்க்கப் பரவசமூட்டும் இந்த வாயுக் கூட்டங்களை நேபுல்லா என்றழைப்பர். இந்த நேபுல்லா என்ற வாயுக்கூட்டதில் நட்சத்திரத்தில் உருவான எல்லா தனி மங்களுடன், பிரபஞ்சத்தில் ஏற்கனவே உள்ள 'ஹைட்ரஜன்' வாயு வும் கலந்தி ருக்கும். பிரசவ மருத்துவமனை யில் பெண்கள் அனும திக்கப்படும்போது எல் லோ ருக்கும் தெரியும், குழந்தை கள் பிறக்கப் போகின்றன என்று. அதே போல பிர பஞ்சத்தில் காணும் இந்த 'நேபுல்லா' என்ற வாயுக் கூட்டங்களை காணும் விண் வெளி ஆய்வாளர்களுக்கு அந்த வாயுக்கூட் டத்தில் நட்சத்திரங்கள் பிறக்கப் போகின் றன என்று தெரியும்.

**புதிய நட்சத்திரம் உருவாகும் கதை**

காரணம் , ஈர்ப்பு விசை தன் பணியை அங்கு துவக்கும். 'ஹைட்ரஜன்' அணுக் கள் ஒன்றை ஒன்று இழுத்து, வெப்ப மும் அடர்த்தியும் அதிகமாகி, புதிய அடுத்த தலைமுறை நட்சத்திரம் (நமது சூரியனைப் போல) உருவாகும்.

நட்சத்திரத்தின் தோற்றம் ஒரு அதி பயங்கர வெடிப்புடனும், அதிர்வுடனும் நடக்கும். புதிதாக தோன்றிய நட்சத்திரத் தைச் சுற்றி, தூசுகளும், வாயுக்களும் வெடிப்பினால் எறியப்பட்டு அவைகள் அந்த நட்சத்திரத்தைச் சுற்ற ஆரம்பிக் கும். அவைகளும் ஈர்ப்பு விசையால் இணைந்து, முதலில் சிறு சிறு பாறை களாக உருவாகி, அந்தப் பாறைகள் மேலும் ஒன்றுடன் ஒன்று இணைந்து, அந்த நட்சத்திரத்தைச் சுற்றிவரும் கோள்களாக உருவாகும். அந்தத் தூசுகளிலும், வாயுக்களிலும்தான் எல்லாத் தனிமங்களும் உள்ளனவே. அதனால்தான் அந்தக் கோள்களில் ஒன்றான நமது பூமியிலும் அனைத்து தனிமங்களும் கிடைக்கின்றன.

சூரியனைச் சுற்றிவரும் கோள்கள் தவிர மற்ற பாறைக ளிலும் (ASTEROID) இந்தத் தனிமங்கள் இருக்கும். ஏனென்றால் சூரியன் உருவாகும்போது உண் டான கோள்களைப்போல தோன்றிய துதான் அந்தப் பாறைகளும். நமது சூரிய குடும்பத் தைச் சுற்றிவரும் அந்தப் பா றைகளில் தங்கம் உட்பட பல தனிமங்கள் இருப்பதை தற் போதுகண்டுபிடித்துள்ளனர்.

**வைரக் கோள்**

சமீபத்தில் ஒரு கோள் கண்டு பிடிக் கப்பட்டது. பூமியை விட இரண்டு மடங்கு பெரிய அந்தக் கோள் முழுவ தும் வைரங்கள் நிறைந்து கிடக் கின்றன. ஒருதடவை சென்று வந்தால், உலகத் தின் முதல் கோடீஸ்வரன் ஆகிவிட லாம். சிக்கல் என்னவென்றால் அந்த கோள் நாற்பது ஒளி யாண்டுகள் தொலைவில் உள்ளது. எப்படியாவது முயற்சி செய்து அங்கே போய் சேர்ந்து விடலாம் என்று நினைப் போருக்கு ஒரு மோசமான தகவல் என்னவென்றால் அங்கு வெப்பம் சுமார் 4,000 டிகிரி வரை உள்ளது என்பதுதான். பூமியில் உள்ள சத்துக்களை எடுத்து விளையும் பயிர்களைத் தின்று வளரு ம் மிருகங்களை யும், அந்த மிருகங் களையும், பயிர்களையும் உண்டு வள ரும் நாமும் அடிப்படையில் நட்சத் திரத்தில் இருந்து வந்தவர்கள் தான். இனி யாரவாது நம்மைப் பார்த்து நீங் கள் எங்கிருந்து வருகிறீர்கள் என்று கேட்டால், எந்த வித ஐயமுமின்றி நான் நட்சத்திரத்திலிருந்து வருகிறேன் என்று கூறலாமல்லவா?

**நட்சத்திரத்தின் குழந்தைகள்**

நட்சத்திரத்தின் உள்ளே உற்பத்தியான நாம் எல்லாம் அதன் பிள்ளைகள் அல்லவா? நாம் அனைவரும் ஒரு தாய் மக்களல்லவா? ஒரு காலத்தில் ஆப்பிரிக்காவிலிருந்து வெளியேறி, புவியின் பல பகுதிகளுக்கும் பரவிச் சென்ற மனிதம் ஒரு மாபெரும் குடும் பம் என்பதை இந்த அறிவியல் உண்மை மீண்டும் நிரூபிக்கின்றதல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோபுரத்தின் மகிமை

முற்காலத்தில் ஊரில் கோயில் கோபுரத்தை விட உயரமாக எந்தக் கட்டடமும் இருக்கக் கூடாது என்று ஒரு எழுதாத சட்டம் இருந்தது. ஏன் அப்படி?

கோயில்களையும் உயரமான கோபுரங்களையும் அதன் மேல் இருக்கும் கலசங்களையும் பார்த்திருப்பீர்கள். ஆனால், அதன் பின் எவ்வளவு பெரிய அறிவியல் ஒளிந்திருக்கிறது என்பதைப் பார்த்திருக்க மாட்டீர்கள். கோபுரத்தின் உச்சியில் தங்கம், வெள்ளி, செம்பு போன்ற ஐம்பொன்னால் செய்யப்பட்ட கலசங்கள் இருக்கும். இக்கலசங்களில் தானியங்களும், உலோகங்களும் வைக்கப்படும். கலசமும் அவற்றில் வைக்கப்படும் பொருள்களும் சேர்ந்த மின் காந்த அலைகளை ஈர்க்கும் சக்தியைப் பெறுகின்றன.

நெல், உப்பு, கேழ்வரகு, தினை, வரகு, சோளம், சாமை, எள் ஆகியன கலசங்களுக்குள் கொட்டப்படுகின்றன. குறிப்பாக வரகு தானியம் அதிகமாகக் கொட்டப்படுகின்றது. காரணத்தைத் தேடிப் பார்த்தால் ஆச்சர்யமாக இருக்கிறது. வரகு மின்னலைத் தாங்கும் அதிக ஆற்றலைப் பெற்றிருக்கிறது என இப்போதைய அறிவியல் கூறுகிறது.

பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒரு முறை குடமுழுக்கு விழா என்ற பெயரில் கலசங்களில் இருக்கும் பழைய தானியங்கள் நீக்கப்பட்டு புதிய தானியங்கள் நிரப்பப்படுகின்றன. அதை இன்றைக்கு சம்பிரதாயமாகவே மட்டும் கடைபிடிக்கிறார்கள். காரணத்தைத் தேடினால், அந்த தானியங்களுக்குப் பன்னிரெண்டு வருடங்களுக்குத்தான் அந்த மின் காந்த அலையை ஈர்க்கும் சக்தி இருக்கிறது என்கின்றன ஆய்வுகள். அதன் பின் அது செயல் இழந்து விடுகிறது. இதை எப்படி அப்போது அறிந்திருப்பார்கள்..? ஆச்சர்யம்தான்.

ஓர் இடத்தில் எது மிக உயரமான இடத்தில் அமைந்திருக்கிறதோ அதுதான் இடி தாங்கும். அதுதான் முதலில் 'எர்த்' ஆகும். மேலும் அது எத்தனை பேரைக் காப்பாற்றும் என்பது அதன் உயரத்தைப் பொறுத்தது. அடிப்படையில் கலசங்கள் இடிதாங்கிகள். கோபுரத்தின் உயரம் ஐம்பது மீட்டர் என்றால் நூறு மீட்டர் விட்டம் வரைக்கும் பரப்பில் எத்தனை பேர் இருந்தாலும் அவர்கள் இடி தாங்காமல் காக்கப்படுவார்கள். அதாவது சுமார் 75,008 மீற்றர் பரப்பளவிலிருக்கும் மனிதர்கள் காப்பாற்றப்படுவார்கள்.

சில கோயில்களுக்கு நான்கு வாயில்கள் உள்ளன. அது நாலாபுறமும் 75,000சதுர மீற்றர் பரப்பளவைக் காத்து நிற்கிறது. இது ஓர் அண்ணளவான கணக்குத்தான். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று இதற்காகத்தான் சொல்லி இருப்பார்கள்.

# கடவுளின் வருகை



வேல்- லவன்

என் மாய மாளிகையில்
நான் கொலுவீற்றிருக்கிறேன்
எனது மௌனங்களை
மொழிபெயர்த்து ஒலி எழுப்பிவிடாமல்
வார்த்தையாடிக்கொண்டிருக்கிறது
என் தனிமை.

நான் கடவுளின்
வருகைக்காக காத்திருக்கிறேன்
இன்று என்னிடம் வருவதாக
முன்பொருநாள்
கடவுள் சொல்லியிருந்தார்
துணைக்கு தனிமையை
அருகில் வைத்துக்கொண்டு
கடவுளுக்காக காத்திருக்கிறேன்.

இதோ...கடவுள் வந்துவிட்டார்
சாந்த சொரூபியாக பரம சாதுவாக
கொவ்வைச்செவ்வாயில் குமுண்சிரிப்புடன்
என்னருகமர்ந்தபடி
திருவாய்மலர்ந்தார் கடவுள்.

மானிடா... உனக்காக இரண்டு
உலகங்களை படைத்திருக்கிறேன்
இந்த மாயமாளிகையை
நீறாக்கிவிட்டு விரும்பிய உலகில்
வாழ்வாயாக என வரமளித்தார் கடவுள்.

இரண்டு உலகங்களிலும்
உன் வேண்டுகைகள்
யாவும் நிறைவேறும்
அழகுகள் கொட்டிக்கிடக்கும்
அங்கு ஓடும் நீர்வீழ்சிகளில் நீந்தி
உன் பிறவித்தளைகளை அறுக்கலாம்
விளைகின்ற எதையும் உண்ணலாம்
உரிமையாக்கியும் கொள்ளலாம்
ஆனாலும் ஒரு விடயத்தில்
இரண்டு உலகங்களிடையே
வேறுபாடிருக்கும்.

கடவுள் பேச்சை நிறுத்திக்கொண்டார்
ஆர்வம் தாங்கொணாது
என்ன வித்தியாசம் என்று கேட்டேன்
கூர்ந்து பார்த்த கடவுள்
புன்முறுவலோடு சொன்னார்.

ஒரு உலகம்
பூக்ககளால் நிரப்பப்பட்டிருக்கும்
அங்கு உன் ஆயுளை
நானே தீர்மானிப்பேன்
மற்றைய உலகத்தில்
பூக்களை நீ காணவே முடியாது
உன் ஆயுளை
நீயே தீர்மானிக்கலாம்
இவை ஆண்டவர்
வழங்கிய அருள்வாக்கு.

பூக்களின் உலகம்
பூக்களில்லாத உலகம்
ஆயுளின் தீர்மானம்
எதைப்பற்றியும் சிந்திக்காமல்
கடவுளிடம் சொன்னேன்.

கடவுளே...
நீர் விண்மீன்கள் சூழ்ந்திருக்கும்
பிரபஞ்சத்திலிருந்து
அண்டங்கள் காக்கும் ஆண்டவர்
நான் மின்மினிகள் சஞ்சரிக்கும்
பூவுலகத்தை சேர்ந்த
உம்மால் பாதுகாக்கப்படும்
ஒரு மானுடத்தேனி
உமது இரண்டு உலகிலும்
என்னால் ஜீவிக்கமுடியாது
முடிந்தால் மூன்றாவது உலகமொன்றை
எனக்காக படைத்தருளும்.

நீர்தான் தூவெண் மதிசூடிய
உள்ளங்கவர் கள்வனாயிற்றே
என்னுள்ளத்தில் நான்
செதுக்கியிருக்கும் சித்திரப்பூவை
உமது ஞானப்பார்வையால்
பிரதியெடுத்துக்கொள்ளும்.

அமைதியே அரசனாக
கொலுவிருக்கும் கந்தகநெடியில்லாத
மூன்றாவது உலகத்தில்
அச்சித்திரப் பூவிற்கு உயிர்கொடும்
அருகில் எனையமர்த்தி
உமது அன்பின் அடையாளமாய்
ஒரேயொரு ஆயுள்நாளை
எனக்களிப்பீராயின்
இப்பொழுதே என் கனவுமாளிகையை
நீறாக்கிவிடுகிறேன் என்றேன்.

கடவுள் திகைத்துப்போனார்
சில கணங்கள்
இருவரும் மௌனிகளானோம்
தனது பரிவாரங்கள் புடைசூழ
காலச்சிற்பியை அழைத்தவாறு
கடவுள் எழுந்து போய்விட்டார்.

மீண்டும் தனிமையை
துணைக்கு வைத்துக்கொண்டு
மௌனங்களைப் பெயர்த்து;
வார்த்தையாடிய படி
கடவுளின் மீண்டுமொரு
வருகைக்காக நான்
காத்திருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம் விளையாடும் புற்களம்



விளையாட்டு என்பது மனிதர்கள் இயல்பாக விரும்பி ஈடுபடும் ஒரு செயற்பாடு. விளையாட்டு என்பது பொழுது போக்குக்காகவும், மகிழ்ச்சிக்காகவும், கற்பித்தல் நோக்கத்துக்காகவும் நடத்தப்படும் கட்டமைப்பு கொண்ட ஒரு செயல். விளையாட்டு என்பது ஒரு விதமான கலை. விளையாட்டு, மனிதன் தனது உடல் திறன்களை திடமாக்கிக் கொள்ளும், பரிசோதித்துக் கொள்ளும் களங்களில் முக்கியமானது. விளையாட்டில் உடலை முதன்மையாக ஈடுபடுத்தினாலும் சிறப்பாக ஆட உள ஒழுக்கமும், ஒரு முனைப்படுத்தலும் இன்றியமையாதது.

## போரை நிறுத்திய போட்டி

1971ஆம் ஆண்டு அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் போர் மூளும் அபாயம் இருந்த காலகட்டம் அது. மூன்றாம் உலகப் போர் மூளும் என அச்சத்துடன் உலகத்தால் எதிர்பார்க்கப்பட்ட நிலை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையே நடந்த ஒரு டேபிள் டென்னிஸ் போட்டி, நடக்க இருந்த போரை தடுத்து நிறுத்தியது என்பது வரலாறு.

இப்படிப் பன்னெடுங்காலமாக விளையாட்டு மனிதனின் உடல் மற்றும் மன உறுதிக்கும், மக்களுக்குள் ஏற்படும் ஒற்றுமைக்குமான நல்ல களமாக இருந்து வந்துள்ளது. ஆனால் இன்றைய சூழ்நிலையில் விளையாட்டு பன்னாட்டு நிறுவனங்களின் பணம் சம்பாதிக்கும் தொழிலாகவும், மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தி அவர்கள் அறியாமல் அவர்களின் உணர்வுகளை உறிஞ்சி, உணர்ச்சிகளை தூண்டும் காரணியாகவும் மாற்றப்பட்டுவிட்டது.

## கிரிக்கெட் மோகம்

ஆதி முதல் விளையாடப்பட்டு வந்த சிலம்பம், கில்லி, சில்லாக்கு, கிளித்தட்டு போன்ற வாழ்வியல் சார்ந்த, வாழ்க்கையோடு ஒன்றிய விளையாட்டுகள் அனைத்தும் தற்கால சர்வதேச விளையாட்டுகளான கிரிக்கெட், டென்னிஸ், கால்பந்து, கைப்பந்து போன்ற விளையாட்டுகளின் ஆதிக்கத்தால் இருந்த தடம் தெரியாமல் போனது.

இதனிடையே சுமார் 400 ஆண்டுகளுக்கு முன் இங்கிலாந்து நாட்டில் தோன்றி மற்ற அனைத்து சர்வதேச விளையாட்டுகளையும வளரவிடாமல் செய்த பெருமை கிரிக்கெட்டையே சேரும். ஆரம்ப காலத்தில் பிரபுக்கள் என்று அழைக்கப்பட்ட மேட்டுக்குடி மக்கள் தங்கள் மீது சூரிய ஒளிபடும் விதமாக காலார நடந்து சிறிய அளவில் உடற்பயிற்சியும் செய்யும் விதமாக உருவாக்கப்பட்டதுதான் கிரிக்கெட்.

இதை ஆங்கிலேயர்கள் தாங்கள் ஆட்சி செய்த காலனி நாடுகளுக்கும் பரப்பினர். இன்றும் காலனி ஆட்சி நாடுகளான பொதுநலவாய நாடுகளின் கூட்டமைப்பில் அங்கம் பெற்றுள்ள நாடுகளில் மட்டுமே கிரிக்கெட் பெரிய அளவில் விளையாடப்படுகிறது. ஆனால் இன்று கூட இங்கிலாந்து நாட்டில் உழைத்து வாழும் மக்கள் கிரிக்கெட் விளையாடியதில்லை என்பது கண்கூடு.

இதன் அடிப்படையில் கிரிக்கெட் இலங்கைக்கு வந்த மேட்டுகுடி ஆங்கிலேயர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆங்கிலேயர்களுக்கு சாமரம் வீசிய மேட்டுக்குடியினரும் விளையாடி வந்தனர். இப்படியாக வளர்ச்சி பெற்ற கிரிக்கெட் இன்று நமது பாரம்பரியமான விளையாட்டுகளை அழித்து, நமது பண்பாட்டையும் கெடுத்து வருகிறது என்பது மறுக்க முடியாதது.

## சினிமாவுக்கு நிகர்

சொல்லப்போனால் சினிமாவுக்கும் கிரிக்கெட்டுக்கும் அடிப்படை குணங்கள் ஒன்றுதான். கவர்ச்சியான தொடக்கம், அதிரடியான வளர்ச்சி, சஸ்பென்ஸான முடிவு என்று பல விடயங்கள் சினிமாவை விட கிரிக்கெட்டில் அதிகம் இருக்கின்றன.

காலையில் எழுந்தவுடன் மக்களின் முதல் தெரிவு தொலைக்காட்சியாகி விட்டது. அதில் ஒரு சாரார் சினிமா, மற்றொரு சாரார் கிரிக்கெட் பார்க்கின்றனர். சொல்லப்போனால் சினிமாவுக்கும் கிரிக்கெட்டுக்கும் அடிப்படை குணங்கள் ஒன்றுதான். கவர்ச்சியான தொடக்கம், அதிரடியான வளர்ச்சி, சஸ்பென்ஸான முடிவு என்று பல விடயங்கள் சினிமாவை விட கிரிக்கெட்டில் அதிகம் இருக்கின்றன. அதனால்தானோ என்னவோ? கிரிக்கெட் வீரர்களுக்கும் சினிமா நடிகைகளுக்கும் அப்படி ஒரு பந்தம் உள்ளது.

கிரிக்கெட் விளையாட்டாக மட்டுமல்லாமல் நல்ல வருமானம் வரும் தொழிலாகவும் மாறி விட்டது. அப்படி என்னதான் வருமானம் வரும் என்பவர்கள் ஒரு சிறிய மனக்கணக்கு போடுங்கள். இந்தியாவின் கொல்கத்தா நகரில் இருக்கும் ஈடன் கார்டன் மைதானத்தில் ஒரே நேரத்தில் சுமார் ஒரு லட்சம் பேர் போட்டிகளை கண்டு களிக்க முடியும். ஆக ஒரு லட்சம் பேருக்கு ரூபாய் ஆயிரம் வீதம் பார்த்தாலும் பத்து கோடி கிடைக்கிறது. உலகில் எந்த தொழிலில் குறைந்த உழைப்பில் ஒரேநாளில் பத்துகோடி வருமானம் கிடைக்கிறது.

இதுமட்டுமல்ல வர்த்தக நிறுவனங்களின் விளம்பர வருமானம் வேறு. நாம் சிறிது அசந்தாலும் சீனாக்காரன் நமது முதுகில் 'மேட் இன் சீனா' என்று முத்திரை குத்திவிடுவான் என வேடிக்கையாகச் செல்வார்கள். ஆம்! அது உண்மையாகிவிட்டது. ஆனால் வேறுவிதமாக பன்னாட்டு வர்த்தக நிறுவனங்கள் மைதானம் மட்டும் இல்லாமல் வீரர்களின் முதுகிலும், ஏன்! முகத்திலும் கூட தங்களின் முத்திரையை குத்திவிட்டனர். அனைத்துக்கும் ஒரு விலை அவ்வளவுதான். இப்படி கிரிக்கெட்டில் தொட்ட இடம் எல்லாம் பணம் கொழிக்கிறது.

## பணம் கொழிக்கும் விளையாட்டு

தொழிலாக மாறிவிட்ட கிரிக்கெட்டை வளர்ப்பதும், கட்டுப்படுத்துவதும் உலகின் பணக்கார அமைப்புகளுள் ஒன்றான இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பி.சி.சி.ஐ.) ஆகும். இந்த அமைப்பின் உறுப்பினர்கள் யார்? நிர்வாகிகள் யார்? அதன் நிர்வாக உறுப்பினர்கள் எவ்வாறு தேர்ந்து எடுக்கப்படுகின்றனர்? அதன் தேர்தல் முறை என்ன? அதன் செயல்பாடு என்ன? அதன் வருமானம் எவ்வளவு? செலவு எவ்வளவு? என அனைத்து நடவடிக்கைகளும் மர்மமாகவே இருக்கும். வெளிப்படையாக எதுவும் நடக்காது.

இந்த பி.சி.சி.ஐ. இன்று பில்லியர்ன்ஸ் (கோடீஸ்வரர்கள்) கட்டுப்படுத்தும் இந்திய கிரிக்கெட் என்றாகிவிட்டது. முன்னணி கிரிக்கெட் நட்சத்திரங்களும் வர்த்தக நிறுவனங்களின் நிதிநிலை அறிக்கையின் சொத்துக்களாகச் சுருங்கிவிட்டனர்.

இப்படிப்பட்ட வணிக நிறுவனங்களின் வருமானத்திற்காக பி.சி.சி.ஐயால் அறிமுகப்படுத்தப்பட்டதுதான் இந்தியன் பிரிமியர் லீக் (ஐபிஎல்). விளம்பரதாரர்களால் இயக்கப்பட்டு, ஊடகங்களால் வழி நடத்தப்பட்டு, பரபரப்பை மட்டும் குறியாக்கிச் செயல்படுவதுதான் இந்த ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகள். பரபரப்பை பயன்படுத்தி கோடிகளை குவிப்பது மட்டுமே ஐ.பி.எல்லில் பங்கெடுக்கும் நிறுவனங்களின் நோக்கம், லட்சியம் அனைத்தும் அதுவே. இந்தியாவை ஆளும் அரசுகளோ தன் மக்களை கெடுக்க கூடிய, முட்டாள்களாவே வைத்திருக்கக்கூடிய எந்த ஒரு சக்திக்கும் ஆதரவு அளிக்க கூடியதாகவே இருக்கிறது.

## பணம், பானம், பாவை

ஐ.பி.எல்லில் வீரர்களுக்கு பணம், பானம் (மது), பாவை (மாது) என அனைத்தும் தேவைகளைக் காட்டிலும் அதிகம் பூர்த்தி செய்யப்படுகிறது. வீரர்களும் நாட்டிற்காக விளையாடுவதைவிட இத்தனையையும் கொட்டிக் கொடுக்கும் நிறுவன முதலாளிகளுக்காக விளையாடுவதையே விரும்புகின்றனர்.

கை உடைந்திருக்கிறது, கால் உடைந்திருக்கிறது, தசை கிழிந்திருக்கிறது என நாட்டுக்காக விளையாட மறுக்கும் வீரர்கள் ஐபிஎல் என்றால் எல்லாம் பறந்துவிட்டது, நான் விளையாடுகிறேன் என்கிறார்கள். அதுவும் அங்கே விளையாட்டா நடக்கிறது? இல்லை.

இப்பொழுதுகூட பாருங்கள் இந்தியாவின் பல வீரர்கள் எவ்வளவு பணம் வந்தும் அது பத்தாது என்று 'மேட்ச் பிக்சிங்' என்ற சூதாட்டத்தில் சிக்கி, பிடிப்பட்டுள்ளனர். இப்படி எவ்வளவோ புது புது வார்த்தைகளால் வர்ணிக்கப்படும் சூதாட்டங்கள் (சட்டப்படி!) நடக்கிறது.

சரி! கோடிகளில் புரளும் வீரர்களும், நிறுவனங்களும் விளையாட்டைப் பார்க்கும் கோடிகணக்கான ரசிகர்களுக்காக ஒரு சதவீதமாவது செலவு செய்கிறார்களா என்றால் அதுவும் இல்லை. வீரர்களுக்கும், நிறுவனங்களுக்கும் பணத்தை தவிர வேறு ஒன்றும் பெரிதாகத் தெரிவதில்லை. இதனால் ஐபிஎல்லில் நிறுவனங்களுக்கிடையே போட்டி, பொறாமை, சட்டத்திற்கு புறம்பான செயல்கள் என அனைத்து நடவடிக்கைகளும் அளவுக்கு மீறி வெட்ட வெளிச்சமாக நடந்து வருகின்றன.


## விட்டில்பூச்சி மக்கள்

இப்படிபட்ட ஐபிஎல்லில் மயங்கி, மக்களும் விளக்கில் கருகும் விட்டில் பூச்சிகளாக இருக்கிறார்கள். இப்போட்டியில் பெட் கட்டியதற்காக இந்தியாவில் ஒரு கொலையும் நடந்துவிட்டது. அதுவும் சென்னையில். பள்ளிச் சிறுவனைக் கல்லூரியில் படிக்கும் மாணவன் கொலை செய்துவிட்டான். இந்த போட்டி இளைஞர்களை எங்கே கூட்டிச் செல்கிறது? சிந்திக்கும் நேரமிது சிந்தியுங்கள்.

ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகள் பணம் விளையாடும் கொலைக்களம் ஆகிவிட்டது. எவ்வளவு நாள்களுக்கு இப்படி நடக்கும்? இனி கிரிக்கெட் தன்னைத்தானே கொன்று மெல்ல மெல்ல சாகத்தான் போகிறது.

கிரிக்கெட் தொழில் செய்பவர்களே... நீங்கள் வினையை விதைத்து விட்டீர்கள், கண்டிப்பாக அறுவடை செய்துதான் ஆகவேண்டும். எங்கே தர்மம் மீறப்படுகிறதோ, அங்கே அழிவு நிச்சயம் என்பது கீதை வாக்கு. அழியும் என்பதற்கு ஆதாரம் கேட்பவர்களே, நீங்கள் புத்திசாலிகள். ஆனால் ஆதாரங்களை ஆராய்வதற்குள் ஆறடி நிலம் மூழ்கிவிடும். மக்கள் மயக்கம் விரைவில் தெளியும், கிரிக்கெட் இனி மெல்ல அழியும். விரைவில் அது நடக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உங்கள்
வாழ்க்கையை
மாற்றப்போகும்
தொடர்....

# 55 வெற்றி பெறலாம் வாங்க!

**சிக்கனமாகச் செலவழிப்பதற்கான 10 எளிய வழிகள்**

**வங்கி இருப்பு :** ஒவ்வொரு மாதமும் வங்கியில் போடப்படும் பணம், எடுக்கும் பணம் என அனைத்துக்கும் நீங்கள் சரியாகக் கணக்கு வைத்திருக்கிறீர்களா? இன்ஷ்ரன்ஸ் பொலிஸிக்கான பணம், ஏதாவது சந்தாவுக்கான பணம் என வங்கியில் இருந்து பணம் எடுக்கும் அனைத்து விடயங்களிலும் நாம் கவனமாக இருக்க வேண்டும்.

**கடன் :** கிரெடிட் கார்ட் மூலம் கடன் வாங்குவதைவிட, நம் பொருள்களை அடமானம் வைத்துப் பணம் வாங்குவது மலிவானது. இது சம்பந்தமாக நிதி ஆலோசகர்களின் அறிவுரையைக் கோரலாம். உங்களுக்குத் தேவையான ஆலோசனையை அவர்கள் அளிப்பார்கள்.

**சேமிப்பு :** சில்லறைக் காசுகளை நாம் மதிப்பதே இல்லை. அவற்றைச் சட்டென சாதாரணமாகச் செலவழித்து விடுவோம். 50 பைசா, ஒரு ரூபாய், 2 ரூபாய் நாணயங்களை உண்டியலில் போட்டுப் பழகுங்கள். சிறுதுளி பெருவெள்ளம் என்பதை அப்போது உணர்ந்து கொள்வீர்கள்.

**மொத்தமாக வாங்குதல் :** சுப்பர் மார்க்கெட்டில் மொத்தமாக வாங்கினால் விலை குறைவாக இருக்கும். ஆனால் நமக்குத் தேவையானதைவிடக் கூடுதலாக வாங்குவதைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் இப்படிச் செய்வதால் பணம் அதிகமாகச் செலவாவதுடன், பொருள் நிறைய இருக்கிறது என்பதால் நாமும் அதிகமாகப் பயன்படுத்துவோம். அதனால் தேவையான அளவு மட்டும் வாங்கிக் கொள்வது நல்லது.

**அண்டை வீட்டாருடன் பகிர்ந்து கொள்ளுங்கள் :** வீட்டில் அவ்வப்போது தேவைப்படும் சில கருவிகளை அண்டை வீட்டாரிடம் வாங்கிக் கொள்ள முடியும்போது, ஏன் அதற்குப் பதிலாக உங்களிடம் இருக்கும் பொருள் ஒன்றை அவர்களுக்கு இரவலாகத் தரலாம்.

**கிரெடிட் கார்டைப் பயன்படுத்தாதீர்கள் :** கிரெடிட் கார்டை வீட்டிலேயே வைத்துவிட்டுச் செல்லுங்கள். இது கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனால் இது அதிகம் செலவாவதைக் கண்டிப்பாகத் தடுக்கும்.

**கைச் செலவுக்குப் பணம் :** குழந்தைகளுக்கு 'பொக்கெட் மணி' கொடுப்பதன் அர்த்தம் அவர்களுக்குத் தேவையானதை அவர்களே வாங்கிக் கொள்வார்கள் என்பதுதான். ஒரு வாரத்துக்குக் கொடுத்த பணத்தை இரண்டு மூன்று நாள்களிலேயே செலவழித்துவிட்டால், மீண்டும் பணம் கொடுக்காதீர்கள். சிக்கனமாக இருப்பது எப்படி என்பதைக் குழந்தைகள் கற்றுக் கொள்வார்கள்.

**பெற்றோர்களிடம் அன்பாக இருங்கள் :** பெற்றோர்களுக்கு வயதாகும் போது, தங்கள் இளமைக் காலத்தில் சேர்த்து வைத்த பணத்தைக் கொண்டு தங்கள் குழந்தைகளுக்கு அதிக சுமையை ஏற்றாமல் வாழ்க்கையைக் கழிப்பார்கள். உங்கள் பெற்றோர்களிடம் மிக்வும் கனிவாக நடந்துகொள்ளுங்கள்.

**பிளாஸ்க் எடுத்துக் கொள்ளவும் :** உணவகங்களில், தேநீர்க் கடைகளில் மட்டும் நீங்கள் எவ்வளவு செலவழிக்கிறீர்கள் என்று கூட்டிப் பாருங்கள். அது நண்பர்களுடன், அலுவல் ரீதியாகப் போவதாக இல்லாத சமயங்களில் நீங்கள் ஏன் வீட்டிலிருந்தே பிளாஸ்கில் கோப்பியை எடுத்துச் செல்லக் கூடாது?

**பழைய பொருள்கள் :** ஏற்கனவே உபயோகப்படுத்திய பழைய பொருள்களை நீங்கள் வாங்கலாம். அது ஏலம் விடும் கடைகளில், பழைய பொருள்கள் விற்கும் கடைகளில் கிடைக்கும். இதனால்

## விரைவில் பணக்காரனாக ஆவது....

விரைவில் பணக்காரர் ஆகக் கூடிய பல திட்டங்கள் உலகம் முழுவதும் உள்ளன. பெரும்பாலும் இந்தத் திட்டங்கள் எல்லாம் பணக்காரர் ஆக முடியாத ஒருவரால்தான் கொண்டு வரப்படுகிறது. உண்மையில், வெகுவிரைவில் பணக்காரர் ஆவது என்பது சாத்தியமற்றது. நீங்கள் உங்கள் வருமானத்தை உயர்த்த வேண்டுமானால் அதற்கு இன்னும் கடினமாக, நெடுநேரம் வேலை செய்தாக வேண்டும். அல்லது கூடுதலாக ஒரு திறனைக் கற்றுக் கொண்டு அதன்மூலம் சம்பாதிக்கலாம். விரைவில் கோடீஸ்வரர் ஆகலாம் என்ற திட்டங்கள் குறித்து எச்சரிக்கையாக இருங்கள். அது போன்ற திட்டங்களை விளம்பரம் செய்பவர் சொல்வது போல, இந்தத் திட்டத்தின் மூலம் உண்மையிலேயே கோடீஸ்வரர் ஆக முடியுமென்றால், அவர் உங்களை நாடி வர வேண்டிய அவசியமே இல்லை. யோசித்துப் பாருங்கள்.

ராகவன் அல்பி






உதயனின் ''சூரியகாந்தியில்'' உங்களது படைப்புகளும் பிரசுரமாக வேண்டுமா? சிறுகதை, கவிதை, கட்டுரை, விமர்சனம், துணுக்குகள் என்பவற்றை உடனே எழுதி அனுப்புங்கள். தரமானவை பிரசுரமாகும்.

உங்கள் படைப்புகளை அனுப்ப வேண்டிய முகவரி;

சூரியகாந்தி -
உதயன் 361,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரங்கள்!



- மிருசுவில் தமிழ்தாசன்

அந்தப் பத்திரிகையைப் பார்த்த நேரம் முதல் நெஞ்சிலே ஒரு படபடப்பு. இனம் புரியாத நடுக்கம்! எனது ஆருயிர் நண்பன் வரதனைப் பற்றியே நினைவுச் சக்கரங்கள் சுழன்று கொண்டிருக்கின்றன. கடந்த காலத்து எமது நட்பும் அது சம்பந்தமான சம்பவங்களும் நினைவுக் கோர்வைகளாய் என் நெஞ்சினிலே சுழன்று சுழன்று வட்டமடிக்கின்றன.

ஒன்றா! இரண்டா! ஐந்தா! பத்தா! ஐம்பது வருடங்களைக் கொண்ட நட்பல்லவா! எமது நட்புக்கென்று விழா எடுப்பதாயின் தைரியமாகப் பொன்விழாவினைக் கொண்டாடலாம்.

பாலர் பாடசாலையில் ஆரம்பித்த நட்பு, இன்று வரைக்கும் கசங்காது கலங்காது மிகப் புனிதத்துடனே வளர்ந்து கொண்டிருக்கின்றது. எனக்குத் தெரியாத பாடங்களை மிக அன்போடும் அக்கறையோடும் சொல்லித் தருவான். பேனா, பென்சில் என்னிடமில்லாத வேளைகளில் தன்னுடையதைத் தந்து உதவுவான். தனது வீட்டிலிருந்து கொண்டுவரும் மதிய உன்னவினை எனக்கும் பரிமாறி அபரிமிதமான அன்பினைக் காட்டுவான்.

ஒன்றா! இரண்டா! அவன் என் மீது காட்டிய பரிவையும் பாசத்தையும் வார்த்தைகளில் வடிக்கவே முடியாது.

அப்படிப்பட்ட எனது ஆருயிர் நண்பன் இன்று மண்ணுலகத்தையே பிரிந்து விண்ணுலகம் சென்று விட்டானாம். இதனை என்னால் எப்படித்தான் ஜீரணிக்க முடியும். கடவுளே! அந்தப் பத்திரிகையிலே ஏராளமான மரண அறிவித்தல்கள், புகைப்படங்களுடன் பிரசுரிக்கப்பட்டிருந்தன. மேலோட்டமாக அவைகளைப் பார்த்துக் கொண்டிருந்த போதுதான் எனது உயிர் நண்பன் வரதனின் புகைப்படம்! ஐயோ! எத்தனை அழகாயிருக்கிறான்! சிரித்த முகத்துடன் அதே கம்பீரத்துடன் அந்தப் பத்திரிகையில் வரதன் தோற்றிய அழகுக் காட்சி இப்போதும் என் கண்களிலே நிழலாடுகின்றது. அந்தத் தமிழ்ப் பாடசாலையில் என்னுடன் ஒன்றாகப் படித்தவன். எட்டாம் வகுப்புடன் யாழ்ப்பாணத்தில் நல்லதொரு ஆங்கிலக் கல்லூரியில் சேர்ந்து கொண்டான்.

அவனுடைய தற்காலிகமான பிரிவு எனக்கு மிகப் பெரிய இழப்பாக வலித்தது. அது மட்டுமல்ல அவனைப் போல என்னால் படிக்கவோ அதிக புள்ளிகள் வாங்கவோ முடியவில்லை. 'எட்டாக் கனி புளிக்கும்' என உணர்ந்து கொண்டு பாடசாலை வாழ்க்கைக்கே முழுக்குப் போட்டாயிற்று.

''டேய் பாலு! உன்னாலும் என்னைப் போல நல்லாய்ப் படிக்க ஏலும் மச்சான். எதுக்கும் அவசரப்படாமல் பதற்றப்படாமல் நிதானமாய்ப் படிச்சியெண்டால் கட்டாயம் நீயும் படிச்சு முன்னேறுவாய். உன்ரை அவசரப் புத்தியாலை தான் நீ இப்பிடி படிப்பிலை குறைஞ்சு கொண்டு போறாய்'' என்று ஒரு நாளல்ல இரண்டு நாள்களல்ல, பல நாள்கள், பல தடவைகள் புத்தி மதிகள் கூறியவன் தான் வரதன்.

அவன் கூறுவதுஉண்மையாயிருந்தாலும் எனது அவசரப் போக்கினை அத்தனை சுலபமாக என்னால் மாற்றிக் கொள்ள முடியவில்லை. நின்று யோசித்து ஆராய்ந்து கொண்டிருக்க என்னால் முடிவதில்லை. பொறுமையும் அந்தளவுக்கு கிடையாது. பரீட்சையில் வினாத்தாள் கிடைத்தவுடன் தெரிந்தளவுக்குக் கடகடவென எழுதித் தள்ளிவிட்டு மண்டபத்தைவிட்டு முதல் ஆளாக வெளியேறிவிடுவேன்.

பரீட்சையில் முதல் ஆளாக வராவிட்டாலும் மண்டபத்தை விட்டு வெளியேறும் முதல் ஆளாக நான் தானிருப்பேன் என்பதில் ஏனோ எனக்கு ஒரு பெருமை.

எட்டாம் வகுப்புடன் கல்வியை நிறுத்திய எனக்கு தோட்ட மண்வெட்டி கைகொடுத்தது. மண் கொத்தியே வாழவேண்டும் என்று அந்தப் பரமசிவன் என் தலையிலே உறுதியாக எழுதிவிட்டான். காலம் ஓடிக் கொண்டிருக்கத் திருமண ஆசையும் வரத்தவறவில்லை. ஆசை மட்டும் வந்து என்ன! என்னைக் கட்டிக் கொள்வதற்கு ஊரிலுள்ள எந்தப் பெண்களுக்குமே ஆசை வரவில்லை.

எப்படியோ! தாரமும் குருவும் தலைவிதியென என்னிடம் வந்து சேர்ந்துகொண்டாள் இளவரசி.

இளவரசி! பெயருக்கும் அவளுக்கும் கிஞ்சித்தும் சம்பந்தம் கிடையாது. தகதக மேனியென்று யாராவது சொன்னால் கடவுள் கஞ்சித் தண்ணியே ஊற்றமாட்டார். தகர மேனி! மிகப்பெரிய முகத்தில் மிகச் சிறிய கண்கள். நுங்குக் கண்கள்போல கலங்கலாக இருக்கும். எனக்குப் போட்டியாக அரும்பு மீசை. ஆண் மூச்சுக்காரியாக இருப்பாள் என்று யாரோ சொன்னது இப்போதும் எனக்கு ஞாபகம்.

மொத்தத்தில் உசிலை மணி குடும்பத்துக்கு உறவுக்காரியாக இருப்பாள். என்னுடைய இல்லக் கிழத்தி இளவரசி. நான் இளவு இளவு என்றே சுருக்கமாக அழைப்பதுண்டு. பாவம்! அப்பாவித்தனமாக அவளும் அதை ஆமோதித்துக் கொள்வாள்.

திருமணம் செய்துகொண்டால் புத்திர பாக்கியம் கிடைப்பது ஒன்றும் புதிய சமாச்சாரமல்லவே. பிள்ளைகள் மூவர். எல்லோரும் ஆண் குட்டிகள். ஆண் குட்டிகளென்று சொல்வதை விட மண் சட்டிகள் என்று கூறுவதுதான் பொருத்தமாயிருக்கும் என நான் எண்ணுவதுண்டு. [illegible] சமாச்சாரங்கள் [illegible] வார்த்தைகளையே மூத்தவன் விரும்பாதவன்.

எனது தோட்ட மண்வெட்டிக்காகக் காத்திருக்கும் வருங்கால மண்கொத்தி வாரிசு. இரண்டாவது மகன்! பிறந்த வீட்டில் அவனுக்கு மேலாகத் தேரை, தவளை பாய்ந்திருக்கலாம். அப்படியொரு ஒல்லி வடிவானவன். மகா சோம்பேறி. சோம்பேறிகளுக்கு என்று சர்வதேசப் போட்டியொன்று இடம்பெறுமாயின் நிச்சயமாக முதற்பரிசு என் புத்திரசிகாமணிக்கே!

மூன்றாவது மதில்மேற் பூனையாகப் பதுங்கியிருக்கிறான். தன்னுடைய காலத்தில் என்ன செய்வானோ! ஏது செய்வானோ அந்தப் பரம்பொருளுக்கே வெளிச்சம். இப்படியாக எனது வாழ்க்கை வண்டியும் நகர்ந்து கொண்டிருக்க எனது அருமை நண்பன் மெத்தப் படித்து விட்டதன் காரணமாக ஆசிரிய சேவையில் இணைந்து கொண்டான்.

''என்னப்பா! கெதியாய் வெளிக்கிடுங்கோவன்-எக்கணம் பிரேதமெடுத்ததுக்குப் பிறகுதான் போய்ச் சேருவம் போல் கிடக்கு'' மனைவி இளவரசி என்னை அவசரப் படுத்துகிறாள்.

வரதனைப் போல அவனுடைய மனைவியும் ஓர் ஆசிரியை. இருவரும் வவுனியாவில் மிகப்பிரபல்யம் பெற்று விளங்கும் ஒரு கல்லூரியில் சேவையாற்றுகின்றார்கள். அங்கேயே நிரந்தர வீடுவாசல் என்று கௌரவமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஊருக்குள் ஏதாவது நல்லது கெட்டது என்றால் வந்து போவார்கள். வரும் நேரங்களில் எனது வீட்டுக்கும் வராமல் போகமாட்டான் வரதன். கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பும் ஊரில் நடந்த பிள்ளையார் கோயில் திருவிழாவுக்கு வந்து போனவன்தான் வரதன்.

''கடவுளே! இரண்டு மாதத்துக்கு முந்திச் சந்திச்சு எத்தனை பகிடியள் பம்பலுகள் கதைச்சுப் போட்டுப் போனியே! இண்டைக்கு உன் [illegible] பார்க்கப் போறன் மச்சான்!''

''[illegible] அடியாதேங்கோ அப்பா! அழாதேங்கோ! அங்கார் வவுனியா பஸ் வருகுது போல. அழாதேங்கோ! கண்ணைத் துடைச்சுப் போட்டு பஸ்ஸை மறியுங்கோ''! மனைவி சொல் மந்திரமாக இயந்திரக் கெதியில் பஸ்ஸில் ஏற விரைகின்றது வண்டி.

''இளவரசி! என்ரை வரதன் சாவு அறிவித்தல் படத்திலை எவ்வளவு வடிவாயிருக்கிறான் தெரியுமே! செத்தவன் மாதிரியே தெரியவில்லை''

''உங்களுக்கென்ன விசரே! சாகக்க முந்தி எடுத்த படமாயிருக்கும். பின்னை என்ன செத்த பிறகு எடுத்தே போடுவினம்? அப்ப வடிவாய்த்தானே இருக்கும்''. ''ஓமடி! ஓ! எனக்கு என்ன கதைக்கிறது என்று தெரியேல்லை'' என்னுடைய கட்டுப்பாட்டை மீறி கண்ணீர் அருவியாகக் கொட்டுகிறது.

''சே! சும்மாயிருங்கோ எப்பனுக்கு பஸ்ஸுக்கை இருக்கிற ஆக்கள் எல்லாம் எங்களைத் தான் பாக்குதுகள்'' மனைவியின் கட்டளைக்கு அடங்கிக்கொள்ள வேண்டிய நிலை. அடங்கிக் கொள்கின்றேன். நேரமும் ஓட பஸ்ஸும் ஓடிக்கொண்டிருக்கிறது.

''இஞ்சாருங்கோ! உவ்வளவு தூரத்துக்கு நடக்கேலாது. ஒரு ஓட்டோவைப் பிடிச்சுப் போவம்'' மனைவியின் விருப்பம் நிறைவேறுகின்றது. அதோ! வரதன் வீடு. ஒருமாதிரி வந்து சேர்ந்தாயிற்று.

இரண்டோ மூன்று கார்கள், நான்கு ஓட்டோக்கள் இன்னும் மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் எல்லாமே அந்த வீட்டுப் படலைக்குள் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளன.

''பார்த்தியேடி! எத்தனை வாகனங்கள் நிக்குது! வரதன் என்ன என்னை மாதிரிச் சிம்பிள் ஆளே! எவ்வளவு சந்தப்பட்ட மனிசன். எவ்வளவு பெரிய ஆளாயிருந்தும் என்னை ஏதேன் வேற்றுப் பிறிப்புக் காட்டியே நடக்கிறான்! அண்டைக்குப் பள்ளிக் கூடத்திலை சொன்ன மச்சான்தான் இண்டைக்கும்.'' ''சரி சரி அலட்டாமல் ஓட்டோவை விட்டிறங்குங்கோ.''

''அது சரி! என்னடியாத்தை செத்த வீடெண்டு ஒரு மேளம், தோரணம் கீரணம் ஒண்டையும் காணயில்லை!'' ''ஓமப்பா அதுதான் நானும் யோசிக்கிறன். ஒருவேளை வீடு மாறி வந்திட்டமோ!'' ''இல்லையடி வா! சில நேரம் சவம் எடுபட்டிட்டுதுபோல. கடவுளே! இவ்வளவுக்குக் கஷ்டப்பட்டு வந்தும் என்ர வரதன்ரை சவத்திலை கூடி முழிக்கேலாமல் போச்சுதே!'' சோகம் ஒருபுறம் இயலாமை மறுபுறமாக என்னைக் குத்திக் கிழித்துக் கொண்டிருக்கின்றன.

படலையை அவசரமாகத் திறக்கின்றேன். உள்ளே இங்கொன்றும் அங்கொன்றுமாக ஏராளமாக மக்கள் குழுமியிருக்கின்றனர்.

''டேய் மச்சான் வரதா! வரதா!'' அதற்கு மேல் உணர்ச்சி மேலீட்டால் வார்த்தைகள் வரவில்லை. வெறிபிடித்தவன் போல் ஓடிச் செல்ல, அங்கிருந்தவர்கள் விநோதமாகவும் ஒருவித கலக்கத்துடனும் என்னைப் பார்ப்பது எனக்கும் புரியாமலில்லை. ஓடோடி வந்த உருவமொன்று என்னை வாஞ்சையுடன் கட்டியணைக்கின்றது.

''மச்சான் பாலு! கோவிக்காதை! என்ரை சேவை நலன் பாராட்டு விழாவை மணி விழாவாய்ச் செய்ய வேணுமெண்டு எங்கடை பள்ளிக்கூடமும் ஊர்ச் சனங்களும் சேர்ந்து கொண்டாடுகினம். அறுவதாம் அகவையிலை இப்படிச் செய்ய வேண்டுமெண்டு பேப்பருக்கும் அறிவித்தல் குடுத்துத் திடீர்ப் பிளானிலைதான் செய்தவை. அதாலை உனக்கு அறிவிக்கேலாமல் போச்சுது. பேப்பரிலை என்ரை போட்டோ எல்லாம் வந்திருக்கும் பார்த்திருப்பாய் தானே'' இதுவரை மூச்சுவிடாமல் கதைத்தவன் சந்தேகமில்லை இறந்துவிட்டதாகக் கருதிய என்னருமை நண்பன் வரதன்.

''பாழ்பட்ட மனிசா! உன்ரை அவசரத்தாலையும் படபடப்பாலையும் இப்ப எவ்வளவு அவமானம்'' மனைவி, பற்களை நெருடி என்னைப் பார்க்கிற அந்தப் பார்வையில் ஆயிரம் எரிமலைகள் வெடித்துச் சிதறுகின்றன.

''கடவுளே! போட்டோவைப் பார்த்திட்டு அவசரத்திலை இப்பிடி நடந்திட்டுதே! எல்லாமென்ர அவசரம்'' என்னையே நொந்து கொள்கின்றேன்.

(யாவும் கற்பனையே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

**16.06.2013 முதல் 22.06.2013 வரை**

தருபவர்
வித்தியா

**மேஷர்** - குடும்பப் பெருமை பிறரிடம் பேசுவதும், அடுத்தவரின் பிரச்சினையில் கருத்து சொல்வதையும் தவிர்ப்பது, நற்பெயரைப் பாதுகாக்க உதவும். எதிரி மற்றும் விஷப் பிராணிகளிடம் விலகுவது நல்லது. இல்லறத்துணை உங்களின் பணி தொடர்பான சிரமம் குறைய, நல்ல ஆலோசனை வழங்குவார். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தைப் பாதுகாக்க கூடுதல் உழைப்பு, கண்காணிப்பு உதவும். குடும்பப் பெண்கள், கணவரின் எண்ணங்களுக்கு ஏற்ப, உதவி மனப்பாங்குடன் நடந்து கொள்வர்.

**இடபர்** - மனதில் உற்சாகமும், செயல்களில் நேர்த்தியும் அதிகரிக்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு ஏற்படும். தாராளமாகப் பணம் செலவு செய்து உறவினர், நண்பர்களிடம் நன்மதிப்புப் பெறுவீர்கள். புத்திரர், நண்பர்களுடன் கருத்து பேதம் கொள்வார். உங்களின் ஆலோசனை நல் வழி நடத்தும். பணியாளர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பு கிடைக்கும். பெண்கள், தாய்வீட்டு உதவி கிடைத்து சந்தோஷம் அடைவர். மாணவர்கள், நண்பர்களிடம் நிதானித்து பேசுவது நட்பைப் பாதுகாக்கும்.

**மிதுனர்** - உங்களிடம் பகைமை குணம் கொண்டவர், அவமரியாதை செய்யும் எண்ணத்துடன், தேவையற்ற வகையில் பேசுவர். அவர்களிடம் விலகுவதால் மனநிம்மதியும், பொன்னான நேரமும் பாதுகாக்கலாம். இளைய சகோதரரின் பணத்தேவைக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். பூர்வீக சொத்தில் அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள், பணியிடத்து சூழ்நிலைகளைக் கவனத்தில் கொண்டு பணிபுரிவது நற்பலன் தரும். மாணவர்கள், சாகச விளையாட்டுக்களைத் தவிர்த்தல் நல்லது..

**கடகர்** - நீண்டநாள் திட்டமிட்ட செயலை, அனுகூல சூழ்நிலை அமைந்து நிறைவேற்றுவீர்கள். குடும்பச் செலவுக்கான பணவசதி திருப்திகரமான அளவில் கிடைக்கும். இல்லறத்துணை கூடுதல் அன்பு, பாசத்துடன் நடந்து, விரும்பிய பொருள் கேட்டுப் பெறுவார். தொழிலில் அபிவிருத்தி பணிபுரிந்து உற்பத்தி, விற்பனையில் முன்னேற்றம் காண்பீர்கள். மாணவர்கள், பெற்றோரின் வார்த்தையை மதித்து நடந்து கொள்வர்.

**சிங்கர்** - மனதில் கருணையும், தன்னம்பிக்கையும் நிறைந்திருக்கும். கலகலப்பாகப் பேசியும், உதவி புரிந்தும் புதியவர்களின் அன்பு, நட்பைப் பெறுவீர்கள். இல்லறத் துணை குடும்ப நலன் சிறக்க, தேவையான நடைமுறைகளை மேற்கொள்வார். தொழில் வியாபாரத்தில், உற்பத்தி விற்பனையில், புதிய வளர்ச்சி பரிமாணம் ஏற்படும். பணியாளர்கள் சிறப்பாகப் பணிபுரிந்து பாராட்டு, சலுகைப்பயன் பெறுவர். மாணவர்கள், உத்வேக மனதுடன் செயற்பட்டு கல்வி தொடர்பான புதிய விடயங்களை அறிந்து கொள்வர்.

**கன்னி** - பிடிவாத குணத்தினால் நண்பர், உறவினரின் அதிருப்தியை எதிர்கொள்ள நேரிடலாம். கவனம் தேவை. நீண்டதூர வாகன பயணத்தில் மிதவேகமும், தகுந்த பாதுகாப்பு நடைமுறையும் பின்பற்றுவது அவசியம். தொழிலில் அளவான உற்பத்தி, விற்பனை அதற்கேற்ப பணவரவு இருக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்டங்களை அதிக கவனத்துடன் பின்பற்ற வேண்டும். மாணவர்கள், சக மாணவரின் கருத்தை மதித்து பேசுவது, நட்பைப் பாதுகாக்க உதவும்.

**துலாபர்** - சான்றோர்களின் ஆசியும், நல்வழி காட்டுதல்களும் கிடைக்கும். மனதில் புதிய நம்பிக்கையுடன் பணியில் ஈடுபடுவீர்கள். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். இல்லறத்துணை, உங்களின் நல்ல குணங்களை உறவினர்களிடம் சொல்லி, அதிக மதிப்பை உருவாக்குவார். தொழில், வியாபாரத்தில் உருவாகிற குளறுபடியை உடனடியாக சரி செய்வீர்கள். மாணவர்கள், நல்ல செயல்களால் நண்பர்களிடம் பாராட்டுப் பெறுவர்.

**விருச்சிகர்** - உங்கள் நலம் விரும்புவரின் ஆலோசனை, உதவி கிடைத்து மனதில் உற்சாகம் பெறுவீர்கள். திட்டமிட்ட பணிகள் எளிதாக நிறைவேறும். இல்லறத்துணை கூடுதல் அன்பு, பாசத்துடன் நடந்து, மகிழ்ச்சிகர வாழ்வு பெறுவர். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத் தன்மைகளை அக்கறையுடன் பாதுகாத்திடுவீர்கள். பணியாளர்களுக்கு, தாமதமான சலுகைப்பயன் எளிய முயற்சியால் கிடைக்கும். மாணவர்களுக்கு திறமை, நற்குணம் உள்ள நண்பர்களின் அறிமுகம் ஏற்படும்

**தனுசு** - இளமைக்கால இனிய நிகழ்வுகளை எண்ணி மகிழ்வீர்கள். செயல்களில் தன்னம்பிக்கையுடன் ஈடுபடுவீர்கள். புதியவர்களின் நட்பு கிடைக்கும். உடன் பிறந்தவர்களின் வாழ்வில் நடைமுறை சிறப்பு பெற, தேவையான உதவி வழங்குவீர்கள். இல்லறத் துணையிடம், அவர் வழி சார்ந்த உறவினர்களை, குறை கூறி பேச வேண்டாம். அதிகாரிகள் சிறப்பாக பணிபுரிந்து பாராட்டு, வெகுமதி பெறுவர். குடும்பப் பெண்கள், கணவரின் கருத்துக்கு எதிர்மறையாக பேசுவதைத் தவிர்ப்பதால் மட்டுமே, ஒற்றுமை சீராகும்.

**மகரர்** - உடல்நல ஆரோக்கியத்தை, தகுந்த முறையில் பேணுவதால் மட்டுமே, பணிகளை நிறைவேற்ற ஆர்வம் வளரும். பொது விவகாரங்களில் கருத்து சொல்வதைத் தவிர்த்திடுவீர்கள். இல்லறத் துணையிடம், சிறு கருத்து பேதம் வந்து பின்னர் சரியாகும். அடுத்தவரின் பார்வையில் தெரியும்படி, அதிக பணம் செலவு செய்ய வேண்டாம். குடும்ப பெண்கள், கணவரின் அனுமதியின்றி எவருக்கும் பணப்பொறுப்பு ஏற்கக் கூடாது. மாணவர்கள், புதியவர்களை நண்பராக ஏற்பதில் தகுந்த கவனம் வேண்டும்.

**கும்பர்** - தன்னை உணர்வதுடன், நண்பருக்கும் சிறந்த ஆலோசனை சொல்வீர்கள். எதிரியால் வரும் சிரம சூழ்நிலையை, தகுந்த உபாயத்தில் சரி செய்வீர்கள். இல்லறத் துணை வழி சார்ந்த உறவினர் கூடுதல் அன்பு பாராட்டுவர். தொழிலில் உற்பத்தி, விற்பனை குறித்த காலத்தில் நிறைவேறும். மாணவர்கள், உடல்நலத்துக்கு ஒவ்வாத உணவுவகை தவிர்ப்பதால், ஆரோக்கியம் சீராகும்.

**மீனர்** - பிறருக்கு உதவும் மனப்பான்மை கொள்வீர்கள். சமூகத்தில் உரிய மதிப்பு, மரியாதை கிடைக்கும். நீண்டநாள் நிறைவேற தாமதமான பணி, ஒன்றை புதிய யுக்தியால் நிறைவேற்றுவீர்கள். இல்லறத் துணை, குடும்ப ஒற்றுமை பலம்பெற தேவையான பணியை மேற்கொள்வார். தொழில், வியாபாரத்தில் உருவாகிற குளறுபடியை சரி செய்து உற்பத்தி, விற்பனை அளவை சராசரிக்குக் கொண்டு வருவீர்கள். பணவரவு சீராகும். பணியாளர்கள் புதிய அணுகுமுறையைப் பயன் படுத்தி, நிர்வாகத்திடம் நற்பெயர் பெறுவர். மாணவர்கள், பெற்றோருக்கு உதவிகரமாக நடந்து கொள்வர்.

# கவுணாவத்தை கடவுளே...!



ஒலிபெருக்கி ஒலிக்கிறது! ஊரெல்லாம் களிக்கிறது!
ஓங்கார வைரவருக்குப் பூசை மணி ஒலிக்கிறது
களிப்புடனே காளையர்கள்! விழிப்புடனே கன்னியர்கள்
கவுணாவத்தை வாழும் வைரவரின் சந்நிதியில்
வேள்வியடா! வேள்வியடா! இன்று தான் வேள்வியடா!
வேறெங்குமில்லாத வித்தியாச வேள்வியடா!
வேள்வியடா! வேள்வியடா! வைரவருக்கு வேள்வியடா!
வேற்றூரிலில்லாத வேடிக்கை வேள்வியடா!

வழியெல்லாம் வரவேற்பை வாங்கியே வருகின்றார்
வஞ்சனையே அறியாத வாயில்லாப் பூச்சியிவர்
பலியாகப் போகின்ற பாதகத்தைத் தெரியாமல்
"பந்தாவாய்" வருகின்றார் வரும் துன்பமறியாமல்
மாலை மங்கலங்கள் மத்தளங்கள் மத்தியிலே
மன்னவன் போல் மந்தையினர் பொட்டிட்டு நெற்றியிலே
தலையாட்டி வருகின்றார் தனி மதிப்புத் தனக்கென்று
தைரியமாய் வருகின்றார் தான் பெரிய ஆளென்று
தலைக்கடாய் அவர் தானாம் தலைதெறிக்க ஓர்வெட்டு!
தலைவேறாய் உயிர்வேறாய் துடிக்கின்றார் உயிர்விட்டு

எண்ணூறு கடாய்களடா எம்பெருமான் சந்நிதியில்
இளநீர்க் குரும்பைகளாய் வெட்டுண்டார் சந்நிதியில்
இன்னும் பல நூறு பட்சியாங்கே பறந்தடிக்க
பக்தர்கள் வெட்டுகிறார் பாவமதை! துடிதுடிக்க
குருதியோ குங்கிலியக் குளமாகத் தேங்கிடவே
குற்றுயிராய்க் குலை உயிராய் துடி துடித்துயிர் நீங்கிடவே
மச்சப் படையலடா! மதுபானப் படையலடா!
மாண்புறுநம் வைரவருக்கு வாய்ப்பான படையலடா!
அச்சமின்றி அவர் படைக்க அடியார்கள் அதை எடுத்து
அமுதாக ருசிக்கின்றார் அனைவருக்குமதைக் கொடுத்து
கவுணாவத்தை வாழும் வைரவரே! கடவுளரே!
கணினி காலமிது! கற்றவர் வாழ் ஞாலமிது!
அவுணச் செயல் வேண்டாம்! அநாகரிகப் பலி வேண்டாம்!
அறியாமைதனைப் போக்கி அடியவரைக் காத்து விடும்!

மிருசுவில் தமிழ்தாசன்,
மீசாலை கிழக்கு, மீசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவையான பெண்ணியம் எது?

பூரணியம்மா கவிதா



பெண்களின் மீதான வன்முறை என்ற சொல் நம் காதில் விழுந்தவுடன், கணவன் மனைவியை அடித்து உதைக்கிற காட்சிகளும் வன்புணர்வுகளும்தான் நம் கண்களில் தோன்றுகின்றன. மாறாக, ஏழே நாள்களில் சிகப்பழகு என்று பெண்களுக்கான முகப்பூச்சு 'கிரீம்'களின் விளம்பரம் நம் கண்களில் தோன்றுவதில்லை.

உண்மையில் முதலாவதைக் காட்டிலும் இரண்டாவதிலேதான் அதீத வன்முறையும் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் அதிகம். சிகப்புத்தான் அழகு என்பதும், அழகுதான் பெண்களுக்கான தேவை என்பதைக் காட்டிலுமான வன்மம் வேறென்னவாக இருக்க முடியும்? அழகுதான் பெண்களின் அடிப்படைத்தேவை என்றானால், அறிவும் அன்பும் மட்டுமே நிரம்பிய பெண்களுக்கு பொது வெளியில் இடம் கிடையாதா? என்கிற கேள்வி எழுகிறது. இது ஒரு சின்ன உதாரணம்தான்.

### சமூகம் கற்பிக்கும் பெண்ணடிமைத்தனம்

வானொலி, தொலைக்காட்சி, நாளிதழ், குடும்பம், அரசு, இணையம், பள்ளி, கல்லூரி என ஒவ்வொன்றும், ஒவ்வொரு நொடியும் ஆணுக்குப் பெண் சமமானவள் அல்ல என்கிற செய்தியை நேரடியாகவும் மறைமுகமாகவும் கற்பித்துக் கொண்டே இருக்கிறது. ஆனால் விளம்பரங்களில் பெண்கள் போகப் பொருள்களாகப் பயன்படுத்தப்படுகிறார்கள் என்றும், விளம்பரத்தில் நடிக்கும் பெண்களை நுகர்வுப் பண்டங்களாக மாற்றி விட்டார்கள் என்றும் காட்டுக் கூச்சல் போடும் பெண்ணியவாதிகள் இந்த விளம்பரங்களைத் தாங்கிப்பிடிக்கிற ஆணாதிக்க, சாதிய, சமூக அமைப்பு முறையின் அடிப்படைக் கட்டமைப்பை எதிர்ப்பதில்லை. அதனால்தான் பெண்ணியவாதிகளின் எதிர்ப்புக்குப் பின்னர் இத்தகைய ஓரிரு விளம்பரங்கள் நிறுத்தப்பட்டாலும்கூட அது வேறு வடிவம் எடுத்து தொடரவே செய்கின்றன.

### பெண்கள் ஒன்றாயில்லை

சமூகத்தை நீள அகலவாக்கில் சாதிய ரீதியாகவும், குறுக்கு நெடுக்காக பாலியல் வேறுபாட்டினாலும் பிளந்து வைத்திருக்கிற இதுபோன்றதொரு மோசமான பாகுபாட்டை பெண்கள் அனைவரும் இணைந்து நின்று எதிர்க்க வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு வீட்டுக்குமான சேரியாக சமையலறையும், ஒவ்வொரு வீட்டுக்குமான தலித்துகளாக எல்லா சாதிப் பெண்களும் இருக்கிறார்கள். ஆனாலும், கல்வீடுகளில் இருக்கும் பெண்கள் ஒடுக்கப்பட்ட பெண்க ளைத் தங்களில் ஒருவராகப் பார்ப்ப தில்லை, பார்க்க விரும்புவதுமில்லை. சேரி ஆண்களை ஒடுக்குகிற ஊர்ப் பெண் களை தங்களில் ஒருவராகப் பார்க்கிற மனநிலையில் ஒடுக்கப்பட்ட பெண்களும் இல்லை.

அதனால்தான் ஆண்கள் அனைவ ரையும் எதிரிகளாகப் பாவிக்கிற சமூக அமைப்பின் அடிப்படையை மாற்றாமல் ஆண்களுக்கு இணையானவர்களாகவோ, மேலானவர்களாகவோ மாறினால் போதும் என்கிற கருத்தியலை முன்வைக்கிற பொத்தாம்பொதுவான பெண்ணியத்துக்கு மாற்றாக, பெண் விடுதலையை நேசிக்கிற ஆண்களையும் இணைத்துக் கொண்டு சமூக அமைப்பின் அடிப்படையை மாற்றுவதன் வாயிலாக பெண் விடுதலையை வென்றெடுக்கக் கூடிய சமூகப் பெண்ணியம் என்கிற கருத்தியல் மேலெழுந்து வருகிறது. மேலெழுந்த வாரியாகப் பார்க்கிற பொழுது சமூகப் பெண்ணியமே நமக்கான கருத்தியலாகத் தோன்றினாலும், கெடுவாய்ப்பாக, சமூகத்தை நீளவாக்கில் பிரித்து வைத்திருக்கிற ஆண் பெண் பாகுபாட்டை தகர்த்தெறியத் தயாராகிற சமூகப் பெண்ணியம், சமூகத்தை குறுக்கு நெடுக்கில் பிரித்து வைத்திருக்கிற சாதியத்தை ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்ளத் தயாராக இல்லை.

### தேவையான பெண்ணியம்

சமூக அமைப்பை நீளவாக்கில் பிரித்து வைத்திருக்கிற ஆணாதிக்கச் சிந்தனையையும், சமூக அமைப்பை குறுக்கு வாக்கில் பிரித்து வைத்திருக்கிற சாதியச் சிந்தனையையும் ஒரு சேர சம அளவில் எதிர்க்கிற பெண்ணியமே நமக்கான கருத்தியலாக அமைகிறது.

ஆணாதிக்கத்தால் மட்டுமே பாதிக்கப்படுகிற பெண்களாலோ, ஆணாதிக்கத்தாலும் பொருளாதாரத்தாலும் மட்டுமே பாதிக்கப்படுகிற ஏழைப் பெண்களாலோ அனைத்துப் பெண்களுக்குமான விடுதலையை வென்றெடுத்துவிட முடியாது. மாறாக ஆணாதிக்கம், பொருளாதாரம், சாதி என மூன்று விதமான அடிமைச் சங்கிலிகளையும் உடைத்தெறிய முன்வரும் பெண்களால் மட்டுமே அனைத்துப் பெண்களுக்குமான விடுதலையை வென்றெடுக்க முடியும்.

> பெண் விடுதலையை நேசிக்கிற ஆண்களையும் இணைத்துக் கொண்டு சமூக அமைப்பின் அடிப்ப டையை மாற்றுவதன் வாயிலாக பெண் விடுதலையை வென்றெடுக்கக் கூடிய சமூகப் பெண்ணியம் என்கிற கருத்தியல் மேலெழுந்து வருகிறது.

# பேசுவோமா பெண்ணியம்....

(சென்றவாரத் தொடர்ச்சி)

சில பெண்கள் தமது தனிப்பட்ட அபிலாசைகளை (உரிமை வேறு, ஆசை வேறு எனப் புரியாதவர்கள்) பூர்த்தி செய்வதற்காக பெண்ணியம் என்ற போர்வையைப் போர்த்திக் கொள்கிறார்கள். அதாவது, தாம் விரும்பும் உடைகள் அணியவும், தம்மை அலங்கரித்துக் கொள்ளவும், களியாட்டங்களில் ஈடுபடவும் இன்னும் பல ஆடம்பரவிடயங்களில் ஈடுபடவும், தமது சில நடத்தைகளுக்காகவும்.... மற்றவர்கள் கருத்துச்சொல்லக்கூடாது என்பதற்காகவே, தாம் பெண்ணியம் பேசுவதாக எண்ணிக் கொண்டு எமக்கு உரிமையுண்டு.., ஆண்கள் செய்தால் தவறில்லை, நாங்கள் செய்தால் தவறா? போன்ற கேள்விகளை எழுப்பும் போது மிகவும் பரிதாபமாகத்தான் தோன்றுகிறது.

இன்னும் சில மோட்டுத்தனமான பெண்ணியவாதிகள் குடும்பம் அல்லது திருமணம் பற்றி மிகவும் ஆபத்தான கருத்தை வளர்ந்துவரும் சமூகத்தில் விதைக்கிறார்கள். திருமணம் என்பது அவசியம் இல்லாத ஒன்று. அது சமூகத்துக்காக செய்யப்படுவதே என்கிறார்கள். ஆனால் இவர்கள் இயற்கையான பாலுணர்வை ஏற்றுக் கொள் கிறார்கள். இப்பாலுணர்வின் நிறைவு எமது சமூகத்தை, கலாச்சாரத்தைப் பொறுத்தவரை யில் திருமணம் என்ற கட்டமைப்புக்குள் மாத்திரமே சாத்தியம் என்பது இவர்களுக்கு கலாசாரக் கொடுமை யாகத் தெரிகிறது.

இப்படிப்பட்ட மட்டமான பெண்ணி யவாதிகள்..... மன்னிக்கவும் இது பெண்ணி யமே இல்லை.. எனவே இவர்களை பெண் ணியவாதிகள் என்று குறிப்பிடாமலே விட்டு விடலாம். இத்தகையவர்கள் இன்னும் ஒரு பெரும் தவறைச் செய்கிறார்கள். இதையே தமது அல்லது தம்மைச் சூழ உள்ள பெண் குழந்தைகளுக்கும் திணித்து விடுகிறார்கள். ஆரோக்கியமற்ற,சமூகக் கட்டுப் பாடற்ற ஒரு சந்ததியைத் தோற்றுவிக்கும் அபாயத்தை இவர்கள் உண்டுபண்ணுகிறார்கள்.

தான் விரும்பிய ஆடையைத் தெரிவு செய்து அணிவது என்பது சுதந்திரம். ஆனால் அந்த ஆடையின் தன்மையை அல்லது வடிவமைப்பை அவள் தெரிவு செய்வது விருப்பத்தினாலேயே. நாகரிக மோகம் கொண்டு அரைகுறை ஆடைகள், அல்லது அங்கம் பிரித்துக் காட்டும் அதிக இறுக்கமான ஆடைகள் , அளவுக்கு மீறிய முக ஒப்பனை... எல்லாம் எதற்கு. சும்மா இருக்கிற ஆம்பிளைகளைக் கூட என்னைத் திரும்பிப் பார் என்று அழைப்பதற்காகவா? சிலர் ஆடை அணிவது எமது சுதந்திரம் என்கிறார்கள்...

ஆடை அணிவது சுதந்திரம் தான்... ஆனால் இப்படி ஆடை அணிந்து நீங்கள் வெளியே காட்டுவது உங்கள் அந்தரங்கத்தை அல்லவா?... அதை ஏன் புரிந்து கொள் கிறீர்கள் இல்லை. மற்றவர்கள் தம் பார் வையைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்பதை விட, நாம் நம்மை மாற்றுவது நல்லதல்லவா? ஆண்களைக் கவரும் அளவுக்கதிகமான உங்கள் ஒப்பனை தேவைதானா? இதன் மூலம் பெண்களை வெறும் மோகப் பொருளாகத் தோற்று விப்பதோடு, பெண்களின் பாதுகாப்பு கூட சில வேளைகளில் கேள்விக்குறியாகி விடுகிறது.

தொடரும்.....



பூங்கோதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரகசியத் தகவல்கள் எல்லாவற்றையும் வெளியிடுவது குற்றச் செயல்களாகக் கட்டுப்படுத் தப்படுமானால் தகவல்களின் வெளிப்பாட்டை முடங்கச் செய்வதாகிவிடும்.

82 அசை போட ஒரு விடயம்

# ஊடகத்துறையின் பாதுகாப்பு

ரம்யன்

அரச இரகசியங்களை பத்திரிகைகள் வெளியிடுவது சட்டவிரோதம். ஆனால் அந்த இரகசியங்களை கூடியவரை தேடிப் பிடித்து வெளியிடுவது பத்திரிகைகளின் கடமை. எப்பொழுதுமே மறைக்கப்படும் இரகசியங்களை ஆதார பூர்வமாக வெளியிடுவதற்கு பத்திரிகையாளர்களுக்கும் பத்திரிகைகளுக்கும் ஆர்வம் உண்டு. அதுபோல் அவ்வாறான செய்திகளை வாசிப்பதற்கு வாசகர்களுக்கும் ஆர்வமுண்டு.

இந்த நிலையில் அரசின் இரகசியங்கள் கசியாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அரச அதிகாரிகளின் பொறுப்பு. இருந்தும் அவை கசியுமானால் அதனை சேகரித்து ஒரு பத்திரிகையாளன் வெளியிடுவானானால் அது அவனது திறமையையே காட்டுவதாக இருக்கும். அவ்வாறான பத்திரிகையாளனுக்கு பத்திரிகையாளர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உண்டு.

இவ்வாறு ஓர் அரசு தனது பின் தேவைக்காக மறைத்து வைக்கும் இரகசியத் தகவல் பத்திரிகைகளில் வெளிவந்து விடும்போது அதிகாரிகள் மற்றும் ஆட்சியாளர்கள் அதிர்ச்சியும், ஆத்திரமும் கொள்வது இயற்கை. சில சமயம் செய்தியை வெளியிட்ட செய்தியாளன் மீது நடவடிக்கை எடுக்கவும் முனைவார்கள். அவ்வாறான செய்தியை அவன் எவ்வாறு எவரிடமிருந்து பெற்றுக்கொண்டான் என்பதை அறிவதில் அவர்களுக்கு அவசரமும் ஆவலும் ஏற்படுவதுண்டு.

தகவல் அறியும் உரிமை, சட்டம் எதுவும் நம் நாட்டில் இல்லை என்பதால் பத்திரிகையாளர்களுக்கு போதிய பாதுகாப்பு இல்லை என்பதை மறைக்க முடியாது.

2004 ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்கவின் ஐ.தே.க. அரசு பதவியில் இருந்தபோது தகவல் அறியும் சுதந்திரம் என்பதாக ஒரு சட்ட முன்வரைவை அறிவித்திருந்தது. நல்லதோர் சட்டமென அநேகர் அபிப்பிராயம் தெரிவித்திருந்த நிலையில் அந்த முன்வரைவு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. அந்தக் காலகட்டத்தில் பதவியிலிருந்த ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க மேற்கொண்ட நடவடிக்கைகளால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடந்ததால் ரணில் விக்கிரமசிங்க அரசு கவிழ்ந்தது. அந்த சட்ட வரைவும் கிடப்பில் போய்விட்டது. உன்னதமான அந்த சட்ட முன்வரைவு தொடர்பாக எதுவுமே பேசாமல் இருக்கும் இன்றைய அரச ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்கான ஒழுக்கநெறி சட்ட முன்வரைவு பற்றி இப்போது ஆலோசித்து வருவதாக அறிவித்துள்ளது.

சமீப காலத்தில் ஊடகத்துறையும் ஊடகவியலாளர்களும் பலத்த சேதங்களுக்குள்ளாகியிருப்பதை எவரும் மறுக்கமாட்டார்கள்.

இந்தத் தாக்குதல்கள் யாரால் எந்த பின்னணியில் நடத்தப்பட்டன என்பது பற்றி பொதுமக்கள் மத்தியில் பலத்த சந்தேகங்கள் உண்டு. இவைகள் பற்றி விசாரணைகள், விளக்கங்கள், அறிவிப்புகள், ஆணைகள் எல்லாம் வெளிவந்தன. குற்றவாளிகள் இனங் காணப்பட்டுவிட்டார்கள், வெகுவிரைவில் பிடிபடுவார்கள் என்று பரபரப்பான அறிவிப்புகளும் வெளிவந்தன. எல்லாமே வெறும் புஸ்வாணம்.

ஊடகங்களை-ஊடகவியலாளர்களை பாதுகாப்பதற்கு அரசால் புதிதாக சட்டம் ஏதும் கொண்டுவரப்படுமானால் வரவேற்கக்கூடியதாக இருக்கும். பத்திரிகையாளர்களையும் பத்திரிகைத் துறையினையும் பாதுகாப்பதற்கு வலுவான சட்ட ஏற்பாடுகள் இருப்பது அவசியம். ஊடகத்துறைக்கு ஒழுக்க நெறி சட்டங்களைப் பற்றி ஆராயும் அரசு முதலில் ஊடகத்துறையையும் ஊடகவியலாளர்களையும் பாதுகாப்பதற்கானஏற்பாடுகளைச்செய்யவேண்டும்.

வோஷிங்டன் போஸ்ட் பத்திரிகையின் ஆசிரியபீடத்தினர் அண்மையில் ஊடகவியல் தினத்தையொட்டி வெளியிட்டிருந்த சிறு கட்டுரையின் தமிழ் வடிவத்தை இங்கு தருகின்றேன்.

## அதிகாரவர்க்கம் பத்திரிகைத் துறை சமச்சீர் செயற்பாடு

ஒரு ஜனநாயக அமைப்பில் சுதந்திர பத்திரிகைத் துறைக்கு ஒரு மென்மையான சமச்சீர் தன்மை இருக்க வேண்டும். முதல் (அரசமைப்பு) திருத்தம் என்பதன் கருத்து என்னவென்றால் ஊடகவியலாளர்கள் இடைஞ்சல்கள் எதுவுமின்றி விசாரணைகள் மேற்கொள்வதற்கான உரிமை இருக்க வேண்டும் என்பதாகும். சில தேசிய பாதுகாப்பு தகவல்களை அரசு இரகசியமாகப் பாதுகாத்துக் கொள்ள சட்டரீதியில் உரிமை இருக்கலாம். ஆனால் இதில் ஒரு மோதல் பிணக்கு ஏற்பட்டுவிடுமானால் அது தொடர்பான சமச்சீர் நிலை பின்வருமாறு கையாளப்பட வேண்டும். இரகசியங்களை தேடித் துழாவுவதற்கு ஊடகங்களுக்கு உரிமை உண்டு. ஆனால் அவைகளை பாதுகாத்துக்கொள்ள வேண்டியது அரசில் இருப்பவர்களின் பொறுப்பு. ஊடகங்களுக்கு அந்த தகவல் கிடைத்து, அது வெளியிடப்படுமானால் அது பாதகமான விளைவுகளுக்கு காரணமாகலாம். எனவே அரசானது இரகசியம் வெளியிடப்பட்டுவிட்டதாக வழக்காடவும் செய்யலாம். ஆனால் பொதுவில் ஊடகங்கள் தேடலுக்கு உரித்துடையவைகளே.

இதுவரை காலமும் அமெரிக்காவின் 1917 ஒற்றுகேட்டல் சட்டத்தின் கீழ் எந்த ஒரு பத்திரிகை நிருபர் மீதும் வழக்குத் தொடரப்படவில்லை. செயற்பாட்டில் இருந்துள்ள சுதந்திரத்தன்மையின் பிரதிபலிப்பாகும் இது.

இந்த சமாந்திரத்தன்மையானது, தேசிய பாதுகாப்பு இரகசிய கசிவு ஒன்று தொடர்பான புலனாய்வில் சமஷ்டி புலனாய்வுப் பிரிவினர் சத்தியக் கடதாசி ஒன்றை நீதிமன்றில் தாக்கல் செய்ததன் மூலம் குழப்பியடிக்கப்பட்டது. அந்த அமைப்பின் சிறப்பு முகவர் பி.றோயஸ் என்பவர் ஜேம்ஸ்றோசன் என்ற நிருபரின் மின்அஞ்சல்களை ஆராய்வதற்கு ஆணையொன்றை வழங்குமாறு நீதிமன்றத்திடம் கேட்டிருந்தார். பொக்ஸ் நியூஸ் நிறுவனத்தின் சிறப்பு வோஷிங்டன் நிருபரான றோசன் விசேஷத் தரத்திலான குறித்த செய்தி கசிந்தமைக்கு இணை சதிகாரராக மற்றும் உதவியாளராக மற்றும் அனுசரணையாளராக இருந்துள்ளார் என்ற அடிப்படையில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்த குற்றவியல் ஆய்வின் நோக்கம் என்னவாக இருந்தது என்பது தெளிவானது. 2009 ஆம் ஆண்டு இந்த இரகசியத் தகவல் கசிவு நிகழ்ந்த சமயம் ஸ்டீபன் ஜின்-வூகிம் என்பவர் ராஜாங்க அமைச்சில் ஆயுதங்கள் தொடர்பான நிபுணராக கடமையில் இருந்துள்ளார். வடகொரியா தொடர்பான புலனாய்வு தகவல்களே கசிவாகியிருந்தன.

இவ்வாறு இணை சதித்திட்டகாரர் என்று குற்றஞ்சாட்டப்படுவதற்கு அந்த பத்திரிகையாளர் என்ன தான் செய்துவிட்டார். சமஷ்டி புலனாய்வாளரைப் பொறுத்தவரை அவர், ''தகவலை பெறுவதற்காக அதைக் கேட்டுப்பெற்றார். மற்றும் தனது செய்தி மூலகர்த்தாவுக்கு ஊக்கமூட்டினர்'' என்பவை குற்றச் செயல்களாக இருக்கலாம். இதைப் பெறுவதற்காக முகஸ்துதியில் ஈடுபட்டார். மேலும் கிம் என்பவரின் விருப்பங்களை நிறைவேற்றுவதிலும் ஈடுபட்டார் என்பதும் குற்றச்சாட்டுகளாகும். துரதிர்ஷ்டவசமாக சோதனையிடுவதற்கான ஆணையில் நீதிவான் கையெழுத்திட்டு அனுமதி வழங்கினார்.

றோசன் மீது வழக்கு தொடரப்படவில்லை. போஸ்ட் நிருபா அன் மரிமோஷ் புலனாய்வு சத்தியக் கடதாசியை பத்திரிகையில் வெளியிட்டதையடுத்து நீதித்துறை திணைக்களம் எந்த ஒரு நிருபர் மீதும் வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லையென்றும் இந்த விடயத்தில் மேலதிக குற்றச்சாட்டுகள் எதையும் முன்னெடுக்க விரும்பவில்லை என்றும் அறிவித்தது.

பத்திரிகையாளர்கள் தமது பணிகளை செய்யும் போது சட்டரீதியான ஆபத்தை எதிர்நோக்கலாகாது என்று அதிபர் பராக் ஒபாமா அதையடுத்து அறிவித்தல் ஒன்றை விடுத்தார்.

ஒபாமா நிர்வாகமானது அவருக்கு முன் பதவியிலிருந்தவர்களை விட அதிகமான குற்றவியல் தகவல் கசிவு புலனாய்வுகளை நடத்தியுள்ளது. இதில் கவலைக்குரிய ஒருவித சாய்வுப் போக்கு காணப்படுகின்றது. அரசு செயற்படுவதற்கு இரகசியங்கள் இருக்க வேண்டியதுதான். ஆனால் அளவுக்குமீறி இரகசிய தகவல் வகைப்படுத்தலானது சமீப காலத்தில் மிக அளவு கடந்து போய்விட்டது.

இரகசிய தகவல்கள் எல்லாவற்றையும் வெளியிடுவது குற்றச் செயல்களாக கட்டுப்படுத்தப்படுமானால் தகவல்களின் வெளிப்பாட்டை முடங்கச் செய்வதாகிவிடும்.

ஒருவேளை நீதித்துறையினரின் இது தொடர்பான கொள்கையை சட்டவாளர்கள் வாசித்தறிய தவறியிருக்கலாம்.



ஓர் அரசு தனது பின்தேவைக்காக மறைத்து வைக்கும் இரகசியத் தகவல் பத்திரிகைகளில் வெளிவந்து விடும்போது அதிகாரிகள் மற்றும் ஆட்சியாளர்கள் அதிர்ச்சியும், ஆத்திரமும் கொள்வது இயற்கை. சில சமயம் செய்தியை வெளியிட்ட செய்தியாளன் மீது நடவடிக்கை எடுக்கவும் முனைவார்கள்.

செய்திகளை புலனாய்வு செய்து வெளியிடுவதற்கான நிருபர் ஒருவருக்கு இருக்கும் உரிமையானது பத்திரிகைத் துறையினருக்கு இருக்கும் உரிமையைவிட விரிவானதன்று. சர்ச்சைக்குரிய பொது விடயங்களை கூடிய வரை இயன்ற மட்டும் விரிவாகத் தேடி வெளியிடும் ஒரு நிருபரின் கடமைப்பொறுப்பில் இடைஞ்சல் ஏற்படுத்துவதாக அரசின் வழக்கு தாக்கல் செய்யும் அதிகாரங்கள் பயன்படுத்தப்படவுள்ளது என்று அதில் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சடங்குகள் சம்பிரதாயங்கள் மனித வாழ்வில் முக்கிய பங்கு கொண்டவையாக இருந்து வருகின்றன.

மனித வரலாறு தன் இருப்பை நிலை நிறுத்தக் கண்டுபிடித்த விடயமே சடங்குகள் என்பதாக நாம் கருதலாம். அர்த்தமற்ற நிகழ்வுகளை மனிதன் தன் வாழ்வியலுடன் இணைந்திருக்க முடியாது; தேவையுமில்லை.

இதிகாச புராணங்களில் சடங்குகள் பற்றிய விடயங்கள் வருகின்றன. சிலப்பதிகாரத்தில் கண்ணகி -கோவலன் திருமணம் விழாவாக நடைபெற்றதாக அறிகின்றோம். எனவே மனித நாகரிகத்துடன் இணைவுற்றே சடங்குகள் வந்து கொண்டு இருக்கின்றன.

சடங்குகளில் மிகப் பெரியது திருமணச் சடங்கு என்றால் யாரும் மறுப்பதற்கில்லை. ஏனையவை சம்பிரதாயச் சடங்குகளாகக் கருதப்படக் கூடியவை.

ஏனெனில் திருமணம் என்பது ஆணையும் பெண்ணையும் இணைக்கும் பெரும் நிகழ்வு தனித்து அலைந்தவர்களைச் சேர்த்து வாழ வைப்பதே திருமணம். இருவேறு சாதி என்றாவதால் திருமணம் முக்கியமானது. மேலும், வாழ்க்கை தொடங்குவதே திருமணத்தின் பின் என்ற கருத்தும் இருக்கின்றது. பரம்பரைத் தொடர்ச்சிக்கு திருமணம் வழிவகுக்கும் சடங்காக வருகின்றது.

ஆனாலும் வரன் முறையான வாழ்க்கையை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட சடங்காக நாம் சொள்ளலாம். திருமணம் என்ற ஒன்று இல்லாவிட்டால் நெறிமுறையான வாழ்க்கை ஏற்படாது காட்டு மிராண்டி வாழ்க்கை தொடர்ந்திருக்க வாய்ப்பு இருக்கின்றது. திருமணம் வண்புனர்வு தேவையை கௌரவமாக பூர்த்தி செய்தது, செய்து கொண்டு இருக்கின்றது.

எங்களூரில் திருமணம் என்றால் ஊரே களைகட்டிக் கிடக்கும். திருமணம் முற்றுப்பெற்றால் ஒரு மாதத்துக்கு முன் கொண்டாட்டம் தொடங்கி விடும். பல விடயங்கள் முன் நிகழ்வாக நிகழத் தொடங்கிவிடும். பலகாரச் சூடு, கொட்டகை அமைத்தல், நாள்ப் பச்சை வைத்தல், நாளுக்குச் சொல்லுதல், ஊருக்கு சொல்லுதல், பொன்னுருக்குதல், கன்னிக்கால் நாட்டுதல் என்று பல்வேறு கிளைச் சடங்குகள் முன்னரே தொடங்கி விடும்.

அண்மையில் ஒருவருடன் ''நாள் பச்சை'' பற்றி உரையாடினேன். என்னைவிட கொஞ்சம் வயது கூடியவர் நகரப் பகுதியில் வசிப்பவர். அவருக்கு ''நாள் பச்சை'' என்ற விடயம் தெரியவில்லை எனக்கு கொஞ்சம் வியப்பாக இருந்தது.

எம் பகுதியில் 1990களுக்கு முன் நாள் பச்சை வைக்கும் மரபு சிறப்பாக இருந்தது.

நாள் பச்சை என்பது குறித்த வீட்டில் விழா சொல்பவர் தன் நெருங்கிய உறவினர் ஒருவருக்கு நாள் பச்சை வைப்பார். (மாமன், மச்சாள் சித்தப்பன், பெரியப்பன்) யாருக்காவது வைக்கலாம்!

நாள் பச்சை வைத்துக் கொண்டவர் தனது உறவினர் வீட்டு நிகழ்வுக்கு தேவையான பலகாரங்கள் அனைத்தையும் தனது வீட்டில் செய்து கொள்வார்.

பயற்றம் பணியாரம், அரியதரம், முறுக்கு போன்ற பலாகாரங்கள் பொலிவாகச் செய்யப்படும்.

திருமண வீடு என்றால் திருமண வீட்டின் நாளன்று காலையில் ஊர்வலமாக சகல பலகாரங்களும் ஆரம்ப காலங்களில் மாட்டு வண்டியிலும் பின்னர் காரிலும், காய் வாழைக்குலை, பழக்குலை ஒவ்வொன்றும் உட்பட மேள வாத்தியத்துடன் திருமண வீட்டுக்கு எடுத்து வரப்படும்.

திருமண வீட்டுக்காரர் குடும்ப சமேதராக நின்று ஒவ்வொன்றாக வாங்கி பெரிய வீட்டுக்குள், அல்லது சாமி அறைக்குள் வைத்துக் கொள்வார்கள்.

இது முக்கியமான நிகழ்வாகக் கருதப்படும். பரஸ்பரம் வழங்கப்படும். கௌரவமாகக் கொள்ளப்படும். திருமண வீட்டிலும் பலகாரங்கள் செய்வார்கள். தற்செயலாக இது

# 'கொண்டாட்டம்'



## மூன்று நாள்கள் நடைபெறும்

போதாமல் போய் விட்டால் கைகொடுப்பதற்காகவே நாள் பச்சை முறை கொண்டு வரப்பட்டது எனலாம். திருமண வீட்டுக்கு உதவிக்கு வருபவர்கள்.

''அப்ப யாருக்கு நாள் பச்சை.''

''பெரிய மச்சானுக்குத்தான்.''

''பிறகென்ன நீங்கள் ஒண்டும் செய்யத் தேவையில்லை.''

உரையாடலில் மங்கலம் தொடரும். உறவுகளின் நினைத்திருத்தலை மேற்கொள்ள எம் முன்னோர் பல முறைகளைக் கைக்கொண்டார்கள். நாம் எல்லாவற்றையும் கொட்டிக் கவிழ்த்து விட்டோம்.

திருமண வீட்டை விட, நாள் பச்சை வைக்கப்பட்ட வீடு அமர்க்களமாக இருக்கும். பலகார வாசனை ஏழு வீட்டுக்கு வீசி வரும். பயற்றம் பணியாரம் நல்ல தெளிந்த தேங்காய் எண்ணெய்யில் முறுகி வரும் வாசம் மூன்று நாள்களுக்கு மணத்துக் கொண்டிருக்கும்.

சாயம் போட்ட பனை ஓலைக் கடகத்துக்குள் பலகாரங்களை அடுக்கி தலையில் சுமந்து வரும் அழகு எங்கள் குழைக்காட்டில் மட்டுமே காண முடியும். இப்போது இல்லை. எல்லாம் மாறிப் போய் விட்டது. ஒரு காலம் தன் இருப்பை மற்றைய காலத்துக்கு கொண்டு செல்வதில் நாகரிக மாற்றம் தடையாகி விடுகின்றது.

பனை ஓலைக் கடகம், பெட்டியில் வைக்கப்பட்ட பலகாரம் பத்து நாள்களுக்கு பழுதடையாமல் இருந்து விடும்.

செல்லமாக்காவின் தங்கராசர் என்னுடன் நாலாம் வகுப்பு படிக்கும்போது ஒரு நாள் கை விரல் வீங்கியபடி வந்தான்.

''என்னடா கையில்?''

பணியாரப் பெட்டியிக்கை கை விட்டனான். அதுதான்?''

''என்னடா பணியாரம் கடிச்சதே''

''இல்லையடா நட்டுவக்காலி கடிச்சுப் போட்டுது.''

''பணியாரம் கிடந்ததே?''

''அதுக்கை இல்லை.''

''பேயா கொக்கான்ரை கலியாண வீடு முடிஞ்சு ஒரு மாதமாகப்

''போகுது கையை விட்டினியே''

''தோய்மாத் துண்டாவது கிடைக்கும் எண்டுதான்''

கலியாண வீடு, சாமத்திய வீடு முடிஞ்சும் ஒரு மாதம் வரை பலகாரம் தேடிக் கொண்டு இருப்போம். அன்று!

---





ஓரொண்டு ஒண்டு
ஈரொண்டு இரண்டு
மூவொண்டு மூண்டு
நாளொண்டு நாலு
ஐயொண்டு ஐஞ்சு
ஆறொண்டு ஆறு
ஏழொண்டு ஏழு
எண்ணொண்டு எட்டு
ஒப்பதொண்டு ஒம்பது
பத்தொண்டு பத்து

பதிணொண்டொண்டு
பதிணொண்டு

பன்ரெண்டொண்டு
பன்ரெண்டு

பதின்மூண்டொண்டு
பூச்சியம்
பதின்மூண்டுசகவொண்டு
பூச்சியம்



பதின்மூண்டு சயவொண்டு
பூச்சியம்
பதின்மூண்டு தரபதின்மூண்டு
பூச்சியம்

பதின்மூண்டு தரபூச்சியம்
ஆனியம்...

எட பேயா..!
ஆரெடா உன்ட
கணக்கு வாத்தி

பரமார்த்த குருவும்
இருணூட்டிருபத்தைஞ்சு
சீடர்மாரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையாக மாறிய கொடூரத்தின் அடையாளம்

பெருத்த மூக்குடன் மகிழ்ச்சியாகச் சிரித்து ஓடிவிளையாடிக் கொண்டிருக்கும் அந்தப் பெண்ணின் படம், நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவின் 'ரைம்ஸ்' சஞ்சிகையில் வெளியான போது உலகம் அதிர்ந்து விறைத்துப் போயிருந்தது. இப்படியுமா மனிதர்கள் கொடூரம் செய்வார்கள் என்று ஒட்டுமொத்த உலகமும் நொந்துகொண்ட அந்தப் படத்தில்தான் ஆப்கானிஸ்தானில் நடக்கும் பெண்களுக்கு எதிரான கொடூரங்கள் வெளிச்சத்துக்கு வந்தன.



மூக்கு இருக்கும் இடத்தில் இரண்டு துவாரங்களுடன் 'ரைம்ஸ்' முகப்பு அட்டையை அலங்கரித்த ஆயிஷாவின் அழகிய முகம் உலகின் மூலை முடுக்கெல்லாம் மனிதர்களின் மூளை ஓரத்தில் நிரந்தர வடுவாகப் பதிந்து போனது.

அந்தளவுக்கு அந்தப் படத்தை உலகம் முழுவதும் இருந்த ஊடகங்கள் மீள்பதிப்புச் செய்தன.

இன்று, கண்ணாடியின் முன்னால் நின்று தனது அழகின் சாத்தியங்கள் குறித்து ஆராயும் ஆயிஷா ஆரோக்கியமாக இருக்கிறாள்.

அவள் முகத்தின் நடுவே நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் காணாமல்போய்விட்ட ஒரு துண்டு இப்போது கிட்டத்தட்ட முழுமையாகப் பொருந்தியிருப்பதை ரசிக்கிறாள்.




### மூக்கற்ற முகம்

கொடுமைகளின் மொத்த வடிவமாக 2010ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 'ரைம்ஸ்' சஞ்சிகையின் அட்டையில் காணப்பட்ட ஆயிஷா இல்லை அவள் இப்போது. வளர்ந்திருக்கிறாள்; அழகாகியிருக்கிறாள்.

வீட்டில் இருந்து தப்பி ஓடினாள் என்பதற்காக அவளுடைய தலிபான் கணவனும் உறவினர்களும் அவள் மூக்கையும் காதையும் ஈவிரக்கமின்றி அறுத்து எறிந்த மனக் காயங்களில் இருந்தும் தேறி வந்திருக் கிறாள்.

அடிப்படைவாத கருத்துக்களைத் தீவிரமாகப் பின்பற்றிய தலிபான்கள் ஆயிஷா பள்ளி செல்ல ஒரு போதும் அனுமதித்தது இல்லை. வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத ஆயிஷாவின் தந்தை, கடன்காரனுக்கு அவளைத் தாரை வார்த்து கடனடைத்துக் கொண்டார்.

12 வயதில் ஆயிஷா புகுந்த திருமண வாழ்க்கை அவளுக்கு மகிழ்ச்சியானதாக இல்லை. அந்த வீட்டிலிருந்த விலங்குகளுடனேயே வாழ அவள் நிர்ப்பந்திக்கப்பட்டாள். அதனால்தான் வீட்டைவிட்டு ஓடினாள். ஆனால் அப்படி ஓடியது தவறு என்று தலிபான்கள் சொன்னார்கள். அதற்கான தண்டனையாக மூக்கையும் காதையும் அறுத்துப் போட்டார்கள்.

அவளது மூக்கை அவள் திரும்பவும் முழுமையாகப் பெறுவதற்கு இன்னும் சில அறுவைச் சிகிச்சைகளே எஞ்சியிருக்கின்றன. வலிகளுடன் வலிகளாக பெரும் அறுவைச் சிகிச்சைகள் எல்லாவற்றையும் அவள் ஏற்கனவே முடித்து விட்டாள். அவற்றில் சில 8 மணி நேரங்களை விழுங்கியவை. ஆரம்பத்தில் தன் முகத்தைப் பார்க்க முடியாமல் கதறிய ஆயிஷா இன்றுதான் கடந்து வந்த பாதையை சிரிப்புடன் திரும்பிப் பார்க்கிறாள்.

### மூக்கும் வாழ்வும் வேறு

இருப்பினும் மூக்கைச் சரிக்கட்டி முடிப்பதும் வாழ்வை மீளக்கட்டி எழுப்புவதும் இரு வேறு பரிமாணங் கள் சார்ந்தவை. எதிர்கால வாழ்க்கையைச் சீராக்க ஆயிஷா நிறையப் பேரை மன்னித்தாக வேண்டியிருக்கிறது. அதேநேரம் 22 வயதாகிவிட்ட அவள் இனி வேலை செய்து தன்னைப் பார்த்துக் கொள்ள வேண்டியுமுள்ளது.

முகச் சீரமைப்புச் சிகிச்சைகள் முற்றுப் பெற்றதும் ஆயிஷாவால் படிப்பு, வேலை, சுதந்திரம் என்பவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அவளை இப்போது அமெரிக்காவில் பராமரித்து வரும் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த மாதி மற்றும் ஜமிலா அர்சலா தம்பதியினர் எதிர்பார்க்கின்றனர். அவர்களது 15 வயது மகள்தான், தத்தெடுக்கப்பட்ட மூத்த சகோதரியான ஆயிஷாவின் நெருங்கிய தோழி இப்போது.


### நம்பிக்கையின் ஒளி

"என் வாழ்வில் கடும் வேதனைப்பட்டிருக்கின்றேன். இப்போது என் வாழ்வில் வசந்தம் வந்திருக்கிறது என்று உணர்கிறேன்" என்கிறாள் ஆயிஷா நம்பிக்கையுடன்.

கொடூரத்தின் வெளிப்பாடாக 'ரைம்ஸ்' முகப்பில் தோன்றிய ஆயிஷா இன்று நம்பிக்கையின், உறுதியின் வெளிப்பாடாய் மாறியிருக்கிறாள்.

அமெரிக்கா வந்து 4 ஆண்டுகள் ஆகிவிட்டாலும் ஆயிஷா இன்னும் ஆங்கிலம் கற்றுக்கொள்ளவில்லை. வைத்தியசாலைகளும் சிகிச்சைகளும் அவள் கற்பதற்கான நேரம் ஒதுக்க ஒத்துழைக்கவில்லை. அவளின் எதிர்காலம் குறித்த கவலையை இது ஏற்படுத்தியிருக்கிறது. இனி என்ன செய்யப் போகிறாள் ஆயிஷா என்ற கேள்விக்கு யாரிடமும் பதிலில்லை.

ரேணாபிரேம்



# நீங்க கேட்கலாம்

கேள்விகளை 361, கஸ்தூரியார் வீதி, முகவரிக்கு அனுப்புங்கள்

? போராட்டங்கள் நடத்தி அதில் பொலிஸாரால் தாம் கைது செய்யப்படுவதை அரசியல்வாதிகள் விரும்புவது ஏன்?

*வைகுந்தன், இணுவில்*

நாடுகள் பிரிட்டனின் பிடியில் இருந்தபோது நடந்த சுதந்திரப் போராட்டத்தினால் ஏற்பட்ட ஒரு விளைவு இது. குறிப்பாக இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் காந்தி தலைமையில் நடந்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டார்கள். சுதந்திரத்தின் பின்னர் இவர்கள் எல்லோரும் "நாங்கெல்லாம் சுதந்திரத்துக்காக சிறைக்குப் போனவங்க" என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டார்கள். அதுவே பின்னாளில் சிறைப் போவது ஏதோ சுதந்திரத்துக்காக போராடுவது என்பதாக அர்த்தப்படுத்தப்பட்டது. அது சரி! நீங்கள் இங்கிருந்துகொண்டு ஏன் இந்தக் கேள்வியைக் கேட்டீர்கள்? இங்கே யாராவது அரசியல்வாதிகள் கைதாகி சிறைக்குச் செல்லத் தயாராக இருக்கிறார்களா என்ன?

? கடவுள் எல்லா உயிரினங்களையும் இன்பமுறத்தான் உலகில் படைத்தார். அப்படி இருக்கும்போது மனிதர்கள் சாத்தான் வழியில் ஏன் இப்படிப் பித்தலாட்டத்திலும் வன்முறையிலும் பஞ்சமா பாதகங்களிலும் ஈடுபடுகிறார்கள்?

*தமயந்தி, நெல்லியடி*

இன்புற்றிருக்க என்றே எல்லா உயிரினங்களையும் படைத்த கடவுள் சாத்தானை ஏன் படைத்தார்? அப்படியே சாத்தானை கடவுள் படைக்கவில்லை என்றால் சாத்தான் இன்னொரு கடவுளா? இதற்கு முதலில் நீங்கள் பதில் சொல்லுங்கள் பார்க்கலாம்.

? தமிழர்கள் ஏன் கடந்த 500 வருடங்களாகத் தோற்றுப் போய்க்கொண்டே இருக்கிறார்கள்?

*அருள்குமரன், நிரவுண் வீதி*

பழம் பெருமைகளை மட்டுமே பேசிக் கொண்டிருப்பதால்தான், 500 வருடங்களுக்கு முன்னர் நாங்கள் இந்தோனேஷியாவை எல்லாம் ஆண்டிருக்கிறோமே என்று!



? தமிழ் சினிமாவில் கதாநாயகிகள் அடிக்கடி தொப்புளைக் காட்டியபடி பாடல்களில் தோன்றுகிறார்களே, 'செக்ஸ்' தூண்டலில் தொப்புளுக்கு ஏதாவது பங்கு இருக்கிறதா என்ன?

*வரதன், பருத்தித்துறை*

தொப்புளுக்கு எந்தப் பங்கும் இல்லை. பாலூட்டிகளின் வழி வந்தவன் என்பதை நிரூபிப்பதற்கே தொப்புள் இன்னும் மனிதனில் இருக்கிறது. சினிமாவிலும் தொப்புளுக்கு எந்த முக்கியத்துவமும் இல்லை. அதைச் சுற்றியிருக்கும் பகுதியை மறைக்காமல் விட்டு வேறு சில பகுதிகளை மறைப்பதன் மூலம்தான் அவர்கள் உங்களைத் தூண்டப் பார்க்கிறார்கள்.

? போரால் வடக்கு - கிழக்கில் ஆயிரக்கணக்கான விதவைகள் இருக்கும்போது நல்ல காரியங்களில் அவர்கள் முன்னால் நிற்கக்கூடாது என்கிறார்களே, இது எந்த வகையில் நியாயம்?

*மயூரன், கிளிநொச்சி*

பூனை சகுணம் பார்ப்பது மாதிரித்தான் இதுவும். புறப்படும்போது பூனை குறுக்கே ஓடினால் என்ன அர்த்தம்? அது உணவுக்காகவோ உறவுக்காகவோ போகிறது என்றுதான் அர்த்தம். மனிதனுக்குக் கெட்டது நடக்க வேண்டும் என்ற பிரார்த்திக்கக் கடவுளிடம் போகிறது என்றா அர்த்தம்? இது போன்ற சகுணங்கள் சம்பிரதாயங்களுக்கு எல்லாம் அர்த்தம் ஏதும் இல்லை. போரில் கணவன்மாரை இழந்த பெண்கள்தான் இன்றைக்கு குடும்பங்களுக்குத் தலைமை தாங்குகிறார்கள். அவர்கள் தலைமை தாங்கும் குடும்பங்களில் நல்லதே நடக்காதா என்ன? அப்போது என்ன சொல்வார்கள் இவர்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயிறு காரம்

# அவமானப்படும் இந்திய அரசியல்

சந்திரசேகர ஆஷாத்

அண்மையில் இந்தியாவின் பாரதீய ஜனதாக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவினர் ரவிசங்கர் பிரசாத் தலைமையில் இலங்கையின் வட பகுதிக்கு வந்திருந்தனர். இவர்கள் சிவில் சமூகத்தினரைச் சந்திப்பது என்ற பேரில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு சிலரைச் சந்தித்தனர். இவர்களுக்கு மத குருமாரோ, மனித உரிமை செயற்பாட்டாளர்களோ இடம் பெயர்ந்தோர் அமைப்புக்களோ மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளோ சிவில் சமூகமாகத் தெரியவில்லை. இந்தியாவினால் தேடப்படும் குற்றவாளி ஒருவரால் ஏற்பாடு செய்யப்பட்டவர்களையே சந்தித்தனர்.
இந்தச் சந்திப்பின்போது சிவில் சமூகத்தினர், இந்தியாவால் தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் உதவிகள் தொடர்பாக மனம் கனிந்து நன்றி தெரிவித்தனர். போர் முடிவுக்கு வந்த பின்பு வடபகுதியின் அபிவிருத்திகள் பற்றியும் அவர்கள் சுட்டிக் காட்டத் தவறவில்லை. வடபகுதிக் கடலில் தமிழக மீனவர்கள் மீன் பிடிப்பதைத் தவிர மிகுதி எல்லாம் இயல்பாகவும் மேன்மையாகவும் உள்ளதாகவும் கருத்துகள் பரிமாறப்பட்டன. ரவிசங்கர் பிரசாத் தலைமையிலான குழுவினரும் வடக்கில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகள் பற்றிப் பாராட்டியதுடன் போரின் பின்பு தமிழ் மக்களின் வாழ்வாதாரம் அரசால் மேம்பட்டிருப்பதாகவும் கூறித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர். அது மட்டுமன்றி இனப்பிரச்சினை தொடர்பாகத் தமிழ் தரப்பினர் அரசுடன் பேசி ஓர் இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும் எனவும் ஆலோசனை நடத்தியிருந்தனர்.

### மஹிந்தவின் கருத்து

அதையடுத்து கொழும்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த போது, தமிழ் மக்கள் மீது நடத்தப்படும் இன ஒடுக்குமுறை நடவடிக்கைகள் தொடர்பாகவோ தமிழ் மக்களின் நிலங்கள் அபகரிக்கப்படுவது தொடர்பாகவோ எதுவுமே பேசவில்லை பா.ஜ.க.குழுவினர். மாறாக முடிந்தளவு அரசைப் பாராட்டியே தங்கள் கருத்துக்களை வெளியிட்டனர்.
எனினும் இவர்களுக்குப் பதிலளித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவோ இனப்பிரச்சினைக்கான தீர்வு வெளியிலிருந்து கொண்டு வரப்பட முடியாது எனவும் மஹிந்த ஒப்பந்தம் மூலமும் எட்டப்பட முடியாது எனவும் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார். அதன் அர்த்தம் இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியா தலையிட முடியாது என்பதும் சம்பந்தனின் கருத்துக்களை அதாவது தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்பதுமாகும்.
எவ்வளவுதான் இந்தக் குழுவினர் தமிழ் மக்களின் மீது மேற்கொள்ளப்படும் மனித குல விரோத ஒடுக்குமுறைகளைப் பொருட்படுத்தாது அரசைப் பாராட்டித் துதி பாடிய போதும் இவர்கள் இலங்கை ஜனாதிபதியிடம் வாங்கியது நெருப்படிதான்.

### அவமானம்

அந்த அவமானத்தைக் கூடப் பெருமையாக எண்ணியவர்கள் போன்று அமைதியாக இந்தியா திரும்பிவிட்டனர். வழமையாக ஒரு குழுவினர் பிறிதொரு நாட்டுக்குச் சென்று திரும்பினால் ஊடகவியலாளர்கள் மாநாட்டைக் கூட்டி விளக்கம் அளிப்பதுண்டு. ஆனால் இந்தக் குழுவினரோ இதுவரை வாய் திறக்கவேயில்லை. அப்படியானால் இவர்கள் ஏன் இலங்கைக்கு வந்தனர்? இவர்களது வருகையின் நோக்கம் என்ன?



இன்று இலங்கையை நோக்கி வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் பயணங்கள் இரு நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படுகின்றன. ஒன்று பொருளாதார உறவுகளை விருத்தி செய்வது தொடர்பானது. மற்றது இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக நிலைமைகளை ஆய்வு செய்வது. இந்த இரு விடயங்களிலுமே உருப்படியான எந்த முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. அப்படியான நிலையில் இவர்களின் பயணம் பலவிதமான கேள்விகளை எழுப்புவது தவிர்க்க முடியாததாகும்.

### சுஷ்மா குழு

சில மாதங்களின் முன் பாரதீய ஜனதாக் கட்சியைச் சேர்ந்த இந்திய மத்திய அரசின் எதிர்க்கட்சி நாடாளுமன்றக் குழுவின் தலைவி சுஷ்மா சுவராஜ் தலைமையிலான ஒரு குழுவினர் இலங்கைக்குப் பயணம் செய்திருந்தனர். அவர்கள் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று பல்வேறு தரப்பினரிடமும் பேசி பல விடயங்களை தெரிந்து கொண்டனர். சுஷ்மா சுவராஜ் இந்தியா திரும்பிய பின்பு இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இலங்கை அரசின் அக்கறையின்மை தொடர்பாகவும் இந்திய உதவிகள் தமிழ் மக்களை உரிய முறையில் சென்றடையாமை தொடர்பாகவும் போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக இலங்கையின் பொறுப்புக் கூறும் கடப்பாடுகள் தொடர்பாகவும் கடுமையான விமர்சனங்களை மேற்கொண்டிருந்தனர். இது இலங்கை அரசுக்கு மிகுந்த சினத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. ஆனால் இலங்கை தரப்பில் வெளிப்படையாக இது தொடர்பாக எந்தக் கண்டனமும் வெளியிடப்படவில்லை. தூதரக வட்டாரங்கள் மூலம் ஏதாவது தொடர்புகள் இடம்பெற்றனவா இல்லையா? என்பது பற்றியும் எந்தவித தகவலும் வெளிவரவில்லை.
இப்படியான நிலையில் ரவிசங்கர் பிரசாத் தலைமையில் பா.ஜ.க. நாடாளுமன்றக் குழுவினரின் இலங்கைப் பயணமும் அவர்கள் அரசுக்கு சார்பானவர்களைச் சந்தித்து சுமுகமான கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொண்டமையும் அரசை எல்லா விதத்திலும் பாராட்டியமையும் நடந்தேறியுள்ளன.

### பாவ விமோசனப் பயணம்

எனவேதான் இந்த பயணத்துக்கும் இந்தியக் கொள்கை வகுப்பாளர்களின் நோக்கங்களுக்கும் தொடர்பு இருக்குமா என்ற கேள்வி எழுப்பப்பட வேண்டியுள்ளது. அதாவது திருமதி சுஷ்மா சுவராஜ் இலங்கை பயணத்தின் பின் வெளியிட்ட கருத்துக்களால் கோபமடைந்திருக்கக் கூடிய இலங்கை அரச தரப்பைச் சாந்தப்படுத்த மேற்கொள்ளப்பட்ட பாவ விமோசனமே இந்தப் பயணம் என எண்ணத் தோன்றுகிறது. ஆனாலும் கூட அவர்கள் முகம் கொடுத்ததெல்லாம் இலங்கை இனப்பிரச்சினையில் நீங்கள் தலையிட முடியாது என்ற அவமானப்படுத்தல்தான். இது இந்தியாவின் பாரதீய ஜனதாக் கட்சிக்கு மட்டுமே உரிய போக்கு அல்ல. இந்திய மத்திய அரசின் கொள்கையும் கூட இந்த வழிமுறைக்கு எள்ளளவும் அப்பால் செல்லவில்லை.
அரச அமைப்பின் 13 ஆவது திருத்தம் ஓர் உள்நாட்டு விவகாரம் அல்ல. இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் உள்வாங்கப்பட்டது. அது இரு நாடுகள் தொடர்பான உடன்பாடு தொடர்பான பிரச்சினை. அந்த ஒப்பந்தம் கிழித்தெறியப்படாத வரை 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும்படி அழுத்தம் கொடுக்க இந்தியாவுக்கு உரிமையுண்டு.
ஆனால் 13 ஆவது திருத்தத்தின் பல அம்சங்கள் பறிக்கப்பட்டன. வடக்கு கிழக்கு இரண்டாகப் பிரிக்கப்பட்டது. பொது நிர்வாக அதிகாரம், பொலிஸ் அதிகாரம் என்பன ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆளுநர் குழுவின் கீழ் கொண்டு வரப்பட்டது. திவிநெகும சட்டத்தின் மூலம் மாகாண சபையின் 12 அதிகாரங்கள் சமுர்த்தி அதிகார சபையின் கீழ் கொண்டு வரப்பட்டன. இப்படி இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட 13 ஆவது அரசமைப்புச் சட்டம் வெறும் எலும்புக் கூடாக்கப்பட்டது. இந்திய அரசு அது பற்றி எவ்வித அக்கறையும் கொள்ளவில்லை.

### கையாலாகாத இந்தியா

ஆனால் இலங்கை அரசின் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான சர்வதேசத்தின் கோபாவேசத்தைத் தணிப்பதிலேயே தீவிர அக்கறையுடன் செயற்பட்டு வருகிறது. அது மட்டுமன்றி இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் இலங்கையின் இனப்பிரச்சினை உள்நாட்டு விவகாரம் எனவும் அதில் தாங்கள் தலையிட முடியாதெனவும் ஆலோசனை மட்டுமே வழங்க முடியும் எனவும் தெரிவித்துவிட்டார்.
இலங்கை அரசோ இந்திய உறவுகளை மெல்ல மெல்லப் பலவீனப்படுத்தி சீன உறவுகளை மேம்படுத்தி வருகிறது. ஆனாலும் எத்தகைய அவமானங்கள், புறமொதுக்கல்கள் மத்தியிலும் இலங்கை அரசைப் பாதுகாப்பதிலும் விட்டுக்கொடுப்பு அரசியலை மேற்கொள்வதிலும் இந்தியா உறுதியாக இருக்கிறது.
அண்மையில் இந்திய மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி தமிழ் நாட்டில் இலங்கைப் படையினருக்குப் பயிற்சி வழங்கப்பட மாட்டாது எனவும் தான் தமிழ் நாட்டு மக்களின் உணர்வுகளை மதிப்பதாகவும் தெரிவித்திருந்தார். ஆனால் ஓரிரு நாள்களிலேயே தமிழ் நாட்டின் குன்னூர் வெலிங்டன் இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் இரு சிங்கள இராணுவ அதிகாரிகள் பயிற்சி பெறும் தகவல் வெளிவந்தது. அதன் காரணமாகப் பெரும் ஆர்ப்பாட்டங்களும் பெருமளவானோர் கைது செய்யப்பட்டமையும் இடம்பெற்றன.

### அடிபணிவு அரசியல்

தனது நாட்டு மக்களின் எதிர்ப்பையும் மீறி அவர்களுக்குப் பொய் சொல்லி இலங்கைக்கு உதவி செய்வதில் இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் மிகவும் உறுதியாகவே உள்ளனர். அதே வேளையில் மத்தியிலுள்ள காங்கிரஸ் அமைச்சர்களான வாசனும் நாராயண சாமியும் தமிழ்நாட்டு மக்களைச் சாந்தப்படுத்த இடையிடையே சில அறிக்கைகளை விட்டுக் கொள்வார்கள். ஆனால் தமிழக மக்கள் அவற்றின் உண்மைத் தன்மை பற்றி நன்றாகவே புரிந்து வைத்துள்ளனர். இந்திய காங்கிரஸ் கட்சியும் பாரதீய ஜனதாக் கட்சியும் பதவியைக் கைப்பற்ற ஒன்றுடன் ஒன்று போட்டியிட்ட போதிலும் வெளியுறவு, பொருளாதாரம் ஆகியவற்றில் ஒரே கொள்கையைக் கொண்டவை அந்த வகையில் இந்திய மத்திய அரசைப் போலவே எதிர்க்கட்சியும் இலங்கை வழங்கும் அவமதிப்புகளைத் தாங்கி இலங்கை அரசின் ஒடுக்குமுறைகளுக்குத் துணைபோகும் என்பதில் சந்தேகமில்லை.
ஆனால் இந்த அடிபணிவு அரசியலைத் தமிழக மக்கள் பூரணமாக நிராகரிக்கின்றனர் என்பதும் இலங்கைத் தமிழ் மக்கள் தொடர்பாகத் தீவிர அக்கறை காட்டி வருகின்றனர் என்பதும் நம்பிக்கையளிப்பவையாகும்.

> எவ்வளவுதான் இந்தக் குழுவினர் தமிழ் மக்களின் மீது மேற்கொள்ளப்படும் மனித குல விரோத ஒடுக்கு முறைகளைப் பொருட்படுத்தாது அரசைப் பாராட்டித் துதி பாடிய போதும் இவர்கள் இலங்கை ஜனாதிபதியிடம் வாங்கியது நெருப்படிதான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மன்னார் ஆயர் சிறப்புப் பேட்டி



"கல்வி மொழியாக சிங்களம் மாற்றப்பட்டு அந்தப் பகுதியிலுள்ள தமிழ் மக்களை ஏமாற்றி அவர்களையும் சிங்களம் கற்க வைத்து தமிழ் மொழியை அழிக்கவே இராணுவக் குடியிருப்புக்கள் தமிழர் பகுதிகளில் நிறுவப்படுகின்றன.

அரசமைப்பின் '13' ஆவது திருத்தத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை அரசு மீளப் பெற்ற பின்னர் வடமாகாண சபைத் தேர்தலை நடத்துமாக இருந்தால் அந்தத் தேர்தலில் தமிழ்த் தரப்புகள் போட்டியிடக் கூடாது என்று ஆலோசனை முன்வைக்கிறார் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்.

''காணி, பொலிஸ் அதிகாரங்களை மீளப்பெற்ற பின்னர் அரசு தேர்தலை நடத்துமாக இருந்தால் அந்தத் தேர்தலில் பங்கெடுப்பது தமிழ்த் தரப்புக்களுக்கு அவ்வளவு உசிதமானது அல்ல'' என்று உதயனுக்கு வழங்கிய சிறப்புச் செவ்வியில் அவர் தெரிவித்தார்.

மன்னார் ஆயர் இல்லத்தில் நடந்த சந்திப்பில் அவருடன் உரையாடியதிலிருந்து....

**போரின் பின்னர் வடபகுதியில் சிவில் சமூகத்தின் குரல் மௌனித்து விட்டது. ஆனாலும் சிவில் சமூகத்தின் குரலாக இன்னமும் நீங்கள் ஒலித்துக் கொண்டிருக்கின்றீர்கள். ஏனையோர் உங்களுடன் இணைந்து செயற்பட முன்வருகின்றனரா ?**

சிவில் சமூகத்துடன் இணைந்துதான் செயற்படுகின்றேன். தனித்து நான் இயங்கவில்லை. மக்கள் துன்பப்படுவதை, கொல்லப்படுவதை நான் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. யேசுநாதர் மக்களின் துன்பங்களைக் கண்டுதான் கலங்கினார். ஏழை மக்களின் விடுதலைக்காகத்தான் பாடுபட்டார். அவரின் சீடத்துவத்தைப் பின்பற்றுகின்ற நானோ அல்லது ஏனைய கிறிஸ்தவ தலைவர்களோ, சமூகத்திலுள்ள அநியாயங்களை கண்டுகொள்ளாமல் இருக்க முடியாது. மக்கள் நீதியினுடைய தீர்மானங்களை அனுபவிக்க வேண்டும்.

சடங்குகளைச் செய்துவிட்டு போவது எங்களது முக்கிய பணியல்ல. மக்களுக்கு அன்பு செலுத்துவது. அவர்களது விடுதலைக்காக பாடுபடுவது. உண்மையை சொல்லுவது. மக்களுக்காக நீதி கேட்பது. இதுவே எங்களின் பிரதான பணி.

**சிங்கள அடிப்படைவாதிகளின் தமிழர்கள் மீதான தற்போதைய நிலைப்பாடு தொடர்பில் என்ன நினைக்கின்றீர்கள் ?**

வடக்கு - கிழக்கை பிரித்து விட்டனர். இந்தப் பிரிப்பானது தமிழ் மக்களது தாயகத்துக்கான உரிமையை அறுத்து விட்டது போன்றதுதான். தமிழ் மக்களின் அரசியல் சக்தியை கொலை செய்துள்ளனர். அரசின் ஆதரவுடன் செயற்படும் அடிப்படைவாதிகள்தான் இதனைச் செய்தார்கள். இன்றும் அவர்கள்தான் 13 ஆவது திருத்தச் சட்டத்தையும் குழப்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

தமிழ் மக்களின் அரசியலை துரும்பாகப் பாவித்து, தமிழ் மக்களுக்கு எதனையும் வழங்கக் கூடாது என்று சிங்கள மக்களின் உணர்வுகளைச் சூடேற்றி வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக அவர்கள் இவ்வாறு செய்கின்றனர்.

உலகில் பல இனங்கள் காணப்பட்டன. ஒவ்வொரு இனமும் ஏதோவொரு சூழ்நிலையால் இன்று இல்லாமல் போய் விட்டன. அல்லது வேறு இனங்களுடன் கலந்து விட்டன. இதே போன்று எமது தமிழினத்தையும் இல்லாதொழிக்கும் வேலையை இந்த சிங்கள அடிப்படைவாதிகள் சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்தே திட்டமிட்டு முன்னெடுத்து வருகின்றனர்.

1956 அகில இலங்கையில் மாபெரும் பௌத்த சமாச மாநாடு இடம்பெற்றது. இதன் போது இலங்கையில் உள்ள பௌத்த - சிங்களத்தை எப்படி வளர்ப்பது ? இதனை வளர்ப்பதற்கான தடைகள் என்ன என்பது பற்றி ஆராய்ந்து நூல் வெளியிட்டிருந்தார்கள். அதில் முதல் எதிரியாக தமிழர்களையும், இரண்டாவது எதிரியாகக் கிறிஸ்தவர்களையும் குறிப்பிட்டிருந்தார்கள்.

**போரின் பின்னர் வடக்கில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

புத்தளம், நீர்கொழும்பு எல்லாம் ஆரம்பத்தில் தமிழ்க் கிராமங்களாகத்தான் இருந்தன. இங்குள்ள தமிழ்ப் பாடசாலைகளை சிங்கள மயமாக்கும் நாசகார வேலையை அன்று செய்தார்கள். சிங்களத்தை மொழியாக படிப்பதை நாங்கள் வரவேற்கின்றோம். சிங்களத்தை திணித்து தமிழை அழிப்பதைதான் எதிர்கின்றோம். இன்று நீர்கொழும்பு பகுதியிலுள்ள நான்காவது தலைமுறைக்கு தமிழ் என்றால் என்னவென்று தெரியாத நிலைமை இருக்கின்றது. அங்குள்ள பழையவர்களும் இறந்து போக அந்தப் பகுதிகள் முற்று முழுதாக சிங்களமயமாகி விடும்.

இதே போன்றுதான் வடக்கு - கிழக்கிலும் மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இராணுவ, கடற்படையினருக்கு இங்குள்ள காணிகளைப் பெற்று குடியேற்றங்களை நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் பின்னர் சிங்கள மொழி மூலமான பாடசாலைகளை நிறுவி திட்டமிட்ட ரீதியில் தமிழ் மொழியை அழிக்க முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

கல்வி மொழியாக சிங்களம் மாற்றப்பட்டு அந்தப் பகுதியிலுள்ள தமிழ் மக்களை ஏமாற்றி அவர்களையும் சிங்களம் கற்க வைத்து தமிழ் மொழியை அழிக்கவே இராணுவக் குடியிருப்புக்கள் தமிழர் பகுதிகளில் நிறுவப்படுகின்றன.

தேசிய பாதுகாப்பை காரணம் காட்டி காணிகளை இராணுவம் பெற்றுக் கொள்வது மேற்படி இராணுவக் குடியேற்றத்துக்கே. ஏனெனில் அவர்களின் இருப்புக்கு, தேவைக்கு மேலதிகமாகவும் காணிகளை இராணுவம் அபகரிக்கின்றது. இந்தக் குடியேற்றங்களுக்கு அரசு, நேரடியாகவோ மறைமுகமாகவோ உதவி செய்து வருகின்றது.

இவ்வாறு திட்டமிட்ட சிங்கள குடியேற்றம் ஏனைய குடியேற்றங்கள் செய்வதன் நோக்கம், தமிழ் மக்களின் வாக்கு வங்கியைச் சிதைப்பதே.

சிங்கள மக்கள் காணியில்லாமல் இங்கு வந்து இருக்கவில்லை. தமிழர்களின் பெரும்பான்மை வாக்குகளின் நிலையை குழப்புவதற்காகவே வருகின்றனர். சிங்கள மக்கள் எங்கள் பிரதேசங்களில் காசு கொடுத்து காணி வாங்கி குடியமர்வதில் எங்களுக்கு எந்தச் சிக்கலும் இல்லை.

பௌத்த விகாரைகளை இன்று சகல இடங்களிலும் கட்டுகின்றார்கள். நாளைக்கு புத்தர் தனிய இருக்கின்றார் என்று சொல்லி அதற்கருகில் காணிகளை கையகப்படுத்தி சிங்கள மக்களை குடியேற்றுவார்கள். எங்களது மக்களின் உறுதிக் காணியாக இருந்தாலும் அவர்கள் அதனைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. அபகரிக்கிறார்கள்.

எங்கள் மக்களும் அவர்களின் இன மேலாதிக்கத்தை மீறி செயற்படுவதற்கு பயப்படுகின்றார்கள். அந்தளவு தூரத்துக்கு அவர்களின் இனமேலாதிக்கம் தமிழ் மக்களை அடக்கி வைத்திருக்கின்றது.

**நடந்து முடிந்ததாகக் கூறப்படும் மீள் குடியமர்த்தலை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

முள்ளிவாய்க்கால் கொடூரத்திற்குள் இருந்து தப்பி வந்து இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு எதுவுமில்லை. அவர்களுக்கு 8 தகரங்களைக் கொடுத்து விட்டு நட்டாற்றில் தவிக்க விட்டுள்ளனர். தற்காலிகக் கொட்டில்களைப் போடுங்கள் பின்னர் நிரந்தர வீடுகள் கட்டித் தரப்படும் என்ற உறுதி மொழி மாத்திரமே கொடுக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வந்த இந்திய உதவிகளைக்கூட அரச அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தனக்கு ஆதரவாக வாக்களித்தவர்களுக்கே வழங்குகின்றார். பாதிக்கப்பட்ட மக்கள் நடுத்தெருவில் நிற்க வேறிடங்களில் நிரந்தர வீடுகள் உள்ளவர்களுக்கே வீட்டுத் திட்டங்களை வழங்குகின்றார்.

மன்னார் மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய வீட்டுத் திட்டம் கிடைக்கவில்லை. ஆனால் வேறிடங்களில் வீடுகள் உள்ள அமைச்சர் ரிஷாத்தின் ஆதரவாளர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

முசலிப் பிரதேசத்தில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். அங்கு 95 சதவீதமான மீன்பிடித் தொழில் செய்பவர்கள் தமிழ் மக்கள். முஸ்லிம்களில் 5 சசதவீதம் பேரே மீன்பிடித் தொழில்செய்கின்றனர். இந்திய உதவியில் வழங்கப்பட்ட வள்ளங்கள், வெளியிணைப்பு இயந்திரங்கள் எல்லாம் தமிழர்களுக்கு 5 வீதமும், முஸ்லிம் மக்களுக்கு 95 வீதமும் வழங்கப்பட்டன. இதுவும் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் நேரடித் தலையீட்டினால் நடந்தது.

உண்மையில் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னமும் நடுத்தெருவில் நின்று கொண்டிருக்க அரசு தனக்கு ஆதரவானவர்களுக்கு மாத்திரமே உதவிகளை வழங்கிக் கொண்டிருக்கின்றது.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்யவேண்டிய அரசு அதனைச் செய்யாமல் இந்தச் சந்தர்பத்தை பயன்படுத்தி எப்படிச் சிங்கள குடியேற்றங்களை அமைக்கலாம் என்று நினைத்துச் செயற்படுகின்றது.

**இறுதிப் போரில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டார்கள் எனத் தொடர்ந்து கூறி வருகிறீர்கள். எப்படி அதனை உறுதிப்படுத்துகிறீர்கள் ?**

அரச தரவுகளின் அடிப்படையில்தான் அதனைக் கூறுகின்றேன்.

இறுதிப் போரில் 2008 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்திலிருந்து 2009 ஆம் ஆண்டு மே மாதம் வரையிலான 8 மாத காலப்பகுதியில் அரச தகவல்களின் பிரகாரம் 1 லட்சத்து 46 ஆயிரத்து 679 பேர் காணாமல் போயுள்ளனர். இவர்கள் எங்கே போனார்கள்?

முல்லைத்தீவு அரச அதிபர், வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி பொலிஸ் அதிகாரங்கள் நீக்கப்பட்ட மாகாண சபையில் தமிழர்கள் போட்டியிடக் கூடாது

சந்திப்பு: டிலிப் அமுதன்
படங்கள் : தர்சன்

அரச அதிபர், கிளிநொச்சி அரச அதிபர் ஆகியோரின் கையொப்பத்துடன் கிடைத்த தரவுகளும் ஐ.நா. ஒச்சாவின் தரவுகளின் பிரகாரமுமே ஒரு லட்சத்து 46 ஆயிரத்து 679 பேர் காணாமல் போயுள்ளனர். இதனை நான் சொன்னதற்கு என்னிடம் புலனாய்வுத் துறையை அனுப்பி விசாரணை நடத்தினர்.

இங்கு வந்து 4 மணி நேரம் என்னிடம் விசாரணைகளை மேற்கொண்டார்கள். நான் அவர்களுக்கு தெளிவாக சகல ஆவணங்களையும் காட்டிச் சொன்னேன். என்னில் குறையைச் சொல்லி பிழை பிடிக்கப் பார்க்கின்றனரே ஒழிய இதற்கு என்ன பதில் என்பதை அவர்கள் வழங்கவில்லை. நேரடியாக அரச தரப்பினரிடம் இது தொடர்பில் நான் கேட்ட போது அவர்கள் அதற்குப் பதில் அளிக்கவில்லை. அரசின் புள்ளி விவரப்படி அவர்கள் எங்கே ?

தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்றாலும் சரி எந்தவொரு தமிழ் அரசியல் தரப்புகளும் இந்த விடயத்தை மக்களிடம் கொண்டு சென்று சேர்க்கவில்லை. ஏன் அதைச் செய்யாமல் இருக்கின்றனர் என்று தெரியவில்லை.

ஐ.நா கூட இதில் அக்கறை காட்டுகின்றது. இறுதிப் போரில் உயிரிழந்தவர்கள் ஆரம்பத்தில் 40 ஆயிரம் என்று சொன்னவர்கள் தற்போது 70 ஆயிரம் பேர் என்று சொல்கின்றனர். ஆனால் எங்கள் தமிழ் அரசியல் தலைமைகள் இந்த விடயத்தை உரிய முறையில் பயன்படுத்தவில்லை. உயிரைக் கொடுத்த தமிழர்கள் தொடர்பான உண்மை விவரங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

இந்த ஒரு லட்சத்து 46 ஆயிரத்து 679 பேரில் தமிழீழ விடுதலைப் புலிகளும் இருக்கலாம். ஆனாலும் கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் அப்பாவித் தமிழ் மக்களே.

**புள்ளி விவரங்கள் தவிர வேறு ஆதாரங்கள் உண்டா?**

போர் நடந்து கொண்டிருக்கும் போது இராணுவத்தினருக்கு உயர் மட்டத்திலிருந்து அவசர உத்தரவு ஒன்று வந்தது. "பொது மக்கள் வெளியே வந்து விட்டார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளும் அவர்களுக்கு வேண்டப்பட்டவர்களும் மட்டும்தான் உள்ளே இருக்கின்றார்கள். கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்துங்கள்" என்று அதில் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் 2 லட்சம் வரையான பொதுமக்கள் வன்னி நிலப்பரப்பில் அடைபட்டிருந்தார்கள்.

இது தொடர்பில் உடனடியாகவே அமெரிக்க தூதுவர் மற்றும் நோர்வேத் தூதுவர் ஆகியோருக்கு தெரியப்படுத்தினேன். அதன் பின்னர் குறித்த உத்தரவு மீளப் பெறப்பட்டது.

இரண்டு தடவைகள் பாதுகாப்பு வலயங்களை அரசு அறிவித்தது. அதன் மீதும் குண்டுகளைப் போட்டு மக்களைக் கொலை செய்தார்கள். பாதுகாப்பு வலயத்துக்குள் தமிழீழ விடுதலைப் புலிகள் நிற்கின்றார்கள் என்றால் அவர்கள் மீது தாக்குதல் நடத்த வேறு வழிகளைப் பார்த்திருக்க வேண்டும். அதை விடுத்து அங்குள்ள அப்பாவி மக்களைக் கொல்ல யாருக்கும் அருகதையில்லை.

300 பயணிகளுடன் ஒரு விமானத்தை 4 தீவிரவாதிகள் கடத்திச் சென்றால் அந்த 4 தீவிரவாதிகளையும் கொல்வதற்காக 300 பொதுமக்களையும் கொல்லுவார்களா ? புத்தியைப் பாவித்து மக்களை மீட்டெடுக்க வேண்டும். அதனை விடுத்து புலிகள் மக்களுடன் இருக்கின்றார்கள் என்று சொல்லி எப்படி மக்களை கொல்லுவீர்கள் ?

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்களைச் சுடவில்லை. இறுதிவரையில் அங்கிருந்து எங்களது 7 மதபோதகர்கள் இதனை உறுதிப்படுத்தினர். தங்களது சொல்லை மீறி இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் நுழைய எத்தனித்த மக்களை விடுதலைப் புலிகள் வானை நோக்கி சுட்டு பயமுறுத்தினார்களே தவிர மக்களை அவர்கள் சுட்டுக் கொல்லவில்லை.

> "பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவோ அல்லது பொதுபலசேனாவோ எடுக்கும் இனவாத - அடிப்படைவாத நடவடிக்கைகள் பற்றி நாங்கள் கவலைப்படத் தேவையில்லை. அவர்கள் ஒரு சிறு குழுவினரே. சிந்தனைப் புரட்சி ஊடாக சிங்கள மக்களைத் தெளிய வைத்து நாங்கள் எங்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்."

போர் முடிந்ததும் மன்னாரில் 3 ஆயிரம் பேரைத் தங்க வைத்திருந்தார்கள். இறுதிப் போரில் அவர்கள் பட்ட அவலங்களை அந்த 3 ஆயிரம் பேரையும் தனித் தனியே சந்தித்து நான் அறிந்து கொண்டேன். அதனால்தான் எனக்கு அங்கு கொல்லப்பட்டது மக்கள்தான் என்பதை உறுதியாகச் சொல்ல முடிந்தது.

நான் இவற்றை வெளிப்படுத்தியதற்குக் காரணம், அரசை மாட்ட வேண்டும் என்பதோ அல்லது அரசைக் கவிழ்க்க வேண்டும் என்பதோ அல்ல. உண்மையை வெளிப்படுத்த வேண்டும். ஆன்மிகத் தலைவராக இருக்கின்ற நான் உண்மையை வெளிக் கொண்டு வர வேண்டும் என்றுதான் அவற்றை வெளிப்படுத்தினேன். இந்த உண்மைகளை நல்லிணக்க ஆணைக்குழு முன்பும் சமர்ப்பித்தேன். ஆனால் அதைப் பற்றி அவர்களின் அறிக்கையில் எதுவுமேயில்லை. இதை நழுவ விட்டுவிட்டார்கள். அன்று ஆணைக்குழு முன்னால் சமர்ப்பிக்கும் போதும் எந்தக் கேள்வியும் கேட்கவில்லை.

**வடமாகாணசபைத் தேர்தல் இடம் பெறுமா? தேர்தல் நடந்தால் தமிழ்த் தேசிய அரசியல் தரப்புக்கள் அதில் போட்டியிட வேண்டும் என்று எதிர் பார்க்கின்றீர்களா ?**

தேர்தல் நடக்கும் என்று சொல்லப்படுகின்றது. இந்தியாவும் விடுவதாக இல்லை. இருக்கின்ற நிலைமைய மறந்து அரசு முடிவெடுக்க முடியாது. புத்தியைப் பயன்படுத்திச் செய்ய வேண்டிய காரியத்தை உணர்ச்சியைப் பாவித்து முடிவெடுத்து செய்ய மாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஏனெனில் கள யதார்த்தம் அவ்வாறில்லை. எனவே வடமாகாண சபைத் தேர்தல் நடக்கும்.

நாங்கள் எங்கள் நிலத்தைப் பாதுகாக்க வேண்டும். மாகாணசபையில் போட்டியிடாமல் தமிழ்த் தரப்புக்கள் ஒதுங்குமாக இருந்தால் காணி அதிகாரங்கள் இலகுவாக அரசு அல்லது அது சார்ந்தோரின் கைகளுக்குச் சென்று விடும். இதனால் இங்கு சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கு அவர்களுக்கு எந்தத் தடையும் இருக்காது. மேலும் தமிழ் மக்களுக்கு எத்தனையோ தீமைகளைச் செய்த இராணுவ அதிகாரியான ஆளுநரை வடமாகாணத்துக்கு நியமித்திருக்கின்றனர். இதன் நோக்கமே தமிழர்களின் அபிலாஷைகளை இல்லாமல் செய்வதுதான்.

இவ்வாறானதொரு நிலையில் எங்கள் மக்களுக்கு விடிவைப் பெற்றுக் கொடுக்க, நாங்களே எங்களை ஆள்வதற்கு அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இதற்காக மாகாணசபையில் களமிறங்க வேண்டும்.

இந்த அரசு மாகாண சபைக்கு இருக்கின்ற காணி, பொலிஸ் அதிகாரங்களை மீளப் பெற்ற பின்னர் தேர்தல் நடத்துமாக இருந்தால் அந்தத் தேர்தலில் பங்கெடுப்பது தமிழ் தரப்புகளுக்கு அவ்வளவு உசிதமானது அல்ல.

எங்களுக்காக கொடுக்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை சகல மாகாணங்களிலும் நடைமுறைப்படுத்தி அவர்கள் பயன்பெற்ற பின்னர் எங்களுக்கு வழங்குவதற்கு தயக்கம் காட்டுகின்றனர்.

**1987ஆம் ஆண்டுகளில் 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்ட போது அதனை நிராகரித்த தமிழ்த் தலைமைகள் தற்போது அதனை ஏற்றுக் கொள்வது சரியானதா ?**

மாகாண சபையில் போட்டியிடுவதோ அதில் வெல்வதோ எங்களுக்கு தீர்வாகும் என்று சொல்லவில்லை. அத்துடன் மாகாண சபை எங்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் என்றும் சொல்ல முடியாது. ஆனாலும் இருப்பதை பாதுகாப்போம். இல்லாவிட்டால் எங்களால் ஒன்றும் செய்ய முடியாது.

**அப்படியானால் தமிழ் மக்களுக்கான தீர்வு என்ன ?**

எங்களது நிலைப்பாட்டை கைவிட முடியாது. இந்த நாடு பிளவுபடாமல் இருக்க வேண்டுமாக இருந்தால் - எந்தக் குழப்பங்களும் வராமல் இருக்க வேண்டுமாக இருந்தால் - தமிழர்களின் அடிப்படை அரசியல் கோரிக்கைகளை இலங்கை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் ஓர் இனம். அவர்கள் பாரம்பரிய பிரதேசங்களில் அவர்களை ஆள உரித்துடையவர்கள். இதற்கு அமைவாக அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும்.

**இந்த தீர்வை அடைவதற்கு எவ்வாறான வழிமுறைகளை கையாள வேண்டியிருக்கும் என்று எதிர்பார்க்கின்றீர்கள்?**

இருக்கின்ற அதிகாரங்களையே இல்லாமல் செய்ய எத்தனிக்கும் அரசு, எங்கள் அபிலாஷைகள் - கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளும் என்று சொல்ல முடியாது. மக்களுக்கு விழிப்புணர்வைக் கொடுக்க வேண்டும்.

சிங்கள மக்கள் மத்தியில் படித்த கல்விமான்கள், சமயப்பற்றுள்ளவர்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு நாங்கள் எங்களுடைய உண்மைநிலையை எடுத்துச் சொல்ல வேண்டும். அந்த உண்மைஅவர்களுக்குசாட்டைக்கொடுக்கும். சிங்கள மக்கள் மத்தியில் சிந்தனைப் புரட்சியை மேற்கொள்ள வேண்டும்.

**அரச அதிகாரியான கோத்தபாய ராஜபக்ஷ அரசியல் செய்கின்றார். அத்துடன் பொதுபலசேனா போன்ற கடும்போக்கு சிங்கள அமைப்புக்களுடனும் இணைந்து செயற்படுகின்றார். இதைத் தாண்டி உங்களின் சிந்தனைப் புரட்சி சிங்கள மக்களை சென்றடையுமா ?**

பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவோ அல்லது பொதுபலசேனாவோ எடுக்கும் இனவாத - அடிப்படைவாத நடவடிக்கைகள் பற்றி நாங்கள் கவலைப்படத் தேவையில்லை. அவர்கள் ஒரு சிறு குழுவினரே. சிந்தனைப் புரட்சி ஊடாக சிங்கள மக்களைத் தெளிய வைத்து நாங்கள் எங்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

கோத்தபாய ராஜபக்ஷ தனது பணி என்ன என்பதை மறந்து பேசுகின்றார். அடிப்படை இனவாதிகளுடன் சேர்ந்து அவர்களால் முன்னெடுக்கும் பரப்புரையை எங்களால் சிந்தனைப் புரட்சி மூலம் இல்லாது செய்ய முடியும். அந்த நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது.

இவர்கள் கடந்தகால வரலாறுகளை மறந்து விட்டனர். இனவாதம் பேசிக் கடந்த காலங்களில் நடந்தது என்ன என்பதை வரலாறை மீள தட்டிப் பார்க்க வேண்டும். அரசியல்வாதிகளான ஜனாதிபதியும், பஸில் ராஜபக்ஷவுமே மௌனம் சாதிக்கும் நிலையில் கோத்தபாய மட்டும் ஏன் தொடர்ந்தும் இனவாதம் பேசிக் கொண்டிருக்கின்றார் ? இவையெல்லாம் நீண்ட காலத்துக்கு நிலைக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆதங்கன்

சீட்டு. கடன். வட்டி என்ற தொல்லைகளால் தூக்குக் கயிற்றை நாடுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. குறிப்பாக அதிக பணத்துக்கு ஆசைப்பட்டு வட்டிக்கு கடன் கொடுத்து ஏமாறுபவர்கள், அதிக வட்டிக்குக் கடன் பெற்று அதனைத் திருப்பச் செலுத்த முடியாது திண்டாடுவோர். சீட்டுக் கட்டிய பணத்தை இழந்தவர்கள் என்று இந்த தூக்குக் கயிற்று தற்கொலைதாரர்களின் பிரிவுகள் ஒவ்வொரு வகையானவை. பேராசை, ஆடம்பரம், சரியான திட்டமிடல் இன்மை, மற்றவர்களின் நம்பிக்கையை தவறாகப் பயன்படுத்துதல், திட்டமிட்ட மோசடி என்பனவே இத்தகைய நிலைகளுக்கு வித்திடுகின்றன. பணத்தை மட்டுமே மையமாக கொண்ட புதிய வாழ்வியல் நெறியில் மனிதத்தை குழி தோண்டிப் புதைத்து விட்டுப் பயணிப்பவர்களே ஏனையோரை தற்கொலை நோக்கி ஓட வைக்கிறார்கள்.

பணத்துக்கு முன்னால் மனிதர்களின் அவலங்கள் மறைந்து போகின்றன. உழைத்து முன்னேறுவதை விட குறுக்கு வழியில் எப்படி பில்கேட்ஸ் ஆகலாம் என்பது எல்லோரது எண்ணமாகவும் இருக்கிறது. இதற்காக கடன்கள் மூலம் தமது கனவுகளை அடைந்து விடலாம் என்று நினைக்கிறார்கள். கடன்கள் கொடுக்கவும் செய்யும். கொடுத்த பின் வட்டிக் கொடுமையால் கொல்லவும் செய்யும். கனவுகளும் கடன்களும் பெருகிக் கொண்டே தான் போகின்றன. கூடவே தற்கொலைகளும் தான்.

# இடக்

## சீட்டுத் தூக்கு

''சீட்டு பிடிச்சால் காசு கரையாமல் போட்டதை விட சுளையா அள்ளலாம்'' என்ற ஆசை வார்த்தைகள் யாரையும் 'ஒரு சீட்டு நாங்களும் கட்டினால் என்ன?' என்ற எண்ணத்தை இயல்பாகவே வரவழைத்து விடும். அவரும் அப்படித்தான். ஒருநாள் சீட்டு பிடிப்பவரிடம் சேர்ந்து கொண்டார். இதைவிட தனது நண்பர்கள் சிலரையும் சேர்த்து விட்டார். நாளொன்றுக்கு ஒரு லட்சம் கட்ட வேண்டும். முப்பது பேர் தான். ஒரு மாதத்தில் சீட்டு முடிந்து விடும். இடையில் எடுக்காவிட்டால் கடைசியில் எடுக்கும் போது கையில் ஐம்பது லட்சம் மிஞ்சும். சும்மா இருந்த இடத்தில் மாதம் ஒன்று 20 லட்சம் வருகிறது என்றால் யார் தான் விடுவார்கள். நாளும் பொழுதும் கடையில் வரும் வருமானத்தை சீட்டுக் கட்டுவதில் செலவழித்தார். அதனால் கடை வருமானத்தில் கொஞ்சம் கையை கடித்தாலும் மாதமுடிவில் கிடைக்கப் போகும் 20 லட்சத்தை எண்ணி பொறுத்துக் கொண்டார். சீட்டுப்பிடிப்பவரும் நம்பிக்கையான ஆள்தான். ஏழு எட்டு வருடங்களாக எந்த தில்லுமுல்லும் செய்யாமல் குறித்த திகதிக்கே சீட்டுக்காசை கொடுத்துவிடுகிறார். இந்த நம்பிக்கையில் தான் அவரும் சேர்ந்திருந்தார்.

பத்து பதினைந்து சீட்டுகள் எடுக்கப்பட்டிருந்தன. பதினேழாவது சீட்டுக்கான காசை கொடுப்பதற்காக சீட்டுப்பிடிப்பவரின் வீட்டுக்கு சென்ற போது வாசலில் நிறையப் பேர். எல்லோர் முகங்களிலும் கலவரத்தின் ரேகைகள். இவருக்கு அடி வயிறு கலங்கியது. பதறித் துடித்துக் கொண்டு உள்ளே போனார். வீட்டின் அறை ஒன்றில் சீட்டுப் பிடிப்பவர் நாக்கை வெளியே தள்ளிய படி கயிறொன்றில் தொங்கிக் கொண்டிருந்தார்.

''முதல் சீட்டு எடுத்தவங்கள் அந்தக் காசுகளோட எங்கேயோ ஓடிட்டாங்களாம். 3 கோடிக்கு மேல அடிச்சிட்டாங்களாம். சீட்டுக் கட்டின மிச்ச ஆக்களுக்கு குடுக்க காசில்லயாம். அதால தான் மனிசன் தூக்கில தொங்கிட்டுது.'' எல்லோரும் அவரது சாவுக்கான காரணத்தை மற்றவர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இவரைப் போலவே சீட்டுக்கட்டி எடுக்காதவர்கள் தொலைந்துபோன தமது லட்சக்கணக்கான பணத்தை எண்ணி கதறத் தொடங்கினார்கள். மாண்டவர் மீள்வதில்லை. இவர்கள் கட்டிய சீட்டுக் காசும் அப்படித்தான்.

## கொடுக்கும் : கொல்லும்

எல்லோரைப்போலவே அவனுக்கும் பெரியபணக்காரனாக வரவேண்டும் என்ற கனவு இருந்தது.அதனால் ஐந்துக்கும், பத்துக்கும் இன்னொருவரிடம் கையேந்தும் மாதாந்தச் சம்பளத்துக்கு வேலை செய்ய அவன் தயாராக இல்லை. தானே தனக்கு முதலாளியாக இருக்க ஆசைப்பட்டான். இரவு பகல் பாராது கனவை நனவாக்க பாடுபட்டான். தெரிந்த சிலரிடம் கடன் வாங்கி, ஒரு அழகுமாடக் கடையொன்றை ஆரம்பித்தான். இளையவர்களின் இப்போதைய ''ஸ்ரைல்'' என்னவென்பதை நாடி பிடித்துப் பார்த்து,அதற்கேற்ற வகையிலான பொருள்களை குவித்தான். கூட்டம் அலைமோதியது. லேட்டஸ்டா என்னென்ன டிசைன் வந்திருக்கோ அங்க போனா உடன் வாங்கலாம் என்று இளசுகள் அடையாளப்படுத்துமளவுக்கு, குறுகிய காலத்திலேயே அவனின் கடை பிரபலமாகிப் போனது. வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு அவனது பணப்பெட்டியை நிரம்ப வழியச் செய்தது. வாங்கிய கடன்களை சொன்ன நாளுக்கு முன்னரே கொடுத்தான். வியாபாரமும், பணமும் அவனது கனவுகளை இன்னும் விசாலமடைய வைத்தன. இருப்பதை விடவும் பலமடங்கு பெரிய, புதிய கட்டடம் ஒன்றில் அவன் கடை கால்பதித்தது. கடையின் பிரமாண்டமான பெயர்ப்பலகை எல்லோரையும் சுண்டியிழுத்தது. ஒரு ''சுப்பர் மார்க்கெட்'' போல விதவிதமான அலங்காரப்பொருள்களை வாடிக்கையாளரே தெரிவு செய்யும் வகையில் காட்சிப் படுத்தப்பட்டன. வெளிநாடுகளில் இருந்தெல்லாம் பொருள்கள் வந்திறங்கின. பணியாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டது. அவர்கள் அணியவென கடையின் பெயர் பொறித்த ரீ--சேர்ட்டுகள். எல்லாம் தடல்புடலாக இருக்கும் போது, முதலாளியான அவன் மட்டும் பழையமாதிரி மோட்டார் சைக்கிளில் வருவது கௌரவக்குறைச்சல் தானே?

புதிய கட்டடத்துக்கான அட்வான்ஸ், கடையை ஒழுங்குபடுத்தல், தளபாடங்கள் , பெயர்ப்பலகை, விளம்பரம், ரீ-சேர்ட், புதிய பொருள்கள் ,கொள்வனவு என்பவற்றுக்காகவே கோடிக்கணக்கில் கடன் வாங்கியிருந்தான். கார்வாங்குவதென்றால் இன்னும் 40 லட்சம் வேண்டும். அதை விட வாடகைக்கு எடுப்பது நல்லதென்று யாரோ ஆலோசனை சொல்லியிருக்கவேண்டும். ஒரு ''பினான்ஸ்'' நிறுவனத்திடமிருந்து நாளொன்றுக்கு 3500 ரூபா வாடகையில் கார் ஒன்றை வாங்கி கடைக்கு பந்தவாக வரத்தொடங்கினான்.

சிலவேளைகளில் வெளிநாடுகளில் இருந்தோ கொழும்பிலிருந்தோ நண்பர்கள் வந்துவிட்டால் அவர்கள் பயணிக்கவும் தன் செலவிலேயே இன்னொரு காரையும் வாடகைக்கு எடுத்துக் கொடுத்தான். வியாபாரத்தை விட மற்ற எல்லாமே நன்றாகத்தான் நடந்து கொண்டிருந்தன. விற்பனை மட்டும் முன்னர் சிறிய கடையில் எந்தளவு நடந்ததோ அந்தளவே பெரிய கடையிலும் நடந்தது. கோடிக்கணக்கில் வாங்கியிருந்த கடன்களுக்கான வட்டியாகவே மாதாந்தம் லட்சக்கணக்கில் கட்டவேண்டியிருந்தது. இந்த வட்டியைக் கட்டவேண்டிய வருமானத்தை விட மேலும் மேலும் கடன் வாங்கவேண்டியிருந்தது. அதைவிட கார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓடினான்...ஓடினான்!!

வாடகையே மாதாந்தம் ஒரு லட்சத்துக்கும் அதிகமாக இருந்தது. ஆயினும், அவனது கடையைப் பற்றி நல்ல பேர் இருந்ததால் அவன் கேட்கும் தொகையை வட்டிக்கு கொடுக்க எவரும் முகம்சுளிக்கவில்லை.

ஒருகட்டத்தில் எல்லாமே இறுகிக்கொண்டே போனது. அவன் கொடுத்த காசோலைகள் வங்கியில் பணமின்றி திரும்பவரத்தொடங்கின. கடன்கொடுத்தவர்கள் கழுத்தைப் படிக்கத்தொடங்கினார்கள். ''அண்ணை ! இன்னும் ஒரு கிழமைக்குள்ள எல்லாம் செட்டில் பண்ணிடுவன் என்று தவணை மேல் தவணையாக கேட்டுக் கொண்டிருந்தான்.

கடன் கொடுக்கவும் எவரும் தயாராக இல்லை. வட்டிக்கு வட்டி கட்டவே கையில் பணம் இல்லை. என்றாலும் இன்னமும் அவன் நாளுக்கு 3500 ரூபா வாடகை கொடுத்து காரில் தான் வந்து கொண்டிருந்தான். எப்போதும் சொன்ன சொல் மாறாதவனாக '' அடுத்த கிழமை தாறன்'' என்ற வார்த்தைகளையேமந்திரம் போல திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருந்தான். கடன்கொடுத்தவர்கள் ஒவ்வொரு கிழமையும் வந்து கோபத்தோடு திரும்பிக்கொண்டிருந்தார்கள்.

ஒரு நாள்- அவன் கடைக்கு வரவில்லை. அதன் பின் வந்த நாள்களிலும் அவனைக் காணவில்லை. கடன் கொடுத்தவர்களுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. ஓரிரண்டு மாதங்கள் கழிந்து வெளிநாடு ஒன்றில் அவன் இருக்கும் செய்தி மட்டும் வந்து சேர்ந்தது. கொடுத்த காசு வரவேயில்லை. அவனும் வரப்போவதில்லை என்பது தெரிந்த பின்னர் வட்டிக்கு ஆசைப்பட்டு உள்ளதும் போய்விட்டதே என்று அங்கலாய்ப்பதை தவிர கடன் கொடுத்தவர்கள் வேறு என்ன செய்ய முடியும்?

# ஓர் இராட்சத கை





அடக்கமா (Atacama desert) பாலைவனத்தில் GIANT HAND எனப்படும் பாறையால் உருவான இராட்சத கை சிலை அமைந்துள்ளது. இந்தப் பாலைவனம் தென் அமெரிக்காவின் சுமார் 100 கி.மீ. பரப்பளவை ஆக்கிரமித்துள்ளதுடன் பல நாட்டு சுற்றுலாப் பிரயாணிகளைக் கவரும் இடமாகவும் இந்தப் பகுதி திகழ்கிறது.

இந்தக் கை சிலை 1992 இல் அமைக்கப்பட்டது. பெருமளவு இரும்பும், சிமெந்தும் சேர்த்து உருவாக்கப்பட்டுள்ளது. இதை Mano de Desierto என்ற சிற்பக் கலைஞர் வடிவமைத் திருந்தார்.

சேமிப்பு ஒளி

இந்த ஜுன் மாதம் புதிய கணக்கை
கொமர்ஷல் வங்கியில் ஆரம்பியுங்கள்

கொமர்ஷல் வங்கியின் சேமிப்பு ஒளியில் இணைந்து
இலங்கையில் அதிக விருதுகளை வென்றெடுத்த
வங்கி வழங்கும் விசேட பிரதிலாபங்களையும்,
பரிசில்களையும் உரித்தாக்கிக் கொள்ளுங்கள்

COMMERCIAL BANK

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

www.combank.lk

Makes your Dream comes true....

We Guide You To The World Class Education System Through Our Top Rank Universities & Colleges Australia, UK, USA,

MISS ZAARAH : 0770 131 959
MISS TAANIYA : 0770 131 951

MINIMUM O/L
WITH OR WITHOUT IELTS
WITH OR WITHOUT WORKING EXPERIENCE

TUITION FEE AFTER VISA / DRAFT HOLDING
PART TIME 20 HOURS / WEEK
IELTS /ESOL PREPARATION CLASSES
FINANCIAL ASSISTANCE
INTERVIEW TRAINING
PRE DEPARTURE ORIENTATION

Student Visa,
Dependent Visa,
Visit Visa,
Tourist Visa
& Migration Guidance

37th Lane, Wellawatta, Colombo 06.
Tel: 0117 909 900/0770 131 959
E-mail : inquiry@reliancegroup.lk

Reliance

021 5671111
advt@uthayan.com

உதயன்

TVS KING

முச்சக்கரவண்டியை கொள்வனவு
செய்யும் உங்களுக்கு இதோ...

மனதை கொள்ளை கொள்ளும்
வாய்ப்புகள்

நீங்கள் கொள்வனவு செய்யும் அனைத்து TVS King முச்சக்கரவண்டியுடனும்

TVS

• பதிவுக்கட்டணம்
• பெறுமதிவாய்ந்த இருபக்க மழை திரைச்சீலைகள்
• அசல் உதிரிப்பாகங்கள் அடங்கிய பொதி

இலவசம்

இன்றே அழையுங்கள்
0770 777 888

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகர் கோயிலில் பக்தர்களுக்கு குளவி கொட்டியது

வடமராட்சி, ஜூன் 16
வடமராட்சி நாகர் கோயில் நாகதம்பிரான் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த அடியார்களை குளவி கொட்டியதால் பலர் காயங்களுக்கு உள்ளாகினர்.
நாகர் கோயில் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா கடந்த புதன்கிழமை



இடம்பெற்றது. அதில் கலந்து கொண்ட அடியார்களே குளவிகளின் தாக்குதலுக்கு இலக்காகினர்.
அதில் பலர் காயமடைந்த போதும் கடுங்காயத்துக்குள்ளான ஆலயத்தின் மணியகாரர் உட்பட மூவர் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர். (த-8-400)

## எழுவைதீவு, அனலைதீவுக்கு அம்புலன்ஸ் மோட்டார் படகு




யாழ்ப்பாணம், ஜூன் 16
எழுவைதீவு, அனலைதீவு நோயாளர் வசதி கருதி புதிய அம்புலன்ஸ் மோட்டார் படகு ஒன்று சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது. இதற்கென ரூபா60லட்சம்நிதியை வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வழங்கியுள்ளது.
ஊர்காவற்றுறை பிரதேச அபிவிருத்திக்கென வழங்கப்பட்ட ரூபா நூறு கோடியில் பின்வரும் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. எழுவைதீவு கடற்கரைவீதி, ஊர்காவற்றுறை கலா வீதி, நாரந்தனை சென்.பீற்றர் வீதி, அனலைதீவு குடியேற்ற வீதிகள் புனரமைக்க ரூபா 400 லட்சமும் அனலைதீவில் கடைத்தொகுதி, எழுவைதீவில் அலுவலர் நூலகக் கட்டடம், மெலிஞ்சிமுனை செபஸ்தியார் கோயில் வீதி, வேளாங்கண்ணி வீதி, ஊர்காவற்றுறை மைதானப் புனரமைப்பு, அரங்கு அமைத்தல், மீன் சந்தை புனரமைப்பு, கடைத்தொகுதி, மலசலகூடம், சனசமூக நிலையங்கள், தும்புத் தொழிற்சாலை, கிறிஸ்தவ தேவாலயங்கள் மயானங்கள் புனரமைப்பு வேலைகள் ஆகியனவும் இந்தத் திட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன. (வ-7)

## உழைக்கும் கரங்களே.....



கோப்பாய் இராசபாதை வீதியில் கொளுத்தும் வெயிலில் குந்தி இருந்து கடமையே கண்ணாக வெங்காயம் களையும் பணியில் ஈடுபட்டிருக்கும் இரு பெரியவர்கள். ஒருவரையொருவர் ஏமாற்றிப் பிழைக்கும் இந்தக் காலத்தில் இப்படியான ஒரு காட்சியைப் பார்க்க நெஞ்சம் நெகிழ்கிறது அல்லவா...! (ஓ-ரி)

### சாவகச்சேரி வைத்தியசாலையில்

## மூட்டுவாதக் கிளினிக்குக்கு பெருமளவானோர் வருகை

தென்மராட்சி, ஜூன் 16
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மூட்டுவாதக் கிளினிக்கில் மூட்டுவாத நோயால் பாதிக்கப்பட்டவர்கள் பெருமளவோனோர் வருகை தந்து சிகிச்சை பெற்றனர்.
அவர்களில் பெரும்பாலானோர் கிளிநொச்சி, பூநகரி, முழங்காவில், வடமராட்சி கிழக்கு, பளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாகக் காணப்பட்டனர்.
காலை 7.30 மணிக்கு மூட்டுவாத நோய்க் கிளினிக் நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்ததால் காலை 6 மணிக்கே நோயாளர்கள் வந்து குவியத் தொடங்கினர்.
யாழ்.போதனா வைத்தியசாலையிலிருந்து வருகை தந்திருந்த மூட்டுவாத நோய் வைத்திய நிபுணர் சாவகச்சேரி வைத்தியசாலையின் இரு வைத்திய அதிகாரிகளின் உதவியுடன் நோயாளர்களைப் பார்வையிட்டார்.
மூட்டுவாத நோய் கிளினிக்கைச் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நடத்த ஏற்பாடுகளை மேற்கொண்ட யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி



ஆ.கேதீஸ்வரன், யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா ஆகியோருக்கு நோயாளர்கள் நன்றியைத் தெரிவித்தனர்.
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இந்தக் கிளினிக் ஆரம்பிக்கப்பட்டதால் தாம் இலகுவாக சிகிச்சை பெறமுடிந்ததாக நோயாளர்கள் தெரிவித்தனர்.
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மூட்டுவாத நோய்க் கிளினிக் பிரதி புதன் கிழமைகளில் காலை 7.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## மக்களைக் கவர்ந்திழுக்கும் ஓமந்தை வீரைப் பழங்கள்

வவுனியா ஓமந்தையில் காணப்படும் வீரைப் பழங்களை உண்பதில் மக்கள் அதிகளவில் நாட்டம் கொண்டுள்ளதைக் காணமுடிகின்றது. வவுனியா ஓமந்தையில் உள்ள வேப்பங்குளம், அரசன்குளம், சேமமடு, அலைகல்லுப்போட்டகுளம் பகுதிகளில் வீரை மரங்களில் இந்த முறை அதிகளவில் பழங்கள் காணப்படுகின்றன. அவற்றைச் சுவைப்பதில் மக்கள் நாட்டம் கொண்டுள்ளதைக் காண முடிகின்றது. பாலைப்பழம், ஈச்சம்பழம் என்பனவற்றைச் சுவைப்பதில் உள்ள ஆர்வத்தைத் தற்போது வீரைப் பழத்திலும் மக்கள் காட்டி வருவதை அவதானிக்க முடிகின்றது. இந்த மரங்கள் வீதியோரங்களிலும், வீட்டுக் காணிகளிலும், காடுகளிலும் அதிகளவில் காணப்படுகின்றன.



இந்தப் பழங்களை விற்பனை செய்வதில் பலர் ஈடுபட்டுள்ளதையும் காண முடிகின்றது. தற்போது வீரை மரங்களையும் தறிப்பதற்கு தடை விதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-402)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைக்கு சுற்றுமதில்

யாழ்ப்பாணம், ஜூன் 16
எழுவைதீவு றோ.க.த.பாடசாலைக்கு சுற்றுமதில் அமைக்க ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் வழங்கிய ரூபா 5 லட்சம் நிதியில் ஒரு பகுதிக்கு சுற்றுமதில் அமைக்கப்பட்டுள்ளது.
இதேவேளை பாடசாலையின் தெற்குப் பகுதிக்கு மதில் அமைக்க உதவிகள் தேவைப்படுவதாகவும் விளையாட்டு முற்றம் அமைக்கப்பட வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (வ-7)

## மூதாட்டி கொலைச் சம்பவம்
### இருவர் சந்தேகத்தில் கைது



வடமராட்சி, ஜூன் 16
வல்வெட்டித்துறை ஊறணியில் இடம்பெற்ற மூதாட்டி கொலைச் சம்பவம் தொடர்பாக இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
கடந்த திங்கட்கிழமை சோதிலிங்கம் தெய்வமலர் (வயது -69) கொலையுண்ட சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளை அடுத்து கொலையுண்ட மூதாட்டியின் உறவினர்களான இருவரைக் கைது செய்து விசாரணைகளை தொடர்ந்து மேற்கொண்டனர்.
விசாரணையின் பின்னர் கைதான இருவரும் கடந்த புதன்கிழமை பருத்தித்துறை மாவட்ட நீதிபதி முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.
இருவரையும் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (ஜ-8)

## சாவல்கட்டு வெள்ளவாய்க்காலை கட்டி முடிக்குமாறு வலியுறுத்து



வலி.தென் மேற்கு, ஜூன் 16
சாவல்கட்டு கிராமத்தில் வெட்டப்பட்டுள்ள வெள்ளவாய்க்கால் திண்மக் கழிவுகள் போடும் இடமாக மாறியுள்ளது. சுகாதாரத்துக்குப் பங்கம் ஏற்படுத்தும் இந்தச் செயல் குறித்து வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவித்துள்ள உயரப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கம், திண்மக் கழிவுகள் போடுவதைத் தடுக்கும் வகையில் நிறைவு பெறாத நிலையில் இருக்கும் வாய்க்காலை முழுமையாகக் கட்டி முடிக்குமாறு கோரியுள்ளது.
வலி.தென் மேற்கு பிரதேசத்தில் சாவல்கட்டு கிராமத்தில் அண்ணாமலை வீதியில் மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டதுடன் பொது மக்களும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.
இந்த நிலை குறித்து சண்டிலிப்பாய் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பொது அமைப்புக்களால் சுட்டிக்காட்டப்பட்டதைத் தொடர்ந்து, வீதியில் தேங்கி நிற்கும் மழை வெள்ளத்தை வெளியேற்றும் வகையில் வெள்ள வாய்க்கால் அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டது.
வாய்க்கால் வேலையைப் பொறுப்பேற்றுச் செய்ய முன்வந்த வீதி அபிவிருத்தி அதிகார சபை, நிதி போதாமையால் வாய்க்கால் வேலையை பூர்த்தி செய்யாமல் நிறுத்திவிட்டது.
இதனால் கட்டப்படாமல் உள்ள மிகுதியான வாய்க்கால் திண்மக் கழிவுகள் போடும் இடமாக மாறியுள்ளது. இந்த நிலை குறித்து வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சுட்டிக் காட்டியுள்ள உயரப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் ஆ.சி.கணேசவேல், மிகுதியாகவுள்ள வாய்க்காலைத் துரிதமாகக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளார். (வ-115)

## வான் தோண்டல் குறித்த கலந்துரையாடல் இன்று

வடமராட்சி, ஜூன் 16
வடமராட்சி வடக்கு கடல் பகுதியில் வான் தோண்டுதலின் மேம்பாடு, அது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்கான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெறும் இந்தக் கலந்துரையாடலில் வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள கடல் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள், கடற்பரிசோதகர்கள், யாழ்.பிராந்திய நீரியல் பணிப்பாளர் கே.கணேசமூர்த்தி, பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.
பைக்கோ இயந்திரங்களால் வான் தோண்டப்படும் நேரம் போதாமையால் அதற்கான நேரத்தை அதிகரித்து வானை ஆழமாகத் தோண்ட வேண்டும் என்று மீனவர்கள் வெளியிட்ட கருத்தை அடுத்தே இந்தக் கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (வ-8)

## செம்மணி மயானத்தில் ஞாயிறு சிரமதானம்

யாழ்ப்பாணம், ஜூன் 16
நல்லூர் செம்மணி இந்து மயானத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையன்று காலை 7 மணி தொடக்கம் சிரமதானப் பணிகள் இடம்பெறவுள்ளன.
இந்த மயானத்தைப் பயன்படுத்தும் எல்லைக்குள் இருப்பவர்கள் இந்த சிரமதானப் பணியில் பங்கெடுக்குமாறு செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஒ-5)

## நூல் வெளியீடு

வலி.வடக்கு, ஜூன் 16
குரும்பசிட்டி பொன். பாலகுமாரால் எழுதப்பட்ட அபிவிருத்தி வங்கியியல் என்னும் நூல் வெளியீட்டு விழா ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகிகள் அறக்கொடை நிலைய மண்டபத்தில் குரும்பசிட்டி சன்மார்க்க சபைத் தலைவர் எஸ்.சிவபாதம் தலைமையில் நடைபெறவுள்ளது.
வரவேற்புரையை குரும்பையூர் த.ஐங்கரனும் வெளியீட்டுரையை இலங்கை வங்கியின் வட மாகாண செயற்பாட்டு முகாமையாளர் எஸ்.என்.மாணிக்கசிங்கியும் நிகழ்த்துவர்.
நூலை இலங்கை வங்கியின் வட்டுக்கோட்டை கிளை முகாமையாளர் வே .புவனேந்திரராஜா வெளியிட்டு வைக்க மதிப்பீட்டுரைகளை யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கியின் மேற்தரக்கிளை முகாமையாளர் எஸ்.சுந்தரேஸ்வரனும் இலங்கை மத்திய வங்கியின் வட மாகாண சிரேஷ்ட முகாமையாளர் எஸ்.சிவதீபனும் வழங்கவுள்ளனர். (வ-86)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூநகரி குடமுருட்டி ஆற்றில்

## மணல் அகழ்வு பெருமளவு இடம்பெறுவதாக முறைப்பாடு



அக்கராயன், ஜூன் 16
பூநகரி குடமுருட்டி ஆற்றில் தொடர்ந்து மணல் அகழ்வு பெருமளவில் இடம்பெறுவது தொடர்பாக இந்தப் பகுதி மக்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.
குடமுருட்டி ஆற்றில் பெருமளவு மணல் வளம் உள்ளது. ஆனால் சிலர் தற்போது இங்கு நடைமுறைப்படுத்தப்படும் வீட்டுத் திட்டங்களுக்குத் தேவையான மணலை அகழ்வதற்குப் பிரதேச செயலகத்தினால் வழங்கப்படும் மணல் அனுமதிப் பத்திரங்களைத் தவறான வகையில் பயன்படுத்தி வருவதாக இங்குள்ள முக்கொம்பன், சின்னப்பல்லவராயன்கட்டு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பிரதேச செயலரிடமும் பொலிஸாரிடமும் தொடர்ச்சியாக முறைப்பாடு தெரிவித்த வண்ணம் உள்ளனர்.
இரவு வேளைகளிலேயே அதிகளவு மணல் களவான முறையில் கடத்தப்படுவதாகவும் இந்த மக்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறு பெருமளவு மணல் தினமும் அகழ்ந்தெடுக்கப்படுமாயின் தமது பிரதேசங்கள் உவராக மாறும் ஆபத்து உள்ளதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.
எனவே பொலிஸார் இந்த விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு களவாக மணல் ஏற்றுபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.
பூநகரிப் பிரதேசத்திலுள்ள பல கிராமங்கள் உவரடைந்து காணப்படுகின்றன. பல கிராமங்கள் உவராக மாறும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளன. இந்த நிலையில் தொடர்ந்து மணல் அகழ்வு இடம்பெறுமாயின் இங்குள்ள மக்கள் தமது கிராமங்களைவிட்டு வெளியேற வேண்டிய பரிதாப நிலை தோன்றுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-18)

# சேவைகளைப் பாராட்டுவதோடல்லாமல் குறைகளையும் சுட்டிக்காட்ட வேண்டும்

### சாவகச்சேரி வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் தெரிவிப்பு

தென்மராட்சி, ஜூன் 16
வைத்தியசாலைகளில் வழங்கப்படும் சேவைகளைப் பாராட்டும் அதேவேளை குறைபாடுகளையும் எமக்குத் தெரியப்படுத்த வேண்டும்.
சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் புதனன்று இடம்பெற்ற சுவாச நோய் தொடர்பான சளிப் பரிசோதனையில் கலந்து கொண்டோர் மத்தியில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
2002 ஆம் ஆண்டு தென்மராட்சிப் பிரதேச மக்கள் மீளக்குடியமர்ந்த போதிலும் வைத்தியசாலை அழிவடைந்த நிலையில் காணப்பட்டதால் வைத்திய வசதி இல்லாத நிலையில் மக்கள் கஷ்டங்களை அனுபவித்தமை அனைவரும் அறிந்த விடயம்.

**2002 ஆம் ஆண்டு தென்மராட்சிப் பிரதேச மக்கள் மீளக்குடியமர்ந்த போதிலும் வைத்தியசாலை அழிவடைந்த நிலையில் காணப்பட்டதால் வைத்திய வசதி இல்லாத நிலையில் மக்கள் கஷ்டங்களை அனுபவித்தமை அனைவரும் அறிந்த விடயம்.**

யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அர்ப்பணிப்பான சேவையின் பயனாக இன்று இது வசதிகளுடன் கூடிய வைத்தியசாலையாகத் திகழ்கிறது. யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அடுத்தபடியாக பல்வேறு கிளினிக்குகள் சாவகச்சேரி வைத்தியசாலையில் நடத்தப்பட்டு பெருமளவு நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
வைத்தியசாலை பொது மக்களின் சொத்து. இதனை உரிய முறையில் பேணிக்காக்க வேண்டிய பொறுப்பு மக்களுக்கு உள்ளது. வைத்தியசாலைகளில் வழங்கப்படும் சேவைகளைப் பாராட்டும் அதே வேளையில் குறைபாடுகளையும் எமக்குத் தெரியப்படுத்த வேண்டும். வைத்தியசாலையில் அபிப்பிராயப் பெட்டி வைக்கப்பட்டுள்ளது. அல்லது யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும் அறிவிக்கலாம். தங்களின் கருத்துக்களும் ஆலோசனைகளுமே வைத்தியசாலையின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக இருக்கும்-என்றார். (வ-9)

## மயானத்தில் நினைவுத்தூபி அமைக்க தடை விதிப்பு


தென்மராட்சி, ஜூன் 16
சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் நினைவுத் தூபிகள் அமைக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மயானத்தில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்வதற்கு நினைவுத் தூபிகள் தடையாக இருப்பதால் மயான வளாகத்தில் நினைவுத் தூபிகள் அமைக்கத் தடை விதிக்கப்படுகின்றது.
இதேவேளை நினைவுத் தூபி தவிர்ந்த ஏயை மயான அபிவிருத்திப் பணியில் ஈடுபட விரும்புவோர் நகர சபையுடன் தொடர்பு கொள்ளலாமெனவும் நேற்று நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (வ-9)

## கொடிகாமம் விபத்தில் பெண் காயம்

கொடிகாமம், ஜூன் 16
கொடிகாமம் சந்தியில் சன நடமாட்டம் அதிகமாக காணப்பட்ட வேளையில் வேகமாக வந்த 'டிப்பர்' வாகனம் வீதியோரத்தில் சைக்கிளில் வந்த குடும்பப் பெண்ணை மோதிக் காயப்படுத்தியது.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றது.
கொடிகாமம் கச்சாய் வீதியைச் சேர்ந்த சிவபாதம் அனுராதேவி (வயது-38) என்பவரே தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-9-122)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உள்நாட்டு வாழ்க்கை. வெளிநாட்டுக் கல்வி.

இலங்கையில் இருந்துகொண்டே சர்வதேசப் பட்டம் ஒன்றைப் பெற விரும்புகிறீர்களா? அதற்கான உதவியை நாம் வழங்குவோம். வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்பட்ட பல உள்நாட்டு உயர் கல்வி நிலையங்களின் ஒத்துழைப்புடன் வழங்கப்படும் HNB FUTUR+ உயர் கல்விக் கடன் திட்டம் உங்களுக்கு அருந்துணையாகும்.

இலகுவான மீளளிப்புக் காலம்

வரையறையற்ற கடன் பெறுமதி

கவர்ச்சியான வட்டி வீதம்

மிகக் குறைந்த ஆவணங்கள்

SAATCHI & SAATCHI

2661981/2661923 என்ற FUTUR+ உடனடி இலக்கத்திற்கு இன்றே அழையுங்கள் அல்லது www.hnb.net/educational_loans என்ற இணையத்தளத்தில் பிரவேசியுங்கள்.

ஃபிச் ரேட்டிங் AA-(lka).
ஹற்றன் நஷனல் வங்கி, இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு, மேற்பார்வை செய்யப்படும் ஒரு வர்த்தக வங்கி. Hatton National Bank PLC - PQ 82

HNB FUTUR+
உயர் கல்விக் கடன் திட்டம்

HNB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org